# பாலகுமாரன்

# பழமுதிர்க் குன்றம்



விசா பப்ளிகேஷன்ஸ்

# பழமுதிர்குன்றம்

## பாலகுமாரன்

**விசா பப்ளிகேஷன்ஸ்**
புதிய எண்: 16. பழைய எண் : 55
வெங்கட்நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 600 017
Phone : 434 2899 - 432 7696
Fax - 91-44-4341559

முதற் பதிப்பு : [redacted] 2001
உரிமை : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

- PALAMUTHIRKUNDRAM
- By BALAKUMARAN
- First Edition : July 2001
- Total No: Pages : iv + 308 = 312
- Paper used : 11.6 Cream wove
- Price : Rs.75/-
- Available at :

THIRUMAGAL NILAYAM
New No : 16, Old No: 55
Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017
Phone : 4342899, 4327696
Fax : 91-44-4341559.

Printed by : Malar Printers, Chennai - 34.

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| பழமுதிர்குன்றம் . . . . . . . . . . . . . . . . . . . . . | 1 |
| இரண்டாவது கல்யாணம் . . . . . . . . . . . . . . . . | 141 |

# முன்னுரை

இனிய ஸ்நேகிதத்திற்கு வணக்கம்,

வாழிய நலம்.

மாத நாவல்களில் எழுதிய கதைகள் இப்படி புத்தக உரு கொள்ளும்போது மிக சந்தோஷமாக இருக்கிறது.

அரைக்கால் சட்டையும், டீ ஷர்ட்டும் போட்டு விளையாடிய கடற்கரைக்கு ஜிப்பாவும், சரிகை வேட்டியுமாய் போனதுபோல் இருக்கிறது. ஆள் அதே ஆள்தான். உடைகள்தான் வேறு.

மாதநாவல் எனக்கு மிகப்பெரிய ஒரு வாசகர் வட்டத்தை கொண்டுவந்து சேர்த்தது. மாத நாவல்களை நாவல்கள் என்று சொல்வதை விட நீண்ட சிறுகதைகள் என்று சொல்வது என் வழக்கம்.

வாழ்க்கையின் ஒரு பகுதியை ஒரு சித்தாந்தத்தை அல்லது ஒரு விபரீதத்தை எடுத்துச்சொல்ல மாத நாவல் மிகச்சரியான ஒரு களமாக எனக்கு அமைந்தது. மாதநாவல் மலிவு விலையில் பத்து ரூபாய் பதினைந்து ரூபாய்க்கு எழுதப்பட்ட விஷயமே இப்படி வேறு வடிவம் கொள்கையில் உடனடியாய் இப்படி வேறு வித புத்தகமாக உரு எடுக்கையில் அதற்கும் வாசகர்களாகிய உங்கள் வரவேற்பு அமோகமாய் இருக்கிறது.

மலிவு விலையில் அதிக பிரதிகள் விற்றாலும் இம்மாதிரியான அமைப்பில் அதே புத்தகத்தை வாங்க நீங்கள் தயங்குவதில்லை.

மாத நாவலை பாதுகாத்து வைத்துக் கொள்ள முடியும். ஆனால் இவை பாதுகாத்து நெடுங்காலம் வைக்கப்பட

வேண்டியவை. அடுத்த தலைமுறைக்கு அன்பளிப்பாக தரப்படவேண்டியவை.

வாசகர்களாகிய உங்கள் அமோகமான ஆதரவால் என் எழுத்துப்பணி சீராகவும் செம்மையாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எல்லா எழுத்தாளர்களின் மாத நாவல்களும் இத்தனை விரைவாக நூலகப் பதிப்பாக வெளிவருவதே யில்லை.

ஆனால், திருமகள் நிலையம் சார்ந்த விசா பதிப்பகத்தார் என்னுடைய மாத நாவல்களை உடனுக்குடன் பதிப்பித்து என்னை கௌரவப்படுத்தி விடுகிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள அன்பர்களுக்கு மாத நாவல்கள் இந்த மாதிரி ரூபத்தில் போவது வசதியாக இருக்கிறது. தலையணையான நாவல்களைவிட நாப்பது பக்கத்தில் நாவல் என்ற பம்மாத்து செய்வதைவிட இந்த நீண்ட சிறுகதைகள் ஒரு நல்ல அமைப்பு என்று எனக்குத் தோன்றுகிறது.

மிகுந்த தோழமையோடு என்னை நடத்திவரும் விசா பதிப்பகத்தாருக்கு என்னுடைய நன்றி. அன்போடு தங்கள் அபிப்ராயங்களை பகிர்ந்துகொண்டு என்னை நெருக்கமாய் உணர்ந்து தங்கள் சுக துக்கங்களை பகிர்ந்துகொள்ளும் வாசக உள்ளங்களுக்கு என் அன்பு.

தொடர்ந்து நாவல்களில் சந்திப்போம்.

என்றென்றும் அன்புடன்,

**பாலகுமாரன்**

# பழமுதிர்குன்றம்

## 1

அந்தப் புத்தகத்தை வெளிச்சத்திற்கு கொண்டுபோய் படிக்க வேண்டியிருந்தது. புத்தகத்தின் நிறம் மிக மங்கலாகவும் அச்சிட்ட கருப்புமை மெல்ல வெளிறி தேய்ந்தும் இருந்ததால் குழல் விளக்கின் வெளிச்சத்தில் சரளமாய் படிக்க முடியவில்லை.

வெளியே வானம் மந்தாரமாக இருந்தாலும் வெளிச்சம் பிரகாசமாக இருந்தது. சீனிவாசன் மிகுந்த கவனத்தோடு அந்தப் புத்தகத்தை வெளியே எடுத்து வந்து படிக்கத் துவங்கினான்.

அவன் புத்தகத்தை வெளியே எடுத்துப் போவதைப் பார்த்து நூலகரும், நூலகரின் உதவியாளரும் லேசாய் துணுக்குற்றார்கள்.

நூலகர், "சார்" என்று குரல் கொடுக்க, உதவியாளன் அடக்க, சீனிவாசன் திரும்பிப் ப்பார்த்தான். "ஒன்றுமில்லை" என்று நூலகர் சொல்ல, மறுபடியும் புத்தகத்தின் வாசகங்களுக்குப் போனான். அவர்களுடைய பதட்டம் அவனுக்குப் பிடித்திருந்தது. புரிந்தது.

இந்த நூலகத்திலிருந்து எந்த புத்தகத்தையும் வெளியே எடுத்துப்போகக் கூடாது. மிக மிக அபூர்வமான பழைய புத்தகங்கள் இங்கு இருக்கின்றன. இவைகளை மறுபதிப்பு செய்வது என்பது இயலாத காரியம். அதே நேரம் இவற்றை மைக்ரோ பிலிமில் பதிவு செய்ய அரசு திட்டமிட்டு இருக்கிறது. அந்த வேலை எப்போது முடியும் என்று தெரியாது. எனவே, அதுவரை இந்த பழைய நூல்களை கண்ணின் மணிபோல் காப்பாற்ற வேண்டும். இப்போது, கையில் இருக்கிறதைவிட மிக மோசமான புத்தகங்கள் கூட இங்கு இருக்கின்றன. தொட்டால் பொடிப்பொடியாய் உதிர்ந்துவிடும் புத்தங்களை சலஃபன் போட்டு பக்கம் பக்கமாய் ஒட்டி பலப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதைக் கையாள்வதையும் மிக கவனமாகச் செய்யச் சொல்கிறார்கள். சில சமயம், நூலகரின் உதவியாளர் அருகே வந்து ஒவ்வொரு பக்கமாக புரட்டிக்கொடுக்க தகவல்களை குறிப்பெடுத்துக் கொள்ளவோ அல்லது ஜெராக்ஸ் எடுத்துக் கொள்ளவோ நேரிடுகிறது.

அரசாங்கம் மிக கவனமாய் அந்த பழம் புத்தகங் களைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. அரசாங்கம் கொடுக்கின்ற சம்பளத்தைக் காட்டிலும், அதிக உற்சாகத்தோடு அந்த நூலகரும், அவரின் உதவியாளரும் புத்தகங்களை குழந்தைகள் போல பாவித்து, மார்பில் அள்ளிக் கொண்டுதான் நடப்பார்கள். அந்தப் புத்தகங் களிலுள்ள விவரங்கள் தெரியாவிட்டாலும் அந்த புத்தகங்கள் மிகுந்த மதிப்புடையவை என்பது அவர்களுக்கு நன்கு புரிந்திருந்தது. வெறும் சம்பளத்துக்காக வேலை செய்யாமல் ஒரு தனித்த உற்சாகத்தோடும், பிரியத்தோடும் அந்தப் புத்தகங்களை அவர்கள் பேணிக்காத்து வந்தார்கள்.

சீனிவாசன் கையிலிருக்கின்ற புத்தகம் அத்தனை மோசமில்லை. உறுதியாக 'பைண்ட்' செய்யப்பட்டிருந்தது.

ஒரு எழுபது வயதான புத்தகமாகத்தான் அது இருந்தது. புத்தகத்தின் கடைசிப்பக்கத்தில் ஒரு விஷயம் அச்சிடப் பட்டிருந்தது.

'மதராஸ் ராஜதானி' என்று அப்போது அழைக்கப் பட்ட தமிழ்நாட்டில் நடந்த விஷயங்களை கோட்டையி லிருந்த ஒரு அதிகாரி குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு, என்ன நடந்தது, யார், யார் அதில் ஈடுபட்டிருந்தார்கள், அதற்கான செலவுகள் என்ன அது எவ்விதம் முடிந்தது என்று புத்தகமாக எழுதியிருக்கிறார். அது இப்போது சரித்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தில் என்ன நடக்கிறதென்று புதிதாக வரும் அதிகாரிகளுக்கு தெரிய வேண்டுமென்பதால் ஆங்கிலேயர் செய்த ஏற்பாடு அது.

குறிப்பாய், கூவம் நதி என்று எடுத்துக்கொண்டால், இப்போது இருக்கிற அதிகாரி இந்த வாசக சாலைக்கு வந்து பார்த்தால், இந்த கூவம் நதி எப்போது தோன்றியது. முதன்முதலில் ஆங்கிலேயர்கள் இங்கு வந்ததும், இந்த கூவம் நதியை அவர்கள் என்ன செய்தார்கள் எப்படிப் பராமரித்தார்கள், எந்தப் பாலம் எப்பொழுது கட்டப் பட்டது. எத்தனை முறை தூர்வாரினார்கள் என்று எல்லா விவரங்களையும் எளிதாய் தெரிந்து கொள்ள முடியும். இதுவரை இந்த கூவம் நதிக்கு இவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கின்றன என்று தெரிந்து கொண்டு விட்டால், இனி என்ன செய்ய வேண்டும் என்பதையும் அந்த அதிகாரி எளிதாகத் தீர்மானிக்க முடியும்.

மதராஸில் எந்த இடம் கலவரப்பகுதி, எந்த இடம் அமைதியான பகுதி எந்த இடத்திற்கு எப்படிப் போகலாம், என்னென்ன யுத்தங்கள் நடந்தன. யார், யார் அதில் தலையிட்டார்கள், யுத்தத்தின் காரணமென்ன, எப்படி அந்த

யுத்தம் ஆரம்பித்தது, எப்படி முடிந்தது. யார் வெற்றி, யார் தோல்வி என்பதை சிறிதளவும் பிசகின்றி எழுதியிருந் தார்கள். ஆங்கிலேயர்கள் தங்கள் தோல்வியையும் அதற்கான காரணங்களையும் வெட்கமின்றி ஒப்புக் கொண்டிருந் தார்கள்.

பிரெஞ்சு படைகள் எப்படித் தாக்கின, யார் யார் இறந்தார்கள், எதனால் தோல்வி ஏற்பட்டது. மறுபடியும் படையெடுப்பு எப்போது நடந்தது எவ்விதமாக அந்தத் தோல்வி ஈடேறப்பட்டது என்பதையும் சொல்லியிருந் தார்கள். தோல்வியை வெற்றி என்று அவர்கள் சொன்னதே இல்லை. நடந்ததை நடந்தபடி அப்படியே எழுதியிருந் தார்கள். நடப்பு அதிகாரிகளுக்கு உண்மையைத் தெரிவிக்கும் விதமாக அந்த குறிப்பேடு இருந்தது.

சீனிவாசனின் நண்பர், வரலாற்று ஆய்வாளர் ராஜ வேலு ஒரு விஷயம் படித்துவிட்டு, அந்த விஷயத்தை ஜெராக்ஸ் எடுத்து ஒரு பென்சிலில் வட்டமிட்டு அவனுக்கு அனுப்பியிருந்தார். அந்த விஷயம் தொடர்பாய் பல பக்கங்கள் இருக்கின்றன என்றும், இதில் ஆர்வமிருக்கிறதா என்றும் அவர் கேட்டிருந்தார்.

அந்த விஷயத்தில் ஆர்வம் ஏற்பட்டு சீனிவாசன் அவரைப் பார்ப்பதற்கு வந்திருந்தான். அந்த விஷயம் அந்தக் குறிப்பேட்டில் இப்படித்தான் ஆரம்பித்திருந்தது.

‘திருவண்ணாமலையிலிருந்து சேலம் போகிற பாதையில் பழமுதிர்குன்றம் என்று ஒரு ஊர். அந்த ஊரின் மக்கள் ஆயிரத்து சொச்சம் பேர் ஒன்றாக சேர்ந்து ஒரு மலையை உயர்த்திக் கட்டினார்கள்’ என்று தலைப்புச் செய்தி இருந்தது.

முதல் வாசிப்பில் விவரம் புரியவில்லை. ஆயிரத்து சொச்சம் பேர் ஒன்றாகச் சேர்ந்து ஒரு மலையை எப்படி உயர்த்திக்கட்ட முடியும், ஒரு மலையை ஏன் உயர்த்திக் கட்ட வேண்டும் என்று சீனிவாசன் யோசித்தான்.

ராஜவேலுவும் அதே கேள்வியை யோசித்திருந்தார்.. "பல பக்கங்கள் படிக்க வேண்டியிருக்கும். எனக்கு நேர மில்லை. இதில் ஆர்வமாக இருந்தால் நீங்கள் படியுங்கள். புத்தகம் முழுவதும் படிக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி அந்தப் புத்தகத்தை தனியே எடுத்து வைத்தார். சீனிவாசனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவரம் சொன்னார்.

நேரம் கிடைத்தபோது, சீனிவாசன் வரலாற்று ஆராய்ச்சி நூலகத்திற்குச் சென்று அந்தப் புத்தகத்தை எடுத்து வெளிச்சத்தில் விரித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

இதை உள்ளே வைத்துப் படிக்க முடியாது. வெளியே இந்த வராண்டாவில் தான் படிக்க வேண்டும். ஆறு கிலோ எடையுள்ள இந்தப் புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு பக்கம் பக்கமாய் புரட்ட முடியாது. சீனிவாசன் புத்தகத்தை மார்போடு அணைத்துக்கொண்டு நூலகரிடம் உதவி கேட்டான். அவனுக்கு வராண்டாவில் ஒரு நாற்காலியும், சிறிய மேசையும் போடப்பட்டது. அங்கு உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்ட, நூலகர் அவனுக்கு ஒரு சிறிய பூதக்கண்ணாடியும் படிப்பதற்கு கொடுத்தார். சீனிவாசன் படிக்கத் துவங்கினான்.

'எண்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணா மலைக்கும் சேலத்துக்கும் இடையேயுள்ள நெடுஞ்சாலையில் உள்ள மக்கள் ஒன்று கூடி, தங்கள் ஊருக்கு வந்த நில அளவுகள் எடுக்கும் ஆங்கிலேய சர்வேயரை வரவேற்று, உபசரித்துக் கொண்டாடினார்கள்.

சர்வேயர் ஊர் பெயரைக் கேட்டார். 'பழமுதிர்குன்றம்' என்று மக்கள் சொன்னார்கள். 'எங்கிருக்கிறது குன்றம்' என்று அவர் கேட்க, மக்கள் அவரை தெருவுக்கு அழைத்துப்போய், ஊருக்குப் பின்னாலிருந்த சிறிய மலையைக் காட்டினார்கள்.

"இதைக் குன்றம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?" சர்வேயர் கேட்டார்.

"எங்கள் தாய், தகப்பன், தாத்தா பாட்டி, அவர்களின் பெற்றோர் எனப் பல மூதாதையர்கள் இதை இப்படித் தான் அழைத்து வந்திருக்கிறார்கள். கீழே ஒரு நடுகல்கூட இருக்கிறது. அந்த நடுகல் ஆநிரைகளை ஓட்டிக் கொண்டு போன திருடர்களைத் துரத்திச் சென்று, அந்த திருடர் களோடு சண்டையிட்டு, ஆநிரைகளை மீட்கும்போது தோளில் அம்பு பட்டு இறந்துபோன செங்கணான் என்ற வீரனுக்காக நடப்பட்ட நடுகல், செங்கணானின் ஊர் பழமுதிர்குன்றம். அதாவது இந்த ஊர்" என்று ஊர் மக்கள் சொன்னார்கள்.

"அப்படியா பழமுதிர்குன்றம் என்று போட்டிருக் கிறதா?"

"ஆமாம் ஐயா பழமுதிர்குன்றம் என்று தெளிவாகப் போட்டிருக்கிறது" என்று அவர்கள் சந்தோஷமாகச் சொன் னார்கள். அந்த ஊரின் பெயரைச் சொல்வதற்கு அவர் களுக்கு சந்தோஷமாக இருந்தது. அந்த ஊரின் பெயர் ஒரு கவிதை போல இருந்தது. "பழமுதிர்குன்றம் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா." பெரியவர்கள் குழந்தைகளுக்கு கதை சொன்னார்கள்.

"இப்போதுதான் மழையின்மையால் மலை காய்ந்து போயிற்று. முன்பு, மலை முழுவதும் பழமரங்கள் குட்டையான சப்போட்டா மரங்கள், குட்டையான

கொய்யா மரங்கள், சிறிய இலந்தை மரங்கள், நெட்டையான நாவல் மரங்கள் என்று வளர்ந்திருக்கும். சப்போட்டா வாசனை ஊர் முழுவதும் காலையிலேயே பரவியிருக்கும். காட்டு கொய்யாவை ஒரு கடி கடித்தால் வாய்முழுவதும் இனிப்பு பரவிவிடும். அந்த இலந்தையினுடைய சுவை சொல்லி மாளாது.

நாங்கள் இலந்தைப்பழத்தை பறித்து நசுக்கி சிறிய சிறிய வடைகளாகத் தட்டி உப்புபோட்டு ஜாக்கிரதையாக வைத்துக்கொள்வது வழக்கம். மாடுமேய்க்கும் சிறுவர்கள் அதை இரண்டு, மூன்று எடுத்துக்கொண்டு போவார்கள். உச்சி வெய்யிலில் இரண்டு இலந்தைவடை தின்றால் தாகமெடுக்காது. உடம்பில் சத்து அதிகமாகும். கர்ப்பிணி பெண்களுக்கு இந்த இலந்தை வடைகள் கொடுப்பது வழக்கம். மாதவிடாய் நிற்காத பெண்களுக்கும் இந்த இலந்தைவடை மிக உதவி செய்கிறது." என்று பெருமையோடு சொன்னார்கள்.

"உலகத்தில் வேறு பழமே ஒருவர் சாப்பிட வேண்டாம். இந்த பழமுதிர்குன்றம் நாவல்பழம் சாப்பிட்டால் போதும். எந்த வியாதியும் அண்டாது. வயிறு சுத்தமாகி விடும். நாவற்பழ கொட்டையை இடித்து தூளாக்கி அதில் கஷாயம் தயாரித்து வாரத்துக்கு ஒரு முறை குடித்தால் போதும். ரத்த ஓட்டம் அதிகரிக்கும். கண்கள் பளிச்சிடும். முதுமை அண்டாது. நாவல் பட்டையை ஜுரத்திற்கு கஷாயமாகக் கொடுப்பார்கள். நாவல் இலைகள் ஆட்டிற்கு நல்லது. ஆடுகள் நல்ல ரோமத்தோடு எந்த நோயுமின்றி ஆரோக்கியமாக வளரும்.

மலையின் அடிவாரத்தில் பிரம்புகள் வளர்கின்றன. பிரப்பம்பழங்கள் கொத்து கொத்தாய் கிடக்கின்றன. அந்த பிரப்பம்பழங்கள் அத்தனை ருசி.

அது ஒரு மாதிரி இனிப்பான புளிப்பு. நல்ல பழுத்த பழத்தை பறித்து உண்டால் வாயெல்லாம் ஒரு சுகமான உணர்வு பரவி இன்னும் நாலு பழங்கள் சாப்பிட மாட்டோமா என்று தோன்றும். இந்த பிரப்பம்பழங்கள் வயிற்றுப் புண்ணை, வாய்ப்புண்ணை ஆற்றுகின்றன. பிரப்பம்பழத்தை நசுக்கி அந்த கூழை எடுத்து வாய் முழுவதும் தடவிக்கொள்வது வழக்கம்” பழமுதிர்குன்றத்தின் மக்கள் அந்த மலையைப் பற்றி பெருமையாகச் சொல்வார்கள்.

“வெறும் சாப்பாட்டு மலை மட்டும் அல்ல அது. அதன் உச்சியில் மரங்களே கிடையாது. வெறும் புற்கள் மட்டுமே முளைத்திருக்கும். அதுவும் அந்த உயரத்தில் அருகம்புல் படுகை படுகையாக கிடக்கும். நடந்துபோகும் பாதை தவிர, மற்ற எல்லா இடங்களிலும் அருகம்புல் படுகை இருக்கும். ஒரு பத்து கெஜ சுற்றளவிற்கு வெறும் செம்மண் திட்டு இருக்கும். கீழெல்லாம் மூங்கில் புதர்கள். நடுவே சப்போட்டா, நாவல், இலந்தை மரங்கள். இன்னும் சற்று மேலே போக தாழம்புதர்கள் இன்னும் சற்று மேலே போக பசும்புற்கள். இன்னும் சற்று மேலே சரளைத்திட்டு.

உற்றுக் கவனித்தால் இந்த மலை ஏதோ ஒரு தனிச்சிறப்போடு இருப்பது தெரியும். பௌர்ணமியில், நிலவொளியில் மேலே நடமாட்டங்கள் இருப்பதை நாங்கள் கவனித்திருக்கிறோம். யாரோ நடமாடுகிறார்களே என்று தீப்பந்தத்தோடும், கை விளக்கோடும் போக, வழியிலேயே, ‘இப்போது வரவேண்டாம்’ என்று குரல் கேட்கும். நாங்கள் பயந்து வணங்கி திரும்பி விடுவதுண்டு. அப்படி திரும்பி வந்த பிறகு கீழிருந்து பார்த்தால், மேலே ஒரு பத்து பதினைந்து பேர் நின்று எங்களை ஆசிர்வதிப்பது தெரியும். நாங்கள் மறுபடியும் நமஸ்கரிப்போம்” என்று அந்த மக்கள் மலையைச்

சிறப்பித்துக் கூறுகிறார்கள்' என்று அந்த செய்தியில் சொல்லப்பட்டிருந்தது.

ஆங்கிலேய சர்வேயர், மக்கள் சொன்ன இந்தக் கதைகளை விலாவாரியாக எழுதி வைத்திருந்தார்.

அருமையான பழங்களும், தெய்வீக மூலிகைகளும், தேவதைகளின் நடமாட்டமும் கொண்டது அந்த குன்றம் என்று அவர்கள் சொன்னதாகவும், அங்கே கட்டிடம் எழுப்பவோ, ஓலைக்குடிசை போடவோ, ஒரு கொடி கூட நடவோ அந்த தேவதைகள் அவர்களை அனுமதிக்க வில்லையென்றும், இயற்கையாய் எப்படி இருக்கிறதோ அப்படியே இருக்கட்டும் என்று அந்த தேவதைகள் சொல்லி விட்டதாகவும் அவர்கள் சொன்னதாக அந்த ஆங்கிலேயர் எழுதியிருந்தார்கள்.

புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே ராஜவேலு நூலகத்திற்குள் நுழைந்தார்.

"என்ன சீனிவாசன், இது சரியான விஷயம்தானா, நாவலுக்கு உதவுமா" அவர் கேட்டார்.

"நிச்சயம் நாவலாகும். அற்புதமான ஒரு விஷய மிருக்கிறது. ஒரு ஊர் முழுவதும் சேர்ந்து ஒரு மலையை உயர்த்திக் கட்டியிருக்கிறது. எதற்காக என்றுதான் தெரிய வில்லை" சீனிவாசன் பதில் சொன்னான்.

'ஒரு விஷயம் நடைபெறுவதற்கு நூறு காரணங்கள். ஒரு விஷயம் நடைபெற்றால் அதிலிருந்து நூறு காரியங்கள். ஒவ்வொரு காரியமும் ஒரு காரணமாக நடைபெற, அந்த காரணத்திற்காக பல காரியங்கள் நடைபெறுகின்றன. வாழ்க்கை கிளைவிட்டு கிளைவிட்டு பின்னி மிகப்பெரிய சல்லிவேராய், பூமிக்கு அடியில் மறைந்திருக்கும் பெரிய மரத்தின் உறிஞ்சு குழாய்களாய் இருக்கின்றன. மரத்தின்

சல்லிவேர் கண்ணுக்குத் தெரியாது போல இந்த காரணமும், காரியங்களும் ஆராய்ந்தாலொழிய மனிதர்களுக்கு தெரிவதில்லை.

ஒரு மலையை ஒரு ஊர் பத்தடி உயரத்திற்கு உயர்த்திக் கட்டுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும். தமிழ் நாட்டில் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற ஒரு சிறிய கிராமத்து மக்கள் எதன் பொருட்டு இந்த முயற்சியைச் செய்யக்கூடும். இதைச் செய்வதற்காக என்ன நிகழ்ந்தது. இதைச் செய்தபிறகு என்ன நடந்தது. இதைச் செய்தவர்கள் யார். அவர்கள் அடிப்படைக் குணமென்ன. சீனிவாசன் யோசிக்கத் துவங்கினான்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது. இந்திய தேசம் பல்வேறு விதமாய் பிளவுபட்டுக்கிடந்த காலம்.

“யாருடா நீ” இருட்டில் வருபவரை எதிரே நிற்பவர் கேட்பார்.

“வழிப்போக்கனுங்க” தள்ளிப்போகும் முன் பதில் சொல்வான்.

“என்ன ஜாதி” பெயர் கேட்பதற்கு முன் உருவம் பார்ப்பதற்கு முன் ஜாதியைக் கேட்பார். அவன் இழிந்த ஜாதியாக இருந்தானெனில் அவனிடம் பெயர் கேட்க வேண்டிய அவசியம் கூட இல்லை. அவன் முகத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லை. விலகி நிறுத்தி விடலாம்.

ஆனால், இருட்டில் இவனுடைய குரலைவைத்து என்ன ஜாதி என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. வெளிச்சத்தில் முகம் தெரிந்தால் கூட ஓரளவு அனுமானிக்கலாம். குரலில் குழைவு இல்லை. தாழ்ந்த ஜாதி எனில், நடுக்கமும், குழைவுமாய் பேச்சு வெளிப்பட்டிருக்கும்.

வழிப்போக்கனுங்க என்று அவன் சொன்னதில் சற்று விலகி நில் என்ற த்வனியே இருந்தது. ஆனால், அதே நேரம், நீ யார் ஜாதி கேட்பதற்கு நீ என்ன ஜாதி' என்றும் எதிர்பட்டவன் கேட்கவில்லை. எனவே, இவன் மிக உயர்ந்த ஜாதியாகவோ, க்ஷத்திரியனாகவோ இருக்க முடியாது. தன் ஜாதியைப்பற்றி கம்பீரம் கொள்பவனாகத்தான் இருக்க முடியும.

எதிர்பக்கம் சற்று தயக்கத்திற்குப் பிறகு, "ஆசாரிங்கோ" எனறு குரல் வந்தது.

"கல்லா, மரமா" விசாரித்தவர் மறுபடி கேட்டார்.

"மரமுங்கோ"

"அப்படியா கொஞ்சம் நின்னுட்டுப் போறது" விசாரித்தவர் சட்டென்று சுயநலமானார். அவருக்கு மர வேலை செய்பவர் தேவைப்பட்டது.

வந்தவன் வெகு தூரத்திலிருந்து நடந்து வந்திருக்கிறான். சற்று நின்று பேசினால் நன்றாக இருக்குமென்று அவனுக்கும் பட்டது. நின்றான்.

"என்ன சொல்லுங்க, நெடுந்தொலைவு போகணும்"

"நெடுந்தொலைவுன்னா, எங்கே?"

"சேலத்துக்கு போறேனுங்க"

"தனியாவா?"

"ஆமாங்க. தேர் செய்யறதுக்கு கூப்பிடறாங்க. ஒரு அம்மன் கோயில் இருக்குதாம். அதுக்கு தேர் செய்யணும்னு பருப்பு வியாபாரம் பண்ற செட்டியாருங்க கூப்பிடறாங்க. போன மாசம்தான் அச்சாரம் வாங்கினேன். இதோ கிளம்பிட்டிருக்கேன்."

"அட, தேரு பண்ற ஆசாரியா? காலையில வரைக்கும் இருந்துட்டு போயேம்பா. ராத்திரியெல்லாமா நடப்பே?"

"இது என்ன ஊருங்க?" வந்தவர் நிற்பதா, போவதா என்று தெரியாமல் அதற்கு பதில்சொல்லாமல் ஊர்பற்றி விசாரித்தார்..

"இது பழமுதிர்குன்றம், வேளாளர்கள் வாழற ஊர் முதலியார்களும் பேர்பாதி இருக்காங்க எண்ணை செட்டி யாருங்க குடும்பமும் ஒரு பத்து, பதினைஞ்சு இருக்கு.

"ஊர் பெரிசுங்களா?"

"ஆயிரம் வீடு இருக்கு போயேன்"

"சத்திரம் சாவடி இருக்குங்களா? சாப்பாடு கிடைக் குங்களா?"

"சாப்பிடாமயா கிளம்பிட்டே?" அவர் பிரியத்தோடு கேட்டார்.

சாப்பாடு என்பது மிக முக்கியமான விஷயம். எந்த ஜாதியினராக இருந்தாலும் பசிக்கும். அந்ததந்த ஜாதியினருக்கு அவரவர் தகுத்திக்கேற்ப இடம் பார்த்து உட்கார வைத்து உணவு போடுவது மனிதர்களின் தலையாய கடன். தன்னைத் தாண்டிப் போகும் ஒருவரை பசியோடு அனுப்புவது நல்ல மனிதப் பிறவிக்கு அழகல்ல. வந்தவர் ஆசாரியாக இல்லாமல் நான்காவது வருணத்தாராக இருந்திருந்தாலும் அவர் சாப்பிட்டு விட்டுப்போ என்று தான் சொல்லியிருப்பார்.

உணவு கொடுப்பது என்பது மிக நல்ல பழக்கம். எந்த வருணத்திலும் நல்லவர்கள் உண்டு. வயிறு காய்ந்து கிடக்கும் போது அந்த நல்லவர்கள் சிறிதளவு உணவு உண்டு, நீர் குடித்து முகம் மலர்ந்தால் அந்த நேரத்தில் அவர்கள் சொல்கிற எந்த வாக்கும் பலிக்கும். நாம் கேட்காமலேயே 'நலமாக இரு' என்று ஒரு வாழ்த்து அவர்கள்

அடிமனதிலிருந்து கிளம்பும். அந்த மௌன வாக்கு வீட்டைச் சூழ்ந்து கொண்டு வெகு நிச்சயம் நலன்கள் தரும்.

பழமுதிர்குன்றம் பலபேருக்கு உணவு அளித்து அளித்து செழிப்பாக இருக்கிறது. தொலை தூரத்திலிருந்து வருபவர் மட்டுமல்ல, அண்டை ஊரிலுள்ளவர்களும் பழமுதிர்குன்றம் நோக்கி வண்டி கட்டி வந்து, திருவிழா நடக்கிறது. இரண்டு மூட்டை நெல் கொடுங்கள் என்று கேட்பார்கள். பருப்பு கேட்பார்கள். எண்ணை கேட்பார்கள். சிலசமயம் துணிமணிகளும் தானம் வாங்கிப் போவதுண்டு.

மண்வளம் மிகுந்திருப்பதால், மழை தவறாது பெய்து ஊர் செழிப்பாக இருப்பதால் விவசாயிகள் இரண்டு போகம் தாராளமாக பயிர் செய்ய முடிகிறது. மற்ற நேரத்திற்கு பூக்களோ, பருப்பு வகைகளோ விதைத்து, மேம்போக்காக காவல் காத்து அறுவடை செய்வார்கள்.

ஊர் உள்ளடங்கி இருப்பதால், மதராஸ், திருச்சிராப் பள்ளி, மதுரை மார்க்கமாக இல்லாமல் இருப்பதால், செஞ்சி தாண்டி திருவண்ணாமலை வந்து அதிலிருந்து நாற்பது கல் உள்ளே வரவேண்டி இருப்பதால், அரசாங்க அதிகாரிகளால் பெரிதாக தொந்தரவு எதுவுமில்லை. அப்படி வருஷத்திற் கொரு முறை வருகிற அதிகாரியும் தன் வருகையை முன் கூட்டியே சொல்லிவிட, கிராமம் ஏழ்மை வேஷம் போட்டுக் கொள்ளும். அதிகாரி வந்து போகும்வரை யாரும் நல்ல உடை உடுத்த மாட்டார்கள். எவரும் வாய்விட்டுச் சிரிக்க மாட்டார்கள். நோயுற்றவர்கள் அநேகம் பேரும், வேலை யில்லாதவர்கள் அநேகம் பேருமாய் காட்சி தருவார்கள். அதிகாரி எப்படி துருவி விசாரித்தாலும், ஒண்ணும் விளைச்சல் இல்லீங்க என்று ஒப்பாரி வைப்பார்கள்.

அதிகாரி போன பிறகு சந்தோஷம் தாளாது, ஊரில் கூட்டு விருந்து நடைபெறும். அப்படி கூட்டு விருந்து

நடைபெறும் போது அதிகாரி சந்தேகப்பட்டு திரும்பி வருகிறார் என்று கேள்விப்பட்டு மளமளவென்று பெரிய குழி வெட்டி, கூட்டு விருந்தில் தயாரித்த உணவுகளை அப்படியே பானையோடு குழியில் இறக்கி தட்டு போட்டு மூடி, மேலே துணி கட்டி வைத்து விடுவார்கள்.

ஒருநாள் கழித்து அதை மேலே எடுத்தபோது சாதம் குழைந்து போய், மயக்கம் தரக்கூடிய ஒரு வித சுவையான பதத்திற்கு மாறி இருந்தது. மோர்விட்டு கலக்கி அதைக் குடித்த போது உடம்பில் ஒரு வித மதமதப்பு ஏற, ஊர்முழுவதும் இரண்டு நாட்கள் தூங்கி வழிந்தது. அப்படி தூங்கி வழிந்தபோதும், அதிகாரியை ஏமாற்றியதைச் சொல்லி சிரித்தது.

அந்த ஊரில் பெரிய பிரிவுகள் இல்லை. எல்லோருக்கும் வேலையிருந்ததால் ஜாதிச் சண்டைகள் இல்லை. உன்னை விட நான் உயர்ந்த ஜாதி என்று சொன்னால் தான் சண்டை வரும். அப்படி இல்லாது போகவே எல்லோருமே இணக்கமாக இருந்தார்கள். வேளாளர்களும், முதலியார்களும் விவசாயம் செய்து வந்தார்கள். அவர்களிடமிருந்து பொருள்களை வாங்கிய, அங்கு சிறுபான்மையினராக இருந்த வணிகர்கள், அதை வெளியே கொண்டுபோய் விற்று வந்தார்கள். ஆசாரிகளுக்கும், இரும்பு வேலை செய்கிறவர்களுக்கும் இடைவிடாது வேலை இருந்தது. ஒரு பத்து குடும்பங்கள் நெசவிலும் ஈடுபட்டிருந்தன. பொன்வேலை செய்பவர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். நான்காவது வருணத்தைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனியே மேட்டுப் பகுதியில் வசித்து வந்தார்கள்.

அந்த மேட்டை ஒட்டி மிகப்பெரிய குளம் ஒன்று இருந்தது. அந்த குளம் தாண்டி பாசன வயல்கள் இருந்தன.

பெரும் நிலப்பரப்பில், சேரியிலுள்ள ஒவ்வொரு வரும் தனித்தனியே தோட்டத்தோடு வீடு கட்டி வேலி போட்டு தங்கள் தோட்டத்திற்குள் நிறைய காய்கறிகள் பயிர்செய்து ஊருக்குள்ளேயே விற்று வந்தார்கள். காய்கறிக்கு குளத்தி லிருந்தே நீர் எடுத்துக்கொண்டார்கள்.

சிவனுக்கு ஒன்றும் விஷ்ணுவுக்கு ஒன்றுமாய் இரண்டு கோயில்கள் இருந்தன. மலையடிவாரத்தில் ஒரு காளி கோயில் இருந்தது. அந்த காளி கோயில் மிகுந்த சக்தி வாய்ந்தது என்று சொல்லப்பட்டது. எட்டு கரங்களையுடைய அந்தக்காளி ஒரு காலை தரையில் ஊன்றி மறுகாலை சிம்மத்தில் வைத்து எட்டாவது கையால், தன்னை அண்டிக் கும்பிடுகிற அரசன் போன்ற அமைப்புள்ளவன் தலையில் கை வைத்திருந்தது. ஒரு கோணத்தில் குறுஞ்சிரிப்புடனும், வேறு கோணத்தில் கோபமுள்ளவளாகவும் அந்தக் காளி தோன்றினாள்.

இந்த மூன்று கோயில்களிலும் பூஜை செய்ய ஒரே ஒரு அந்தணர் அந்த ஊரில் இருந்தார். அவரும் வேதம் படித்தவர் அல்ல. வெறுமே தோத்திரங்கள் செய்து, சிறிய ஹோமங்கள் செய்து கடவுளுக்கு ஆடை அலங்காரங்கள் செய்து கற்பூர ஆரத்தி காட்டுகின்ற குருக்கள் வகுப்பைச் சேர்ந்தவர்.

பெரிய ஹோமமோ, பூஜையோ நடக்க வேண்டும் என்றால் திருவண்ணாமலையிலிருந்து தான் அந்தணர்கள் வண்டி கட்டிக்கொண்டு வரவேண்டும். இரண்டு இடங்களில் சிறிய காட்டாறுகள் குறுக்கிடும். மற்றபடி பாதை நன்றாக இருப்பதால் காலையில் கிளம்பினால் மதியம் வந்து விடலாம்.

அவ்விதம் வருடத்திற்கொருமுறை பொங்கலன்று அந்தணர்கள் வந்து சூரியனாருக்கு பூஜை செய்து விட்டுப்

போவார்கள். நல்ல தட்சணை வாங்கிக்கொண்டு போவார்கள்.

ஆடிமாதம் காளிக்கு பூஜைகள் நடக்கும். ஊர்மக்களே ஒன்றுகூடி கையில் காப்பு கட்டி அம்மனைத்தொட்டு பூஜை செய்வார்கள். தீ மிதிப்பார்கள். அலகு குத்திக் கொள்வார்கள். மிக அழகிய ஒரு அம்மன் விக்கிரகத்தைப் பல்லக்கில் வைத்து அலங்கரித்து ஊரைச் சுற்றி வருவார்கள். பயிரில் பூச்சி தாக்கினாலும், வீட்டிலுள்ள குழந்தைகளை நோய் தாக்கினாலும் கதவு திறந்து ஓடிவந்து அம்மா நீதான் காப்பாற்ற வேண்டும் என்று அலறுவார்கள். இது வரை அம்மா காப்பாற்றியிருக்கிறாள்.

ஒருமுறை வேர்க்கடலைப் பயிரில் வெட்டுக்கிளிகள் வந்து வீழ்ந்து விட்டன என்று திருவண்ணாமலையிலிருந்து செய்தி வந்தது. நம்மூருக்கும் வந்து விடுமோ என்று ஊர் மக்கள் பயப்பட, ஒரு பெண்மணி எழுந்து, 'மூன்று நாள் புகை போடுங்கள்' என்று சொல்ல வயல் வெளியில் இருந்து கருவேலமரங்களை வெட்டிக் கொணர்ந்து, அந்த பச்சை மரங்களுக்கு எண்ணை ஊற்றி தீ வைத்தார்கள். புகைந்து புகைந்து மரங்கள் எரிய அந்தப் புகை ஊர்முழுவதும் படர்ந்தது. புகையினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ வெட்டுக்கிளிகள் பழமுதிர்குன்றத்தின் பக்கம் திரும்பவே இல்லை. அவை வேறுபக்கமாய் போய்விட்டன என்றும் அப்படிப் போன பூச்சிகள் எல்லாம் அழிந்து விட்டன என்றும் சொல்லப்பட்டது. 'நம்மூரு புகை அங்க போய் அடிச்சிருச்சுல்லே' ஊரின் தலைவர் சொல்ல, அதை எல்லோரும் கைதட்டி ரசித்தார்கள்.

உபாயம் சொன்னவளிடம் போய் கைகூப்பி நிற்க,

"நான் என்னத்த செய்தேன். எல்லாம் அவ சொன்னா. அங்க போய் கும்பிடுங்க" என்று அந்த பெரியவள் மறுதலித்துவிட, ஊர் அம்மனுக்கு விசேஷ பூஜை நடத்தியது.

தை மாதம் மட்டுமே திருமணங்கள் நடத்தும்படி ஊரில் ஒரு கட்டுமானம் இருந்தது. மற்ற மாதங்கள் திருமணத்திற்கு ஏற்றதாக இருந்தாலும் அவரவர்க்கு வேலை அதிகமாக இருந்ததால் முக்கிய காரணங்கள் இருந்தா லொழிய வேறு எந்த மாதத்திலும் திருமணம் நடத்துவ தில்லை.

ஒருமுறை ஒரு வேளாளர் பெண்ணும், முதலியார் பையனும் காதலாகி நெருங்கியிருப்பதை ஊர் பார்த்து விட, பார்த்த அடுத்த முகூர்த்தத்தில் திருமணம் நடத்தி பிரித்து விட்டார்கள். பிறகு தை மாதத்தில் மறுபடியும் விமரிசையாய் விருந்து வைத்தார்களா. இந்த திருமணம் கூட விடியற் காலையில் நடக்காது. அவரவர்க்கு வயல் வேலைகள் இருப்பதால் பதினோரு மணியிலிருந்து பன்னிரெண்டு மணிக்குள்ளாகத் தான் திருமணம் இருக்கும். ஒரு மாதத்தில் இரண்டு, மூன்று முகூர்த்தங்கள் தான் இருக்குமென்பதால், அந்த ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் நடப்பதாக இருந்தால் எல்லாவற்றையும் ஒரே நாளில் விமரிசையாக நடத்தி, ஆளுக்கொரு நாள் விருந்து வைத்து, தொடர்ச்சியாய் மூன்று நான்கு நாட்கள் விருந்து சாப்பிடுவார்கள்.

ஒருமுறை ஐந்து திருமணங்கள் ஒன்றாக நடந்துவிட, தொடர்ச்சியாக விருந்து, சாப்பிட முடியாமல் ஒரு விருந்து மறுவாரத்திற்கு தள்ளி வைக்கப்பட்டது.

"திருமணம் தான் முக்கியம், முகூர்த்தம் தப்பக்கூடாது. விருந்துக்கென்ன, எப்போது வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளலாம். நீங்கள் ஒன்பதாம் நாளன்று விருந்து

வையுங்கள்” என்று சொல்லி அந்த ஒன்பதாம் நாள் விருந்தை மிக விமரிசையாக உண்டு மகிழ்ந்தது.

கல்யாண விருந்தின்போது சைவ உணவும், முப்பது நாட்கள் கழித்து தாலி பிரித்துக்கட்டுகிற போது அசைவ உணவு விருந்தும் நடத்தப்பட்டன. ஆடு வெட்டி, கோழி அடித்து மீன் பிடித்து விருந்துவைக்க ஊரே நிதானமாய் உட்கார்ந்து அதைச் சாப்பிடும். நான்காவது வருணத்தினர் உடன் அமர்ந்து சாப்பிடமுடியாது என்பதால், அவர்களுக்கு ஆடும், கோழிகளும், மீனுக்குண்டான காசும், அரிசியும், இன்ன பிற வகைகளும் கொண்டு போய் கொடுத்து விடுவார்கள்.

அவர்கள் என்று விருந்து செய்து சாப்பிடுகிறார்களோ அன்று மணமகளும், மணமகனும் போய் சேரிக்குள் அமர்ந்து கொள்வார்கள். அங்கு, கூட்டத்தின் தலைவர் அவர்களுக்கு பல்வேறு விதமாக கழிப்புகள் செய்வார். அவர்கள் கண்திருஷ்டி எடுப்பதில் வல்லவர்கள். நிச்சயம் எடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை ஊரில் அனைவருக்கும் இருந்தது. கண்திருஷ்டி மட்டுமல்ல உடம்பிலுள்ள சுளுக்கு, வலி, தலைநோவு என்று எல்லாவற்றிற்கும் அவர்களிடம் வைத்திய முறைகள் இருந்தன. ஆனால், வைத்தியம் செய்து கொள்ள வேண்டும் என்றால் அங்குதான் போக வேண்டும். அவர்கள் வந்து வைத்தியம் செய்தால் பலிக்காது.

நான்காவது வருணத்தினர் வீட்டில் திருமணம் என்றால், ஊரிலுள்ள அத்தனை பேரும் வாரி வழங்கினார்கள். ஊரின் சார்பாக அவர்களுக்கு புதுத்துணி கொடுத்தார்கள். மணமக்களுக்கும், மணமகனுக்கும், மண மகளின் தாய், தந்தைக்கும், மணமகனின் தாய், தந்தைக்கும் புதிய துணிமணிகள் கொடுத்து கௌரவித்தார்கள். அவர்கள் சார்பாய் ஊரின் எல்லையிலுள்ள காளிக்கு கேழ்வரகுக் கூழ்

சமர்ப்பிக்கப்படும். அந்தக் கூழை ஊர் முழுவதும் எடுத்துக் கொள்ளும். கீரைக் கறியும், பருப்புத் துவையலும், கேழ்வரகுக் கூழும் ஒவ்வொரு வீடும் வந்து வாங்கிக் கொண்டு போகும். நான்காவது வருணத்தினர் காசுகொடுத்துவிட, கம்மாளர்கள் அதை நிறைவேற்றிவைப்பார்கள்.

பழமுதிர்குன்றத்தில் இந்திய தேசத்தின் தலையெழுத்துப்படி ஜாதிப்பிரிவுகள் இருந்தன. ஆனால், அவர்களுக்குள் சண்டையில்லாமல், சச்சரவில்லாமல் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள்.

திருவண்ணாமலையிலிருந்து முகமதியர்கள் வந்து பருப்பு வாங்கிப் போவார்கள். பித்தளை குடங்களோடு வந்து எண்ணெய் வாங்கிப் போவார்கள். பதிலுக்கு மெல்லிய துணிமணிகளை கொடுத்துவிட்டுப் போவார்கள். வரி வசூலிக்க முன்பெல்லாம் முகமதியர்கள் அலங்காரமாக உருவிய வாட்களோடு வருவார்கள். ஆனால் இப்பொழுது அப்படி அல்ல.

இப்பொழுது பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. மதராஸ் பட்டணத்தில் கவர்னர் இருந்து கொண்டு, நாலாதிக்குக்கும் ஆட்களை அனுப்பி வரி வசூல் செய்கிறார்கள். முஸ்லீம்களிடம் வேலை செய்த நாயக்கர்கள் தான் இப்பொழுது பிரிட்டிஷாரின் கூலிகளாக இருக்கிறார்கள். அந்த நாயக்கர்களில் பலபேர் தெலுங்கு பேசுவார்கள். கொச்சையாய் தமிழ் பேசுவார்கள். கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்துகொள்வார்கள். கட்டுப்பாடாக இருக்கிற ஊர் என்று அறிந்தால், பயந்து கொடுப்பதை வாங்கிக்கொண்டு போவார்கள். 'மாட்டேன்' என்று மறுக்கிற பொழுதுதான் அவர்களுக்குக் கோபம் வரும்.

நாயக்கர்களை ஏமாற்றுவது பழமுதிர்குன்றத்து மக்களுக்கு எளிதாகவே இருந்தது. நாயக்கர்களை நன்கு

உபசரித்தால் போதும், அரைகுறையான தெலுங்கில் பேசினால் போதும், ருசியாக மாமிச உணவு படைத்தால் போதும் நாயக்கர்கள் மனம் நெகிழ்ந்து விடுவார்கள். பழமுதிர்குன்றத்து மக்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்று முழுமையாக நம்பி வரி வசூலிப்பை மேம்போக்காக நடத்திக் கொண்டு போய்விடுவார்கள்.

"ஐயா உங்களுக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் எங்கள் வயிற்றைச் சுருக்கிக்கொண்டு உங்களுக்கு தானியம் அளிக்கிறோம்" என்று சொன்னால் போதும். அழுதுகொண்டே நெல் கூடைகளை எடுத்துக் கொண்டு போவார்கள்.

பழமுதிர்குன்றத்து மக்களுக்கு ஒரு பிரச்சினை வேதக் காரர்களால் வந்தது. திருவண்ணாமலைக்கு வேலைக்குப் போன நான்காம் வருணத்தினர், திரும்பி வரும்போது, தாங்கள் விவிலிய மதத்திற்கு மாறிவிட்டதாகவும் வேதக் காரர்களாகி விட்டதாகவும் இனிமேல் தங்களை இழிவு படுத்தக் கூடாதென்றும் உரத்துச் சொல்ல கூட்டம் திகைத்தது. 'ஆம்' என்று ஒரு வெள்ளைப் பாதிரியார் எச்சரிக்க இன்னும் பல பேரை வேதசபைக்கு மாறி விடுமாறு கொச்சைத் தமிழில் கேட்டுக் கொள்ள ஊரார் திகைத்துப் போனார்கள்.

"எங்களை விட இவர்கள் உயர்வு என்று சொல்லி எங்களைத் தொடாதே என்று சொல்கிறார்கள், நாங்கள் என்ன செய்ய?" என்று பழமுதிர்குன்றத்து நான்காவது வருணத்தினர் திகைத்து நிற்க, ஊர் வேதக்காரர்களை வேறு ஊருக்குப் போய் குடியேறும்படி பணிவோடு கேட்டுக் கொண்டது. இங்குள்ள அவர்கள் நிலத்தை காசு கொடுத்து வாங்கிக் கொண்டு கூடுதலாய் கொஞ்சம் காசு கொடுத்து அவர்களைத் சந்தோஷமாய் வழியனுப்பியது.

இந்தப் பிரச்சினை நடந்த ஒரு மாதம் முழுவதும் பழமுதிர்குன்றத்து மனிதர்கள் திகைத்துப்போய் உட்கார்ந் திருந்தார்கள்.

"ஏரிக்கரையோரம் உங்களுக்கென்று ஒரு தனி ஊர் அமைத்துக் கொண்டால், அந்த ஊருக்கு விவிலியத்திலிருந்து பெயரிட்டு, வேண்டுமென்ற வசதிகள் செய்து கொடுத்து வேறு ஊரிலே மதம் மாறுகின்ற வேதக்காரர்களையும் இங்கு கொண்டு வந்து வைத்துவிடலாம். அப்போதுதான் ஊர் வேதக்காரர்கள் ஊராக, கட்டுமானமாக இருக்கும்" ஒரு ஆங்கிலேய பாதிரியார் சொல்ல அவர்கள் அப்படியே செய்தார்கள்.

நினைத்ததுபோலவே பல ஊர்களிலிருந்து வேதக் காரர்கள் வந்தார்கள். எல்லோருக்கும் ஆடுகளும், மாடுகளும் தரப்பட்டன. ஏரிக்கரை ஓரமிருந்த மேய்ச்சல் நிலம் அவர்களுக்கு உதவியாக இருந்தது. காய்கறித் தோட்டமும், பசுக்கள் மேய்த்தலுமே அவர்களின் வாழ்க்கையாக இருந்தன. பாலிலிருந்து வெண்ணை எடுத்து நெய் காய்ச்சி, எல்லா கிராமங்களுக்கும் அனுப்பினார்கள். இதற்காக மட்டக் குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் அந்த ஆங்கிலேய பாதிரியார் மலிவு விலையில் வாங்கிக் கொடுத்திருந்தார்.

மிக உயர்ந்த கோபுரமுள்ள ஒரு தேவசபை அந்த ஊரில் ஏற்பட்டது. அந்த விவிலிய ஊரில், பெண்களெல்லாம் எழுதப் படிக்கக் கற்கிறார்கள் என்பதுதான் பழமுதிர் குன்றப் பெண்களுக்கு வியப்பும், ஆச்சரியமாகவும் இருந்தது. தங்களுக்கு அப்படி ஒரு வாழ்க்கை கிடைக்கவில்லையே என்ற வருத்தம் ஏற்பட்டது. அந்தப் பெண்கள் எல்லாம் முழு நீள ரவிக்கை அணிகிறார்கள் என்பது கேள்விப்பட்டு பழமுதிர்குன்றத்து பெண்கள் திகைத்துப் போனார்கள்.

பழமுதிர்குன்ற ஆண்களின் அதட்டலுக்குப் பயந்து தங்களுக்குள்ளேயே பொருமிக் கொண்டார்கள்.

“இவனுக்கு வாழ்க்கைப்பட்டு சாவறதைவிட எங்க யாவது விவிலிய சபைக்குப் போய் வேதக்காரியா மாறி விடலாம்” என்று பெண்கள் பேசுகின்ற காலம் வந்தது.

‘நம் பெண்களுக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தாலென்ன’ என்று இளைஞர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இது பற்றிய வாத, பிரதி வாதங்கள் அடிக்கடி பழமுதிர்குன்றத்தில் நடக்க ஆரம்பித்தன.

இதுதவிர, அரிசியும், பருப்பும் நல்ல விலை கொடுத்து வாங்குகிற ஆட்களாக வேதக்காரர்கள் இருந்ததும் பழ முதிர்குன்ற ஆட்களுக்கு வேதனையாக இருந்தது. ஒருபடி அரிசி ஓரணாவுக்குக் கிடைத்த போது ஒன்றே கால் அணா கொடுக்க வேதக்காரர்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் அரிசி புடைக்கப்பட்டு, கல் நீக்கப்பட்டு சுத்தமானதாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

தரம்குறைந்த அரிசியைக் கொடுத்துவிட்டால், அதை மறுபடியும் கொண்டு வந்து வீட்டு வாசலில் இறக்கிவிட்டுப் போனார்கள். ‘இன்னும் மூன்று நாட்களில் நல்ல அரிசி கொடுக்கவில்லையெனில் உங்களைப்பற்றி அரசாங்கத்திடம் புகார் செய்வேன்’ என்று சொன்னார்கள்.

அரசாங்கம் ஆங்கிலேயர் கையிலிருந்தது. ஆங்கிலேயர் களுடைய விஷயங்களைப் புரிந்து கொண்டு மொழி அறிந்து கொண்டு பேசுபவர்களாக மதராஸில், திண்டிவனத்தில், விழுப்புரத்தில், திருவண்ணாமலையில் இருக்கின்ற அந்தணர்கள் இருந்தார்கள். அந்த அந்தணர்கள் அதிகாரம் யாரிடம் இருக்கின்றதோ அந்தப் பக்கம் எளிதாக சாய்ந்து கொண்டார்கள்.

“வாரும் ரிச்சர்டு தேவசகாயம் அவர்களே, வாரும்” என்று போன தலைமுறை ஒதுக்கி வைத்த நான்காவது வருணத்தாரை இந்தத் தலைமுறை அந்தணர் கூப்பிட்டு எதிரே உட்கார வைத்துக் கொண்டார்.

“உமக்கு என்ன வேண்டும் சொல்லும், நான் ஏற்பாடு செய்து தருகிறேன்” என்று அவர்களுக்கு உதவி செய்து, ஆங்கிலேய அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கிக் கொண்டார்.

ஒருநாள் கோச் வண்டியில், ஒரு ஆங்கிலோ இந்திய அதிகாரியும் இரண்டு அந்தண அதிகாரிகளும் வந்தார்கள். ஆங்கிலோ இந்திய அதிகாரிக்கு ஒன்றும் தெரியவில்லை. எல்லாவற்றையும் இளித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். புத்திசாலித்தனம் குறைவாக இருந்தது.

ஆனால் அந்தண அதிகாரிகள் மிகுந்த கெட்டிக் காரர்களாக இருந்தார்கள். ஆங்கிலோ இந்தியனை விட மிக அழகாக ஆங்கிலம் பேசினார்கள். அந்த ஆங்கிலோ இந்தியனுக்கு கையெழுத்து மட்டுமே ஆங்கிலத்தில் போடத் தெரிந்திருந்தது.

பழமுதிர்குன்றத்தில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர், குழந்தைகள் எத்தனை பேர், அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர், எவ்வளவு ஊர் பரப்பு, எத்தனை வீடுகள் என்றெல்லாம் கேள்வி கேட்டு அவர்கள் எழுதிக்கொண்டார்கள். ஜாதிகள் எத்தனை என்று கேட்டு பிரித்து வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு ஜாதியிலும் எத்தனைபேர் என்று கேட்டு எழுதிக் கொண்டார்கள். ராணுவத்திற்கு ஆள் எடுத்தால் எத்தனை பேர் சேருவார்கள் என்று ஒரு தகவல் கேட்டார்கள்.

பழமுதிர்குன்றத்து மக்கள் மௌனமாக இருந்தார்கள்.

"இந்த அமைதியெல்லாம் சரி வராது. வெகு நிச்சயமாய் ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும்போது, உங்கள் ஊரிலிருந்து நூறு பேராவது சேர வேண்டும். இல்லையெனில், இந்த ஊருக்கு கொடுத்து வரும் பல வசதிகள் நிறுத்தப்படும்" என்று அதிகாரமாக ஒரு அந்தணர் சொன்னார்.

"இதுவரை என்ன வசதிகள் செய்து கொடுத்து விட்டீர்கள்" என்று ஊரிலுள்ள ஒரு இளைஞன் எழுந்து கேட்ட போது, "எதிர்த்தா பேசுகிறாய் உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று அந்த அந்தணர் முஷ்டி மடக்கினார். அந்த இளைஞன் அவரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முறைப்பைக் கண்டு அந்தணர் பின்வாங்கினார்.

"உனக்கு நல்ல விதமாய் சொல்கிறேன் கேள். இந்த ஊர் உள்ளடங்கி இருக்கிறது. அதனால் உடனடியான உதவிகள் ஏதும் அரசாங்கம் செய்யவில்லை. ஆனால் நீங்கள் ராணுவத்தில் சேர்ந்தால், உங்கள் ஊர் பற்றி ஆங்கிலேய அதிகாரிகளுக்கு தெரியவந்து அவர்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்."

"எங்களுக்கு எந்த உதவியும் தேவைப்படவில்லையே. உதவி என்று ஒன்று வேண்டுமென்றால் காலாகாலத்திற்கும் மழைபெய்ய வேண்டியது தான் எங்களுக்கு முக்கியம். அதை ஆங்கிலேய அதிகாரிகள் ஏற்படுத்தித் தருவார்களா" என்று இன்னொரு கிழவர் கேட்க, ஊர் சிரித்தது.

ஆங்கிலோ - இந்திய அதிகாரி என்ன பேசுகிறார்கள் என்று புரியாமல் விழித்தான்.

உண்மையில் பழமுதிற்குன்றத்திற்கு சகல வசதி களையும் இயற்கை வாரிக் கொடுத்திருந்தது. அரசாங்கம்

எந்த உதவியும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஊருக்குள் வருகின்ற ஆறு மைல் நீளப் பாதையை செப்பனிட்டுக் கொடுக்கலாம். ஆனால், வண்டிகள் போய் போய் ஆநிரைகள் நடந்து நடந்து பாதை செம்மையாகத்தான் இருந்தது. எங்கெல்லாம் மழைநீரால் அரிப்பு ஏற்பட்டதோ, அங்கெல்லாம் அந்த நிலப்பகுதியை சேர்ந்த விவசாயிகளே கற்களைக் கொண்டுவந்து போட்டு இடித்து சரி செய்து விட்டார்கள். வெளியூரிலிருந்த திருமணத் திருவிழாக்களுக்கு ஆட்கள் வருவார்கள் என்று தெரிந்தால் இந்த ஆறுமைல் நீளப் பாதையையும் ஊர் இளைஞர்களே மண்போட்டு செப்பனிட்டு விடுவார்கள்.

மதராஸ், விழுப்புரம் என எல்லா இடங்களிலும் மின்சாரம் வந்து விட்டது. மோட்டார் வாகனம் ஒடுகிறது. ஆனால், இங்கே மின்சாரமோ மோட்டார் வாகனமோ தேவைப்படவில்லை.

லாங்-கிளாத் என்கிற வெள்ளைத் துணிகளை உள்ளூர் செட்டியார்கள் வெளியில் இருந்து வாங்கிக் கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்கிறார்கள். ஊரிலேயே நெய்த வேட்டியை கட்டிக்கொண்டு, லாங்கிளாத்தில் காலர் இல்லாத சட்டை தைத்துக் கொண்டு ஊர் மக்கள் கம்பீரமாக வளைய வந்தார்கள். அந்த சட்டைகளையும் இளைஞர்கள் தான் போட்டார்கள். முதியவர்கள் மேலே இன்னொரு வேட்டியைப் போர்த்திக் கொண்டார்கள்.

வயதான பெண்மணிகள் ரவிக்கை அணிவதில்லை. ஆறுமுழப் புடவையை இடுப்பில் சுற்றி மேலே போட்டுக் கொண்டார்கள். சிறிய பெண்கள் லாங்கிளாத்தில் தைத்த சட்டையை புடவைக்குள் விட்டு, அதன்மீது வாழைக்காய் மடிப்பு வைத்துக்கட்டி மேலே போர்த்திக் கொண்டார்கள்.

அப்படி ரவிக்கை போட்டுக்கொண்ட பெண்களை ஊர் அழைத்து அதிசயமாகப் பார்த்து.

"குழந்தைக்குப் பால் கொடுக்கிறபோது இடைஞ்சலாக இருக்காதா?" என்று மத்திம வயதுப் பெண்கள் இளம் வயதுப் பெண்களைக் கேட்க, "அப்பொழுது ரவிக்கையை கழற்றி விடுவோம். திருமணமாகி குழந்தை பெற்றால் · ரவிக்கை போட்டுக்கொள்ள மாட்டோம்" என்று சொன்னார்கள்.

"எதற்கு ராணுவத்திற்கு ஆள் எடுக்கிறார்கள்? எங்கே யுத்தம் நடக்கிறது?" என்று கேட்கப்பட

"ராணுவத்திற்கு ஆள் எடுத்து மதராஸில் கப்பலேற வைத்து, வெகுதூரம் பனிபெய்கிற இடத்திற்கு கூட்டிக் கொண்டு போய் விடுகின்றார்களாம். அங்கு போய் துப்பாக்கி கொடுக்கிறார்களாம் துப்பாக்கியால் சுட கப்பலிலேயே பயிற்சி கொடுக்கிறார்களாம்.

அப்படி துப்பாக்கியால் சுட பயிற்சி எடுத்துக் கொண்டவர்களை எல்லையோரமுள்ள பாதுகாப்புப் படையில் சேர்க்கிறார்களாம். முன்னேறிச் செல்லும் படையாக நடத்துகிறார்களாம். இரண்டு மாதம் வேலை செய்தால், அதுவரை உயிரோடு இருந்தால், அடிபட்ட வர்களை தூக்கிச் செல்லும் பணிக்கு சேர்த்து விடுகிறார் களாம். மருத்துவர்களுக்கு உதவியாளர்களாக மாற்றி விடுகிறார்களாம்.

மதராஸிலுள்ள பல முதலியார்கள் இப்படி மருத்துவர் களுக்கு உதவியாக இருந்து, நன்கு மருத்துவம் கற்று ஊருக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஆறுவருடம் பனி படர்ந்த தேசத்தில் அவர்கள் வாழ்க்கை நடத்தியிருக்கிறார்கள். வெள்ளைக் காரர்களை விட வேகமாக ஆங்கிலம் பேசுகிறார்கள். அவர்களைக் கண்டால் அந்தணர்கள் எல்லாம் எழுந்து நின்று வணங்குகிறார்கள். டாக்டர்கள் மட்டுமல்ல, முதலி யார்கள் வக்கீல்களாகவும் மாறியிருக்கிறார்கள்."

"அந்தணர்கள் அதிகம் பேர் வக்கீல்களாக இருக்கிறார்கள் என்றுதானே கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று ஒருவர் கேட்டார்.

வக்கீலுக்குப் படித்துவிட்டு முதலியார்கள் கிராம முன்சீப்பாய், கலெக்டருக்கு உதவியாளராய் தாசில்தாரராய் இருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டமும் தெரிகிறது. நிர்வாகத்திறனும் இருக்கிறது" என்று இன்னொருவர் பதில் சொன்னார்.

"நம் குழந்தைகள் எப்போது இந்த மாதிரி டாக்டர் களாக வக்கீல்களாக மாறுவது. நாம் வேண்டுமானால் ராணுவத்தில் சேரலாமா" என்று மத்திம வயதுடைய முதலியார் ஒருவர் கேட்க, மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"இந்த ஊரில் உனக்கு என்ன குறையப்பா. நன்றாகச் சாப்பிட்டு நன்றாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உன் வீட்டை உதறி, இந்த ஊரை உதறி ஏதோ ஒரு பனி படர்ந்த இடத்திற்குப் போய் சண்டை போட்டு, அதற்குக் கிடைத்த நற்சான்றிதழாய் மருத்துவப் படிப்பும், வக்கீல் படிப்பும், நிர்வாகப் படிப்பும் படித்து எங்கே போகப் போகிறாய். வாழ்க்கை முழுவதும் இந்த ஊரை விட்டு பிரிந்திருக்க உன்னால் முடியுமா.

இந்த அழகிய குன்றமும், மழைக்காலங்களில் குன்றத்திலிருந்து இறங்குகின்ற பெரிய அருவியும், அது கொண்டு வந்து சேர்க்கின்ற வண்டல் மண்ணும், அந்த வண்டல் மண்ணால் செழிப்பாகின்ற இந்த விளை நிலங்களும், உளுந்தும், துவரையும் வேறு எங்கு கிடைக்கும்?

நம்மூர் அரிசியின் தரத்திற்கு ஈடாக தெலுங்கு தேசத்தில் கூட கிடைக்காதே. இப்படிப்பட்ட தானியங்கள்

விளைகின்ற இந்த ஊரிலிருந்து விலகி, நீ எங்கு போய், என்ன தின்று எப்படி வாழப்போகிறாய்?" என்று ஊர் பயமுறுத்த அந்த மனிதர் சுருண்டு கொண்டார்.

அந்த ஊர் இளைஞர்களுக்கு, ஊரை விட்டு வெளியேறி வேறு விதமாய் வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் ஊரை விட்டு, வெளியே போனால், நல்லபடி வாழ முடியுமா என்கிற பயமும் இருந்தது.

"ஐரோப்பா என்றால் என்ன தெரியுமா? ஐரோப்பா எங்கிருக்கிறது தெரியுமா?" ஒருவன் வட்டமாய் பூமி வரைந்து ஐரோப்பா இருக்குமிடத்தை மற்ற இளைஞர்களுக்கு காட்டினான். அந்த இளைஞர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்.

"இப்படி மேலே போடுகிறாயே, இவர்களெல்லாம் பூமியிலிருந்து உதிர்ந்து கீழே விழுந்து விட மாட்டார்களா?" என்று இன்னொரு இளைஞன் கேட்க படம் வரைந்த இளைஞனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

உலகம் மிகப் பெரியது. வாழ்க்கை மிகப் பெரியது. கலாச்சாரங்கள் மிக மிகப்பெரியவை, பலநூறு விதமானவை என்பது மட்டும் அந்த இளைஞர்களுக்கு புரியத் துவங்கியது.

மாரியம்மனுக்கு கோடைத் திருவிழா என்று ஊரில் தமுக்கடித்தபோது,

"அடப்போடா வருஷாவருஷம் இதேதான். இதை விட்டா வேற எதுவும் தெரியாது, இந்த பெரிசுகளுக்கு" என்று அலுத்துக்கொண்டார்கள். கோடைத் திருவிழாவில் உற்சாக மின்றி கலந்து கொண்டார்கள்.

கிரகங்கள் மாறின. கிரக மாற்றத்தால் புத்திகள் மாறின. புத்தி மாற்றத்தால் மெல்ல மெல்ல பழமுதிர் குன்றம் மாறியது.

# 2

ஆர்தர் சிம்சன் கையகல கண்ணாடியில் தன்முகம் பார்த்துக் கொண்டான். சற்று கீழிறக்கி கழுத்து பார்த்துக் கொண்டான். இன்னும் கீழிறக்கி மார்புகள் பார்த்துக் கொண்டான். சிறுசிறு செம்புள்ளிகளும் கரும்புள்ளிகளும் அந்த ஆங்கிலேயன் உடம்பில் விரவிக் கிடந்தன.

லண்டனில் இருந்தபோது அவனுடைய உடம்பு பளிங்கு போல இருக்கும். அம்மா வெந்நீரால் அவன் உடம்பை சோப்புப் போட்டுக் கழுவி துடைத்து விடுகிற போது. அவன் சலவைக்கல் உடம்பை சிலாகித்துக் கொண்டே இருப்பாள்.

“என்னுடைய உடம்பும் அப்பாவினுடைய புத்தியும் உனக்கு ஒருங்கே வந்திருக்கின்றன. என் நிறம் உனக்கு இருக்கிறது. அப்பாவினுடைய கண்களும் புத்தியும் உனக்கு இருக்கின்றன. நீ நல்லபடியாகப் படித்து பெரிய பதவிக்கு வரவேண்டும். சாகசங்கள் செய்ய வேண்டும். ஆங்கிலேயன் என்பவன் வீட்டோடு இருப்பவனல்ல. அவன் நல்ல வயதில் நல்லபடியாக வெளியேறி உலகம் சுற்றி பிறகு ஊருக்கு வருபவன்.

தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை சாதனைகளில் ஈடுபடுத்திக் கொள்பவன் உலகம் மிகப்பெரியது என்பதை பயணப்பட்டால் தான் தெரிந்துகொள்ள முடியும் அப்படி பயணப்பட்டு திரும்பி வருகிறபோதுதான் ஊரின் மதிப்பு தெரியும். ஊருக்குள்ளேயே இருப்பதில் எந்த லாபமும் இல்லை. அது பெண்கள் வேலை. திறமைமிக்க, வலிவுமிக்க ஆணாக இருப்பவன் இயற்கையின் சீற்றங்களையெல்லாம் தாங்கியவாறு கடல்கடந்து வெளியூர் போக வேண்டும்.

இப்பொழுதெல்லாம் கப்பல் பயணம் மிக எளிதாகி விட்டது மிகப்பெரிய நீராவிக்கப்பல்கள் எல்லாம் சௌகரியமான வசதிகளுடன் வந்துவிட்டன. படுத்து தூங்கியபடியே நீ இந்தியாவுக்கு போய்விடலாம் அரேபிய தேசம் போகலாம் இன்னும் சற்று முயற்சிசெய்தால் ஆஸ்திரேலியாவின் வட பகுதியிலேயும் போய் பார்த்து விட்டு வரலாம்.

மகன் எங்கு போய் இருக்கிறான் என்று ஊர் கேட்டால் அதற்கு நான் பல்வேறு இடங்களை சொல்ல வேண்டும் என்பது தான் என் விருப்பம்.

நீ பூகோளம் நன்கு படி. கப்பல் ஓட்டக்கற்றுக்கொள். போர் செய்யப் பழகு. நன்கு சாப்பிடு. பெண்களோடு சந்தோஷமாகக் கூத்தாடு. அளவோடு குடி. இது உன்னை உற்சாகப் படுத்தும். அழகிய பெண்களோடு ஒருவன் பழகப்பழகத்தான் சாதனை செய்கின்ற ஆவல் ஏற்படும். பெண்களைப் பார்த்து முகம் திருப்பிக்கொண்டு தூங்கிப் போகிறவன் வெறுமே நட்ட செடியாகத்தான் இருப்பானே தவிர விரைவான வளர்ச்சி அவனிடம் இருக்காது.

மாலை நேரத்தில் அம்மா அவனை சர்ச்சுக்கு அனுப்பி வைப்பாள். சர்ச்சுக்கு அருகே நடனக்கூடம் இருந்தது. அங்கு இளம் பெண்கள் வாலிபர்களின் வருகைக்காக வரும்போது

கிறீச்சிட்டு கத்துவார்கள். அந்தக் கூவலில் காமவிகாரங்கள் இருக்கும். ஆனாலும் அந்த காம விகாரங்கள் ஆண்களுக்கு மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும் கிழவர்கள் அந்தப் பெண்களின் பின்பக்கம் தட்டி 'நல்ல குட்டி ஆத்திரமாக இருக்கிறாள். நல்ல ஆண் கிடைத்தால் நிறைய குழந்தைகள் பெறுவாள்' என்று பாராட்டிப் பேசுவார்கள்.

ஒருமுறை லேசாய் வயிறு வலிக்கிறதென்று வீட்டிற்கு சீக்கிரம் திரும்பியபோது அம்மா கடிந்து கொண்டாள்.

ஒரு பெண்ணையும் உன்னால் மயக்க முடிய வில்லையா. ஒருத்தியோடும் உட்கார்ந்து பேசமுடிய வில்லையா. கட்டித்தழுவி முத்தமிட்டு கொஞ்சுவதற்கு உனக்கு பெண்ணே கிடைக்கவில்லையா. வேறு என்னதான் நீ செய்வாய். வேறு எதுதான் உன்னால் செய்ய முடியும். ஒரு பெண்ணை ஆளமுடியாதவன் ஒரு தேசத்தை எப்படி ஆளமுடியும். ஆங்கிலேயன் என்பவன் ஆளப்பிறந்தவன் உலகம் மொத்தமும் ஆளப்பிறந்தவன். ஏன் நீ இப்படி சோம்பேறியாக வெறும் மரக்கட்டையாக இருக்கிறாய்.

வயிறு வலிக்கு அங்கேயே மருந்து வாங்கித் தின்னத் தெரியாதா. அவசரமாய் உண்டிருப்பாய், ஜீரணமாகி இருக்காது. நன்கு மென்று தின்ன வேண்டும் என்று உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். நீ பற்களை சரியாகப் பாதுகாப்பதில்லை உன் கடைவாய் பற்களில் ஒன்று சொத்தையாக இருக்கிறது. ஒன்று அது அடைக்கப்பட வேண்டும். அல்லது பிடுங்க வேண்டும். அதன் வலிக்குப் பயந்தே நீ உணவை அவசரமாக விழுங்குகிறாய்" என்று பல்வேறு விதமாக அவனுக்குப் புத்தி சொல்லி பெண்களோடு பழகுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

வாழ்க்கை ஐரோப்பாவில் வேறு விதமாக இருந்தது இந்தியா அதற்கு நேர்மாறாக இருக்கிறது.

இந்தியப்பெண்கள் எவரும் வெளியே தலை காட்டுவதே இல்லை. அதுவும் ஆங்கிலேயன் வந்தால் சில சமயம் ஒரு ஊர் மொத்தமுமே அலற ஆரம்பித்து விடுகிறது. அந்த அலறல் கேட்பதற்கே கர்ணகொடூரமாக இருக்கிறது. ஆண்கள் உளறுகிறார்கள். தொடையோடு சிறுநீர் கழித்த வாலிபர்களையும் ஆர்தர் சிம்சன் பார்த்திருக்கிறார். ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று கேள்வி கேட்டார். ஆனால் அவர்களை பழகி புரிந்துகொண்ட பிறகு அவர்கள் மிக உண்மையாககவும், உதவியாகவும் மிக மிக நேர்மையாகவும் இருக்கிறார்கள் என்பது புரிந்தது.

பழகும்வரை தான் இந்தியர்களுக்கு பிரச்சினைகள் அதிகம் ஒருவரிடம் பழகுவதற்கு இந்தியர்கள் பலகாலம் எடுத்துக்கொள்கிறார்கள். நம்புவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. பார்த்தவுடனே பழகிப்புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். 'நீ வேறு, நான் வேறு, விலகிப்போவதே நல்லது என்பது போல் நடந்து கொள்கிறார்கள்.

கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டுகளாக இங்கே ஆங்கிலேயர்கள் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் இங்கு வந்த சோல்ஜர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்களோ, உணவுக்கு எப்படியெல்லாம் தவித்தார்களோ.

அரிசி நல்ல உணவாக இருந்தாலும் அவர்கள் வயிற்றுக்கு அது ஒத்துக்கொள்ளவில்லை. கோதுமை உணவுபோல வயிற்றுக்கு இதமாக இல்லை, பல நாட்களில் வெறும் உப்பிட்ட இறைச்சியை மட்டுமே அவர்கள் உணவாக உண்டு கொண்டிருந்தார்கள்.

இப்போது முன்பு மாதிரி மோசமாக இல்லை. எண்ணையில் பொறித்த ஆட்டிறைச்சியும், நல்ல விடைக்கோழி உணவும் உண்பதற்கு கிடைக்கின்றன. விடைக்கோழியை அடித்து தோலுரித்து கொண்டுவந்து

காட்டிய பிறகே சமைக்கிறார்கள். இந்திய உணவு இப்போது நன்கு பிடித்துவிட்டது.

பம்பாயிலிருந்து டெல்லிக்குப் போய், டெல்லியிலிருந்து கல்கத்தாவுக்குப் போய் கல்கத்தாவில் ஒரு வருடம் இருந்து, கல்கத்தாவிலிருந்து ஐதராபாத்துக்கும், ஐதராபாத்திலிருந்து சென்னைக்கும் சென்னையிலிருந்து இப்போது மதராஸ் மாகாணமும் முழுவதும் அவன் குதிரையில் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

பதினெட்டு வயதில் வீட்டை விட்டுக் கிளம்பிய ஆர்தர் சிம்சனுக்கு இப்போது இருபத்தாறு வயது, நிறைய அனுபவமும் உடம்பு முழுக்க கரும்புள்ளி, செம்புள்ளிகளும் ஏற்பட்டுவிட்டன. புள்ளிகளால் சலவைக்கல் போலிருந்த உடம்பு நிறம் மங்கிவிட்டது. அம்மா இப்போது உடம்பைப் பார்த்தால் ஊரிலுள்ளவர்களிடம் சொல்லி அழுவாள். ஆனால் ஊர் அவனைப் பாராட்டும். ஊர் பாராட்டுவதைப் பார்த்து அம்மா சந்தோஷமாவாள். ஆக அவள் அவன் உடம்பு கருத்து விட்டது என்று அழுதது ஒரு பொய்யான அழுகை. பாராட்டான அழுகை.

மறுபடியும் கண்ணாடியை இறக்கி வயிற்றிலுள்ள புள்ளிகளைப் பார்த்தான். அடிவயிற்றில் பார்த்துக் கொண்டான். அடிவயிறு ஒடுங்கியிருந்தது. மார்பு விசாலமாக இருந்தது.

அம்மாவுக்கு தொப்பை உள்ளவர்களைப் பிடிக்காது. ‘நன்கு சாப்பிடு. கரையும் வரை வேலை செய். வேலை இல்லையெனில் உடற்பயிற்சி செய்’ என்று அம்மா சொல்லிக் கொடுத்திருந்தாள்.

“ஆர்தர் சிம்சன் உனக்கு மதராஸில் கவர்னராக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறதா?” அதிகாரி அவனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

“ஆம் ஐயா” ஆர்தர் சிம்சன் பதில் சொன்னான்.

“இது உடனடியாக நடக்காத விஷயம். அதே நேரத்தில் நீ இதற்கு தயாராகிக் கொள்ள வேண்டும். மதராஸ் ராஜதானிலிருந்து குமரி முனை வரை நீ கிராமம் கிராமாகப் பயணம் செய்து மதராஸ் மாகாணத்தைப் புரிந்துகொள். அப்படி நீ செய்தால் இங்கே உனக்கு நல்ல உயர்பதவிகள் கிடைக்கும். சட்டென்று கவர்னர் பதவி காலியாகிறபோது அல்லது உதவி கவர்னர் பதவிக்கு ஆள் வேண்டும்போது அல்லது செகரட்டரி பதவிக்கு ஆள் தேடும்போது கூசாமல் உன்னைப் போட்டு விடுவார்கள்.

எனவே நீ எப்போதும் மக்களோடு கலந்து பேச மக்களோடு மக்களாக இரு. நாம் ஆட்சி செய்பவர்கள், ஆங்கிலேயர்கள். அதே நேரம் மக்களை புரிந்து கொண்டால் தான் ஆட்சி செய்வது எளிது.

எனவே பயணப்பட்டு வா. வெறுமே பயணம் என்றால் நன்றாக இருக்குமா. உனக்கு ஒரு வேலையும் தருகிறேன். நில சர்வேபற்றி அதற்குரிய அலுவலகத்தில் ஒரு மாதம் சென்று பார்த்து விஷயம் தெரிந்துகொள். எங்கு ஏரிகள் இருக்கின்றன. எங்கு ஆறு ஓடுகிறது. எவ்வளவு தொலைவில் எந்த ஊர் இருக்கிறது என்று ஒரு வரைபடம் தயாரிக்கிற வேலையில் நீ ஈடுபடவேண்டும். அந்த வரைபடம் முடிந்த அளவு நேர்த்தியாக சரியான தகவல் உள்ளதாக இருக்கவேண்டும். ஒருவேளை முன்பின்னாக இருக்கலாம். ஒரு அடி இரண்டடி உயரம் முன்பின்னாக இருக்கலாம். அதற்கு மேல் அனுமதி இல்லை.

எனவே குன்றுகளின் உயரத்தை அளப்பதும், ஆறுகளின் அகலத்தை அளப்பதும், நீர்ப்பாசன வயல்கள், எத்தனை கரம்புகள், எத்தனை காடுகள் எத்தனை என்று கண்டறிவதும் உனது வேலை.

இந்த வேலையின் முதல் கட்டமாக மதராஸிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை உன்னுடைய பயணத்தைத் துவங்கு. இந்தப் பக்கம் சேலத்தை முக்கியமாக வைத்துக்கொள். சேலத்திலிருந்து நேர்கோடாகி கீழிறங்கி மதுரையின் நடுப் பகுதிக்கு வந்து அப்படியே கடல் நோக்கித் திரும்பிவிடு. இந்த செவ்வகம் உனது பகுதி. நன்றாக வேலை செய். உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அங்கங்கே உள்ள தாசில் தார்களும் கொத்தவால்களும் செய்து தருவார்கள். அரசாங்க அனுமதி கடிதம் உனக்கு துணை நிற்கும். ஒருவேளை ஏதாவது மிகப் பெரிய இடைஞ்சல் இருந்தால் அங்கிருந்து நகர்ந்து வந்து விழுப்புரத்திற்கு அல்லது சென்னைக்கு தகவல் அனுப்பு. ஒரு சிறிய படை உன் உதவிக்காக மூன்று நாட்களில் அனுப்பி வைக்கப்படும்" அதிகாரி சொல்ல ஆர்தர் சிம்சன் பயணம் தொடங்கினான்.

ஆர்தர் சிம்சனுக்கும், அவன் உதவியாளர்களுக்கும் மதராஸ் ராஜதானியிலும் அதன் எந்தப் பகுதியிலும் எந்தவிதமான பாதுகாப்பும் தேவைப்படவில்லை. அவர்களை எதிர்க்கவோ, எவரும் முயற்சி செய்யவில்லை. மாறாய் நன்கு வரவேற்று உபசரித்தார்கள். மரியாதை செய்தார்கள். அவர்கள் கேட்ட ஆவணங்களைக் கொடுத்து, கொடுத்த ஆவணங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அடுத்த ஊருக்குப் பிரியத்துடன் வழியனுப்பி வைத்தார்கள் மறுபடியும் ஊருக்கு வரவேணும் என்று கைகூப்பிக் கேட்டுக் கொண்டார்கள்.

ஆர்தர் சிம்சனுக்கு ஒரு உதவியாளன் இருந்தான். அவன் ஆங்கிலோ இந்தியன். ஜேம்ஸ் ஃப்ராங்க்ளின் என்பது

அவன் பெயர். அந்த உதவியாளன் ஆர்தர் சிம்சனைவிட, பதினைந்து வயது அதிகமுள்ளவனாக இருந்தான். நில சர்வே அலுவலகத்தில் 25 வருடங்கள் வேலை செய்தவனாக இருந்தான். இதைத் தவிர ஜோசப் தேவசகாயம் என்கிற தமிழ் தெரிந்த வேறு மதத்துக்காரரான ஒரு நாற்பது வயது உதவியாளும் இருந்தார். நான்காவதாக சமையல் செய்யவும் அப்பு என்கிற ஒரு இருபது வயது இளைஞன். இதையும் தவிர முகம்மது இப்ராஹிம் என்கிற குதிரை ஒட்டி இருந்தான். இரண்டு கழுதைகள், நான்கு குதிரைகள் என்று பராமரிக்க அந்த இஸ்லாமியன் உதவி செய்தான். எல்லோருக்கும் அரசாங்கம் சம்பளம் கொடுத்தது. சம்பளப் பணம் அவரவர் இல்லத்தில் ஒன்றாம் தேதி காலையில் கொடுக்கப்பட்டு விடும் என்று சொல்லப்பட்டு அவ்விதமே நிகழ்த்தப்பட்டது அவர்களுக்குப் பயணப்படியாக அங்கேங்கே வசூலித்துக் கொள்ள உரிமையும் தரப்பட்டது. அப்படி வசூலித்த பணத்தை வீசி யடித்து செலவு பண்ணினாலும் கையில் காசு தங்கியது. எனவே அந்த சர்வே குழுவினர் நில அளவைத் தவிர வேறு எது பற்றியும் கவலைப்படாது, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உண்மையாக உழைத்தார்கள்.

அந்த ஐந்து பேருக்குமே பயணப்படுவது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு மக்களைக் கொண்டு அந்த ஊரின் விசேஷங் களைத் தெரிந்துகொண்டு அது பற்றி குறிப்பெடுத்துக் கொள்ள அவர்கள் அனைவருக்குமே ஆவலாக இருந்தது.

ஆர்தர் சிம்சன் பழமுதிர்க்குன்றத்துக்குள் நுழைந்த வுடனே வயலோரம் வேட்டியை வழித்து வெளிக்கிருந்த சிறிய பையன்கள் சட்டென்று எழுந்து கழுவிக்கொண்டு ஊர் நோக்கி ஓடினார்கள். "வெள்ளைக்காரன் வருகிறான். வெள்ளைக்காரன் வருகிறான்" என்று கத்திக்கொண்டு

ஓடினார்கள். ஐந்து குதிரைகளில் நீண்ட வேல்கொம்போடு வந்து கொண்டிருக்கிறார்கள் என்று தகவல் சொன்னார்கள். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் நடுத்தெருவில் கூட, இரண்டு இளைஞர்கள் கையில் வேல் கம்பு எடுத்துக்கொண்டு எல்லையை நோக்கி ஓடினார்கள். அதில் ஒருவனுக்கு சுமாராக ஆங்கிலமும் தெரியும் அவன் பெயர் சிங்காரம் ஆங்கிலேயர்கள் பேசுவதைப் புரிந்து கொண்டு யெஸ் சார் நோ சார் என்று அவன் எளிதில் சொல்லிவிடுவான். அதற்கு மிஞ்சி சொல்லவேண்டுமென்றால் யோசித்து வார்த்தைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு மெல்ல விஷயங்களை விவரிப்பான்.

ஆர்தர் சிம்சன் வருவதைக் கண்டதும் இது நில சர்வே என்று புரிந்து கொண்டான். திருவண்ணாமலை பக்கம் இந்த வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன என்றும் திருவண்ணாமலையை அளப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்றும், பலவேறு கோணங்களிலிருந்து திருவண்ணாமலையை அளந்து குறித்து வைத்திருக்கிறார்கள் என்றும் அவனுக்கு சொல்லப்பட்டது.

சிங்காரம் ஆங்கிலேயனைப் பார்த்து கைகூப்பினான் மதராஸில் ஆர்தர் சிம்சனுக்கு மிகப் பிடித்தமான விஷயம் இந்த கைகூப்பல்தான். பிடிக்காத விஷயம் வயல்வெளிகளில் வெளிக்கு போவதுதான். ஆட்களைக் கண்டதும் சட்டென்று ஆண்கள் நிர்வாணமாக எழுந்திருப்பது மிக அருவருப்பான ஒரு காட்சி. இதை எப்படி இவர்களுக்குச் சொல்லி புரிய வைப்பது என்று ஆர்தர் சிம்சனுக்கு விளங்கவேயில்லை, ஆனால் நாகரிமற்றவர்கள் என்று கோபம் வருகிற போதே மதராஸ் ராஜதானியின் என்று ஆட்கள் கைகூப்பி சிரிப்போடு வரவேற்கிற கோலம் மிக நெகிழ்ச்சியாக இருக்கும். யார் இந்த கைகூப்பலைக் கண்டுபிடித்தது என்று

ஆர்தர் சிம்சனுக்கு அதைப்பார்க்கிற போதெல்லாம் ஒரு கேள்வி எழும்.

ஐரோப்பாவில் நெஞ்சில் கை வைத்து வணக்கம் சொல்வதும் தலை குனிந்து வணக்கம் சொல்வதும் பார்த்திருக்கிறான் ஆனால் இதுபோல் கைகூப்பி முகம் நிமிர்த்தி சிரிப்போடு வணக்கம் சொல்கிற சந்தோஷம் சொல்கிற சந்தோஷம், பரஸ்பரம் ஏற்படுகிற நம்பிக்கை வேறு எந்த வரவேற்பிலும் ஏற்படுவதில்லை. அந்த இளைஞன் வெள்ளைப் பல்லோடும் கறுத்த உடம்போடும் இடுப்பில் வேட்டியோடும் கையில் குத்தீட்டியோடும் தோளில் துண்டோடும் நின்று, வேலை அக்குளில் இடுக்கிக்கொண்டு வணக்கம் சொன்னது ஆர்தர் சிம்சனுக்குப் பிடித்திருந்தது. ஆர்தர் சிம்சனும் வணக்கம் சொன்னான்.

"யார்?" - சிங்காரம் தமிழில் கேட்டான்.

"நாங்கள் நில சர்வேயர்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள். இந்த ஊரை சர்வே செய்ய உத்தேசித் திருக்கிறோம்" ஆங்கிலத்தில் நிதானமாக ஆர்தர் சிம்சன் சொன்னான். அவன் ஆங்கிலத்தைக் கோட்டையில் கேலி செய்வார்கள். தமிழர்களிடம் ஆங்கிலம் நிதானமாகப் பேசிப் பேசி மற்ற ஆங்கிலேயர்களிடம் பேசும்போது அதே நிதானத்துடன் பேசுகிற போது "எனக்கு ஆங்கிலம் தெரியாது என்று நினைத்தாயா" என்று சிலர் சண்டைக்கு வந்து விடுவார்கள். அவனுடைய பழக்கத்தைச் சொன்னபோது வாய்விட்டு சிரித்து அவனை மெல்லியதாய்க் கேலி செய்வார்கள் அவனைப் போலவே பேசிக் காண்பிப் பார்கள்.

"தேவசகாயம், நீங்கள் விளக்கிச்சொல்லுங்கள்". என்று கட்டளையிட, தேவசகாயம் அதே விஷயத்தைத் தமிழில்

சொன்னார். சிங்காரத்திற்கு தான் புரிந்து கொண்ட விஷயம் சரி என்ற சந்தோஷம் ஏற்பட்டது.

"அதுதான் அவர் தெளிவாகச்சொல்லிவிட்டாரே" என்று அவனுக்குப் புரிந்ததைக் காட்டிக்கொண்டான். தேவ சகாயம் அதை மனதில் குறித்துக்கொண்டார். அவர்கள் ஊர் நோக்கிப் போனார்கள். கூடவந்த இளைஞனிடம் "நிலம் அளக்க வந்திருக்கிறார்கள், நன்செய் நிலம், புன்செய் நிலம் எவ்வளவு என்றும், ஊரிலுள்ளவர் எத்தனை பேர் என்றும் கணக்கெடுப்பார்கள். எனவே ஊரிலுள்ள அதிகாரிகளை வரவேற்கச் சொல்" என்று சொல்லி அனுப்பினான்.

வெகுநாள் கழித்து கிட்டதட்ட ஒன்றரை வருடம் கழித்து ஒரு ஆங்கிலேயன் ஊருக்குள் நுழைவது பர பரப்பாகப் பேசப்பட்டது. பெண்கள் அந்த சிவந்த தோலுள்ள ஆட்களைப் பார்க்க ஆசைப்பட்டார்கள் 'பரங்கிக்காய் போலல்ல இருக்காங்க" என்று பேசிக் கொண்டார்கள். எல்லா பெண்களும் இதையே பேசுவார்கள் என்று சிங்காரம் நினைத்துக் கொண்டான்.

ஊருக்குள் நுழைய, வேட்டியும் சட்டையும் போட்ட பெரிய மனிதர்கள் வரவேற்றார்கள். அவர்களுடைய எல்லாச் சட்டையும் தோய்த்து உலர்த்தப்பட்டு சுருக்கமாக இருந்தது. சுருக்கமற்ற சட்டை போட வேண்டும் என்று அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. அவர்கள் யார் சட்டைக்கும் காலர் இல்லை. ஒரு கோணிப்பைக்கு கழுத்து வெட்டி தைத்தது போல் அவர்கள் உடுத்திக் கொண்டிருந் தார்கள் வெள்ளை வேட்டி அழுக்காகிறது என்று பச்சை நிற சாய வேட்டி, அல்லது சிவப்பு நிற சாயவேட்டி உடுத்தியிருந்தார்கள். சிவப்பு பழுப்பாக மாறி, அழுக்கே தெரியாமல் இருந்தது. இரண்டு மூன்று பேர் மட்டும்

வெள்ளை வேட்டியில் இருந்தார்கள் எல்லோருமே விவசாயிகள் என்பது பார்க்கும்போதே தெரிந்து விட்டது.

ஆர்தர் சிம்சன் குதிரையை விட்டிறங்கி "யார் கிராம அதிகாரி?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

வரதராஜ முதலியார் முன்வந்தார். கைகூப்பினார். அறுபது வயது முதியவரான அவரை நோக்கி ஆர்தர் சிம்சன் கைநீட்டினான். வரதராஜ முதலியார் இரண்டு கைகளையும் நீட்டி, பவ்யமாய் அதைப் பற்றிக்கொண்டு, கண்ணில் ஒற்றிக்கொள்வது போல் ஒரு பாவனை செய்தார்.

சிங்காரத்திற்கு இது பிடிக்கவில்லை. கைகுலுக்கினால் போதுமென்று இந்த கிராம அதிகாரிக்குத் தெரியவில்லை. ஊருக்குள் நுழைந்தவுடனேயே அதிகாரியைப் பற்றிய ஒரு தாழ்வான அபிப்ராயம் இந்த ஆங்கிலேயனுக்கு ஏற்படும். அப்புறம் இந்த ஊர் பற்றி என்ன மதிப்பு ஏற்படும் என்று சிங்காரம் எண்ணினான். ஆனால் ஆர்தர் சிம்சனுக்கு அந்த கை குலுக்கல் பிடித்திருந்தது. நீட்டிய கையைப் பவ்யமாகப் பற்றி கண்ணுக்கருகே கொண்டு போய் ஒற்றிக்கொள்வது போல் செய்வது மிக இனிமையான வரவேற்பு என்பது போல் பட்டது. தன்னை லேசாய் ஒரு அரசன் போல் ஆர்தர் சிம்சன் உணர்ந்தான் அவர்களிடம் நில சர்வே பற்றி விளக்கினான்.

"வாருங்கள்...முதலில் ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்று தெளிவாகச் சொல்லுங்கள்" என்று தேவசகாயத்திடம் கேட்க அவர்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாய்ப் பேசிக்கொண்டு கிராமத்துக்குள் நுழைந்தார்கள். பெண்கள் குலவை போட வேண்டுமா, வேண்டாமா என்பது போல் தவித்து நின்றார்கள். ஓரிரு பக்கம் குலவை சத்தம் கேட்க வரதராஜ் முதலியார் அந்தப் பக்கம் உற்றுப்பார்க்க சட்டென்று

நின்றுவிட்டது. "இங்கு என்ன மணமகனையா கூட்டிக் கொண்டு வருகிறோம், குலவை போட? அதிகாரி வந்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் சத்தம் போட்டால் மிரண்டு போய்விடுவார்கள். அவர்களை அமைதியாக இருக்கச் சொல்" என்று சொல்ல, குலவை வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டது. அவர்கள் ஊரின் நடுமத்தியில் இருக்கிற அரசமரத்தடிக்கு கூட்டிப் போகப்பட்டார்கள். அங்குள்ள மேடையில் உட்கார வைக்கப்பட்டார்கள்.

"உங்களுக்குத் தங்குவதற்கு தனி வீடு வேண்டுமா இல்லை, எங்கள் வீட்டில் எங்கேனும் தங்கிக்கொள்கிறீர்ளா" என்று கேட்க ஆர்தர் தனி வீடு என்று சொன்னான். "முன்கூட்டியே சொல்லியிருந்தால் ஒதுக்கி வைத்திருப்போம், ஒரு அரை நாளாகும், அதுவரை என் வீட்டிலேயே தங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்ல அவன் "குதிரைகள் இளைப் பாறினால் போதும் நான் ஊர் சுற்றிப் பார்க்க விரும்பு கிறேன்" என்று எழுந்து நின்றான். ஆர்த்ர சிம்சனும் ஜேம்ஸ் ஃப்ராங்க்ளினும், தேவசகாயமும் கிளம்பினார்கள்.

அப்புவும் முகம்மது இப்ராஹிமும் குதிரைகளைக் கிராமத்தார் காட்டிய இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள், குதிரைகளோடு சில பெரியவர்களும், ஆர்தர் சிம்சனோடு ஊர்ப் பெரியவர்களும் நடந்தார்கள்.

"நல்ல வேளை, நாங்களெல்லாம் வெளியூர்களுக்குப் போகாமல் இங்கேயே இருந்தோம்.... உங்களுக்கு என்ன தகவல் வேண்டும்? கேளுங்கள் சொல்கிறோம்" என்றார்கள்.

ஆர்தர் சிம்சன் விளைநிலங்கள் பற்றியும் தோப்பு பற்றியும் கரும்புப் பற்றியும் வாய்க்கால் பற்றியும் குளம் பற்றியும் ஏரிகள் பற்றியும் கேள்விகள் கேட்டுக்கொண்டு போனான். தேவசகாயம் பெட்டியிலிருந்து பழமுதிர்க் குன்றம் பற்றிய தகவல் சுருள் எடுத்து வைத்திருந்தான். அந்த

சுருளைக் காண்பிக்க அவர்கள் சொன்ன பல விஷயங்கள் அதில் இருந்தன "சிவன் கோயில் ஒன்று இருக்கிறதே அது எங்கே?" என்று கேட்க.

"அதுமலையில் இருந்து முற்றிலுமாய் சேதமடைந்து விட்டது. மிகப் பழம்பெரும் கோயில் சிவன் கோயில் மறுபடியும் கட்டுவதற்கு எங்களுக்குக் கொண்டோம். இப்போது அங்கே சிவலிங்கம் மட்டும் தனியே இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினார்கள்.

"இங்கிருந்த கருங்கற்கள் எங்கே?" என்று ஆர்தர் சிம்சன் கேட்டபோது அதை எடுத்துக்கொண்டு போய் படித்துறை அமைத்துவிட்டதாகச் சொன்னார்கள்.

ஒரு மழை நீர் போகும் கால்வாயும் அதற்கு அகலமான உறுதியான படித்துறையை ஊர்மக்களே கட்டிக்கொண்டிருப் பதும் சுட்டிக்காட்டப்பட்டது அது தவிர, ஒரு காளி கோயிலுக்கு முன்பக்கத்து சுவரும் அவர்கள் அந்த பாறைகளினால் எழுபபியிருந்தார்கள். பின்பக்கம் மண் சுவர்வைத்துக் கட்டியிருந்தார்கள். காளி கோயிலைத் தாண்டியதும் ஒரு சிறிய குன்று மேலேறிப் போயிற்று. ஆர்தர் சிம்சன் கீழேயிருந்து அதை உற்றுப் பார்த்தான்.

"இதுதான் பழமுதிர்குன்றமா?"

"இதுதான் பழமுதிர்குன்றம்?"

"இதுதான் எண்ணூறு அடி உயரமா?"

"எண்ணூறா? சொச்சம் எங்கே போவது? இது இரண்டாயிரம் அடி உயரம் என்று ஒருவர் சொன்னார்.

ஆர்தர் சிம்சன் உதடு பிதுக்கினான் "இருக்காது" என்று சொன்னான் கூட இருந்த ஜேம்ஸ் ஃப்ராங்கிளினும் "ஆமாம்" என்று சொன்னான்.

"இரண்டாயிரம் இருக்காதய்யா,.... ஆயிரம் இருக்கலாம்" என்று தேவசகாயம் சொன்னார்.

"அதுகூட எனக்கு சந்தேகம் ஆயிரம்" என்று ஆர்தர் சிம்சன் சொல்ல "அளந்து பார்த்துவிடலாமே...நாளை காலையில் வேலை ஆரம்பிப்போம்" என்று சொன்னார்.

"குன்று என்று சொல்லியிருக்கிறார்களே...இதை ஊர்ப் பெயராக எழுதிக்கொள்வதா, மலையின் யெராக எழுதிக் கொள்வதா" என்று தேவசகாயம் கேட்டார்.

"ஊர்ப் பெயரும் மலையின் பெயரும் ஒன்றே.... ஊரை வைத்தே மலை. மலையை வைத்தே ஊர். இவை இரண்டும் பிரிக்க முடியாதவை எனவே பழமுதிர்க்குன்றம் என்கிற மலையும் அதன் ஊரும் என்று எழுதுங்கள்" என்று ஆர்தர் சிம்சன் கட்டளையிட்டான். கையேட்டில் அவ்விதமாகவே தேவ சகாயம் குறித்துக் கொண்டார்.

நிலங்களைப் பற்றிக் கேள்வி கேட்க ஊர் மக்கள் பதில் சொன்னார்கள். அனேகமாய் விளைநிலங்களும் கரும்பும் ஏற்கவே இருந்தபடிதான் இருந்தன. ஒரே ஒரு தோப்பு மட்டும் அழிக்கப்பட்டு அந்த தோப்பு விளை நிலமாக மாற்றப் பட்டிருந்தது. மற்றபடிக்கு ஒரு சிவன் கோயில் இல்லாமல் போயிருந்தது காளி கோயிலின் எல்லை விஸ்தரிக்கப் பட்டிருந்தது. பதினாறு வீடுகள் அதிகமாயிருந்தன. சேரி இன்னும் பெரிதாகியிருந்தது. குளத்தை அரைவட்டமாக சுற்றியபடி அது வளர்ந்திருந்தது. இதைத் தவிர பெரிய மாற்றங்கள் அந்த ஊரில் இல்லை எனவே வெகு விரைவிலேயே சரியான குறிப்புகள் எடுத்துக்கொண்டு அடுத்த ஊருக்குப் போய் விடலாம் என்று தேவசகாயம் எண்ணினார்.

"குன்றை மட்டும் அளந்து பார்த்துவிடலாம். எனக்கு இது ஆயிரம் அடி இருக்குமா என்று மிகப் பெரிய சந்தேகமாக இருக்கிறது."

"சரி, இப்போது பசிக்கிறது. அப்பு உணவு தயார் செய்திருப்பானா?"" என்று பேசியபடி அவர்கள் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

வெந்நீர் தயாராக இருந்தது. உணவை இரண்டு மூன்று பெண்கள் துரிதமாக தயார் செய்துகொண்டிருந்தார்கள் குதிரைகளுக்கு இப்ராஹீம் முதுகு தடவி, பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தான் அவைகளுக்கு தானியம் வேகவைத்துக் கொண்டிருந்தான். பச்சைப்புற்கள் அறுத்துப் போட்டிருந் தான், கழுதைகள் புற்கள் தின்ன குதிரைகள் தானிய வாசனையை நுகர்ந்து நுகர்ந்து பசியோடு தவித்துக் கொண்டிருந்தன. அடுத்த வேளை குதிரை உணவுக்காக கொள்ளோ துவரையோ கம்போ வேண்டுமென்று இப்ராஹீம் கேட்க ஊர்மக்கள் யாரிடம் என்ன உணவு இருக்கிறது. யாரிடம் என்ன தானியம் இருக்கிறது. என்று தேடிக்கொண்டிருந்தார்கள். எந்தக் குறையுமில்லாமல் ஆங்கிலேய சர்வேயரை ஊர்விட்டு அனுப்ப வேண்டும் என்று பேசிக்கொண்டார்கள்.

"இன்றைக்கும் நாளைக்கும் தானப்பா.... நாளைக்கு பிற்பகலிலேயே அவன் வேறு இடம் போய்விடுவான்" என்று சொன்னார்கள்.

"குளத்தில் தனியே மடை கட்டி, ஆறேழு பெரிய வாளை மீன்கள் சேரி ஆட்கள் வளர்த்து வருகிறார்கள். அதில் ஒன்று விலை கொடுத்து வாங்கிவா', என்று கிராம அதிகாரி அனுப்ப வளர்ந்ததில் கொழுத்த மீன் ஆர்தர் சிம்சனுக்காக வாங்கப்பட்டது. "இன்றும் நாளையும், இது போதும்" என்று

துடிக்கின்ற மீனைக் கையில் வைத்துக்கொண்டு வரதராஜ முதலியார் பேசினார்.

'யார் வீட்டில் மீன் குழம்பு நன்றாக வைப்பார்கள்? வெள்ளைக்காரனுக்கேற்படி இதைப் பக்குவப்படுத்த வேண்டும். கோவிந்தராஜனின் மனைவி செண்பகத்தம்மாள் மீன பக்குவத்தில் கெட்டிக்காரி என்று சொல்லப்பட்டது. சில துண்டங்கள் வறுத்தும் ஒரு துண்டம் துவையலாகவும் இன்னொரு துண்டம் புளிக் குழம்பாகவும் போடப்பட்டு காரம் குறைவாகவும் செய்ய வேண்டுமென்று அவளுக்கு உத்தரவிடப்பட்டது.

"தனியாக ஒருதுண்டு உன் புருஷனுக்கு எடுத்து வைத்து விடாதே....எல்லாமும் வெள்ளைக்காரனுக்கே இருக்கட்டும் அவர்கள் ஐந்து பேர் இருக்கிறார்கள். ஆளுக்கு மூன்று துண்டுகள் எடுத்துக்கொண்டால் இந்த மீனில் பதினைந்து துண்டுகள் சேராது" என்று சொன்னார்கள்.

"அய்யய்யோ ஒரு செதில் கூட நான் எடுக்க மாட்டேன்" என்று செண்பகத்தம்மாள் சொல்லிவிட்டு மீனை வாங்கிக்கொண்டு போனாள். அவளுக்கு அந்த வேலையைக் கொடுத்தது பற்றி மற்ற பெண்கள் பொறாமைப் பட்டார்கள்.

"ஏன் எங்களுக்கு ஆக்கத் தெரியாதங்காட்டியும்...." என்று வெளிப்படையாகவே கேட்டார்கள்.

"சும்மாயிருங்கம்மா...." என்று வரதராஜ முதலியார் அதட்டினார்.

ஏரிக்கரையில் உள்ள சேரியில் ஏதோ நேர்த்திக் கடனாய் நேற்று இரவுதான் ஆடு வெட்டியிருந்தார்கள். பெரும்பகுதியை அறுத்து சுட்டு சாப்பிட்டிருந்தார்கள். தொடைப் பகுதியை மறுநாள் குழம்புக்கென்றும்

கறிசோறுக்கென்றும் தனியே வைத்திருந்தார்கள். ஊர் அதை வாங்கி வந்தது. வேறு ஒருவரிடம் கொடுத்து பக்குவப்படுத்தச் சொன்னதும் இதைச் சுட்டும் பொறித்தும் குழம்பாக்கியும் பகுவம்செய்து தனியே வைத்திருந்தார்கள்அரிசி சோறோடு கலந்து சாப்பிடுவதற்கு ஆர்தர் சிம்சன் ஒத்துக்கொண்டான்.

வெயில் உச்சிக்கு வந்து சரிகின்ற வேளையில் ஆர்தர் சிம்சனின் தட்டில் சோறும், அதன் மீது கறிக்குழம்பும் மற்ற இறைச்சித் துண்டங்களும் அப்பு தனியே வாங்கிக் கொண்டான். ஆர்தர் சிம்சனுக்குக் குறிக்கப்பட்டிருந்த வீட்டுக்குள் எடுத்துப் போனான். வெளியே ஜனங்கள் ஆவலாகப் போனான்.வெளியே ஜனங்கள் ஆவலாகக் காத்திருந்தார்கள். ஐந்து நிமிடம் கழித்து அப்பு வெளியே வந்தான்.

"மிக நன்றாக இருக்கிறது" என்று ஆர்தர் சிம்சன் சொல்லுவதாக சொல்ல வெளியே இருப்பவர்கள் ஆரவாரித் தார்கள்.

"மீன் குழம்பு ரொம்ப பிரமாதம் அப்படின்னு சொல்றார்" என்று அப்பு சொல்ல செண்பகத்தம்மாவை நோக்கி இரண்டு மூன்று பேர் துண்டால் பட் பட்டென்று அடித்தார்கள். செண்பகத்தம்மாள் வெட்கப்பட்டாள்.

ஆர்தர் சிம்சனே கையில் மீன்துண்டோடு வந்து "யார் இதைச்செய்தது?" என்று கேட்க செண்பகத்தம்மாள் பிசாசாய் ஓடி மறைந்தாள்.

"இவர் மனைவிதான்" என்று கோவிந்தராஜைக் காட்ட, கோவிந்தராஜை அருகே அழைத்து பாக்கெட்டில் கைவிட்டு மூன்று செப்புக் காசுகள் எடுத்து கோவிந்தராஜிடம் கொடுத்தான் "மிக அருமை" என்று வறுத்தத் துண்டத்தைக்காட்டினான்.

"அந்த மீனைப் பச்சையா தின்னாக் கூட நல்லா இருக்குங்கோ...எங்களுக்குன்னு பார்த்து, பார்த்து வளர்ந்த துங்கோ...." என்று சேரியில் உள்ளஆட்கள் உரக்கக் கூவினார்கள்.

"அட... இப்பப் போய் அதைச் சொல்லிகிட்டு அது வறுத்தப் பதத்திலேதாண்டா சுவையா இருக்கு." - வேறு ஒருவர் சொல்ல, சேரி ஆட்கள் வாயைப் பொத்திக் கொண்டார்கள்.

ஆர்தர் சிம்சன் மூக்குப் பிடிக்க சாப்பிட்டான். ஒரு மணி நேரம் கண்ணயர்ந்தான். மூன்று மணிக்கு எழுந்தான். கோட்டுப் பாக்கெட்டுக்கள் கையைவிட்டு மணி பார்த்தான் கொல்லைபுறம் போய் வயிறை சுலபமாக்கிக்கொண்டு வந்தான். தந்தக்குச்சியால் பல்குத்தி உணவுப் பொருட்களை எடுத்து உப்புத் தண்ணீரால் வாய் கழுவிக்கொண்டான். உடுத்திக்கொண்டு பழமுதிர்க்குன்றம் தகவல் சுருளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். பிரித்துப் பார்த்தான். பழமுதிர்க்குன்றம் என்று ஊரார் பெயர் போடப் பட்டிருந்ததே தவிர, மலை என்று சொல்லப்பட்டிருந்ததே தவிர, மலையின் உயரம் அளக்கப்படவேயில்லை. பதினேழு வருடங்களுக்கு முன்பு நடந்த சர்வேயில் குன்றம் என்று மலையைக் குறிப்பிட்டு பழமுதிர்க்குன்றம் என்று ஊரைச் சொல்லியிருந்தார்கள். ஆர்தர் சிம்சனுக்கு இந்த சர்வே தவறு என்று பட்டது. தூங்கிக்கொண்டிருந்த தேவசகாயத்தைத் தட்டி எழுப்பினான். கருவிகளை எடுத்துவரச் சொன்னான். ஜேம்ஸ் ஃப்ராங்களினை விட்டுவிட்டு அவனும் தேவ சகாயமும் மலை நோக்கி நடந்தார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த ஊர் அவர்கள் இருவரும் போவதைப் பார்த்துவிட்டு திடீரென்று விழித்துக் கொண்டு பாதியில் கையலம்பி பின்னால் ஓடியது.

"நீங்கள் எதற்கு? மலையின் உயரம் அளப்பதற்காக வந்தேன். நீங்கள் போய் சாப்பிடுங்கள்." என்று ஊரை சமாதானப்படுத்தினான். ஊர் காளியப்பனை மட்டும் துணைக்குப் போகச் சொன்னது.

காளியப்பன் மனைவியை இழந்தவன். இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன். ஊரின் கோடியில் அவனுக்கு வீடும், தோப்பும், நிலபுலன்களும் இருந்தன, விரைவாக மலை ஏறுவதிலும் இறங்குவதிலும் சாமர்த்தியசாலி மலையின் மேலுள்ள சப்போட்டாக்களுக்கு பச்சை உரத்தை அவ்வப்போது சுமந்து போய் போட்டு விட்டு வருவதுண்டு. இதனால் வாசனை மிகுந்த சப்போட்டா பழங்கள் கிடைக்கும். வாசனை மிகுந்த இனிப்பான சப்போட்டா பழங்கள் ஆண்மை விருத்திக்கு நல்லது. அதைப் பறித்து வந்து ஒரு காசுக்கு ஒரு டஜன் பழம் சாப்பிட்டுவிட்டு பால், குடித்தால் அன்று இரவு எவள் மாட்டிக்கொண்டாலும் அந்த ஆணிடம் படாதபாடு படுவாள் என்று காளியப்பன் ரகசியமாக சொல்லிவைப்பான். தானும் ரகசியமாக சாப்பிடுவான்.

காளியப்பனுக்கு மனைவி இல்லாது போனாலும், அந்த ஊர் சேரியின் பெண்களோடு தொடர்பு இருந்தது. அங்கே ஒரு இளம் விதவையை அவன் சினேகமாக்கிக் கொண்டிருந்தான். ஊருக்கு இது தெரியும். சேரிக்கும் தெரியும். ஆனால் வருமானம் கருதியும் பல வசதிகள் கருதியும், பாதுகாப்பு கருதியும் அதிகம் பேசப்படாமல் இருந்தது. "சரி அவன் அப்படிப் போகிறான். அவனுக்குப் பெண் கொடுக்க இங்கு யார் தயார்?"

"அவனுக்குப் பெண் கொடுக்க யாரும் தயாராக இல்லை."

"அப்படியானால் அவன் எங்கேயேனும் போய்விட்டுப் போகட்டும். ஏன் தடுக்கிறீர்கள்?" என்று ஊர்ப் பெரியவர்கள் சொல்லிவிட அது எல்லோருக்கும் தெரிந்த ஒரு ரகசியமாய் ஊரறிந்த ஒரு உறவாய் இருந்தது.

உறவை வெளியே சொல்ல முடியாது. உறவு பலப் பட்டு இருக்கின்ற இந்த வாழ்க்கை காளியப்பனுக்குப் பிடித்திருந்தது. அந்தப் பெண்ணும் இதை நன்கு அனுபவித்தாள். தன்னைவிட பதினைந்து வயது இளமை யான அந்தப் பெண்ணை காளியப்பன் நன்கு ஆதரித்து வந்தான். அவளுக்கும், அவளுடைய சுற்றத்தாருக்கும் துணி மணிகள் கொடுத்தான். அரிசி படியளந்தான். பருப்பும் மற்ற தானியங்களும் எப்போது கேட்டாலும் கொடுத்தான். அவர்களோடு ஒரு முறை தொலைதூரப் பயணம் கூட போய் வந்தான்.

காளியப்பனுடைய இரண்டு பையன்களும், விவசாயத்தில் காளியப்பனுக்கு உதவி செய்துவந்தார்கள் தாங்களாகவே விவசாயம் செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். அப்பாவின் நடவடிக்கை பற்றி அவர்களுக்கு எந்த அபிப்பிராயமும் இல்லை. அந்த பொம்பளை வந்தால் மட்டும் முகம் திருப்பிக் கொள்வார்கள். ஐயோ பாவம், தாயில்லாத பிள்ளை, என்று ஊர் கொஞ்சும் பொழுது நெகிழ்ந்து போவார்கள். ஊருக்காக சர்க்கரை என்ற அந்த பெரிய பையனும் கோபாலு என்கிற அந்த சின்ன பையனும் எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தார்கள். அவர்களுக்குப் பெண் கொடுக்க உறவுகளில் போட்டி இருந்தது.

சர்க்கரை மாடு பற்றிய வைத்தியத்தில் நன்கு தேறி யிருந்தான். கோபாலுக்கு வெல்லம் காய்ச்சத் தெரிந்திருந்தது. அவன் அருகில் உள்ள ஊருக்குப்போய் கரும்புத்

தோட்டத்தில் வேலை செய்து வெல்லம் காய்ச்சி கூலியாக வெல்லம் பெற்று வருவான். நான்கைந்து வருடங்கள் இவ்விதம் செய்து எப்படி வெல்லம் காய்ச்சுவது என்று தெரிந்து கம்மாளனிடம்சொல்லி மிகப் பெரிய உலை ஒன்று அமைத்து வெல்லம் காய்ச்சுவதற்கான உலோகப் பாத்திரமும் செய்து கொண்டான் முதல் முறை வெல்லம் காய்ச்சி ஊருக்கு வினியோகம் செய்த போது ஊர் அவனைக் கொண்டாடியது. அவன் யாரிடமும் ஒரு காசும் வாங்க மறுத்தபோது பலமாகப் பாராட்டப்பட்டான்.

'உங்கம்மா மட்டும் இருந்திருந்தா ரொம்ப பெருமையா இருந்திருக்கும்டா... உனக்கு இல்லாட்டா என்ன நான் இருக்கிறேன் தாயா, என்று பல பெண்மணிகள் முன் வந்தார்கள் வெறுமே ஒரு கூடை வெல்லம் தருகிறவன், அம்மா என்று சொன்னால் என்னவெல்லம் தருவான் என்னும் கணக்குப் போட்டார்கள். வெல்லத்தைவிட கோபாலுக்கு இந்தப் பேச்சு இன்னும் அதிகம் இனித்தது.

மலையடிவாரத்தில் தேவசகாயம் முக்கோண ஸ்டாண்டைப் பிரித்து வைத்து. உயரமானியை அதில் பொருத்தி முடுக்கினான். மேலும் கீழும் அசைத்து அளவுகள் பார்த்தான். சிறிது தூரம் விலகி நேரே கொண்டு போய் நேரே நிறுத்தினான். உயரமானியில் ஒரு புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளிக்கு உயரக்கோல் அளக்கப்பட்டது அளக்குமிடத்திற்கு உயரமாணி பின்னால் நகர்த்தபட்டது. உயரமாணிக்குள் இரண்டு புள்ளிகளுக்குள் நடுவே இருபதடி உயரக்கோல் நிற்க அந்த உயரத்தில் இருந்து எந்தப் புள்ளியில் மலையின் உச்சி தெரிகிறது என்று துல்லியமாய்க் பார்க்க, மலை எழுநூற்று ஐம்பது அடியை எட்டியது. அவ்வளவு தானா உயரம்.... இன்னும் நகர்த்தி மிகச் சரியாகப்பார்க்க எழுநூற்று தொண்ணூறு அடி உயரம் இருந்தது. அதற்கு மேல்

மூன்றடி உயரத்தில் ஒரு புதர் முளைத்திருந்தது. புதரை மலையாகக் கொள்ள முடியாது. மலையுச்சிக்கு காளியப்பனை போக முடியுமா என்று கேட்க, குறும்பாடு போல விரைவாக காளியப்பன் மலை மேல் ஏறினான்.

காளியப்பன் மலையேறுவதை தொலைவில் இருந்து அவர் வைத்துக் கொண்டிருந்த பெண்பிள்ளை பார்த்து விட்டு, மலையாடிவாரத்திற்கு வந்து. அந்த சர்வே குழுவி லிருந்து விலகி நின்று மரத்தடியில் ஒளிந்து கொண்டு பார்த்தாள். மறுபடியும் அவருடைய முழங்காலை கணக்கு வைத்து தேவசகாயம் அளந்தான்.

அதே எழுநூற்று தொண்ணூறு அடி, இதற்கு மேல் ஒரு அடி கூடப் போகாது. எழுநூறு எண்பத்தொன்பது என்பது தான் சரி. ஒரு பாறை இருக்கிறது. அதைச் சற்று நகர்த்தி வைத்தால் எழுநூற்று தொண்ணூறு என்று சொல்லலாம். எழுநூற்று தொண்ணூறு அடி மலையாகாதே, ஆர்தர் வில்சன் சிந்தித்தான். பழமுதிர்க்குன்றம் என்ற பெயர் எப்படி இந்த ஊருக்கு சரியாகும்? குன்றே இல்லாத இடத்தை எப்படி குன்றம் என்று சொல்ல முடியும்? எண்ணூறு அடிதான் மவுன்டென். மவுன்டென் என்பதுதான் குன்றம் பழமுதிர்மேடு என்று வேண்டுமானால் சொல்லலாம். பழமுதிர்க்குன்றம் என்று எப்படி சொல்வது? இது உறுதியான மலையுமில்லை. வெறும் சரளைக்கல் மலை. ஆறடி ஏழடி உள்ளுக்கு வெட்டினால்தான் கரும்பாறைகள், நீலப்பாறைகள் கிடைக்கும் இந்த ஆறடி மணலும் நல்ல மழையில் கரைந்து போகும். மழைக்காலத்தில் வைத்து அளந்தால் இந்த பழமுதிர்க்குன்றம் நிச்சயம் ஆறடிக்குக் குறைவாகத்தான் இருக்கும். உச்சியில் உள்ள சரளைக் கல் கரைந்து கீழே போயிருக்கும்.

ஊர் இதைக் குன்றம் என்று அழைத்துக்கொண்டிருக் கிறது. போன முறை சர்வே சரியாக செய்யப்படவில்லை. குன்றம் பற்றி எழுதவேயில்லை. ஊர்ப் பெயர் குன்றம் என்று எழுதிக்கொண்டு போய்விட்டார்கள் ஒரு வேளை குன்றம் என்பதற்கு அந்த சர்வேயருக்கு அர்த்தம் தெரியாதோ, என்னவோ? அர்த்தம் தெரிந்துகொள்ள முயற்சிக்க வில்லையோ, என்னவோ? இந்த ஊர் பழமுதிர்க்குன்றம் அல்ல, பழமுதிர்மேடு. ஆர்தர் சிம்சன் தீர்மானம் செய்தான் கருவிகளை அடைத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

ஊரரார் கிராம அதிகாரி வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மலையுச்சியில் காளியப்பன் ஏறிவிட்டான், ஏறி குன்று காண்பிக்கிறான் என்று சொன்னதும், “அவன் ஒருத்தன்தான் ஏறுறதுக்கும் இறங்குற துக்கும் சரி,” என்று வரதராஜ முதலியார் சொன்னார்.

“என்ன உயரம் இருக்குமுங்க?” - இதற்கு முன் தலைவராயிருந்த ராமையாப் பிள்ளை கேட்டார்.

“அது ஆயிரம் அடிக்கு மேலதான்.”

“இல்லைங்க...இரண்டாயிரம் அடி நான் பையன்ா இருந்த போது அளந்துட்டுப் போயிருக்காங்க.” - சாமிப் பிள்ளை உரத்து அடித்துப் பேசினார்.

“இரண்டாயிரம் அடி இருக்காதய்யா.... ஒரு அடி எவ்வுளவு தொலைவுன்னு உனக்குத் தெரியாதா இரண்டாயிரம் அடி உயரமா இந்த மலை. இருக்காது. ஆயிரத்தைந்நூறு இருக்கும்ன்னு நினைக்கிறேன்” - கருப்பண்ண செட்டியார் வீட்டிலிருந்து உரக்கக் கூவினார்.

“இல்லைங்கோ...அதுவும் இல்லை ஆயிரம் அடி தாண்டதுங்கிறதுதான என்னுடைய அபிப்பிராயம்,” என்று வரதராஜ பிள்ளை சொல்ல.

“ஐயா..பந்தயம் கட்டுதேன்...ஆயிரம் அடிக்குமேல இருந்தது, ஒரு பக்க மீசை எடுத்துடுவளா”

“டேய்...உடனே பந்தயமா...? ஆயிரம் அடிக்கு மேல இருக்காதுடா...இருந்தா அஞ்சோ பத்தடியோதான் இருக்கும்.”

“கரெக்டா சொல்லுங்க ஆயிரத்து நூறு அடிக்கு மேல இருந்தா, ஒரு பக்க மீசை எடுத்துடணும்...?”

“தூத்தெறிக்க...சிரைக்கிறதுலேயே இருக்கான்பாரு.” - கூவிய ரங்கப் பிள்ளையப் பார்த்து. வரதராஜ பிள்ளை அதட்டினார்.

“நான் சொல்லுதேன்....ஆயிரத்து நூற்று இருபத்தைந்து அடி கரெக்டா....” ரங்கப் பிள்ளையின் தம்பி சுந்தரம் பிள்ளை சொன்னார்.

“யோவ்.....வாய்க்கு வந்தபடி பேசுறிங்கய்யா....அவன் கருவி கொண்டாந்திருக்கான். அளந்தெடுக்கிறான்.”

“ம்கூம்...கண் அளக்காததா கை அளக்கும். இங்கிருந்து முத சப்போட்டா பழம் எத்தனை உசரம்?”

“அம்பதடி உசரம்”

“கீழேயிருந்து முத சப்போட்டா அம்பதடி உசரம்னா, அதே உசரத்தை புரட்டி புரட்டி மேலே போட்டிங்கன்னா என்னவரும்?”

“தப்பு....மேலே போகப் போக சரிவாகப்போயிடும் உனக்கு நீள, அகலம் கீழேயிருந்து மேலதெரியாது.”

“அவன் வெச்சிருக்கிற கருவில மட்டும் தெரியுமா?”

“நிச்சயமா தெரியும். ஆயிரத்து நூற்றைம்பது அடியெல்லாம் இருக்காது.”

"எவ்வளவு இருக்கும்ங்கிற?"

"கொஞ்சம் பக் பக்குன்னு இருக்கு. ஆயிரம் அடிக்குக் குறைவாயிருக்கிறதுக்குக் கூட வாய்ப்பு இருக்கு." - வரதராஜ முதலியார் சொல்ல, ஊரார்கள் சீறி யெழுந்தார்கள்.

"நல்லா சொல்லுதீரே.... நீரே ஏதாவது வாயைத் திறந்து பேசிடாதேயும்யா.... வாயை மூடிட்டுக் கிடவும் 'இது நல்ல உயரமான மலை தேவர்கள் வந்து இறங்குற மலை. ஆத்தா குடியிருக்கிற மலை. அச்சானியமா எதுவும் பேசாதேயும்." - எதிர்ப்பக்கத்திலிருந்து ஒரு பெண்பிள்ளை ஓடிவந்து சத்தமிட்டாள்.

"இந்தா... பொட்டைச்சிக்ளெல்லாம் பேச விட்டு வேடிக்கை பார்க்குறீங்களா, போடி உள்ளே என்னமோ பேச வந்துட்டா...."- எதிரே வந்து பேசியவள் வரதராஜ முதலி யாருக்குத் தங்கை முறையாக வேண்டும்.

"உன்னைக் கூப்பிட்டா சொல்லு. அதுவரைக்கும் பேசாதே...."

வந்து பேசிய லட்சுமி அம்மாளுக்கு தன்னிடம் மீன் கொடுத்து பக்குவப்படுத்தச் சொல்லவில்லையே என்ற கோபம். அதனால் வரதராஜ முதலியார் எப்போது தப்பு செய்தாலும் இடித்துக் காண்பிக்க ஆவலாக இருந்தாள். நேரம் கிடைத்தும் வந்து முட்டினாள்.

"ஆயிரம் அடிக்கெல்லாம் கம்மியா இருக்காதுவே. அளவு தெரியாம பேசுதீரு. நிச்சயமா ஆயிரம் அடிக்குமேல இருக்கும். நான் ஆயிரத்து இருநூற்றைம்பது நினைக்கேன்." என்று வைத்தியநாதன் பிள்ளை உரக்கக் கத்தினார்.

"இல்லைங்கோ...வரதராஜ முதலியார் சொல்றது தான் சரி. ஆயிரம் அடி இருக்கும்ன்னு எனக்குத் தோணலை', என்று காளியப்பினின் பிள்ளை சர்க்கரை சொன்னான்.

"எப்படிடா சொல்றே?"

"ஒரு மாதிரி அளந்து பார்த்திருக்கேனுங்க...."

"எப்படிடா அளந்தே?"

"ஒரு தப்படி மூணு அடி வச்சுக்கிட்டேங்க மேலே கணக்குப் போட்டே ஏறுனேங்க... அப்படி பார்த்தாக்க..."

"முட்டாள்....முட்டாள்" - அவன் பேச்சை இடை மறித்து சாமிப்பிள்ளை ஓடிவந்தார். பட்டென்று அவன் தலையில் அடித்தார்.

"மலை சரிவாப் போகும். நாம கேட்கறது உயரம் சரிவாப் போற போது ஆயிரத்து எண்ணூறு அடி கூடப் போகும். உயரம் ஆகிற போது குறையும்."

"அப்படித்தாங்க சொல்றேன் அப்படி போனாக்க ஆயிரம் அடி அப்பமே வரலை. அப்போ நெட்டுக் குத்தலா எப்ப வரும்னு கேக்கேன்."

ஊர் அவன் பேச்சுக்குத் திகைத்தது. எல்லோரும் சர்க்கரையை கவலையோடு பார்த்தார்கள்.

சீனிவாசச் செட்டியார் தன் பலசரக்கு கடையிலிருந்து வெளியே குதித்தார். "நான் சொல்லுதேன்யா... அது ஆயிரம் அடி இல்லை. அதை ஆயிரம் அடின்னு சொல்றவங்க ளெல்லாம் என்கிட்ட பந்தயம் கட்டலாம்." தொடை தட்டி முன்னும் பின்னும் அலைந்தார்.

"நான் சொல்லுதேன் ஓய்... ஆயிரம் அடிக்கு மேல இருக்கு"-சாமிநாதப் பிள்ளை உரக்கக் கத்தினார்.

"வெறுமே பேசாதேயும்..வட்டம் வைய்யும்... வட்டம் வைய்யும்...', செட்டியார் கூவ சீனிவாச செட்டியாரிடம் காலணாவைக் காண்பித்தார்.

"இது பிசாத்து காசு, நான் ஒரு சவரன் பந்தயம் கட்டறேன். நீ ஒரு சவரன் பந்தயம் கட்டு. நீயா, நானான்னு பார்த்துடுவோம்."

ஊர் மறுபடியும் மௌனமாக இருந்தது.

சுந்தரம் பிள்ளை சடக்கென்று தலையை நிமிர்த்தினார் "நான் கட்டுதேன்யா, ஒரு சவரன் அது ஆயிரம் அடிக்கு மேலன்றதுல எனக்கு சந்தேகமில்லை. ஆயிரத்து நூறா, ஆயிரத்து ஐம்பதான்னுதான் சந்தேகம் எனக்கு."

"இல்லை...பந்தயம் கட்டுவோம். அப்ப பொது ஆளு ஒருத்தர் வரட்டும்."

"யாரு பொது ஆளா?"

இதற்கு முன் தலைவராயிருந்த இராமையாப் பிள்ளை யிடம் ஒரு சவரன் கொடுத்தார்கள். இராமையாப்பிள்ளை இடுப்பில் முடிந்துகொண்டார்.

"நானும் கட்டுதேன்" என்று வேறு யாரோ வந்தார்கள்.

இராமையா பிள்ளை வீட்டுக்குப் போய் நோட்டுப் புத்தகம் கொண்டுவந்தார் மசியில் தோய்த்து கட்டைப் பேனாவால் நோட்டுப் புத்தகத்தில் இடது வலது என்று எழுதினார். இடது ஆயிரத்திற்கு கீழே, வலது ஆயிரத்திற்கு மேலே என்று எழுதினார் வலது பக்கம் உயர்ந்து கொண்டே போயிற்று.

"போதும் ரொம்ப ஆடவேண்டாம்." என்று பெண்மணிகள் கத்தத் துவங்க பதினைந்து பேரோடு சூதாட்டம் நின்றது.

ஆர்தர் சிம்சன் திரும்புகிறதாய் கேள்விப்பட்டு, ஊர் மக்கள் மறுபடியும் திண்ணையை விட்டு கீழே இறங்கி

வந்தார்கள், ஆர்தர் சிம்சன் தெருவுக்குள் நுழைந்தும், விலகி நின்று வரவேற்றார்கள்.

இராமையா பிள்ளை வீட்டு வாசலில் ஆர்தர் சிம்சனுக்கு நாற்காலி போடப்பட்டது சிம்சன் உட்கார்ந்து கொண்டான். கருவிகள் அவன் தங்கியிருந்த வீட்டுக்குள் போயின. உள்ளுக்குள் தூங்கிக்கொண்டிருந்த ஜேம்ஸ் ஃப்ராங்க்ளின் வெளியே வந்து ஆர்தர் சிம்சனோடு ஆங்கிலத்தில் பேசினான்.

"என்ன தனியாகப் போய்விட்டாய்?" என்றான்,.

அவர்கள் ஆங்கிலத்தை வேகமாக யாருக்கும் தெரியக் கூடாது என்று உச்சரித்தான்.

"இந்தக் குன்றம் பற்றி எனக்கு சந்தேகம் இருந்தது. இப்போது நிவர்த்தியாகிவிட்டது."

"என்ன?"

"இல்லை."

"என்ன இல்லை?',

"இது குன்றமே இல்லை."

"எப்படித்தெரிந்தது?"

"எழுநூற்று தொண்ணூறு அடி."

"அதனால் என்ன?"

"எண்ணூறு அடி இருந்தால்தான் மவுண்டெய்ன் அதாவது குன்றம். இல்லையென்றால் அது மேடு என்றுதான் அழைக்கப்பட்ட வேண்டும் என்று தெள்ளத்தெளிவாக சொல்லப்படுகிறது. எழுநூற்று தொண்ணூறு அடியை, அதற்குக் கீழாகவே குறைவாக இருக்கிற வாய்ப்பு இருக்கின்ற ஒரு சரளைக் கல் மலையை எவ்விதம் மவுண்டென் அதாவது

குன்றம் என்று அழைப்பது? எனவே இந்த ஊர்ப் பெயரும் மாற்றப்பட்ட வேண்டும். இது பழமுதிர்க்குன்றம் அல்ல."

ஊர்மக்கள் அவர்கள் பேசுவதையே கேட்டுக்கொண்டிருந்தார்கள். இது பழமுதிர்க்குன்றம் அல்ல என்பதை மட்டும் சில பேர் புரிந்துகொண்டார்கள். பதட்டப் பட்டார்கள். அவர்கள் பதட்டம் பார்த்து மற்றவர்களும் பதட்டப்பட்டார்கள்.

"என்ன சொல்கிறீர்கள்?"

ஆர்தர் சிம்சன் தலைநிமிர்த்தினான். "இது பழமுதிர்க் குன்றம் அல்ல" என்றான். தேவசகாயம் அதை மொழி பெயர்த்தார்.

"புரியவில்லையே தேவசகாயம். வெள்ளைக்காரன் என்ன சொல்கிறான்?"

"எண்ணூறு அடி இருந்தால்தான் இதை மலை என்று அழைக்க முடியும். மவுண்டென் என்று சொல்ல முடியும். குன்றம் என்ற வார்த்தை எண்ணூறு அடி இருந்தால் அழைக்க முடியும். இது வெறும் மேடுதான். பழமுதிர்மேடு என்று வேண்டுமானால் அழைக்கலாம். பழமுதிர் மண்மேடு என்றும் கூட சொல்லிக்கொள்ளலாம். ஆனால் இந்த ஊரின் பெயர் பழமுதிர்க்குன்றம் என்று அழைக்கப்படமாட்டாது. ஏனெனில் இது குன்றமல்ல." - தேவசகாயம் சொல்ல, ஊர் இருண்டு போயிற்று.

பெண்கள் ஓவென்று அலறினார்கள். ஆண்கள் வெளிறிப் போய் ஆர்தர் சிம்சனையே பார்த்தார்கள்.

"எத்தனை அடி உயரம் என்று சொன்னார்கள்?"

"எழுநூற்று தொண்ணூறு'

"சரியாக அளந்தீர்களா?"

"பலமுறை சரியாக அளந்துவிட்டேன்."

"இல்லை. இது ஆயிரம் அடிக்கு மேல் இருக்கும் என்று என் தகப்பானர் சொல்லியிருக்கிறார்."

"என் கருவி ஒருபோதும் பொய் சொல்லாது. இதுவரை இதை எவரும் அளந்ததாக சரித்திரமில்லை. என்கருவி மிகச் சரியாக தெள்ளத்தெளிவாக அளந்துவிட்டது. எழுநூற்று தொண்ணூறு அடிக்கு மேல் ஓர் அடிகூட உயரமில்லை. உண்மையில் எழுநூற்று எண்பத்தொன்பது அடிதான் இருக்குமென்று தோன்றுகிறது. நான் ஓரடி உங்களுக்கு உபரியாகக் கொடுத்திருக்கிறேன். வெகு நிச்சயம் இது குன்றமில்லை. இதைக் குன்றமென்று நான் எழுத மாட்டேன். பழமுதிர்க்குன்றமென்று சொல்லப்படுவது தவறு."

"ஆயிரங்காலமாக அப்படித்தான் அழைக்கப்பட்டு வருகிறது." - ஊரிலிருந்த கிழவர் எழுந்து கத்தினார்.

"எனக்கு அதுபற்றிக் கவலையில்லை என்னுடைய பட்டாக்களில் இனிமேல் பழமுதிர்மேடு என்றுதான் இருக்கும்."

"மேடு என்று அழைக்கப்படக் கூடாது. மேடு என்று அழைக்கப்படுவது அச்சானியம். இது குன்று. தேவதைகள் வந்து இறங்கும் இடம். பௌர்ணமி இரவில் வந்து பாருங்கள். தேவதைகள் உலா வருவதைக் காணலாம்."

"அது என் வேலையல்ல. என் வேலை மனையை அளப்பது, நிலத்தை அளப்பது, மலையை அளந்து பார்த்து அதன் உயரம் என்னவென்று குறிப்பெடுத்துக் கொள்வது. உங்கள் ஊரின் மலை உங்கள் ஊர்ப் பெயரைத்தாங்குகின்ற இந்த மலை எண்ணூறு அடி இல்லை. எனவே இதைக் குன்றம் அல்லது மலை என்று அழைக்கமாட்டேன் மேடு என்றுதான் அழைப்பேன். இந்த ஊரின் பெயர் வெகுநிச்சயம்

மாற்றப்படவேண்டும். உங்களுக்கு இந்த ஊரின் பெயர் மேடு என்று அழைக்க விருப்பமில்லையெனில், உங்கள் ஊரை அப்படிக் கூப்பிடுவது அவமானமாக இருந்தெனில் உங்கள் ஊர் பெயரை மாற்றிக்கொள்ளுங்கள். சிவபுரம், விஷ்ணுபுரம், பிள்ளையார்புரம் என்று சொல்லிக் கொள்வீர்களே. அதுபோல் ஏதேனும் கடவுள் பெயரை வைத்துக் கொள்ளுங்கள். பழமுதிர்க்குன்றம் என்று இந்த மலைக்கும் பெயரில்லை இந்த ஊருக்கும் பெயரில்லை. இல்லையெனில் உங்கள் ஊருக்கு நீங்கள் சொல்லும் புதிய பெயர் ஒன்றினைக் குறித்துக் கொண்டு போகிறேன் இது பற்றி சென்னையி லிருந்து உங்களுக்கு தாக்கீது வரும். பிறகுதான் இந்த ஊர்ப் பெயர் அதிகாரப் பூர்வமாக மாற்றப்படும்."

"எங்களுக்கு இப்படி மாற்றப்படுவதில் விருப்ப மில்லை."

"நீங்கள் பெயரை மாற்றவேண்டுமென்பது என் கட்டளையல்ல. ஆனால் நீங்கள் குன்றம் என்று அழைக்க முடியாது என்பதுதான் என்னுடைய வாதம்."

"ஐயா...பத்தடி உயரம்தானே....குன்றம் என்றே இருந்து விட்டுப் போகட்டுமே" - ஒருவர் சற்று இறங்கிவர, ஆர்தர் சிம்சன் சிரித்தான்.

"நான் என்னுடைய தொழிலில் இதுகாறும் பொய் சொன்னதில்லை. நான் பொய் சொல்லாதவன் என்பதால் தான் சரியாக நிலம் அளக்கிறேன என்பதால் தான், நில அளவில் எந்தத் தவறும் செய்யாதவன் என்பதால்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் என்னை இந்த வேலைக்கு அனுப்பியிருக்கிறது. என்னை அரசாங்கத்திற்கு எதிராக வேலை செய்ய சொல்கிறீர்களா? தவறாக வேலை செய்ய சொல்கிறீர்களா? இப்படி நீங்கள் சொன்னீர்கள் என்று நான் குறிப்பெழுதினால் போதும், கடுமையான அபராதம்

உங்களுக்கு அரசு விதிக்கும். உங்கள் வரிச்சுமையை அதிகப்படுத்தும். ஏற்கனவே இந்த ஊரில் வரி அதிகம் கட்டப்படவில்லை. பெயருக்கு ஏதோ கட்டிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, உண்மையான வரி இனிமேல்தான் உங்களுக்குத் தெரியவரும்."

"வரியையும் அதிகப்படுத்துவீர்களா?"

"வரியை அதிகப்படுத்ததான் இந்த சர்வே நடத்தப் படுகிறது. நிலங்களின் நீள, அகலங்கள் சரியாக இருக்கின்றன. நல்ல விளைச்சல் இருக்கிறது.ஆனால் நீங்கள் பலமுறை விளைச்சல் இல்லை, விளைச்சல் இல்லை என்றே சொல்லி யிருக்கிறீர்கள், பழங்களும் கனிகளும் பயிர் வகைகளும் நன்கு விளைகின்றன். கணிசமாக வரி செலுத்த வேண்டிய இடங்களில் இதுவும், ஒன்று என்று நான் உங்களைப் பற்றிக் குறிப்பெழுதப் போகிறேன்."

"வரி அதிகம் கொடுப்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் ஊர்ப் பெயரை தயவு செய்து பழமுதிர்மேடு என்று மாற்றாதீர்கள்."

"இல்லை, நீங்கள் வரி செலுத்துவது முன், பின்னாக இருந்தாலும் எனக்கு அக்கறையில்லை. இந்த ஊர்ப் பெயரை பழமுதிர்மேடு என்றுதான் சொல்லுவேன்" - ஆர்தர் சிம்சன் எழுந்து நின்று சொன்னான்.

"நீங்கள் வரி கொடுங்கள் அல்லது கொடுக்காது மறையுங்கள். அது என் வேலையல்ல. அதைக் கண்டுபிடிக்க வேறு அதிகாரி வருவார். வேறு கணக்காயர் வருவார். என் வேலை இது எத்தகைய ஊர் என்ன நிலப்பரப்பு என்ன நிலவளம் என்று சொல்வதுதான் அப்படி சொல்கிற போது, உங்கள் ஊருக்கு அருகாமையில் இருக்கிற விஷயத்தை நான்

மேடு என்றுதான் குறிப்பிடுவேனே தவிர...” - ஆர்தர் சிம்சன் சொல்லிக் கொண்டே போனான்.

சர்க்கரைக்குக் கோபம் வந்தது. காலால் எட்டி ஆர்தர் சிம்சன் உட்கார்ந்த நாற்காலியை உதைத்தான். ஆர்தர் சிம்சனுக்கு கோபம் வந்துவிட்டது. தான் எழுந்ததும் தான் உட்கார்ந்த நாற்காலியை ஒரு இந்தியன் எட்டி உதைக்கிறா னென்றால் அதை ஒரு ஆங்கிலேயேன் எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பது? ஆர்தர் சிம்சன் சட்டென்று பாய்ந்து சர்க்கரையின் சட்டையைப் பிடித்தான். ஊர்மக்கள் பாய்ந்து ஆர்தர் சிம்சனையும் சர்க்கரையையும் விலக்கி னார்கள்.

சர்க்கரையை வரதராஜ முதலியார் கன்னம், கன்னமாக அறைந்தார் தரையில் போட்டு மிதித்தார். அவன் ஒரு அதிகாரி. அவன் தவறு செய்கிறான். அவனைத் திருத்த வேண்டியது நமது கடமை. அதைவிட்டுவிட்டு அவன் உட்கார்ந்த நாற்காலியை எட்டி உதைக்கும் அளவுக்கு அவ்வளவு திமிராகிவிட்டாதா? அவனை எதிர்த்து போர் செய்ய உன்னால் முடியுமா? ஊருக்கு அவமானம் தேடித் தராதே.” என்று கத்தினார். குனிந்து ஆர்தர் சிம்சன் காலைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொண்டார். ஆர்தர் சிம்சன் தலையைச் சிலுப்பிக் கொண்டான்.

“எட்டி உதைக்கவும் தேவையில்லை, காலைத் தொட்டு ஒத்திக்கொள்ளவும். தேவையில்லை.” என்று ஆங்கிலத்தில் சொன்னான். அதை தேவசகாயம் மொழி பெயர்த்துச் சொல்ல ஊரார் வெறுத்துப்போனார்கள்.

“தேவசகாயம், இந்த ஊர் முழுதும் மண்டியிட்டு ஆர்தர் சிம்சனிடம் கேட்கிறது. தயவு செய்து இதைக் குன்றம் என்ற பெயரை மாற்றிவிட வேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம். இது சாதாரண மலையல்ல,

தெய்வீக மலை. அடுத்த ஊரிலிருந்து ஜனங்கள் வந்து எங்களைப் பொறாமையாகப்பார்க்கின்ற காலங்கள் அதிகம் உண்டு. இந்த ஊர் செழிப்பாக இருப்பதைப் பார்த்துவிட்டு சுத்துபத்து வானம் பார்த்த பூமியில் உள்ள மக்கள் இங்கு வந்து காரணம் என்னவென்று கேட்க, நாங்கள் இந்த குன்றத்தைத்தான் சொல்கிறோம். இப்போது இவர் இதை மேடு என்று எழுதிக்கொண்டுபோய் ஊர் முழுதும் பரவிட வைத்துவிட்டால் உங்கள் மேடு எப்படி இருக்கிறது என்றுதான் கேட்பார்கள். கேலி செய்வார்கள். எப்போதடா எங்களுக்கு இழுக்கு வரும் என்று பல பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கெஞ்சிக் கேட்டுக் கொள் கிறோம். காலில் விழுந்து மன்றாடிக்கொள்கிறோம். எனவே, ஆர்தர் சிம்சன் ஒரு பத்தடி தூரத்தை முக்கியமாக நினைக் காமல் எண்ணூறு அடி என்று எழுதி இதை பழமுதிர்க்குன்றம் என்று பெயரிட்டு விட்டுப் போகட்டும்."

தேவசகாயம் ஆர்தர் சிம்சனிடம் சொல்ல, ஆர்தர் சிம்சன் யோசித்தான். இந்த விஷயம் மெல்லப் பரவி அடுத்த ஊருக்குப் போய் இம்மாதிரி ஆர்தர் சிம்சன் பத்தடிக்குக் குறைவாக ஒப்புக்கொண்டது. வெளியே தெரியவர இன்னும். என்னவெல்லாம் செய்திருக்கிறாய் என்று தலைமையதிகாரி கேட்க, தன் தொழிலே கேவலமாய்ப் போய்விடும். நீ சொல்லி யதைக் காதும். காதும், வைத்தது போல் பேசியிருந்தால் பத்தடி பற்றிக் கவலையில்லை. ஆனால் ஊர்நடுவே மறுத்துப் பேசி எட்டி உதைத்து ஏதேதோ செய்தாகிவிட்டது. இந்தச் செய்தி இவர்களாலேயே அடுத்த ஊருக்குப் போய்விடும் அடுத்த ஊர் மக்கள் இதை எப்படி எடுத்துக்கொள்வார்கள்? யாரிடம் சொல்வார்கள்? யார் மூலமாய் இது தலைமை யதிகாரிக்கும் போகும் என்று சொல்ல முடியாது. எனவே இதற்கு இணங்காமல் உறுதியாக இருப்பதுதான் நல்லது.

என்று சிம்சன் முடிவு செய்தான். திரும்ப ஜேம்ஸ் ஃப்ராங்களினைப் பார்த்தான்.

ஜேம்ஸ் ஃப்ராங்க்ளின் தலை நிமிர்த்தி ஆர்தர் சிம்சனைப் பார்த்து "நம்முடைய வேலையை நாம் செய்வோம். அவர்கள் புலம்பலை அவர்கள் தொடரட்டும். நாளை நாம் வேறு ஊருக்குப் பயணப்படுவோம்." என்று சொல்ல ராமையாப் பிள்ளை முன்னால் வந்தார்.

"என்னிடம் ஊர்க் காசு இருபத்தைந்து சவரன் இருக்கிறது. அந்த இருபத்தைந்து சவரனை வாங்கிக் கொண்டு ஆர்தர் சிம்சன் அதைக் குன்றம் என்று எழுதட்டும் ஊரின் அன்பளிப்பாக இதை ஆர்தர் சிம்சனுக்குக் கொடுக்கிறேன்" என்று இருபத்தைந்து சவரனை நீட்டினார். தேவசகாயம் அதை மொழி பெயர்த்தார்.

ஆர்தர் சிம்சன் கண்களை மூடிக்கொண்டான் கொடுங்கள் என்று கைநீட்டிக்கொண்டான். ஊர் வியப்பாகியது எல்லார் முகத்திலும் புன்னகை அரும்பியது. ஆர்தர் சிம்சன் அதை கைநீட்டி வாங்கிக்கொண்டான். எண்ணிப் பார்த்தான் எல்லாவற்றையும் பல்லால் கடித்தும் லேசாய் உரசியும் பார்த்தான், சவரன் என்று தெரிந்ததும் எழுந்து நின்றான்.

"அரசாங்க அதிகாரிக்கு இந்த ஊர் ராமையா பிள்ளை என்பவர் மூலம் லஞ்சம் கொடுக்க முன்வந்திருக்கிறது. எழுநூற்று தொண்ணூறு அடி என்று எழுத பிடிவாதம் பிடித்து. அதற்கு இருபத்தைந்து சவரன்கள் காசு தர முன்வந்திருக்கிறது. இந்தக் கொடும் செயலை பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையாகக் கண்டிக்கிறது. லஞ்சம் தர முயன்ற குற்றத்திற்காக, சர்வேயர் ஆர்த்ர் சிம்சனாகிய நான், உங்களுக்கு இருபத்தைந்து சவரன் அபராதம் விதிக்கிறேன்.

இந்த அபராதத் தொகை பிரிட்டிஷ் கஜானாவில் செலுத்தப்பட்டு உங்களுக்கு ரசீதும் கண்டனக் கடிதமும் வரும்" என்று உரக்கச் சொன்னான்.

ஊர் திகைத்தது. ராமையா பிள்ளை இரண்டடி முன்னேறி 'தூ' வென்று தரையில் துப்பினார்.

ஜேம்ஸ் ஃப்ராங்களின் எழுந்து பிரம்பால் அவர் முதுகில் அடித்தான். தேவசகாயமும், இப்ராஹிமும் தங்கள் குறுவாட்களைப் பற்றி எழுந்தார்கள் ஊர் மறுபடியும் வெலவெலத்தது. பெண்கள் அரற்றத் துவங்கினார்கள். ராமையா பிள்ளையை, வரதராஜ முதலியார் தபதபவென்று பின்னால் இழுத்துக் கொண்டு போனார்.

"காரியத்தைக் கெடுத்தியே...லஞ்சம் கொடுக்க முயன்றதும் தவறு, எச்சில் துப்பியதும் தவறு. என்ன இப்படி செய்கிறீர்கள்? உங்களுக்கு அறிவு மழுங்கிப் போய் விட்டதா? அவன் ஆட்சி செய்பவன். வெள்ளைக்காரன். அடங்கிப் போகவேண்டும் என்பது தெரியாதா? என்று அவரைக் கழுத்தைப் பிடித்து வீட்டுக்குள் அனுப்பிவிட்டு. ஆர்தர் சிம்சனிடம் கைகூப்பினார்.

"அவர் செய்தது தவறு. மிகப் பெரிய தவறு, வயது அதிகமானதால் ஊர் மீது பாசம் அதிகமானதால், மலை மீது பற்று அதிகமானதால் என்ன செய்கிறோம் என்று சிந்திக்காமல் செய்துவிட்டார். அதற்காக நான் மறுபடியும் மன்னிப்புக் கேட்கிறேன்."

"நீங்கள் ஏன் மன்னிப்பு கேட்கிறீர்கள்? ஒவ்வொரு முறையும் உங்கள் ஊரார் யாரேனும் தவறு செய்வார்கள், நீங்கள் என் காலைத் தொட்டு மன்னிப்பு கேட்பீர்களா?"

"என்ன செய்வது? நான் இந்த ஊருக்குத்தலைவன். என்னை மீறி இங்கு விஷயங்கள் நடக்கின்றன."

"உங்களை மீறி இங்கு விஷயங்கள் நடக்கும்படி நீங்கள் வளர்த்துவிட்டிருக்கின்றீர்கள். இது பற்றி நீங்கள் தான் பேச வேண்டும். நீங்கள்தான் என்னுடன் விவாதிக்க வேண்டும். வேறு எவரும் இது பற்றிப் பேசினால் நான் கண்டிப்பாக கோபமுடையவனாக இருப்பேன். மறுபடி சொல்கிறேன். இந்த இடத்திற்குப் பெயர் பழமுதிர்மேடு. எனக்கு இந்த காசு தேவையில்லை. நான் அபராதம் என்று சொன்னது விளையாட்டுக்காக இந்தாருங்கள்" என்று இருபத்தைந்து சவரன்களை அவன் வரதராஜ முதலியாரின் கைகளில் கொடுத்தான். எழுந்து தன் வீட்டிற்குப் போனான். அவனைத் தொடர்ந்து ஃப்ராங்க்ளினும் தேவசகாயமும் இப்ராஹீமும் போக எஞ்சியுள்ளோர் கலைந்து போய் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டார்கள்.

# 3

ஊரின் காவலதிகாரி ஏழுமலை முதலியாரை அனுப்பி ஊரின் மூன்று தெருக்களுக்கும், ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியே போய் விவரம் சொல்லி, இரவு கூட்டம் இருக்கிறது, வர வேண்டும் என்று வரதராஜ முதலியார் அழைக்கச்சொன்னார். ஊரின் ஒதுக்குப்புறமாய் இருக்கும் நான்காவது வருணத்தாரின் இல்லத்துக்கும் அவரே போனார். அந்தக் குடிசைகளின் நடு மையாமான இடத்தில் கட்டில் போட்டு உட்கார்ந்தார். அவர்களுக்கு வீரையன் தலைவராக இருந்தான். சுப்பம்மாள் என்கிற ஐம்பது வயது பெண்ணின் அவர்களுடைய குடும்ப சண்டைகளைத் தீர்த்து வைக்கிறவளாக இருந்தாள். குன்றின் மேல் உள்ள ஒரு தேவதை அவள் மேல் வந்து இறங்குவதாக சேரியிலுள்ளோர் நம்பினார்கள்.

“அப்படியா எனக்கு குறி சொல்” என்று ஊர்மக்கள் கேட்டபோது சுப்பம்மாள் சிரித்து மழுப்பிவிட்டாள்.

“உங்களுக்கெல்லாம் வராதுங்கோ....எங்கப் பக்கம் இருக்கிற ஜனங்களை அந்தம்மா கீழே இறங்கி வந்து பிரியமாப் பார்த்துப் பேசுவாங்க உங்களுக்கு வேற தேவதைங்க...” என்று சொல்லிவிட்டு கொஞ்சம் உரக்கச்

சிரிப்பாள். அந்த சிரிப்பு வினோதமாகவும், சற்று கலவரம் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஐம்பது வயது ஆனாலும் கட்டுடல் கொண்டவளாக அடர்த்தியான தலைமுடி உள்ளவளாக பறித்தெடுத்த கிழங்கு போல் சுப்பம்மாள் இருப்பாள். வீரையனுககு ஜோதி என்கிற மகன் இருந்தான். அவன் பல்வேறு விதமான சண்டைகள் போடுவதில் வல்லவன். வெகுதூரம் ஓடுவதற்கு அவனால் இயலும். ஒருமுறை இந்த மலைப்பக்கம் உள்ள ஒரு சிறிய ஏரியின் கரைகள் சரிந்து விழ காடுகள் ஊடே போய் அடுத்த ஊரைத் தாக்கும் என்று தெரிந்த போது, அடுத்த ஊர் ஏற்கனவே மழையில் தத்தளித்துக்கொண்டிருந்தது என்று இவர்கள் அறிந்த போது, அவர்களை கவனமாக இருக்கச் செல்ல ஜோதியைத்தான் அனுப்பினார்கள். ஒன்றரை பேரையும் மேட்டு நிலத்தில் ஏற்றி முக்கியமான பொருட் களையெல்லாம் உயரமான இடத்தில் கொண்டு போய் வைத்தார்கள். உயிர்ச்சேதம் பொருட்சேதம் இல்லாமல் வெறும் குடிசைகளும் வீட்டுச்சுவர்களுமே அந்த மழை வெள்ளத்தில் சேதமாயின. ஜோதி வந்து சொல்லியிருக்கா விட்டால், வெகு நிசசயமாய் கிழவர்களும், குழந்தைகளும் கன்றுகளும் இறந்திருப்பார்கள். முக்கியமான மரச்சாமான் களைத் தூக்கமுடியாமல் தூக்கி நடுவழியில் போட்டு உடைத்திருப்பார்கள். வீட்டிலுள்ள எல்லச் சாமான்களும் மேட்டு நிலத்திற்கு வந்துவிட பெரிய வேதனை இல்லாமல் போயிற்று.

அடுத்த ஊரார் பறையோடு எக்காளத்தோடு பழமுதிர்க்குன்றத்திற்கு வந்து, ஊரார் முன்னால் ஜோதியை அழைத்து அவனுக்கு சிறிய பணமுடிப்பும் கிடாவும் பெட்டையுமாய் இரண்டு ஆடுகளும், வேட்டியும் மேல் துண்டும் கொடுத்தார்கள்.

ஜோதி படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். சுப்பம்மாவிடம் குறி கேட்டான். சுப்பம்மா கூடாது என்று சொல்லிவிட்டாள். வெறுமே மலையேறி இறங்கு உனக்கு மிகப் பெரிய ஞானம் வரும் என்று சொன்னாள். ஜோதிக்குப் பிடிக்கவில்லை எப்படியாவது படிக்க வேண்டும். சுப்பம்மாள் சொல்வதை மீற வேண்டும். மீறி எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். என்ற ஆசையிருந்தது. அதே சமயம் சுப்பம்மாள் மீது பயமிருந்தது. ஆனால் சுப்பம்மாள் சொன்னபடி மலையுச்சிக்குப் போய் சிறிது நேரம் இருந்துவிட்டு கீழிறங்குவான். காலையில் எழுந்து செம்போடு புதருக்கு நடுவே போய்விட்டு வயிறு காலியானதும் வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டு தாவித் தாவி ஒற்றையடிப் பாதை வழியாக மலையேறுவதற்கு பதினைந்து நிமிடங்கள்தான் ஆகும். மேலே போய் மூச்சிரைக்க சிறிது நேரம் நின்று அங்கு வீசும் சுழற்காற்றை அனுபவித்துவிட்டு நிதானமாய் கீழிறங்கி வருவான். வருகிற போது சிறிது களாக்காய்கள், இரண்டு சப்போட்டா, பிறகு சிறிது நாவற் பழம் என்று கைக்குக் கிடைத்ததை உண்டுவிட்டு வருவான்.

மலைக்குக் கீழே மலைக்குப் போகும் வழியில் அடர்த்தியாய் அருகம்புல் முளைத்திருந்தது ஒரு பாம்பு போனால் கூட வெளியே அரவம் காட்டாத அளவுக்கு பாதி முழங்கை உயரம் படுக்கை போல அருகம் புல் இருக்கும். அந்த அருகம்புல்லை அப்படியே பிடித்து நீரில் அல்சி வாயில் போட்டு மென்று சாறு குடித்து துப்பி விடுவான். இதனால் பற்கள் சுத்தமாக இருந்தன. ஒன்றுக்கு நன்றாய் போயிற்று. வாய்ப் புண்ணோ, வயிற்றுப் புண்ணோ ஏற்படாமல் இருந்தது. அப்படி ஒரு கொத்து அருகம்புல் கடித்து சாறு விழுங்கவில்லையெனில் ஏதோ இழந்தது போல் ஜோதிக்கு இருக்கும்.

வரதராஜ முதலியார் வந்ததும் அவர், ஜோதியைத் தான் அழைத்து எதிரே உட்கார வைத்துக்கொண்டார். வீரையன் சற்றுத் தள்ளி உட்கார, "வா....கட்டிலிலேயே உட்கார்..." என்று சொன்னார்.

வீரையன் மறுத்துவிட்டான் அவர் அப்படி அழைத்தது வீரையனுக்கும் அங்குள்ள ஜனங்களுக்கும் பிடித்திருந்தது.

வணிகர்கள் தீண்டாமை பார்ப்பது போல, வரதராஜ முதலியார் பார்ப்பதில்லை. அவர் அதிகம் உழைக்காமலேயே அவர் நிலங்களை இந்த மக்கள்தான் கவனமாகப் பார்த்துக் கொண்டார்கள். மிக உண்மையான நடந்து கொண்டார்கள். அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து வேலை செய்தார்கள் அவர்களைப் புறக்கணித்தால் பலபேருக்கு பல வேலைகள் அப்படியே நின்று போகும் என்பது வரதராஜ முதலி யாருக்குத் தெரியும். அதனால் அவர் தீண்டாமை பார்ப்ப தில்லை. சமயத்தில் தோள்பிடித்து அவர் வரப்புகளில் நடப்பதும் உண்டு. மலையேறும் போது போவதும் உண்டு, அந்த மக்களின் வெள்ளை உள்ளமும், உண்மை பேசும் திறனும் வரதராஜ முதலியாரை வியக்க வைக்கும். சுப்பம் மாளிடம் அவரும் குறி கேட்டிருக்கிறார். சுப்பம்மாள் குறி மிகச் சரியாக இருக்கும். அவருக்கு வாயு உபத்திரவத்தால் கடும் கால் குடைச்சல் ஏற்படும். வீரையனிடம் பேச்சு வாக்கில் அதைச் சொல்ல அவன் தன் மனைவியை அவர் வீட்டுக் கொல்லைப்புறம் அனுப்பிவைத்தான். எண்ணெய் தடவி அவள் தொடையிலிருந்து கட்டை விரல் நுனி வரை உருவிவிட வாயு அபாரமாக வெளியேறி மிகப் பெரிய ஒரு நிம்மதியைக் கொடுத்தது, அவளுக்கு மனிதர்களின் நரம்பு தெரியும் என்று சொல்லப்பட்டது.

ஊரிலுள்ள மற்ற நிலச்சுவான்தார்களால் தொந்தரவு ஏற்படும்போது மற்ற நிலச்சுவான்தார்கள் முரட்டுத்தனம்

காட்டுகிறபோது இந்த மக்கள் வரதராஜ முதலியார் தவறு எந்த பக்கம் என்று பார்த்து சற்றும் தாமதிக்காமல் தன் கண்டனத்தைத் தெரிவித்துவிடுவார்.

ஒரு மூட்டை உளுந்து வண்டி கட்டிக்கொண்டு போகும்போது காணாமல் போய்விட்டது. மளிகைக் கடை செட்டியார் அதை யார் எடுத்துக்கொண்டு போனானோ, அவன்தான் காசு கொடுக்கவேண்டுமென்று சொல்ல அவன் திகைத்து "நான் என்ன எடுத்துப் போனேன் என்ன இறக்கினேன் என்று தெரியாது. அதற்கு நீங்கள் வேறு ஆளை நியமித்திருக்க வேண்டும். எடுத்துக் கொண்டு போனதும் இறக்கியதும் தான் நான் செய்தேன். பூமி சத்தியமாய் நான் ஒரு சிறு பருப்பு கூட திருடவில்லை." என்று சொல்ல அவன் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அவனுக்குத் தண்டனை இல்லையென்று வரதராஜ முதலியார் அறிவித்தார்.

உளுந்து மூட்டை எங்கே என்று பிற்பாடு சுப்பம் மாளிடம் குறி கேட்கப்பட்டது. "அது கிடைக்காது. அது உணவாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்த ஊருக்கு அடுத்த ஊரில் இருக்கிறவன் அது விழுந்ததைப் பார்த்து அதை எவருக்கும் சொல்லாமல் காத்திருந்து எடுத்துப் போயிருக் கிறான்" என்று எடுத்தவனின் அங்க அடையாளங்களைச் சொல்ல அவர்கள் போய்ப் பார்த்துவிட்டு அவன் வீட்டில் உளுந்து ஊறப் போட்டிருப்பதையும் கவனித்துவிட்டு ஊர்த் திரும்பினார்கள்.

நல்லவர்களைக் குற்றம் சொல்ல, அந்த ஊர் அதை எதிர்த்து வாதாடி, உண்மையில் அவன் நல்லவன்தான் என்பதை நிரூபிக்க பலமுறைகள் பல விஷயங்களில் படாத் பாடு பட்டிருக்கிறது. அந்த ஊரினுடைய இயல்பே நிரூபிக்கிற இயல்பாக இருந்தது. அந்த ஊரில் எல்லோருக்குமே ஒரு பிடிவாதம் இருந்தது.

சர்க்கரைக்குத் திருமணம் என்று பேசி எட்டு பவுன் நகை போடுவதாக உள்ளூரிலேயே ஒரு முதலியார் சொல்ல, காளியப்பன் சரியென்று ஏற்றுக்கொண்டான் ஆறரைப் பவுன் போட்டார்கள். இன்னும் ஒன்றரைப் பவுன் குறைந்தது. மனைவியோடு சாந்தி முகூர்த்தம் முடித்துவிட்டு மூன்று நாள் கழித்து ஊருக்குக்கிளம்பும் போது ஒன்றரைப் பவுனை நண்பர்கள் மூலம் சர்க்கரை ஞாபகப்படுத்தினான் பெண்ணைப் பெற்றவருக்கு வேறு ஏதோ எரிச்சல் வேறு யார் மீதோ கோபம்.

"எல்லாம் போடறேன்.... போ... மாட்டேன்னா கொன்னுட்டா போவப் போற.... விழுந்து, விழுந்து இங்கே தானே பார்க்க வருவ?" என்று கீழ்த்தரமான வார்த்தைகள் சொல்ல, சர்க்கரை தன் மனைவியை அங்கேயே விட்டு விட்டுப் போனான்.

"நான் போடறேன்னு சொன்னபோதும் பொண்ணை விட்டுட்டுப் போறியே. நான் உனக்கு எதுக்கும் போடணும்?" பெண்ணைப் பெற்றவர்கத்த அந்த விஷயம் பைசல் பண்ண முடியாமல் பல வருடங்கள் அப்படியே இருந்தது. ஒன்பது வருடம் கழித்து பெண்ணைப் பெற்றவர் இறந்து போன போது, ஊர் மறுபடியும் கூடி சர்க்கரையும் அவன் மனைவியையும் சந்திக்க வைத்தது.

சர்க்கரை மனைவியை அழைக்க மனைவி குறிகேட்டுக் கொண்டு வருகிறேன் என்று சுப்பம்மாளிடம் வந்து நின்றாள்.

"எங்கப்பாரு என்ன சொல்லுதாருன்னு கேட்டு சொல்லுங்க..." என்று சுப்பம்மாளிடம் கேட்டாள்.

"செத்த பிறகு சண்டையில்லை. எல்லாம் ஒத்துமை தான். நீ போய் உன் புருஷனோடு இரு" என்று சுப்பம்மாள் குறி சொன்னாள் அவள் குரல் செத்தவர் குரல் போலவே

இருந்தது. சர்க்கரையின் மனைவி வண்டிக்கட்டிக்கொண்டு கிளம்புகிறபோது சர்க்கரை மறுபடியும் அந்த ஒன்றரை பவுனை ஞாபகப்படுத்தினான்.

“எங்கய்யா அதைப் பத்தி ஒண்ணும் சொல்லலை. நான் அதுக்கு மேல பீரோ கட்டிலு, வெள்ளிப் பாத்திரம் பித்தளை பாத்திரம் அப்படின்னு நிறைய எடுத்திட்டு வரேன். அதை எடுத்துட்டு வரணும்ன்னு அவசியமில்லை” என்று சொல்ல அந்த ஒன்றரை பவுன் அவசியம் வேண்டுமென்று சர்க்கரை சொல்ல, மறுபடியும் அவர்கள் பிரிந்தார்கள். ஊர் தலையி லடித்துக் கொண்டது. இப்போது மேலும் மூன்று வருடங்களாகிவிட்டன.

ஒரு சின்ன மாற்றமும் இல்லாமல் சர்க்கரையின் மனைவி தனியாகவும் சர்க்கரை தனியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பழமுதிர்க்குன்றத்தின் பல்வேறு பிரச்சனைகளை சேரியைச் சேர்ந்த சுப்பம்மா மிக எளிதாகத் தீர்த்து வைப்பாள். யாரேனும் அவள் மீது ஆக்கிரமித்து அந்த விஷய்த்தின் நல்லது கெட்டதுகளைத் தெரிவித்து விடுவார்கள். கிராமம் அதை நம்பி ஏற்றுக்கொண்டது.

வரதராஜ முதலியாரும் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து வீரையன் வந்ததும் சுப்பம்மாவைதான் அழைக்கச் சொன்னார். சுப்பம்மா ஐம்பது வயது பெண்மணி அவள் இளமையாக இருந்ததெல்லாம் வரதராஜ முதலியாருக்குத் தெரியும். அவள் மீது அவர் ஆசைப்பட்டதும் உண்டு. ஆனால் சுப்பம்மாவை தவறாக யாரும் எந்தக் காலத்திலும் நெருங்கவே முடியவில்லை. அதனால் வம்பு வேண்டாம். என்று கிராமத்து இளைஞர்கள் பலரும் விலகியே இருந்தார்கள் சேரியில் எளிமையாய் இருந்த ஒருவனை சுப்பம்மாள் விருப்பமாய்க் திருமணம் செய்துகொண்டு

அவன் மூலம் குழந்தைகள் பெற்று வாழ்ந்துவருகிறாள். அவனும் சுப்பம்மாளுக்கு அனுசரணையாக இருந்து வருகிறான். சுப்பம்மா அடங்கிப்போகிற ஒரே ஆள் வீரையன். அவனைத்தவிர வேறு எவனுக்கும் அவள் பயந்ததில்லை.

"ஒரு தலைவருக்கு நான் பயப்படாட்டி நமக்குப் பின்னாடி வர தலைமுறையும் பயப்படாது நான் வீரைய்னுக்குப் பயப்படலை தலைவன் என்ற விஷயத்துக்குப் பயப்படறேன்" என்று சுப்பம்மால் அதையும் தெளிவு படுத்தியிருக்கிறாள்.

"சரி பழமுதிர்க்குன்றம் பேரு மாத்தணும்கிறான். மேடுன்னு சொல்றான். நாம என்ன பண்ணலாம்?" - சுப்பம்மாவைப் பார்த்து வரதராஜ முதலியார் கேட்டார்.

எல்லோரும் விலகி சுப்பம்மாளை தனியாக விட்டார்கள். சுப்பம்மாள் தரையில் குத்திட்டு உட்கார்ந்து எங்கேயோ தொலைவில் பார்த்து யோசித்துக் கொண்டிருந் தாள். ரொம்பக் கவலையான பெண்மணி போல காட்சி யளித்தாள். குடும்ப பாரம் அதிகமாகி என்ன செய்வதென்று தெரியாமல் பிரச்சனைக்குத் திகைக்கிற ஒரு முகபாவனை யோடு உட்கார்ந்திருந்தாள். கையில் சிறு குச்சி இருந்தது. அந்தக் குச்சியில் லேசாக மண்ணைக் கிளறிக் கொண்டி ருந்தாள். பட்டென்று குச்சி உடைந்தது. சுப்பம்மாளின் முகம் மாறியது.

"ஒரு மசுரும் புடுங்க முடியாது, இங்கே" - ஒரு கரகரப்பான ஆண் குரல் வந்தது.

"யாரு...? யாரு...?" வீரையன் அதட்டினான்.

"எனக்கும் இந்த ஊருதாங்க....பேரு என்னாத்துக்கு? நானும் இங்கே பிறந்து வளர்ந்து இங்கே சுத்திக் கிட்டிருந்தவன் தான். ஒரு மசுரும் புடுங்க முடியாது."

மறுபடியும் சுப்பம்மாள் உரகககக் கத்தினாள். இந்த முறை எழுந்து நின்றுகொண்டாள். முன்னும் பின்னும் அலைந்தாள்.

அவள் அலைய வரதராஜ முதலியார் எழுந்து நின்று கைகளைக் கட்டிக் கொண்டார்.

"இந்த மலை காணாமப் போற வரைக்கும் பழமுதிர்க் குன்றம்தான். அது வரைக்கும் இந்தப் பேரை எவனும் மாத்த முடியாது."

"மலை காணாமப் போறதா?"

"அது இப்ப இல்லை. ரொம்ப நாளைக்கப்புறம் சுத்தமா வெட்டியெடுத்துக்கிட்டு வேற ஊருக்குப் போயிடுவாங்க."

"இவ்வளவு பெரிய மலையையா?"

"இதைவிடப் பெரிய மலையையெல்லாம் விழுங்கப் போறானுங்க....இது என்ன ஒண்ணுமில்லை."

"சரி...அது எப்பவோ நடக்கிற விஷயம் இப்போ இதை மேடுன்னு சொல்லப் போறானே..? அடுத்த ஊர்க்காரனுங்க எல்லாம் சிரிப்பானே.... என்ன பண்றது?"

"மலையை உசத்திக் கட்டுங்கவே....." சுப்பம்மாள் உரத்துக் குரல் கொடுத்தாள்?"

"உசத்திக் கட்டுறதா?"

"பத்தடி குறையுதுல்ல...? பத்தடியைத் தூக்கிக்கட்டு" மறுபடியும் சுப்பம்மாள் அடித்துப் பேசினாள்.

"மலையை எப்படி உசத்திக் கட்டுறது? எப்படித் தூக்கிக் கட்டுறது?"

"இத்தனை பேர் ஆம்பளையும் பொம்பளையுமா முன்னும் பின்னும் அலைஞ்சு திரியறீங்களே... உசத்திக் கட்டமுடியாதா? மண்ணெடுத்து மேல போட்டோம்னா

பத்தடி கட்ட முடியாதா? அவனுக்கு என்ன வேணும்? பத்தடி உயரம் வேணும், பாறைக்கல்லை அடுக்கி மேல மண்ணைக் கொட்டி பத்தடி கட்டு.”

வரதராஜ முதலியார் திகைத்தார் “செய்துடலாம். ஊர் ஒத்துக்குமா? ரோஷக்காரப் பயலுக...நம் ஊர் மாதிரி பிடிவாதம் பிடிக்கும் மக்கள் எங்கும் இல்லை. ஊருல சொல்லு.... இரண்டரை நாள்ல கட்டிடலாம். ஐயா யாருன்னு சொல்லலையே....”

“ஒரு மசுரும் வேணாம் போ” என்று சுப்பம்மாள் கைவீசி அதட்ட வரதராஜ முதலியார் விலகிக்கொணாடர்.

சுப்பம்மாள் பொத்தென்று தரையில் உட்கார்ந்தாள். சுருண்டு படுத்துக்கொண்டாள். அவளுக்கு நீர்மோரும் வெல்லம் கரைத்தத் தண்ணீரும் தரப்பட்டன. ஒரு ரூபாய் நாணயத்தை சுப்பம்மாவின் முன்பு தரையில் வைத்துவிட்டு வரதராஜ முதலியார் கவலையோடு சேரி விட்டு வெளியே வந்தார்.

“என்ன மலையைக் கட்டுறதுங்கிறாங்க...?”

“செய்துடலாம். மேல போற பாதை ஈசியா இருக்கு வயசாளிகளைக் கீழே நிக்க வைங்க வாலிபமானப் பசங்களை மேல நிக்கச் சொல்லுங்க தட்டு மாத்தச் சொல்லுங்க...”

“தட்டு மாத்தினா நல்லாருக்குமா, வேற எதுனா பண்ணலாமா?

“உறியடிச்சுடலாங்க, உறியை தோள்ல போட்டு ஆளுக்குப் பத்தடி, பத்தடி உறி கொண்டாறது காலி உறி எடுத்துட்டுப் போறது ....மண்ணு உறி எடுத்துட்டுப் போறது அப்படின்னு. செய்துடலாம் சட்டுன்னு இரண்டு கூடை மண்ணு மேல வந்து விடும்.”

"மண்ணு வெட்டறது யாரு?"

"ஒரு இருபது பேரு, வாலிபமான ஆளுங்களைப் பார்க்கணும் தண்ணி ஊத்த பத்துப் பெண்களை வைக்கணும் தண்ணி ஊத்தி இளகின மண்ணை பசக்கு பசக்குன்னு வெட்டி கூடையில மேல ஏத்திடணும்."

"ஊரில இருக்கிற ஆளுக எத்தினி பேரு?"

"ஆயிரத்தி இருநூத்தி நாற்பத்தியேழு பேர். குழந்தைங்க அறுபது பேரு. அதுங்களைத் தள்ளிட்டா பொம்ப வயாசாளிங்களை கர்ப்பிணிப் பொண்ணுங்களை, சும்மா' வேடிக்கை பாருன்னு உட்கார வைச்சிட்டா ஆயிரத்து நூறு பேர் ஆயிரத்து நூறு பேருல நூறு பேர் மலையுச்சி. 900 பேர் ஒரே நடை மலை உயரம் எண்ணூறு அடிதான்னு தானே சொல்லுதாக.... ஒரடிக்கு ஒருத்தரை நிக்க வைச்சாக் கூச மிச்சம் நாலடி, நாலடி நடந்தா போதும், எண்ணூறு கைகள் மாறி மண்ணு வந்துவிடும் மலையை உயர்த்திக் கட்டிலாம்."

"வீரையா,...இது நல்லாருக்கு. இருந்தாலும் ஒண்ணு செய், ராத்திரிக்கு உங்க ஆளோட ஊருக்குள்ள வந்து உட்கார்ந்துக்க. பேசி ஒரு முடிவு பண்ணுவோம்.

இளைஞர்களை அழைத்து ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் தகவல் சொல்லி, ஆளனுப்பி உட்கார்ந்து பேச, பிறகு சுத்தம் செய்து, நீர். தெளித்து கொசு போக புகை போட்டு, தீப்பந்தங்கள் ஏற்றி வைக்க இருண்டதும் ஜனங்கள் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். மரப் பெஞ்சில் ஊர்ப் பெரியவர்கள் அமர்ந்து கொண் டார்கள்.

"வெள்ளைக்காரன் ஊருக்குள்ள வந்து பழமுதிர் குன்றம்ங்கிற ஊரை பழுமுதிர்மேடு அப்படின்னு சொல்லிப் புட்டான். இது உங்களுக்கெல்லாம் தெரியும். சேரிக்குப்

போய் சுப்பம்மாவைக் குறி கேட்டதுல மலையைத் தூக்கிக் கட்டுன்னு ஒரு வயசான குரல் அதட்டிச் சொல்லிச்சு யாருன்னு பேரு கேட்டா நான் இந்த ஊருலேயே இருந்தவன்தான், உனக்கு என்தடம் தெரியாது. பேரு கேட்காதே அப்படின்னு சொல்லிடுச்சு. இப்ப சுப்பம்மா சொன்ன குறியை நம்பி மலையை உசத்திக் கட்டுறதா அல்லது வேறு ஏதேனும் முயற்சி பண்றதா? அந்த வெள்ளைக்காரனுக்கு காசு, கீசு கொடுத்துப் பார்த்தோம் அவன் நம்மளை அசிங்கமாப் பேசுதான். என்ன, ஏதுன்னு ஊரு இந்த ராத்திரிக்குள்ள முடிவு பண்ணியாகணும்." - வரதராஜ முதலியார் விவரம் சொல்ல ஊர் அமைதியாக இருந்தது.

"காடு கரம்பெல்லாம் போட்டுட்டு மலையைத் தூக்கிக் கட்டுறதுங்கிறது தேவையில்லாத விஷயமுங்க.... ஊருலஉள்ள அத்தனை பேரும் ஊரை அம்போன்னு விட்டுட்டு மலையில் ஏறி மண்ணு போட்டுட்டிருக்கும் போது ஊருக்குள்ல எவனாவது நுழைஞ்சான்னா யாரு தடுக்குறது? அங்கேயிருந்து ஊருக்கு ஓடியாருவீங்களா? அதுக்குள்ள மொத்த ஊருக்கும் நெருப்பு வைச்சிட்டுப் போயிடுவான்.

"யாரு...?

"அட ஒரு பேச்சுக்குச் சொல்றேன்."

"அப்படி யாரும் எதிரிங்க நமக்கு இல்லைங்க தேவையில்லாம பயமுறுத்தாதீங்க." - வரதராஜ முதலியார் பேசியவனை அடக்கினார்.

"நான் என்ன சொல்றேன்னா...எதுக்கு மலையை உசத்திக்கட்டணும்? அவன் ஏதோ சொல்லட்டும். நாம நம்ம ஊரைப் பழமுதிர்க்குன்றம்னுதான் சொல்லவோம் நம்ம

கல்யாணப் பத்திரிகையில் நல்லது கெட்டதுல இந்த ஊர் அப்படித்தானே சொல்லும்."

"அப்படியில்லை சர்க்கரை நீ தப்பாப் புரிஞ்சிக்கிட்டிருக்கே. ஒரு காலத்துக்குப் பிறகு உன்னுடைய பேரன் காலத்துல் இந்த ஊரு பேரு பழமுதிர்மேடு அப்படின்னு தான் இருக்கும்ங்கிறதுனால குன்றம்ன்னு கூப்பிடக் கூடாதுன்னு அவங்களே முடிவு பண்ணி இதை மேடாக்கிடுவாங்க...."

"ஆமாங்க.....இந்த மேடுங்கிற வார்த்தையே நல்லா யில்லைங்க....கோட்டை இடிஞ்சு போய் வாழாத இடம் கோட்டை மேடு. கோயில் இடிஞ்சு போய் நாசமான இடம் கோயில் மேடு ஊர் மேடு. மேடுன்னாலே முன்ன நல்லாயிருந்து. இப்ப இல்லாத இடம் என்று ஆகும். நம்ம ஊருக்கு மேடுன்னு பேரு வைச்சோம்னா வைச்ச நாளிலிருந்து ஒரே வருஷம் ஊர் நாசமாப் போயிடும்ங்கிறது என்னோட அபிப்பிராயம்." - படித்த சிங்காரம் உரக்கப் பேசினான். ஊரார் சிங்காரத்தை ஆவலாகப் பார்த்தார்கள்.

"அழிஞ்ச இடத்துக்குததான மேடுன்னு பேரா?" என்று அவனிடம் மறுபடியும் விசாரித்தார்,கள் அவன் பல்வேறு உதாரணங்கள் காட்டினான்.

"சிங்காரம் சொல்றது சரியாத்தானிருக்கு. நம்ம ஊரு பேரை நாமளே கெடுத்துக்கறதா? கூடாது."

"இல்லைங்க...அவன் எதுனா கூப்பிட்டுட்டுப் போகட்டும். நமக்கு அது குன்றம்தானே?"

"இல்லைங்க...நாம எப்படி கூப்பிடுகிறோமோ, அப்படித்தான் அரசாங்க ரெக்கார்டுலயும் இருக்கணும். உன் பேரு சர்க்கரைன்னா எல்லா இடத்துலயும் எல்லாரும் உன்னை சர்க்கரைன்னுதான் கூப்பிடணும் அடுத்த ஊருல

உன்னை மண்ணாங்கட்டின்னா கூப்பிடுறது? அதுதான் உனக்குப் பேருன்னு சொன்னா, நாங்க விட்டுருவோமா?”-வரதராஜ முதலியார் சொல்ல ஊர் சிரித்தது.

“சுத்தியிருக்கிற எல்லா கிராமத்துலேயும் கூட நம்ம ஊர் செழிப்பா இருக்கிறதுக்கு இந்த பேர் காரணம் இந்த மலை காரணம். இது மலையே இல்லைன்னு எவனோ ஒரு அரைகுறை ஆள் வந்து சொல்லிப்புட்டான்னா நாம ஒப்புக்குறதா? நம்ம ஊர்க் கோயிலுக்கு பழமுதிர்குன்றம் கோயில்ன்னுதானே பேரு கல்வெட்டு இருக்குல்ல? அப்படி இருக்க் சொல்லஅதுக்கு நான் பேர் மாத்தறேன்னு ஒருத்தன் வந்தா என்ன பண்றது?”

“ஒண்ணும் பண்ண முடியாது. இது வெள்ளைக்காரன் ஆட்சி பண்ற நேரம் இதே துலுக்கர் வந்து கத்தியைக் காட்டி பேர் மாத்துன்னா, நீங்க மாத்துவீங்க, இல்லையா?, இல்லை மாத்தமாட்டேன்னு சொல்லுவீங்களா? இவன் மரியாதையா சொல்றான். அதனால உட்கார்ந்து எந்ன பண்ணலாம்னு யோசனை பண்றீங்க. சென்னப்பட்டினம்னு இருந்த அழகான பேரை, மதராஸ்ன்னு மாத்துனது நவாப்புங்க் தானே.... அந்த நவாப்புக்களை நாம் என்ன பண்ணிட்டோம்? மாத்த முடியாதுன்னா சவுக்கு பேசியிருக்கும். அதனால என்ன வேணாலும் பேரை மாத்திக்கன்னு சொல்லிட்டிருப்போம். வெள்ளைக்காரன் நிதானமா பேசுதான். எதிர்த்து உடனே கட்சி கட்டிட்டு நிற்கிறோம். என்ன பேரு இருந்தா என்னா? நம்ம ஊரு நல்லா இருக்கும். கவலையை விடுங்க இதுக்குன்னு மண்ணெடுத்துக்கிட்டு மலைக்குப் போகு வேண்டிய அவசியம் இல்லை.” - ராமையா பிள்ளை உரத்துச் சொன்னார்.

கோபால் எழுந்தான் “ராமையா பிள்ளை சொன்னதை நான் ஒப்புக்கலை ரொம்ப நிச்சயமா பத்தடி உயரம்

வேணும்ன்னா பத்தடி உயரம் கட்டணும். நம்மால கட்ட முடியாது, அப்படின்னு ஒரு வெட்கக் கேடான விஷயம் நமக்கு வாய்க்கக் கூடாது. இது நீங்க சொல்லியோ நான் சொல்லியோ செய்யலை. குறி கேட்டோம், குறில ஊர்ல வாழ்ந்த ஒரு 'பெரியவர் தலையை உசத்திக்கட்டுன்னு சொல்றாங்க. இது தெய்வவாக்கு. அருள் வாக்கு. ஒரு தெய்வ வாக்கு வந்தா அதுக்குக் கட்டுப்பட மாட்டாங்களா...? அது கிடக்குப் போ, அப்படின்னு சொல்லிடுவீங்களா? நல்லா இருக்குங்கய்யா நீங்க பேசுறது. தெய்வ வாக்குக்குக் கூட பயப்படாதவங்க எப்படி மனுஷனா இருக்க முடியும்?" - கோபாலு விரைவாகப்பேசினான். சிங்காரம் கைதட்டினான். மற்ற இளைஞர்கள் ஆதரித்தார்கள்.

"பாருங்க...மொட்டைப் பசஙக மாதிரி பேசறான். மலைக்கு மண்ணு தூக்கிட்டுப் போறது எளிதா? நீ அடிச்சிடுவ நூறு வண்டி மண்ணு இந்த பொம்ளைப்புள்ளை செய்யுமா? அதால தூக்க முடியுமா? நாலுவாட்டி மண்ணு கூடை தூக்கி, தடுமாறி தரையில் விழுந்துதுன்னு வைச்சுக்கோ. என்ன ஆவறது? படாத இடத்துல பட்டு துன்னா யார் பதில் சொல்றது? ஆயிரம் பேரும் ஆம்பளைங்களா இருந்தா செய்யலாம். பொம்பளைங்களும் இருக்காங்களே..... அதை யோசிக்க வேண்டாம். வாய் புளிச்சதோ மாங்கா புளிச்சதோன்னு இஷ்டத்துக்குப் பேசினா என்ன அர்த்தம்?" - மறுபடியும் ராமையா பிள்ளை கத்தினார்.

கூட்டத்திலிருந்து ஒரு பெண் குரல் சிலீரென்று எழுந்தது "எங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை நாங்களும் மண் தூக்கத் தயார். நாங்க இது வரைக்கும் மண்ணே தூக்கினது இல்லையா? களத்துல இறங்கி நெல்லு பறிச்சதில்லையா? காட்டுக்குப் போய் சுள்ளி ஒடிச்ச

தில்லையா? இது பண்ணா செத்துப் போயிடுவோமா? யார் சொன்னது? எங்களுக்கு ஊர் மானம்தான் முக்கியம். ஊர் செய்யச் சொன்னா எங்களாலயும் முடியும்." - அந்தப் பெண் சொல்ல மற்ற எல்லா பெண்களும் உரக்க ஆமோதித்து வழிமொழிந்தார்கள்.

"யாரது குரல் கொடுத்தது? சர்க்கரை பொண்டாட்டி சரோஜாவா? உனக்கு என்னா? உன் புருஷன் கூடயும் படுகக்லை. பெத்தும் இறக்கலை. நல்ல திமிசுக்கட்டையா இன்னும் நிக்கிறே.... எல்லா பொம்பளையாலும் இதைச் செய்யமுடியுமா?" - வேறு ஏதோ குரல் கேட்டது.

அது செல்லம்மா. அவளுக்குப் பிறந்த தினத்திலிருந்து ஏதேனும் உடல் உபாதை இருந்துகொண்டே இருந்தது. அள் புருஷன் அவள் உடல் உபாதையைச் சொல்லியே ஊருக்கு வெளியே பல பெண்களோடு தொடர்பு வைத்திருந்தான். அதை ஊர் அவளிடம் வந்து சொல்ல அதைக் கேட்டு கேட்டு மருகி உலகத்து எல்லா விஷயங்கள் மீதும் அவள் தீராத வெறுப்பு கொண்டிருந்தாள். யாருக்கு நல்லது நடந்தாலும் மனம் மருகுவாள். எங்கு வாழ்த்த வேண்டியிருந்தாலும் வசவுச் சொற்களை உதிர்ப்பாள். அவளை முடிந்தவரை நல்லதுக்குக் கூப்பிடாதிருக்க ஊரார் முயற்சி செய்வார்கள். செல்லம்மாளை அப்படி கூப்பிடாத போது கூப்பிடவில்லை என்பதற்காகவும் இழிவாகப் பேசுவாள். ஆனால் ஊர் அதைப்பொருட்படுத்தவில்லை. சரி செத்தவ அப்படித்தான் கத்துவா என்று தூசு தட்டி நகர ஆரம்பித்து விட்டார்கள்.

"இப்ப என்ன சொல்றீங்க?"

"பத்தடி உசரம்ங்கிறது பதினோரு அடியாவது கட்டணும். கல்லுப் பாறை தூக்கிக்கிட்டுப் போகணும். நாப்பது ஐம்பது பாறை தூக்கிக்கிட்டுப் போனாதான் ஓரளவு

உயரம் கிடைக்கும். அதுக்கு மேல மண்ணைப் பூசனும். என்ன சொல்றீங்க?"

ஊரிலுள்ள அத்தனை இளைஞர்களும் எழுந்து ஆரவாரித்தார்கள் "செய்வோம். செய்து முடிப்போம்" என்று கூவினார்கள்.

"உங்கக் கூச்சலை நம்பி நாங்க இறங்க முடியாதுங் கய்யா...நீங்க ஓரமா ஒதுங்கிட்டீங்கன்னா எங்க பாடு ஆபத்து. பாதி கட்ட ஆரம்பிச்சு முடியலேன்னா அதை விடக் கேவலம் ஊருல ஒண்ணும் இல்லை. அதைத் தவிர நாம் ஒருத்தர் மேல ஒருத்தர் குத்தம் சொல்லி நமக்குள்ளேயே சண்டை வந்துடும். இதுவரைக்கும் ஒத்துமையா இருந்த ஊரு பொத்து பொத்துன்னு அடிச்சுக்க ஆரம்பிச்சிடும் வீரையன்.....நீங்களும் உங்க ஜாதி ஜனங்களும் இதுக்க உடன்படுவீங்களா? கூட நிப்பீங்களா?"

"நல்லா நிக்கறோங்க. நம்ம ஊர் பேரு மாறக்கூடாது. நம்மை ஊரைச் சார்ந்த மூதாதை இப்படி செய்ன்னு சுப்பம்மாள் மூலம் சொல்லிட்டாங்க. அது கட்டளை. அதை மீறுறதுங்கிற யோசனையே இல்லை. அதைக் கட்டளையா ஏத்துக்குறதுக்கு இந்தப் பக்கத்துல உள்ளவங்களுக்குப் புத்தி வந்துட்டா போதும். சுப்பம்மாள் சும்மா ஏதோ சொல்லு துன்னுதான் இங்கே பல பேர் நினைக்கிறாங்க...." என்று தன் பல நாள் குமுறலைச் சொன்னான்.

சுப்பம்மாள் தொலைவிலிருந்தபடி, வீரையனை நறு முகையோடு நோக்கினாள். அவளுக்கு அந்தக் குறை இருந்தது.

பழமுதிர்க்குன்றம் அமைதியாக இருந்தது. வீரையனை பேச்சு லேசாக வலித்தது போல முகம் திருப்பிக்கொண்டது.

"சரி.... தப்பான இடத்தைத் தொடாதீங்க. வீரையன் இப்ப ஒத்துமையாச் செய்ய வேண்டிய காரியம் ஒத்துமையா செய்வோம். சுப்பம்மாள் சரியா தப்பாங்கிற கணக்கு இப்ப இல்லை. ஒவ்வொருத்தருக்கும் தனி அபிப்பிராயம் உண்டு அதுக்கேத்தபடியான விளைவை அவங்க அனுபவிச்சிப் பாங்க. நான் சுப்பம்மாவை நம்பறேன். கேட்ட அஞ்சாம் நிமிஷம் தெள்ளத்தெளிவா குரல் வந்து சொல்லுச்சு."

"அதைச் சுப்பம்மாவே சொல்லியிருக்கலாம்ல. அது யாரு என்னன்னு கண்டீங்க? நம்ம ஊருல இருந்தவரு நமக்குத் தெரிஞ்சவரு சொன்னா நல்லாயிருக்கும். அப்படி சொல்லாத யாரோ ஒருத்தர் வந்து முந்நூறு வருஷத்துக்கு முன்னாடி இருந்தவரு வந்து சொல்றேன்னாக்க, இதை எங்கப் போய் முட்டிக்கிறது? இதை நம்மூர் ஆள் சொன்னதா நான் எப்படி எடுத்துக்கிறது?" முருகேசன் என்ற இளைஞன் கொஞ்சம் வேகமாகக் கத்தினான்.

வரதராஜ முதலியார் எதற்கெடுத்தாலும் சேரிப்பக்கம் நின்று அவர்களையும் கேட்பது முருகேசனுக்கு பிடிக்க வில்லை. முருகேசன் தகப்பனார் சுப்பிரமணியப் பிள்ளைக்கும் பிடிக்கவில்லை. அவர்கள் வரதராஜ முதலியாரின் தலைமைப் பதவிக்கு குறி வைத்திருந்தார்கள். ராமையா பிள்ளை ஐந்து வருட காலம் ஆட்சி செய்து நகர்த்தும் தனக்கு அந்த இடம் கிடைக்குமென்று சுப்பிரமணிய பிள்ளை கம்பீரமாக இருக்க வரதராஜ முதலியார் ஊரில் உள்ள எல்லோரிடம் போய், தான் தலைவனாக இருக்க வேண்டும் என்கிற விருப்பத்தைத் தெரிவிக்க அவர் வந்ததைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வந்தவருக்கு ஆதரவு தெரிவித்து வராத சுப்பிரமணியத்தை விலக்கினார்கள். சுப்ரமணியத்தை விலக்கியது சுப்ரமணியத்தை விட முருகேசனுக்கு வலித்தது. அதனால்

அவன் வரதராஜ முதலியாரை எப்போதெல்லாம் சந்தர்ப்பம் நேருகிறதோ அப்போதெல்லாம் இழிவு படுத்தத் தயராக இருந்தான்.

"ஆமாங்க.....அந்தப் புள்ளை சொல்றதுல ஒரு அர்த்தம் இருக்குல்ல. யாரு சொல்லி செய்யறோம்? நம்ம ஊரு மூதாதை அப்படின்னு சொல்லி செய்யறோம்னா, அவன் யாரு, அவன் பேரு என்ன? அவன் எங்கிருந்தான். அப்படிக் கேட்கணும்னில்ல? அவரு இன்னவரா இருந்தாரு அவருக்குத் தெரியும்ன்னு நம்ம ஊருல இருந்து, போனவரு சொன்னாக்கூட பரவாயில்லை அப்படி சொல்லாத வெறுமே சுப்பம்மாள் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிக் கிட்டு உட்கார்ந்திருக்க முடியுமா?" இன்னொருவரும் கூறினார்.

எல்லோரும் திருப்பி சுப்பம்மாளைப் பார்த்தார்கள். சுப்பம்மாள் வெளியே எங்கோ திரும்பி வெகு தூரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கைவிரல்கள் சிறு குச்சியால் பூமியைக் கிளறிக்கொண்டிருந்தன. சுப்பம்மாள் ஏதோ சொல்லப் போகிறாள் என்று எல்லோரும் ஆவலாக இருக்க, சுப்பம்மாள் சட்டென்று எழுந்து நின்றாள். எல்லோரும் மிரண்டு சற்று நகர்ந்து பின்னால் சாய்ந்து கொண்டார்கள்.

"ஒரு தடவை சொல்லிட்டேன்.....ஊருல இருக்கிற எந்த நாய்க்கோ சந்தேகம்னா நான் வந்து பார்க்க முடியாது. கேட்டா கேளுங்க கேட்காட்டி போங்க....." என்று சுப்பம்மாள் உரத்துக் கத்த.

"எவனைப் பார்த்துடி நாய்ங்கிற?" – முருகேசன் வரிந்துக்கொண்டு எழுந்தான். சுப்பம்மாவை நோக்கிப் பாய்ந்தான். பாய்கின்ற முருகேசனைத் தடுப்பதற்காக

ஜோதியும் வீரையனும் சுப்பம்மாவை மறைத்துக் கொண்டிருந்தார்கள்.

"டேய்... முட்டாள்... அது அவள் பேசலைடா.... உள்ளுக்குள்ள இருக்கிற ஆவி பேசுது."

"நல்லா இருக்கே கதை. விளையாடுறீங்களா? ஒரு பொம்பளை எழுந்து நின்னு என்னை நாய்ங்கிறா.....அதை அவ சொல்லலை, அவ உள்ளுக்குள் இருக்கிற ஆவி சொல்லுதுன்னு பம்முறீங்களே.....பைத்தியமா உங்களுக்கு? இவ கொழுப்பெடுத்த பொம்பளை. வீரையன் கொடுக்கிற பலத்துல ஆடறா...வீரையன் இவளுக்கு இடம் கொடுக்கிறான். வீரையனுக்கு இவள் இடம் கொடுக்கிறாள். இது தெரியாதுன்னு நினைச்சிக்கிட்டிருக்கீங்களா?" என்று உறவுமுறை பற்றி கேலி செய்ய இப்போது வீரையன் எகிறிக்கொண்டு வந்தான். ஜோதி அவன் இடுப்பைப் பிடித்து அடக்கினான்.

ஊர்மக்கள் அவர்கள் இருவரையும் சமாதானம் செய்தார்கள். "தயவு செய்து விஷயத்தைப் புரிஞ்சுக்குங்க்...." வ்ரதராஜ முதலியார் சகலரையும் அடக்கினார். "நம்ம ஊரை பழமுதிர்மேடுன்னு கூப்பிடப் போறாங்க, இது உங்களுக்கு சம்மதமா? சம்மதம்ன்னு சொல்றவங்க கை தூக்குங்க."

முருகேசனின் தகப்பனார் சுப்பிரமணியம் மட்டும் கைதூக்கினார் முருகேசன் கைதூக்கிவிட்டு பிறகு இறக்கிக் கொண்டான். இதில் சம்மதமில்லை என்று தலையசைத்தான்.

"மானங்கெட்டவன்" சர்க்கரை கோபமாகப் பேசினான். "ஊரை மேடுன்னு சொல்லலாம். இவனை பேடின்னு சொல்லலாம்" என்று உரக்கச் சொல்ல ஊர்

சிரித்தது. முருகேசன் சர்க்கரையை நோக்கிப் பாய மறுபடியும் ஊர் அழுத்தி உட்கார வைத்தது.

எகிறிப் பாய்வதும், அடக்குவதும் அந்த ஊரின் ஒரு குணாதிசயமாகவே இருந்து வந்தன.

"ஊர்ப் பெயர் பழமுதிர்க்குன்றம்னே நிலைக்கணும்ன்னா, வெள்ளைக்காரன் சொன்னாப்போல எண்ணூறு அடிக்கு மலையாக் கொண்டாராணும். எழுநூற்று தொண்ணூறு அடி இருக்கிற ஒரு உச்சியை இன்னும் பத்தடி உசத்திக் கட்டணும். என்னுடைய அபிப்பிராயம் என்னன்னா, காலையில் கஞ்சி குடிச்சிட்டுப் போனோம்னா, சாயந்திரம் பொழுது சாயற வரைக்கும் ஒரு அஞ்சடியும் மறுநாள் முழுக்க வேலை செஞ்சு ஒரு அஞ்சடியும் கட்டிடலாம். முதல் நாளே ஒரு ஆறடி கட்டினோம்னோ கூடுதலா ஒரு அடி கிடைக்கும். அப்படி செய்யறது நல்லதுங்கிறது என்னோட அபிப்ராயம். ஆக பழமுதிர்குன்றத்தை பதினோரு அடி உசத்திக் கட்ட ஊருல இருக்கிற அத்தனை வளமான ஆட்களும் வந்து நின்னு உதவி செய்யணும்ன்னு கேட்டுக் கொள்கிறேன். நாளை மறுநாள் நாள் நல்லாயிருக்கு. அன்னிக்கு வேலையைத் துவக்கிடு வோம். ஊரிலுள்ள எல்லோரும் எழுந்து நின்னு குலவை போட்டு என்னுடைய திட்டத்துக்கு ஆதரவு தரணும்" என்று கைகூப்பிக் கேட்க., பெண்கள் எல்லோரும் எழுந்து நின்று குலவை போட்டார்கள். ஆண்கள் ஓவென்று கூவி அங்கவஸ்திரத்தை மேலெறிந்து பிடித்தார்கள். முருகேசனும் உற்சாகமாக அதில் கலந்து கொண்டான்.

ஊர் அடங்கியதும் சுப்பிரமணியம் கை உயர்த்தினார். "எனக்கு இஷ்டம் இஷ்டமில்லைங்கிறது வேற விஷயம். ஊர்க் கட்டுப்பாட்டுக்கு ஒத்துக்கிட்டு நானும் இதுல கலந்துக்

குறேன்” என்று சொல்ல மறுபடியும் குலவைச் சத்தம் பெரிதாகியது.

“ஏங்க....மத்தியானம் சாப்பாடு எங்கே?” என்று கோபாலு கலைந்து போனவர்களைக் கையமர்த்திக் கேட்டான்.

“கோபாலு... போற ஜனம் போகட்டும்...அது நம்ம வேலை. அத்தனை பேருக்கும் சாப்பாடு போடறது நம்ம வேலை. அதைக் கூட்டம் முடிவு பண்ண வேணாம். அவ்வுளவுதாங்க...நான் சொல்லியனுப்பறேன். மண்வெட்டி கடப்பாறையோடு வந்துடுங்க...” என்று முதலியார் ஊராரிடம் சொல்ல ஊர் கலையத் தீப்பந்தத்தை ஆட்டிக் கொண்டு அவர்கள் தங்கள் இருப்பிடம் நோக்கிப் போனார்கள், சுப்பம்மாவை சற்று இருக்கச் சொல்லி, வரதராஜ முதலியார் வேண்டுகோள் விடுத்தார்.

வீரையனும் ஜோதியும் சுப்பம்மாளும் ஒரு ஓரத்தில் தரையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

“ஏம்ப்பா...சர்க்கரை...எல்லோருக்கும் ஒரே சாப்பாடு தானேப்பா.”

“ஆமாங்க...”

“நான் கேட்கறது புரியலையா? வீரையன் ஜோதிக் கெல்லாமும் அதே சாப்பாடுதானே?”

சர்க்கரை சட்டென்று திகைத்தான். கோபாலு முன் வந்தான் “ஆமாமுங்க..நியாயத்துக்கு அவங்களுக்கும் அதே சாப்பாடுதான் போடணும். அவங்க சாப்பாடு கொண்டாந்தாக்க நாம சாப்பிட முடியாதே தவிர நாம சாப்பாடு கொண்டு போனா அவங்க சாப்பிடறதுக்கு என்ன?”

"ஆங்...எங்க சாப்பாட்டை நாங்க சாப்பிடறதுக்கு முன்னாடி அவங்க சாப்பிட்டுட்டாங்கன்னு யாராவது சொன்னா?"

"கழுத்தைப் பிடிச்சு மலையிலிருந்து வெளிய தள்ளுங்க...சும்மா இதையே பேசிக்கிட்டு...."

"சுப்பம்மா சொல்ற குறியை நம்பித்தானே நாம இத்தனை பெரிய வேலை செய்யறோம். சுப்பம்மா சாப்பிட்டு நாம சாப்பிட்டா செத்தாப் போயிடுவோம். இதெல்லாம் வீண் வம்பு. அவங்க துணையில்லேன்னா இங்க ஒண்ணும் செய்ய முடியாது. நாம இரண்டு கூடைமண்ணு அள்ற நேரத்துக்கெல்லாம் அவங்க ஆறு கூடைமண்ணு அள்ளிடுவாங்க. பாறையைத் தூக்கிக்கிட்டு உச்சிக்குப் போறது நாம போக முடியுமா? நாக்கு தள்ளிடும். இரண்டுதோள்ல இரண்டு பாறை வைச்சிட்டு ஜோதி மலையேறப் போறதை நீங்க பார்க்கத்தான் போறீங்க.... அவங்க இல்லாத இந்த மலை கட்டமுடியாது...அவங்க என்ன எதிர்ப்பார்ப்பாங்க பதிலுக்கு? காசா.....பணமா...? எதுவும் இல்லை. மரியாதை எதிர்ப்பார்ப்பாங்க. நீங்க கொடுத்துத் தான் ஆகணும்."

"நீ கொடுத்துடுவேடா...டப்புன்னு தூக்கிக் கொடுத் துடுவ.... உனக்கென்னா? அப்புறம் அதே மரியாதையை அவன் ஒவ்வொரு நாள் காத்தாலயும் உன் வீட்டு வாசல்ல வந்து கேட்பான், கொடுக்கமுடியுமா?"

"ஏன்? மனுஷனுக்கு மனுஷன் மரியாதை கொடுத்தா என்ன?"

"அப்படி கொடுக்கும்படியா பெரியவங்க சொல் லலை." – சுப்பிரமணியம் அதட்டிப் பேச அங்கு மறுபடியும் மௌனம் நிலவியது.

"நான் இப்போ ஒரு கேள்வி கேட்கறேன். யோசிச்சு அவசரப்பாடத பதில் சொல்லுங்க சுப்பம்மாள் குறியில வந்து சொன்னது நம்மூர் ஆளா, சேரி ஆளா? சேரி ஆள் இருந்தா, இது சூழ்ச்சியான திட்டம்ன்னு சொல்லுதேன்."

"என்னங்க...திட்டம் போட்டது நான். மலையை உசத்திக் கட்டலாம்ன்னு கேட்டது நான். முடியாதுன்னு சொல்லிட்டுப் போங்களேன் அதைத் தவிர அவங்க என்ன சூழ்ச்சி பண்ணாங்க? அப்பாவி ஜனத்தை அசிங்கமா பேசாதீங்க...வந்தவரு சேரி ஆளாகவே இருக்கட்டுமே. இந்த ஊர் பேரு மாறப் போகுதுன்னு கேள்விப்பட்டேன். அவரும் பதில் சொன்னாரு. நான் கேட்காத இருந்தா அவர் வந்து பதில் சொல்வாரா. நானே சொல்றேன்னு உன்னிடம் வந்து சொன்னாரா? நாம கேள்வி கேட்டுட்டு பதில் தெரிஞ்ச பிறகு செய்ய மாட்டேன்னு சொன்னா, நமக்குக் கேடா....? வந்து சொன்னவங்களுக்குக் கேடா? உளறுவதற்கு ஒரு அர்த்தம் இருக்கணும். இப்ப பிரச்சனை அது இல்லை. எல்லாருக்கும் ஒரே சாப்பாடு தானே?"

"ஆமாங்க...பிரிவு காட்டாதீங்க. பிரிவு காட்டுனா அதுங்க வேதனைப்படும். அதுங்க வேதனைப்பட்டா வேலை சரியா நடக்காது. ரெண்டு நாள் வேலை மூணு நாள் வேலைன்னு ஆகும், அதுவும் முடங்கிப் போகும் பெரிய வேலைங்க இது ஆளுங்களை அரவணைச்சுதான் போகணும். மலையில் ஏறுறோம். இறங்கறோம், சறுக்கும், வழுக்கும் புரளும்படியா ஆகும். டக்குன்னு அவுங்கதான் கை கொடுத்துத் தூக்கிவிடுவாங்க. தோள் பிடிச்சு நடந்து வருவாங்க. அப்பல்லாம் தொட்டா ஆச்சா, பட்டா ஆச்சா அப்படின்லாம் பார்க்க முடியாது. அப்படிப் பார்க்கிற பெரிய ஆளுங்க யாரும் நம்ம ஊருல இல்லை."

“சர்க்கரை....நீ காஞ்சு கிடக்கறேடா...அங்கே ஏதாவது விடைக்குட்டி கிடைக்காதான்னு அலையறே... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?” என்று சுப்பிரமணியம் பேச சர்க்கரை துள்ளிக்கொண்டு அவர் மீது பாய்ந்தான். படரேன்று அப்பா அடிவாங்குவதைப் பார்த்துவிட்டு முருகேசன் முஷ்டியை மடக்கிக் கொண்டு போக மறுபடியும் அங்கு கலவரம் ஏற்பட்டு சமாதானமாகியது.

“இப்படி தொட்டதுக்கெல்லாம் அடிச்சிட்டிருந் தீங்கன்னா, நான் எந்த வேலையும் பார்க்க முடியாது. தெளிவாச் சொல்றேன், பழமுதிர்குன்றம இப்படி சொல்றது எவ்வுளவு ஆனந்தமா இருக்கு? இதை விட்டுட்டு என்னுடைய காலகட்டத்துல ஒரு பேரு மட்டமா வைச்சு அதை நான் அனுமதிச்சேன்னா நான் உசுரோட இருந்து புண்ணியமில்லை. இந்த பேரை இழக்கிறதுக்கு நான் விரும்பலை. இதுக்கு நான் என்ன செய்யணுமோ அதை செய்துத்தான் ஆகணும். இதை நான் மட்டுமா செய்யாத ஊர் கூட செய்தோம்ன்னா மிகப் பெரிய நல்ல விஷயம் நடக்குமுன்னு எனக்குத் தோணுது. மலை உயர்த்தி கட்ட முடியாது. இவங்க என்ன பண்ணுவாங்க அப்படின்னுதான் அந்த வெள்ளைக் காரன் போயிருக்கான். நாளை காலையில் பத்தடி உசரம் கட்டிடறேன். நீ இருந்து பார்த்துபட்டுப் போ. அப்படின்னு சொன்னா. அந்த வெள்ளைக்காரன் ஆடிப் போய் உட்கார்ந்துடுவான். அவன்கிட்ட பழமுதிர்க்குன்றம்ன்னு எழுதி கையெழுத்து வாங்கணும்ன்னு எனக்கு உள்ளுக் குள்ளே ஒரு வெறியே இருக்கு. எல்லா ஜாதிக்காராளும் வேணும். இதில் பிரிவு கிடையாது. இழிவு கிடையாது. ஆக ஒரே மேடையில் ஒரே அடுப்புல ஒரே பாத்திரத்தில் சமைச்சு எல்லாருக்கும் பரிமாறணும்.”

“ஆனா, தனித்தனியா பரிமாறணும்ன்னு சொல்லிப் புட்டேன்.” - சுப்பிரமணியம் உரக்கக் கத்த ஊரார் அமைதியாக இருந்தார்கள்.

“சரி அவர்களைத் தனியா வைச்சுப் பரிமாறுகிறேன்” என்று வரதராஜ முதலியார் வேதனையோடு ஒப்புக் கொண்டார். ஊர் ஆழ்ந்த சிந்தனையோடு கலைந்தது. இன்னும் என்னவெல்லாம் பிரச்சினைகள் அதில் பொதிந்திருக்கின்றன. புதைந்திருக்கின்றன என்று தெரியாமல் தூங்கப் போயிற்று.

மறுநாள் காலை ஏழு மணிக்கு நிதானமாக எழுந்துவிட்டு பல் துலக்கி ஆர்தர் சிம்சன் தன் வீட்டு வாசலுக்கு வந்தான். காத்திருந்த வரதராஜ முதலியார் எழுந்து நின்று கைகூப்பினார்.

“மலையைப் பத்தடி உயரம் உயர்த்திக் கட்டி விடுகிறோம் எண்ணூறு அடி உயரம் ஆக்கிவிடுகிறோம். தயவு செய்து பழமுதிர்க்குன்றம் என்ற பெயரை மாற்றாதீர்கள்.”

“மலையை உயரமாக்குவதா? யாராக்குவார்கள்?”

“இந்த ஊர் மக்கள் ஆக்குவார்கள்.”

“எப்படி?”

“அது உங்கள் கவலையல்ல. எங்கள் கவலை. நீங்கள் உயரமானியில் பார்க்கும்போது மலை பத்தடி உயரமாக இருக்கும்.”

“வெறும் கட்டிடம் கட்டிவிட்டு மலை என்று சொல்லாதீர்கள் கட்டிடம் வேறு. மலைவேறு.”

“கட்டிடம் அல்ல நான் சொல்வது மலை உச்சிக்கு மேலே அந்தப் பரப்பளவு முழுவதும் பாறைகள் வைத்து அடுக்கி அதன் மீது மண் போடப்பட்ட மலை.”

"எனக்கு ஆட்சேபணை இல்லை. இது எப்போது நடக்கும்?" - ஆர்தர் சிம்சன் ஆவலோடு அவரைக் கேட்டான்.

"நாளை வேலை ஆரம்பிக்கிறோம் இரண்டு நாட்களில் இது நடக்கும்."

"அதுவரை என்னால் காத்திருக்க முடியாதே...." - ஆர்தர் சிம்சன் நிதானமாகப் பேசினான்.

"நீங்கள் அருகிலுள்ள ஊர்களுக்கு சர்வேக்காக போய்விட்டு வாருங்கள். உங்கள் தங்குமிடம் தினமும் இதுவாக இருக்கட்டும். எப்படியும் ஒரு வாரகாலமாகும் அல்லவா? அப்போது வேலையை முடித்துவிட்டு இந்த ஊரிலிருந்து கிளம்புங்கள். கிளம்பும் முன்பு மறுபடியும் பழமுதிர்க்குன்றத்தை உயரமானியால் இதை பழமுதிர்க் குன்றம் என்று இங்கேயே எழுதிக் கொடுத்துவிட்டுப் போங்கள்."

ஆர்தர் சிம்சன் யோசித்தான். அவர் பேச்சு நியாய மாகப்பட்டது. சரியென்று சொன்னான்.

வரதராஜ முதலியார் கவலையோடும். பதட்டத் தோடும் அவனை வணங்கிவிட்டு அவர் வீடு நோக்கி ஓடினார். அவர் ஓடிய அடுத்த ஒரு மணி நேரத்தில் ஊர்ப் பெண்கள் அவர் வீட்டில் ஒன்று கூடி அரிசியைப் புடைத்து சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆயிரம் பேருக்குக் கதம்பச் சோறு எப்படி செய்வது என்று இராமையா பிள்ளை தன் இனத்து மக்களோடு சேர்ந்து யோசித்தார்.

"சோறு மட்டும் போதாது. உச்சி வரையும் குடிக்கிற துக்கு தங்குதடையில்லாது ஜலம் வரணும். ஜலம் கொடுக் கிறதுக்கு ஒரு பத்து பேர் வைக்கணும். வாலிபமாகவும் இல்லாம பையனுமில்லாத பசங்களை இதுக்கு பயன்

படுத்தணும்” என்று ராமையா பிள்ளை சொல்ல, அப்படிப் பட்ட ஆட்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஊரின் எல்லையில் உலைக் கூடம் போட்டு இரும்பு சம்மட்டி களையும். கடப்பாரைகளையும். மண்கொத்திகளையும் கூர்மையாக்கிக் கொண்டார்கள். அடித்து வாகாய் நிமிர்த்திக் கொண்டார்கள். மலைக்கு அடிவாரம் போய் மூங்கில் வெட்டி வந்து உறிகள் தயாரித்தார்கள். அவரவர் வீட்டிலிருந்து கயிறுகள் கொண்டு வந்து கூடைகள் கொண்டு வந்து அவரவர் உறிகளை அவரவரே தயார் செய்து கொண்டார்கள். தேவைப்பட்ட மூங்கிலும் தேவைப்பட்ட கயிறு வரதராஜ முதலியாரால் தரப்பட்டன. அந்த இரவு வெகு நேரம் வரை ஊர் எப்படி வேலைசெய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தது. பேச்சில் களைப்புற்றுத் தூங்கப் போயிற்று.

விடியலில் சிறு முரசும் எக்காளமும் முழங்கப் பட்டன. ஊர் மக்கள் பொங்கலுக்கு திரண்டு வந்து வாழ்த்து சொல்வது போல வீட்டிலிருந்து கிளம்பி வரதராஜ முதலியாரின் வீட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லார் கைகளிலும் ஆயுதங்கள் இருந்தன.

ஆர்தர் சிம்சன் ஊர் திரளும் சப்தம் கேட்டு பயந்து போய் திடுக்கிட்டு எழுந்தான். வாசலைப் பார்த்தான். என்ன ஆயிற்று இந்த ஜனங்களுக்கு என்று மிரண்டான். ஜோசப் தேவசகாயம் அவனை சமாதானப்படுத்தினான்.

“ஏதோ நல்ல விஷயம் தான் நடக்குதுன்னு நினைக் கிறேன். நாம நம்ம வேலையைக் கவனிப்பபோம்.”

அரை மணியில் ஆர்தர் சிம்சன்கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஜேம்ஸ் ஃப்ராங்க்ளினும் ஜோசப் தேவசகாயமும் பின்தொடர வேறு கிராமம் நோக்கிக் கருவிகளோடு

போனான். ஊர் அவன் போவதையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

“போயிட்டு வாவே.....வந்து அளந்து பாரும். உயரம் பார்த்து ஆடிப் போவீரு. இந்த ஊர் மக்களா அப்படின்னு கையெடுத்துக் கும்பிடுவீரு....- சர்க்கரை சொல்ல ஊரார் வாய்விட்டு சிரித்தார்கள்.

எதற்கு சிரிக்கிறார்கள் என்ற காரணத்தை ஆர்தர் சிம்சன் ஜோசப் தேவசகாயத்திடம் கேட்டுக்கொண்டான்.

“கட்டீட்டீங்கன்னா பாராட்டுகிறேன். கட்ட லேன்னா......” - அவனும் மெல்ல சிரித்தான்.

ஊர்மலையை நோக்கி நகரத் துவங்கியது. முன்னே பறையும் எக்காளமும் முழங்கிக்கொண்டு சேரி மக்கள் போனார்கள். அடிவாரத்திலுள்ள துர்க்கைக் கோயிலில் ஊர் நிற்க கதவு திறக்கப்பட்டது. யாரும் உள்ளே நுழையவில்லை வரதராஜ முதலியாரும் வாசலில் நின்றபடியே “அம்மா வழிகாட்டு அம்மா, வாழ்க்கைக்கொடு அம்மா, வாழ்த்தி யனுப்பு” -என்று கைகூப்பிக் கேட்டு, நெற்றி நிலம்பட விழுந்தார். ஊர் மொத்தமும் தரையில் விழுந்து துர்க்கையை வணங்கியது. சுப்பம்மாள் இதுவரை அனுபவித்தாராத ஒரு வேதனை மிகுந்த சந்தோஷத்தை அடைந்தாள். யாரோ பலபேர் அவள் உடம்பில் புகுந்து கூடுவது போன்ற ஒரு திமிர் கலந்த நிறைவு அவளுக்குத் தோன்றியது. ஆனால் சுப்பம்மாள் தனக்குத் தோன்றிய குறியை யாரிடமும் சொல்லவில்லை.

ஊர் மலையேறியது.

# 4

மலையின் உச்சிக்கு வடுகநாத பிள்ளையும் கோபால புரமும் முதலில் போய் நின்று கொண்டார்கள் அந்த செம்மண் சரளையின் மீது சுற்றி வந்து இடுப்பில் கை வைத்து கீழே தெரிந்த பச்சை வயல்களையும் அடர்ந்த தோப்பையும் ஊருக்கு அப்பால் இருக்கின்ற கருவேலங்காட்டையும் சந்தோஷமாகப் பார்த்தார்கள் ஊர் பார்த்து முடித்ததும் மலையின் உச்சி பார்த்தார்கள்.

"பத்தடி உசரம் வரணும்ன்னா, இந்த அகலம் வேணும் அப்பதான் நிக்கும்." - வடுகநாதப் பிள்ளை குச்சியால் கோடு போட்டார். அவருக்குக் கட்டட வேலை தெரியும் அவருக்குக் கிராமத்தில் மூன்று வீடுகள் இருந்தன. அவர் இருக்கிற அந்த வீடு அவரே நின்று கட்டியது.

வரதராஜ முதலியார் அவரைத்தான் "கொஞ்சம் மேலே பார்த்துக்குங்க.....எனக்கு ரொம்ப நேரம் உசரத்துல இருக்க முடியாது" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

வடுகநாதப் பிள்ளைக்கு வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை. இப்படி ஒரு முக்கியத்துவம் வந்ததும் அவருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

"யாராவது ஒரு பையன் துணைக்கிருந்தால் போதும்," என்றும் உரக்க சொல்ல, சர்க்கரை தானாகவே முன்வந்தான். அவனையும் அவன் திருமணம் விஷயம் காரணம் காட்டி ஊரார் அதிகம் மதிப்பதில்லை. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவன் தள்ளி வைத்த மனைவியைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதால் மனம் நொந்து போயிருந்தான். ஏதேனும் சாதித்து ஊரின் முன்பு உயரமாக நிற்க வேண்டும். என்று அவனுக்கு ஆசை இருந்தது.

வடுகநாதப் பிள்ளையிலிருந்து வரிசையாக ஒரு நூறு ஆட்கள் நின்றார்கள் அந்த நூறு ஆட்களுக்குப் பிறகு காளியப்பனை வரதராஜ முதலியார் நிற்கச் சொன்னார். அவசியம் ஏற்பட்டால் கீழே வரவும், அவசியம் ஏற்பட்டால் மேலே போகவும் உண்டான நடுகளத்தில் இருக்கச் சொன்னார்.

"உன்னை மாதிரி முன்னையும் பின்னையும் அலையுற வங்க உச்சியில் இருந்துட்டாலும் கஷ்டம் கீழே இருந்தாலும் கஷ்டம். நடுவாந்தரமா இரு. அப்பதான் ரெண்டு பக்கமும் போய் என்னான்னு பார்க்க முடியும்" என்று சொல்ல காளியப்பன் தன் பெருமை உணர்ந்து சரியென்று ஒப்புக் கொண்டான்.

அதற்கும் கீழே நூறு ஆட்கள் தள்ளி கருப்பண்ணச் செட்டியாரை நிற்க வைத்தார்கள். கருப்பண்ணச் செட்டியார் சற்று குண்டானவர். ஆனால் பெருங் குரலுடையவர். இந்த மலையின் நடுமையத்தில்தான் வேலை சற்று சுணக்கமாக இருக்க வாய்ப்பிருக்கிறது. எந்த இடத்தில் வேலை சுணக்கமாகுமோ அந்த இடத்தில் உரத்த குரலில் அதட்டுகின்ற ஆணை வைப்பது நல்லது என்று வரதராஜ முதலியாருக்குத் தோன்ற கருப்பண்ணச் செட்டியாரை அங்கே நிற்க வைத்தார்.

'ரோஷமா திட்டிடாதீங்க...உற்சாகமா கொஞ்சம் பிரியமா விரட்டுங்க. இந்த வேலைக்கு நாம ஒண்ணும் கூலி கொடுக்கப் போறதில்லை. நம்மகிட்ட காசு வாங்கி செய்யற வேலை இல்லை.

கருப்பண்ண செட்டியாருக்குத் துணையாக ரங்கப் பிள்ளையை நிற்க வைத்தார். ஒருவேளை மேலும் கீழுமாக அலைய வேண்டியிருந்தால் கருப்பண்ண செட்டியாரால் முடியாது என்பதால் கிட்டத்திட்ட அவர் தகுதிக்கு ஏற்ப இன்னொரு ஆள் அங்கு தேவைப்பட்டது.

இன்னும் நூறு நாட்கள் கீழே வர பலசரக்கு செட்டியார் சீனிவாசனை நிற்க வைத்தார். சீனிவாசன் திடமான உடம்பு கொண்டவர். ஆனால் அதிகம் ஓடியாடி வேலை செய்யாதவர். சீனவாசனுக்கருகே முன்னாள் தலைவர் ராமையா பிள்ளையை நிற்க வைத்தார். ராமையா பிள்ளை எந்த காலத்திலும் எந்த மனிதனையும் நிம்மதியாக இருக்க விடுவதில்லை. அவர் இடைவிடாது விரட்டுவதில் கைதேர்ந்தவர். சீனிவாச செட்டியார் ஒரு ஆளாக நிற்க ராமையா பிள்லை பின்னால் நின்று முடுக்கிக்கொடுத்தால் அந்த இடமும் சீர்படும் என்று வரதராஜ முதலியாருக்குத் தோன்றியது.

இன்னும் கீழே வருகிற போது சுந்தரம் பிள்ளையையும் தாமுப் பிள்ளையையும் நிற்க வைத்தார். இவர்கள் இரண்டு பேருமே பெரும் வேலைக்காரர்கள். மண் வரவில்லையென்பதும் மண் போகவில்லையென்பதும் இவர்கள் வெகு எளிதாக நிச்சயித்து கீழேயிருந்து விஷயங்களைப் பெற்று விரைவாக மேலே அனுப்பவதில் குறியாக இருப்பவர்கள். வேலையை முடிக்க வேண்டும் என்பதில் விடாத ஆர்வம் உடையவர்கள்.

அதற்குக் கீழே ஆரம்பத்தில் வீரையனை நிற்க வைத்தார். வீரையனுடைய ஆட்கள் ஜோதியின் தலைமையில் மண் வெட்ட இடம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஆட்களுக்கு அவர் வீட்டுப் பெண்களே துணையாக நின்று எங்கு நீர் வார்ப்பது என்று பேசிக்கொண்டிருந்தார்கள் ஜோதி அருகிலுள்ள் சிறிய ஏரிக்கரையிலிருந்து மண் வெட்டும் இடம் நோக்கி மெல்ல நடந்து வந்தான்.

“இந்த இடம் மேடுதான். நாலடி ஆழம் வெட்டணும். அடுத்தடுத்து மூணடி வெட்டணும். அடுத்து இரண்டடி, அடுத்தது ஓரடி, ஆழம் வெட்டினா போதும், ஏரித்தண்ணி சலசலன்னு ஒரு நாற்பதடி தூரத்துக்கு வந்துடும் முதல்ல நாற்பதடி தூரத்துக்கு ஒரு கால்வாய் வெட்டலாம். ஆளுங்களை மேல அனுப்பிச்சிடாதீங்க ஆளுக்கு இரண்டு வெட்டு போட்டோம்ன்னா சலசலன்னு நீர் வந்துடும்.” என்று சொல்ல ஆட்களை மேலே அனுப்பவதற்குமுன்பு மாறி மாறி கால்வாய் வெட்டச் சொன்னார்கள். ஏரியிலிருந்து ஒரு கால்வாய் நாற்பதடி நீளத்திற்கு ஒரு மென்மையான நிலம் நோக்கி வெட்டப்பட்டது ஏரியின் கரை கிட்டதட்ட உடைப்பட்டது போல் அது இருந்தது.

“ஏம்பா....நீ பாட்டுக்கு மண்வெட்டி போட்டு உடைக்கிறே நாளைக்கு பெரிய மழை பெய்து புடிங்கிக் கிச்சுன்னா ஊருக்குள்ள இல்ல தண்ணி வந்துடும்?”

“ஏங்க போற, போது விட்டுட்டா போவோம்? இறுக்கமா அடைச்சிடுட்டுப் போகமாட்டோமா?”

“வெட்டுப்பட்ட இடத்தை எப்படி அடைக்கிறது? தண்ணி கசிஞ்சு கசிஞ்சு அந்த இடத்தை பலவீனமாக்கிடதா?”

"ஒரு மலையே கட்டப் போறோம்? ஒரு மதகு கட்ட முடியாதா?" - ஜோதி தட்டலாகக் கேட்டான். ஊர் ஒப்புக் கொண்டது.

இருநூற்றைம்பது நபர்களால் ஏரியிலிருந்து கால்வாய் வேகமாக வெட்டப்பட்டது. மண் வாரி தள்ளி வீசப் பட்டது. ஜோதி ஆரம்பத்தில் மண்ணை அருகிலேயே குவியுங்கள் என்று சொல்லிப்பார்த்தான் உற்சாகத்தில் யாருக்கும் அது காதில் விழவில்லை கொண்டு வந்த கூடை மண்ணை தப தபவென்று எடுத்துக்கொண்டு போய் தொலைதூரம் கொட்டினார்கள் ஆளாளுக்கு ஒரு திசையில் கொட்ட வெட்டப்பட்ட மண் தரையில் சிதறி படிமன் ஆயிற்று இப்போது அந்த மதகை அடைக்க வேண்டுமென்றால் மண் மறுபடியும் பூமியிலுருந்துதான் தோண்ட வேண்டும் என்று ஜோதிக்குத் தோன்றியது. ஜோதி லேசாக கவலையானான். கடவுள் இருக்கிறார், பார்த்துக் கொள்வார் என்று நம்பினான். ஒரு நடை சுப்பம்மாளிடம் போய் இது நல்லபடியாய் முடியுமா என்று கேட்டு வரலாமா என்றும் நினைத்தான்.

சுப்பம்மாள் மலையேறிக்கொண்டிருநந்தாள். சுப்பம் மாள் பாதி மலையேறும் போது பளிச்சென்று சறுக்கி விட்டது. கை ஊன்றி நின்றாள். நிமிர்ந்து பார்த்தாள். "அப்படியா?" என்று கேட்டாள்.

"என்ன சுப்பம்மா, யாரைப் பார்த்து அப்படியான்ற?" கூட வந்த பெண்மணி அவளிடம் விவரம் கேட்டாள்.

"ஒரு தடங்கலாயித்தான் நடக்கும். இது நல்லது. நடக்கிறது நல்லது."

"கடவுளே...என்ன தடங்கல்?" பின்னால் வந்தவள் பயந்தாள்.

"இது கட்டி தடங்கலாயி மறுபடியும் கட்டணும்."

"கலைஞ்சுடுமா?"

"அந்த மாதிரி என்னமோ நடக்கப் போகுது? என்னான்னு தெரியலை."- சுப்பம்மாள் மறுபடியும் மலை யேறினாள். திரும்பி பின்னால் வந்தவளைப் பார்த்தாள்.

"நீயா வாயைத் திறக்காதே. நான் சொல்ற வரைக்கும் என்னைக் கூப்பிட்டுக் கேக்கற வரைக்கும் உனக்குத் தெரிஞ்சதா காட்டிக்காத"

"நான் ஏம்மா சொல்றேன்?" அவள் அமைதியாய் சுப்பம்மாவைப் பின்தொடர்ந்தாள்.

"எனக்கு வேற ஒரு கேள்வி இருக்கு."

"என்ன?"

"என் புள்ளை சர்க்கரை பொண்டாட்டியைத் தள்ளி வைச்சிருக்கான். எனக்குக் கவலையா இருக்கு. எப்ப சேரு வாங்க?"

"சேர்த்துடலாம். மலைக்குப் போய் நின்னு நான் சொல்ற இடத்துல கைகூப்பி ஆத்தா என் குழந்தைக்கு நல்ல புத்தியைக் கொடுன்னு சொல்லு சரியாயிடும்."

சேரியைச் சேர்ந்த சுப்பம்மாவின் கால்களை சட் டென்று தொட்டு அந்த உயர்ஜாதிப் பெண்மணி கண்ணில் ஒற்றிக்கொண்டாள். சுப்பம்மாவை பின் தொடர்ந்தாள்.

வீரையன் ஒரு முறை மலையேறி இறங்கி ஆட்களை ஒழுங்குப்படுத்திவிட்டு "வேலையை ஆரம்பிக்கலாமா?" என்று வரதராஜ முதலியாரைக் கேட்டான்.

வரதராஜ முதலியார் மலையைப் பார்த்துக் கை கூப்பினார் "உன்னை நீதான் உயர்த்திக்கணும். எங்களுக்கு என்ன தெரியும்? கீழே இருக்கிறவங்களை செய்யச் சொல்.

மேலே இருக்கிறவங்களை தூக்கிவிடச் சொல். நாங்க சின்னக் குழந்தைங்க. உன்னை இழக்கிறதுக்கு எங்களுக்கு மனசு இல்லை. நீ எங்களுக்கு வேணும். நீதான் எங்களுக்கு எல்லாம். பழமுதிர்குன்றம் அப்படிங்கிற ஒரு விஷயம் இல்லாமல் நாங்கள் வாழ்ந்து என்ன புண்ணியம்? உன்னை மேடுன்னு சொன்னா எங்களால எப்படி பொறுத்துக்க முடியும்? பெத்ததாயை கேவலமாப் பேசுறாப் போல இருக்குது. உடம்பொறந்தாளை அசிங்கமா சொல்றாப்போல இருக்குது. உன்னை மேடுன்னு சொல்றதுக்கு நாங்க விடமாட்டோம். ஆனால் உன் காரியத்தை நீதான் பண்ணிக்கனும். எங்களை வச்சிப் பண்ணிக்கணும். கீழே இருக்கிறவங்களை மேல தள்ளச் சொல்லு. மேல இருக்கிறவங்களைத் தூக்கிவிடச் சொல்லு. நீதான்....நீதான்...உனக்காகத்தான்....” என்று வாய் விட்டு அரற்றினார்.

கூட்டம் குலவையிட்டது மண்வெட்டிகளை உயரப் பிடித்தது. மண் வெட்ட ஆரம்பித்தார்கள். ஏரியிலிருந்து நாற்பதடி தூரம் உள்ளே வந்த தண்ணீர் சலக்கென்று மோதியது. குடம். குடமாக் நீர் இறைக்க இன்னும் பொங்கி வந்தது. அந்த நீரை பூமியின் பக்கமெல்லாம் பெண்கள் தெளித்தார்கள் அப்படித்தெளிக்க மண்வெட்டி போடுவது எளிதாக இருந்தது. மண்வெட்டி வேகமாகப் போட்டு போட்டுத் தூக்கினார்கள்.

ஒரு தவலை தக்காளி ரசம் வைப்பதற்கு அடுப்பு பற்ற வைத்தார்கள் தக்காளி ரசமும் வெல்லத்தில் கேழ்வரகு பிட்டும் செண்பகத்தம்மாள் செய்ய ஆரம்பித்தாள். தேங்காய்கள் துருவப்பட்டன. வெல்லம் உதிர்க்கப்பட்டது. சிறிய பெண்கள் இந்தப் பணியில் ஈடுப்பட்டார்கள். செண்பகத்தம்மாள் அம்மனை, அஷ்ட தச புஜ துர்க்கையை வழிபட்டு கற்பூரம் ஏற்றி அடுப்பில் போட்டாள். அடுப்பு

குபீரென்று பற்றிக்கொண்டது. நீரை வடிகட்டி பாத்திரத்தில் வார்த்தாள். தூக்கி அடுப்பில் வைத்தாள். நீர் கொதிக்கத் துவங்கியது. காய்கறிகள் வேகமாக் நறுக்கப் பட்டன. நீரில் போட்டார்கள் - அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் மலைஉச்சி வரை தக்காளி ரசம் வாசனை அடித்தது.

நாற்பது கூடை மண் கைமாறி உச்சிக்குப் போனதும், தக்காளி ரசம் குடம் குடமாய் மேலே போயிற்று கூடையில் கேழ்வரகு பிட்டு வைத்து பிடிப்பிடியாய் சாப்பிடக் கொடுத் தார்கள். காலைப் பசிக்கு கேழ்வரகு பிட்டும் தக்காளி ரசமும் வெகு சுவையாக இருந்தன.

“செண்பகத்தம்மா....கிறங்கடிச்சிட்ட போ...” வரதராஜ முதலியார் கைகூப்பினார். செண்பகத்தம்மாள் வெட்கப் பட்டாள்.

மலையுச்சிக்கு மண் போய் முழங்கால் உயரத்திற்கு குவிக்கப்பட்டது.

“சரி.... இப்போ மண் மட்டும் வந்தா போதாது. பாறைக் கல்லும் வரணும். கீழே வீரையன் கிட்ட சொல்லு.”

ஒரு பதினைந்து வயது பையன் புயல் மாதிரி ஓடி வீரையனிடம் “மண்ணு ஒரடி போட்டாச்சு. பாறை போட்டு உட்காரவைக்கணும். பாறை வர்றதுக்கு ஏற்பாடு பண்ண சொன்னாங்க” என்றான்.

வீரையன் ஏற்கனவே பார்த்து வைத்திருந்த பாறை களை இளைஞர்களின் தோளில் ஏற்றி அனுப்பினான். வலை போல பின்னப் பட்ட கயிற்றில் பாறைகளை வைத்து இளைஞர்களின் தோளில் வைத்து அனுப்பினார்கள் சில பாறைகளை உறியில் வைத்து இரண்டு மூன்று பேர்களாகச் சேர்த்து தூக்கிக்கொண்டு போனார்கள். பாறைகள் மெல்ல மெல்ல தட்டுத்தடுமாறி மலையுச்சிக்குப் போயின. எல்லார்

தோளும் வலித்தது. எல்லார் முதுகும் நொந்தது. எல்லார் வயிறும் சுண்டியிழுத்தது யாருக்கோ கால் இழுத்துக் கொண்டு கதறினார்கள். ஒருவர் சறுக்கி பத்தடி தூரம் வந்து முதுகு முழுவதும் கிழித்துக்கொண்டார். ஒரு பெண் கண்ணில் மண் விழுந்து கசக்கி பலமுறை நீரடித்தும் விலகாமல் ஓரமாய் உட்கார்ந்து கொண்டாள். சிறிய பாம்புக்குப் பயந்து யாரோ கத்த நாலைந்து பேர் அங்கு பாய்ந்து ஒரு புதரிடுக்கில் நாற்பது ஐம்பது நட்டுவாக்கிளி இருப்பதைக் கண்டு பிடித்து வேகமாய்க் கல்லால் அடித்து பரபரப்பு ஏற்படுத்தினார்கள். எல்லாசெயலும் ஆரவாரமாய் இருந்தன. எல்லா செயலும் அலட்டாய் இருந்தன. ஒவ்வொரு விஷயத்திற்கும் பெரும்கூச்சல் எழுந்தது. வரதராஜ முதலியார் கவலைப்பட்டார். இதே வேகம் நாளை இருக்குமா என்று சந்தேகப்பட்டார். ராமையா பிள்ளைக்கும் அதே சந்தேகம் வந்தது.

“நாளைக்கு வராத போயிட்டானுங்கன்னா, செத்துப் போவோம்....”

“அதெப்படி வராத போவான்? கட்டி பிடிச்சி இழுத்தாந்துற மாட்டோம்....”

“இழுந்தாந்தா வேலை செய்துடுவானா? வயித்து வலிக்கும்பான். புரண்டு புரண்டு அழுவான். என்ன பண்ணுவ அவனை?

“எனக்கென்ன மேடுன்னு சொல்லிட்டுப் போயிடு வேன்.....”

“அதுக்கு தூக்கு மாட்டிட்டு சாவலாம்.” வரதராஜ முதலியார் ராமையா பிள்ளைக்குப் பதில் சொன்னார்.

“நாம் நினைக்கிறா மாதிரி பசங்க நினைக்குமான்னு தெரியலை. இப்பவே மேல ஒரு பையன் கேட்கறான். இந்த

மேடு ஏற்படுத்தறோமே, அதனாலயே மேடுன்னு கூப்பிட ணும்ன்னு வெள்ளைக்காரன் சொன்னா எங்க போய் மூஞ்சியை வைச்சிப்பீங்கன்னு. ஏண்டா மலை யாக்கறதுக்கு தானே கஷ்டப்படறோம் அப்படின்னா... ம்கூம் முட்டாள் தனமா இருக்கு அப்படின்னு சொல்லிட்டு பாறையைத் தூக்கிக்கிட்டுப் போறான். பாறையைத் தூக்குறதுனாலேயே, உடம்பில் வலி இருக்கிறதுனாலேயே நாம செய்யற காரியம் முட்டாள் தனமாயிடுது. நோவாம நோன்பு நோக்க நினைக்கிறாங்க. உழைக்கப் பயப்படுகிறாங்க ராமையார பிள்ளை" வரதராஜ முதலியார் கொஞ்சம் கோபத்தோடு பேசினார். ஆனால் யாரந்த இளைஞன் என்று சொல்ல மறுத்துவிட்டார்.

"சொன்னா கூப்பிட்டுக் கேட்பீங்க....கூப்பிட்டுக் கேட்டா அவன் கூடுதலா பேசுவான். அவன் கூடுதலா பேசுறதைக் கேட்டு இன்னும் பத்துப் பசங்க அவன் பக்கம் போய் சேர்ந்துடலாம். அவனா வாய்க்குள்ள போட்டு முணு முணுக்கறதை நாம சபைல போட்டு பெரிசு பண்ண வேணாம்."

வரதராஜ முதலியார் அதைத் தவிர்த்துவிட்டார். பாறைகள் கொண்டு போவதுதான் மிக மிகக் கடினமாக இருந்தது கால்வாசி மலைக்கு மேல் ஏற்றம் செங்குத்தாக இருந்ததால் இளைஞர்கள் திண்டாடினார்கள்.

"என்னாங்கய்யா.... எல்லாரும் மண்வெட்டி புடிச்சிக் கிட்டு டபாய்க்கிறீங்க முதுகல அவனவன் பாறை தூக்குங்க அப்பதான தெரியும்" என்று யாரும் கோபித்துக் கொள்ளாம லேயே ஒரு இளைஞன் கத்தினான். அவன் கூச்சலைக் கேட்டுவிட்டு ராமையா பிள்ளை அந்தப் பாறையை அவனிடம் இருந்து வாங்கி அவர் மலையேறத் துவங்கினார் ஏறும்போதுதான் எவ்வுளவு கடினமாக அந்த வேலை

இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டார். மேலே கொண்டு போய் போடுகிறவரை அவருக்கு ஒரு பிடிவாதம் இருந்ததே தவிர உடம்பு ஒத்துழைக்கவில்லை தோளை அழுத்துகின்ற பாறையைத் தூக்கிக்கொண்டு காலை ஊன்றி படியேறுகிற போது அடிவயிறும் நடுமாரும் வலித்தது ராமையா நடுவில் வைத்துவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்த போது அந்தப் பையன் சிரிப்பானே என்ற பயத்திற்காக் வேகமாகப் போட்டார். மறுபக்கம் சரிவில் இறங்கி சரிந்கு விழுந்து படுத்துக்கொண்டார்.

ராமையா பிள்ளைக்கு முடியவில்லை என்று உச்சி யிலிருந்தவர்க்ளுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அதைப் பெரிதுபடுத்தவில்லை. ஓய்வெடுத்துக் கொள்ளட்டும் என்று மௌனமாக இருந்துவிட்டார்கள். வடுகநாத பிள்ளை அருகில் போய் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார்.

“ஒண்ணுமில்லை.....கொஞ்சம் கண்ணை மூடிப் படுத்துக் கிட்டிருக்காரு...அவ்வுளவுதான்” என்றும் சொல்லி, சர்க்கரைக்கு அருகே வந்தார் உச்சியிலிருந்த ஆட்கள் அவரைக் கவலையோடு பார்த்தார்கள்.

“வேலை செய்யுங்கப்பா...” என்று வடுகநாதர் விரட்ட, வேலையில் ஈடுபட்டார்கள்.

பாறைகள் ஒன்றின்மீது ஒன்று மிகக் கவனமாக அடுக்கப்பட்டன. மண் அதன் மீது போடப்பட்டது பாறைகள் கீழிருந்து வருவது மெல்லக் குறைவதை வடுக நாதனும் உணர்ந்தார் ஒரு பையனை அனுப்பி பாறைகள் வருமா, வராதா என்று கேட்டார், தேடிக்கொண்டிருக் கிறோம் என்று பதில் வந்தது. வெறும் மண் மட்டுமே வந்துகொண்டிருந்தது. பாறைகளைக் கீழே பரப்பி அடுக்கி மேலே மெல்ல மெல்ல உயரமாகக் கொண்டு வந்தார். மூன்றடி உயரம்தான் பாறைகள் அடுக்கப்பட்டன. அதற்கு

மேல் வெறுமே மண்மட்டுமே அழுத்தி, அழுத்திப் போடப்பட்டு கெட்டிப்படுத்தப் பட்டிருந்தது. வடுக நாதனுக்கு இதில் சம்மதமில்லை. இன்னும் இது போல ஒன்றரை மடங்கு பாறைகல் வந்தால்தான் இந்த மலை மலையாக நிற்கும். இல்லையெனில் வெறும் மண் மேடாகத் தான் காட்சியளிக்கும். வந்தவன் கீழிருந்து பார்த்துவிட்டு மலையென்று சொன்னால் சரி. ஆனால் மேலே வந்து குச்சியை வைத்துக் குத்தினால் மொத்த மண்ணும் கீழே சரியும் அப்போது இது ஏமாற்று வேலை என்று சொல்லி அந்த ஆங்கிலேயன் போய்விடலாம். வந்த ஆங்கிலேயனைப் பார்த்தால் எதையும் எளிதில் ஒப்புக்கொள்பவனாகத் தெரியவில்லை. அவன் நிச்சயம் மலையேறித் தட்டிப் பார்ப்பான் மண் சரிந்தால் இது மலையில்லை என்று பிடிவாதம் பிடிப்பான் என்ன செய்து அவனை சமாதானப் படுத்துவார்கள் என்று கவலைப்பட்டார். மறுபடியும் பாறைகள் வேண்டுமென்று வரதராஜமுதலியாருக்கு செய்தி யனுப்பினார். பாறைகள் கீழே இருந்தன. எடுத்து வரத்தான் எல்லோரும் தயங்கினார்கள்.

பிற்பகலுக்கு மேல் டோலி போல் ஒரு தொட்டி கட்டி அந்த தொட்டிகளில் சிறிய அளவு பாறைகளைப் போட்டு அந்தப் பாறைகளை முன்னால் நான்கு பேரும், பின்னால் நான்கு பேருமாய் எட்டு பேர்கள் கொண்ட ஒரு குழுதூக்கிக் கொண்டு போயிற்று. ஆனால் அந்த சிறிய பாறைகளை பெரிய பாறைகளுக்கு நடுவே இருந்த இடைவெளியை நிரப்பத்தான் போதுமாயிருந்ததே தவிர ஒரு மிகப் பெரிய முழுப் பாறை வந்தால்தான் உயரம் கூடும் என்பது அவர்களுக்கு சொல்லித் தரப்பட்டது. மிகப் பெரிய முழுப் பாறைக்கு எங்கே போவது? வரதராஜ முதலியார் கவலைப்பட்டார்.

"மண்ணு போட்டால் உயராதுங்களா?"

"உயரும். வெள்ளைக்காரன் ஒத்துக்குவானா?" அவருக்கு அருகே இருந்த ராமையா பிள்ளை கேட்க வரதராஜ முதலியாருக்கு வயிறு கலங்கியது.

பிற்பகல் கோழிக் கறியோடு, சாதம் பரிமாறப்பட்டது. கோழிக்கறிக் குழம்பும் சாதமும் போட அவரவர்கள் நாற்பது நாற்பத்தைந்து கோழிகள் அடித்தும் எல்லோருக்கும் அந்தக் கோழிகள் போதுமானதாக இல்லை குழந்தைகள் எல்லாமும் பெரிய துண்டுகள் கேட்டார்கள். "யாருக்கு வரலையோ, அவங்களுக்கு நாளைக்குக் கொண்டாந்து நல்ல கறியா போடுறோம்....கவலைப்படாதீங்க..." என்று வரதராஜ முதலி யார் சமாதானம் சொன்னார். சில பேர் முகம் தூக்கிவைத்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் உணவு வழித்துப் போட்ட பிறகு கடைசியாய் பதினைந்து பேருக்கு இல்லாது போயிற்று வரதராஜ முதலியார் உட்பட சமையல் செய்த செண்பகத்தம்மாள் உட்பட சில பேர் பசியோடு நிற்கும் படியாய் ஆயிற்று. மறுபடியும் உலை வைக்கும் படி வரதராஜ முதலியார் சொல்ல இன்னொரு உலை வைத்து இன்னொரு கோழி அடித்து செண்பகத்தம்மாள் சமையல் செய்தாள். மலையுச்சியிலிருந்து சில பையன்களும் பெண்களும் பார்த்துவிட்டு "அவங்களுக்குன்னு தனி சமையல்.... பார்த்தியா? கீழே உட்கார்ந்துக்கிட்டு காலாட்டிப்புட்டு தனியா கோழிக் கறி சமைச்சு சாப்பிடறாங்க." என்று பொருமினார்கள். அப்படி இல்லையென்று மறுக்க அங்கு ஆட்கள் இல்லை.

ஆறடி உயரம் மலை எழும்பிவிட்டதாக கீழே வந்து வடுகநாதப் பிள்ளை சொல்ல எல்லோரும் கைதட்டினார்கள் இன்று மாலைக்குள் இன்னும் நாலடி உயரம் மலை உயர்ந்து விடும் என்று அவர் சொல்ல "ஒரே நாள்ல முடிச்சுடலாமா" என்று ஆர்வமாக சகலரும் கேட்டார்கள்.

"பதினோரு அடியில்ல...நாளைக்குக் கொஞ்சம் செய்ய வேண்டியிருக்கும்." என்று வடுகநாதப்பிள்ளை சொன்னார்.

ஆனால் அன்று மாலை மூன்றடி உயரம்தான் மண் ஏறியது. பிற்பகலில் வேலை வேகமாக நடைபெறவில்லை ஒன்பதடி உயரம் மலை உயர்த்தப்பட்டது என்பதே எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது. நினைச்சா எதுவும் சாதிக்கலாம். சாதிக்கணும்ங்கிற நினைப்பு வேண்டும். என்று சகலரும் பேசிக் கொண்டார்கள் சிலர் உடம்பு வலியை பெரிதுபடுத்திச் சொன்னார்கள். அவர்களுக்குத் தைலம் கொடுக்கப்பட்டது. பச்சிலைகள் சுடவைத்துக் கொடுக்கப் பட்டன.

அடுத்த ஊரிலிருந்து ஆட்கள் வந்தார்கள் "என்னா...? பெரும்புகையா தெரிஞ்சுதே...நான் வீடு பத்திக்கிச்சோன்னு நினைச்சேன்" என்று ஒரு ஆள் வந்து கேட்க ஒருவன் பளீ ரென்று அவன் கன்னத்தில் அறைந்தான்.

"புகைன்னா பத்திக்கிட்டாதானா? என்ன ஜென் மம்டா நீ?" என்று சொல்ல, வெளியூர்க்காரன் கடுப்பானான். ஆயிரத்தைநூறு பேருக்குக் கறிசோறு போட்டார்கள் என்று தெரிய வர வெறுப்பானான். அதை அடுத்த ஊருக்குப் போய் சொல்வதற்கு விரைவாகப் போனான்.

அடுத்த ஊரிலுள்ள முதலியார்கள் ஒன்று திரண்டார் கள். "ஒரு மலையை வெட்டணும்னா அரசாங்கத்துக் கிட்டே பர்மிஷன் கேட்கணும். மலையை உயர்த்திக் கட்டணும்னா பர்மிஷன் கேட்க வேணாமா? அதுக்கும் கேட்கணும். இவங்க கேட்டாங்களா, இல்லையா?"

"கேட்டிருக்கமாட்டாங்க..."

"இவங்க கேட்கலை இப்பவே ஒரு கடுதாசி எழுதி திருவண்ணாமலை தாசில்தாருக்கு அனுப்பு. திருவண்ணா

மலை தாசில்தார்கிட்டே கையெழுத்து வாங்கி, மதராஸ் கோட்டைக்கு இன்னொரு மனு அனுப்பு" என்று எழுத உட்கார்ந்தார்கள்.

அங்கு அவர்கள் அப்படி எழுத உட்கார்ந்தது அங்கிருந்த ஒருவனால் வரதராஜ முதலியாருக்கு விடிகாலையில் சொல்லப்பட்டது வரதராஜ் முதலியார் தலையைப் பிய்த்துக்கொண்டார். வீட்டை விட்டு வெளியே வந்து மறுபடியும் மலையைப் பார்த்து "நீதான்.... நீதான் செய்துக்கணும் நான் எதுவும் செய்யலை" என்று வாய்விட்டு சொன்னார் வரதராஜ முதலியாரின் கவலையை ஊர் கவலையோடு பார்த்தது.

விடியற்காலையில் இருள் பிரிகிற முன்பே ஐந்தரை மணிக்கு எழுந்து கொள்கிற ஊர் அது ஆறரை மணி வரை ஊரில் எந்த சலனமும் இல்லை. இரவு முழுவதும் தூக்கமில்லாது வரதராஜ முதலியார் ஊரின் தெருக்களில் நடந்து போய்விட்டு வந்தார். எப்போதும் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கும் சேரி கூட கடும் அசதியிலிருந்ததைத் தெரிந்துகொண்டார்.

வீரையன் கட்டில் மீது அடித்துப் போட்டது போல் தூங்கிக்கொண்டிருந்தான். மெல்ல அவனை எழுப்ப திடுக்கிட்டு எழுந்திருந்தான்.

"என்னப்பா தூங்கறே? மீதி வேலையிருக்கே..."

"இதோ எழுந்திடறேன் சாமி.... நீங்க போங்க...." என்று சொன்னான். சற்று நேரம் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். உடம்பு சரிந்தது. மறுபடியும் கட்டிலில் நீட்டிப் படுத்துக் கொண்டான்.

வரதராஜ முதலியார் கவலையோடு அவனைப் பார்த்துவிட்டு தன் ஊருக்குத் திரும்பினார். ஆட்களை எழுப்பத் துவங்கினார். விரட்ட ஆரம்பித்தார்.

இரண்டாம் நாள் காலையில் ஜோதிதான் மண் வெட்டியோடு முதலில் மலை ஏறினான் அவன் பின்னால் பெண்கள் பட்டாளம் ஏறிற்று.

"ஏய்.... பொம்பளைங்களெல்லாம் மேல ஏறுறாங்கப்பா இன்னும் படுத்துகிட்டு தூங்கறீங்களே....எழுந்திருங்க." என்று வரதராஜ முதலியார் விரட்ட ஊர் அசைந்து மெல்ல மலையடிவாரம் போய் அதுவும் மேலேறிற்று.

வடுகநாதப் பிள்ளை சர்க்கரையோடு உச்சிக்குப் போனார். பாறைகளில் கால் வைத்து உச்சியில் போய் நின்றுகொண்டு துண்டை கொம்பில் உயர்த்திப் பிடித்தார். அவர் கையைத் தூக்க கால் கீழே அழுந்தியது. மெல்ல இறங்கியது. கணுக்காலிலிருந்து முழங்கால் வரை மண் உள்வாங்கிக் கொண்டிருப்பதை வடுகநாதர் உணர்ந்தார்.

"பாறை போடலேன்னு வைச்சுக்கோ...இது மலை யாவே இருக்காது மொத்த வேலையும் தப்பாயிடும் பாறை வந்தால்தான் வேலை நடக்கும் சொல்லிடு...." சர்க்கரையிடம் சொல்ல சர்க்கரை அதை வேறொரு வாலிபனிடம் சொல்ல, அவன் கீழே போய் வரதராஜ முதலியாரிடம் இதை தெரிவித்தான்.

வரதராஜ முதலியார் பூமியில் எந்தப் பகுதியில் பாறைகள் இருக்கும் என்று தேடினார்.

சுப்பம்மாவை ஆளனுப்பி கீழே வரச் சொன்னார். சுப்பம்மா எங்கேயிருக்கும்ன்னு தெரியலையே" என்று ஆதங்கப்பட்டார்.

சுப்பம்மாள் குத்திட்டு உட்கார்ந்து கொண்டாள். சிறு குச்சியால் பூமியில் லேசாகக் கிறுக்கத் துவங்கினாள். அவள் கண்கள் வெகு தூரம் பார்த்தன. சுற்றி நின்று பெண்களும் ஆண்களும் வேடிக்கை பார்த்தார்கள். மலையுச்சியில் மண் சுமந்து போனவர்கள் இந்தக் கூட்டத்தைப் பார்த்து கோபத்தால் பல் கடித்தார்கள்.

“கீழே வேலை செய்யறவன் எவனும் மண் சட்டி தூக்குறதில்லை. உடம்புல அழுக்கு படாத சுத்தி, சுத்தி வர்றானுங்க. பார், அவங்க பண்ற கூத்தை....” என்று உரத்துக் கத்தினார்கள். கெட்ட வார்த்தை சொன்னார்கள். சுப்பம்மாள் சட்டென்று உதறினாள்.

“அம்மா முதுகுக்குப் பின்னாடி அடுக்கடுக்கா வைச்சிருக்காளாம் எடுத்துக்கச் சொல்றா.”

கோயிலின் வளாகத்தினுள் கூட்டம் நுழைந்து கோயிலைச் சுற்றி வந்தது. கர்ப்பக்கிரகத்து நேர் பின்னே உள்ள பூமியைக் குத்தி பார்த்தது.

“மண்ணுதானே இருக்கு இங்க போய் பாறைன்றாங்களே, சுப்பம்மா.”

“சுப்பம்மாவா சொன்னது, சாமிதானே சொன்னது”

“சாமியை நான் எங்கே பார்த்தேன்? நான் பார்த்தது சுப்பம்மாவைத்தானே?” என்று இருவர் வாக்குவாதம் செய்து கொண்டார்கள்.

இதில் ஈடுபடாது வேறு ஒருவர் வேகமாய்க் கடப்பாரை போட, இரண்டடி ஆழம் புரட்டியதும் நங்கென்று பாறைச் சத்தம் கேட்டது. வேகமாய் கடப்பாரை போடமண்ணுக்குக் கீழே பாறைகள் இருப்பது தெரிந்தது. அந்த இடத்திலும் நீர் ஊற்றப்பட்டது. மண் இளக்கப்பட்டது. விலக்கப்பட்டது. பாறைகள் நோண்டி எடுக்கப்பட்டன.

கிட்டதட்ட இடுப்பு உயர பாறைகளை எட்டு பேரும் பத்து பேரும் தூக்கிக்கொண்டு தள்ளாடி மலையேறினார்கள். எல்லார் தோள்களிலிருந்தும் இரத்தம் கசிந்தது. எல்லார் கண்களும் சிவப்பேறிக் கிடந்தன. எல்லார் கால்களும் கல் குத்தி, கல் குத்தி ரணமாயிருந்தன.

பதினைந்து பாறை மேலே போவதற்குல் பல பேர் சுருண்டுப் படுத்துவிட்டார்கள்.

"நீங்க ஒருவிஷயம் மறந்துட்டீங்க...." - கருப்பண்ணச் செட்டியார் காதோரம் முணுமுணுத்தார்.

"என்னங்க...?" - வரதராஜ முதலியார் ஆர்வமானார்.

"திடமான ஆம்பளைக்கெல்லாம் நீங்க சாராயம் கொடுத்திருக்கணும். பெரிய ஆளுங்கெல்லாமே படுத்துட் டாங்க பாருங்க" என்று கருப்பண்ணச் செட்டியார் சொல்ல வரதராஜ முதலியார் "நாமளா கைநீட்டி அந்த சனியனைக் கொடுக்கிறது நல்லதில்லையே...." என்று நொந்து கொண்ட குரலில் சொன்னார்.

"இருக்குன்னு சொல்லிடுங்க...தேவைப்பட்டவங்க எடுத்துக்கட்டும். குடிச்சவன் தூக்கிக்கிட்டு வருவான்ல... குடிச்சவன் அடுத்தபடியா தூக்கறவன்கிட்டே சொல் வான்ல... நீங்களா குடின்னு சொல்ல வேணாம். இருக்குன்னு சொல்லுங்க போதும்."

உடனே சாராயப் போத்தல்களுக்கு ஏற்பாடு செய்யப் பட்டது. கருப்பண்ணச் செட்டியார் தன்னிடமிருந்த ஆறு பாட்டில் ரம்மை வாங்கிய விலையை விட ஒரு மடங்கு கூடுதலாக ஊர் சபைக்கு விற்றார் கருப்பண்ணச் செட்டியார் காசு வாங்கிக்கொள்ற போது, வரதராஜ முதலியாருக்கு ஏமாற்றப்பட்டுவிட்டோமோ என்ற சின்னக் கவலை வந்தது.

பலபேர் ரகசியமாக வந்து நீர் கலந்தும் நீர் கலக்காமலும் ரம் குடித்துவிட்டுப் போனார்கள் எவனோ ஒருவன் அதிகம் தள்ளாடுவதை வரதராஜ முதலியார் பார்த்தார். ஒருவன் உரத்த குரலில் சோலைப் பசுங்கிளியே என்று பாடிக்கண்டிருந்தான். குடித்த பத்து பேரில் ஆறு பேர்தான் பாறை தூக்கினார்கள் நாலுபேர் அலம்பாட்டம் போட்டார்கள். சிரிப்பானார்கள்.

பாறைகள் மெல்ல மெல்ல மேலே போகத் துவங்கின. பாறை ஆறடியும் மண் நான்கடியும் என்று கணக்கு சொல்லப்பட்டது. இன்னும் ஒரடி உயரம் பாறை இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டது. இன்னும் இருபத்தேழு பாறைகள் வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லப் பட்டது.

வரதராஜ முதலியார் இருபத்தேழு பாறைகள் பூமியிலிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார்.

ஆர்தர் சிம்சன் அடுத்து ஊர் சர்வேவுக்கு போகும் போது அந்த ஊர்காரர்கள் சுற்றிக் கொண்டார்கள்.

“மலையை வெட்டுறது தப்புன்னா அதைக் கட்டுறதும் தப்புதானே. அதை எப்படி விட்டீங்க?” என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் மாறி, மாறி அந்த ஊர் கேட்க அவன் அவர்கள் பொறாமையைப் புரிந்து கொண்டான்.

“வெட்டுவது தப்பு என்று சட்டமிருக்கிறது. கட்டுவது தப்பா என்று தெரியவில்லை. அப்படி சட்டமிருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி கட்டுவது தப்பு என்றால் அரசருடைய நேரடி உத்தரவில்லாமல் அதை தவறு என்று நான் சொல்ல முடியாது. நடவடிக்கை எடுக்க முடியாது. ஒரு மலையைத் தங்கள் ஊரின் கௌரவத்திற்காக உயர்த்திக் கட்டுகிறார்கள். இதில் எந்தத்தவறும் எனக்குத் தோன்ற

வில்லை. அப்படி செய்யட்டுமா என்று என்னைக் கேட்ட போது தாராளமாகச் செய்யலாம் என்று நான்தான் அனுமதி கொடுத்தேன்." என்று சொல்ல அவனைப் பற்றியும் ஒரு புகார் மனு . எழுதி மதராஸுக்கு ஆள் மூலம் அனுப்பினார்கள். அதில் ஆர்தர் சிம்சன் பெண்களைப் பார்த்துகண் சிமிட்டுகிறான் என்றும் அது மிகவும் வேதனைக் குரிய விஷயமாய் இருக்கிறது என்றும் கூடுதலாய் ஒரு வார்த்தை சொன்னார்கள். அவனுக்குத் துணையாக இருக்கிற ஜேம்ஸ் ஃப்ராங்களின் குடித்துவிட்டு வெறும் ஜட்டியுடன் அலைவதாகவும் கிராம மக்கள் அருவருப் பாலும் பயத்தாலும் நடுங்கிக் கொண்டிருப்பதாகவும் இன்னொரு செய்தியும் எழுதப்பட்டிருந்தது.

"திருவண்ணாமலையிலிருந்து நாலஞ்சு ஐயருங்களைக் கூப்பிடிட்டுக்கிட்டு வந்து வண்டி, கட்டி அந்த ஊருக்கு அனுப்பிச்சு மலை கட்டக்கூடாது. கட்டினா பாவம் அப்படின்னு சொல்ல வைப்போமா? ஒரு ஐயருக்கு ஒரு சவரன் கொடுத்தா வந்துர மாட்டாங்களா?" என்று யோசனை கூறப்பட்டது.

ஆனால் நாலு சவரன் காசுக்கு எங்கே போவது என்பதால் அந்த திட்டம் கைவிடப்பட்டது.

"இதே பழமுதிர்குன்றம் ஆளுங்க மொய் யெழுதினா அய்யருங்க நமக்கெதிரா திரும்பிப்பானுவப்பா... அவங்களை நம்பி எந்த வேலையிலும் இறங்காதீங்க" என்று சொல்லப் பட்டது.

ஆர்த்ர் சிம்சன் மீது புகார் மனு போயிருக்கிறது என்பது இரகசியமாக சொல்லப்பட்டு அந்த இரகசியத் திற்காக ஓரணா லஞ்சம் வாங்கப்பட்டது. ஆர்தர் சிம்சன் திகைப்பில் ஆழ்ந்தான். இந்தியர்களுடைய அடிப்படையான பலவீனம் பரஸ்பரம் அவர்களுக்குள் கொழுந்து

விட்டெறியும் பொறாமைத்தான். யாரும் சிறப்பாக நிற்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை இதனாலேயே ஒற்றுமை யின்றி இருக்கிறார்கள். இதனாலேயே அந்நிய தலையீடு இருக்கிறது. ஒற்றுமையுள்ள எந்தக் குழு இந்தியாவுக்குள் நுழைந்தாலும் அது வெற்றி பெற்றுவிடும். ஆனால் இந்தியர்கள் எவ்வளவு ஒற்றுமையான குழு உள்ளே நுழைந்தாலும் அதை பிளவுப்படுத்திக் காட்டுவார்கள்.

ஆர்தர் சிம்சன் பழமுதிர்குன்றம் வரும்போது உயரமானியை வைத்து மலையைப் பார்த்தான். அவனுக்கு வியப்பாக இருந்தது. எண்ணூறு அடி அதற்கு மேல் ஒரு அரை அடி உயரமானி காட்டியது. ஆர்தர் சிம்சன் தன்னை மறந்து ஆவென்று கூறினான். அவன் உயரமானி வைப்பதைப் பார்த்துவிட்டு குதிரை ஏறி ஒரு வாலிபன் அருகே வந்தான்.

“என்ன மலை உயர்ந்துவிட்டதா.” என்று கேட்டான்.

“ஆமாம். மலை உயர்ந்து விட்டது. எண்ணூறு அடி ஆறங்குலம் இருக்கிறது என்று சொல்.”

செய்தி வரதராஜ முதலியாருக்கு எட்டியது. உச்சியி லிருக்கிற வடுகநாதருக்கு எட்டியது. எல்லோரும் கைதட்டி னார்கள். இன்னும் ஓரடி கட்ட வேண்டும் என்று வரதராஜ முதலியார் சொல்ல மண் கூடைகள் வேக வேகமாக மேலே போடப்பட்டன. சரிக்கப்பட்டன.

மறுபடியும் உயரமானி வைத்து ஆர்தர் சிம்சன் அளந்தான் எண்ணூற்று ஒன்றரை அடி என்று சொன்னான் கூட்டம் ஆரவாரித்தது. ஆர்தர் சிம்சன் முன்பு நடன மாடியது.

“நாங்க ஜெயிச்சுட்டோம். நாங்க ஜெயிச்சுட்டோம்” என்று ஆர்தர் சிம்சனைப் பார்த்து முஷ்டியை மடக்கியது.

ஆர்தர் சிம்சன் கைதட்டி அவர்கள் நடனத்தையும் சந்தோஷத்தையும் முயற்சியையும் பாராட்டினான்.

"அப்ப எழுதிக்கொடுங்க...." என்று வரதராஜ முதலி யார் அவனை நோக்கி கை நீட்டினார்.

'நாளை காலையில் போறபோது எழுதித் தரேன்" என்று ஆர்தர் சிம்சன் சொல்ல மெல்ல கூட்டம் கீழறங்கியது. ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டாடினார்கள். பெண்களைக் கூட சில பேர் கன்னம் வருடி நெட்டி முறித்தார்கள். பெண்களும் ஆண்களின் முதுகில் சுளீரென்று அறைந்து பாராட்டு தெரிவித்தார்கள். ஓடிப் போய் ஒரு பெண்மணி வடுகநாதனின் தலைமுடியை உலுக்கி கன்னம் பிதுக்கி பளாரென்று ஒரு அறை வைத்தாள். வரதராஜ முதலியாரை பெண்கள் சூழ்ந்து கொண்டு பொத்து பொத்தென்று அடித்தார்கள் வரதராஜ முதலியார் முகத்தைப் பொத்திக்கொண்டு தலையைக் குனிந்து கொண்டார். அவர் பரந்த முதுகின் மீது பல கைகள் விழுந்தன. வலிக்காமல் ஷொட்டு போல பல கைகள் விழுந்தன.

வரதராஜ முதலியார் நிமிர்ந்து போது அவர் முகத்தில் சட்டென்று ஒரு மழைத்துளி விழுந்தது. வரதராஜ முதலியார் வானம் பார்த்தார் ஒரு கருமேகத் திட்டு நகர்ந்து போய்க்கொண்டிருந்தது. அதன் வேகம் நன்றாக இல்லை. பின்னால் பல மேகங்கள் தொடரும் என்று அந்த வேகம் சொல்லியது.

கடைசியாய் மண்வெட்டியோடு கீழறங்கிய வடுக நாதரைப் பார்த்து "மழை பெய்தால் என்னாகும்?" என்று கவலையோடு கேட்டார்.

வடுகநாதர் முகத்தில் களையில்லை. "சும்மா வெள்ளைக்காரன் பைத்தியக்காரனா? நாளை காலையில் மலையேறிப் பார்ப்பான். குச்சி வைச்சு குத்துவான். நான் வெறும் சட்டம் போட்டு தூக்கியிருக்கேன். பாறை அடுக்கலை சட்டுன்னு ஒரு சட்டம் இழுத்தோம்னா மொத்தமும் உதிர்ந்திடும். கொலு பொம்மை மாதிரி வைச்சிருக்கேன் தவிர, அது உயரமில்லை."

"நெசமா என்ன உயரம்?"

"ஒரு ஆறடி தூக்கும். மழை பெய்ததுன்னு வைச்சுகுங்க....மண் இளகும். பாறை கீழே இறங்கும். பாறை கீழே போச்சுன்னா இன்னும் ஓரடி கீழே போகும். அஞ்சடி உசரத்துக்கு மேல ஆவாது.

வரதராஜ முதலியார் மலையைப் பார்த்துக் கைகூப்பினார். "நீதான்....நீதான்..." என்றார்.

குளுமையான காற்று வீசத் துவங்கியது எல்லோரும் வீட்டுக்கு போனார்கள். செண்பகத்தம்மாள் புகையின் எரிச்சலால் கண் திறக்க முடியாமல் கிடந்தாள் யார் யார் வந்தது என்று அக்கம்பக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். வீட்க்குப் போய் கொல்லைப் புறத் திண்ணையில் பாய் விரித்து தலைகாணி போட்டு படுத்துக் கொண்டாள். அவள் படுத்துக்கொண்ட சில நேரத்தில் தூறல் பலமாகியது எழுந்து உள்ளே போனாள். மழை வேகமாகியது. எல்லோரும் கவலையோடு வீட்டுக்குள்ளிருந்து மலையைப் பார்க்க முயற்சித்தார்கள். மழை மிக பலமாய் மிகமிக பலமாய், மலையைத் தாக்கியது.

சர்க்கரை மலையை நோக்கி ஓடினான். நனைந்து கொண்டு மலையேறினான். உச்சிக்கு போய் நின்று பார்த்தான். மண் கரைந்து வழிந்துகொண்டிருந்தது.

பாறைகள் இடம் பெயர்ந்தன. ஒரு பாறை நகர்ந்து இன்னொன்று பிளந்து கீழே விழ மழை அதன் ஊடே நகர்ந்து போக பாறைகள் மெல்ல மெல்ல நகர்ந்து அகலமாயின. உயரம் வேகமாய்க் குறைந்தது. நாலடி மூன்றங்குலம்தான் உயரம் இருந்தது.

வீட்டு வாசலிலிருந்து மழைபெய்யும் வேகத்தைப் பார்த்துவிட்டு வரதராஜ முதலியார் ஆடிப்போனார். யாரோ ஏவிவிட்டது போல, பிடிக்காதவர் பில்லி சூனியம் வைத்தது போல அரக்கர்கள் சூழ்ந்து ஒரு தேசத்தை அழிப்பது போல மழை ஆக்ரோஷமாய் ஊரைத்தாக்கிக் கொண்டிருந்தது. குடை கொண்டு வரச் சொல்லி விரித்துப் பிடித்து தெருவில் இறங்கி தெருவிலிருந்து மலை நோக்கிப் பார்த்தார்.

மலை மலைச்சாரலுக்கு நடுவே தெரியவில்லை. மலை கரைந்து காலுக்குக் கீழே ஓடுவதை அவரால் கற்பனை செய்ய முடிந்தது. வெறுமே கற்கள் போட்டு அந்தக் கற்கள் மீது மண்குவியல் போட்டு மலை என்று வெள்ளைக் காரனிடம் சொல்ல முயற்சித்த அபத்தம் ஒரு வித சிரிப்பும் துக்கமும் ஏற்படுத்தின.

தேவையில்லாது ஒரு விஷயத்தில் இறங்கி விட்டோமா. இது குன்றமாக இருந்தாலென்ன மேடாக இருந்தாலென்ன. நீ மேடு என்று அழைத்தாலும் நாங்கள் இதை குன்றம் என்று தான் அழைப்போம் என்று வெள்ளைக்காரனிடம் சொன்னாலென்ன. வெள்ளைக்காரர்கள் என்ன நம் நாட்டிற்கு நிரந்தரமா....? அவர்களை ஊரைவிட்டு கிளப்ப பல்வேறு பெரிய மனிதர்கள் முயற்சி செய்து கொண்டிருக் கிறார்கள். உலக யுத்தம் ஆரம்பிக்கப் போவதாய் சொல் கிறார்கள். ஐரோப்பா முழுவதும் யுத்தத்தால் பீடிக்கப்பட்டு நாய் அவஸ்தை பேய் அவஸ்தைபடப் போவதாய் ஜோசியர்கள் சொல்கிறார்கள். இந்தியர்களையும், ஆப்பி

ரிக்கர்களையும் ஆசியர்களையும் இந்த ஐரோப்பியர்கள் என்னவெல்லாம் பாடுபடுத்தினார்களோ அதற்கெல்லாம் வட்டியும் முதலுமாய் இரண்டு யுத்தங்கள் வந்து அவர்களுடைய வாழ்க்கையை, குடும்பத்தை சின்னாபின்னப் படுத்தும் என்று ஒரு உபந்நியாசர் சொல்கிறார்.

ஐரோப்பியர்களுக்கு உண்மையிலேயே கடவுள் மீது நம்பிக்கையில்லை. கடவுள் மீது நம்பிக்கை இருப்பது போல் நடிப்பது ஒரு கனவானுக்குரிய லட்சணம் என்று அவன் கடவுளை அடிக்கடி கூப்பிட்டுக்கொள்கிறானே தவிர. அவனு க்குத் தன்னுடைய புஜபலத்தில் புத்தி அதிகம். அப்படிப் பட்ட நம்பிக்கையுள்ளவர்கள் கடவுள் மீது அரைகுறையாக காதலுள்ளவர்கள் நாத்திகர்களை விடமிக ஆபத்தானவர்கள் நாத்திகனுமில்லாது ஆத்திகனுமில்லாது இந்த ஆங்கிலேயர் களும். ஐரோப்பியர்களும் கொடுமைக்குப் பெயர் போனவர்கள்.

கடவுளின் பெயரால் கேட்கிறேன் என்னைவிட்டு விடு என்று ஒரு இஸ்லாமியனிடம் மண்டியிட்டுக் கெஞ்சினால் அவன் விட்டுவிடுவான். புத்த மதமும், ஜைன மதமும் இந்த பாரத தேசத்தை ஆண்டிருக்கின்றன. மனித நேயம், மனித அன்பு, மனித ஒழுக்கம் என்று பேசுகிற போது அவர்கள் யோசித்து மனிதன் தவறு செய்யக்கூடிய இயல்புடையவன் அதனால் இந்த முறை மன்னித்தேன் என்று நகர்ந்து கொள்வார்கள்.

ஆனால் ஒரு அக்குளில் கடவுளை வைத்துக் கொண்டு இன்னொரு அக்குளில் அதிகாரத்தை வைத்துக்கொண்டு முட்டாள் தனமாக நடந்து கொள்கிறவனைத் திருப்திப் படுத்துவது என்பது இயலாத காரியம் என்று பல எண்ணங்கள் வரதராஜ முதலியாரின் மனதில் ஓடின. குடையை மடக்கி வீட்டிற்குள் ஓடினார்.

தாழங்குடையைப் போர்த்திக்கொண்டு மான் தோலைப் போர்த்திக் கொண்டும் கறுப்புக் குடையை எடுத்துக்கொண்டும் ஊர்மக்கள் ஒவ்வொருவராய் வரதராஜ முதலியாரின் வீட்டிற்குள நுழைந்தார்கள். வந்ததில் காளியப்பன் தான் மிகவும் கோபமாக இருந்தான்.

"போச்சு போச்சு, எல்லாம் போச்சு. அத்தனை மண்ணும் அடிச்சிட்டு தரை வந்திருக்கும் அஞ்சே நிமிஷத் திலே மொத்தமும் கரைஞ்சு போயிருக்கும். நினைக்கிற போதே வயிறு எரியுது. பாறைக்கல்லு நிக்குதா இல்லை அதுவும் உருண்டு தரைக்கு வந்துடுச்சான்னு தெரியலை. போய்ப் பாக்கப்போறேன் யாராவது கூட வர்றீங்களா" அவன் வேட்டியை மடித்துக் கொண்டான்.

"காளியப்பா, அவசரப்படாதே. அடுத்தது என்ன பண்ணப்போறோம்னு நாம பேசவேண்டாமா?"

"என்ன பேசறது. என்ன நடந்திருக்குன்னு தெரிஞ்சா தானே என்ன பண்றதுன்னு பேசமுடியும்."

"என்ன நடந்திருக்கும்னு இங்க உக்காந்துகிட்டே சொல்ல முடியும் காளியப்பா. மண்ணெல்லாம் கரைஞ்சு தரைக்கு வந்திருக்கும் கல்லும் நகர்ந்திருக்கும் மறுபடியும் கட்டப்போறோமா. இல்லை இதோட விட்டுடப்போறோமா. இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்க."

"இதை பாருங்க நாம் இயற்கையோட சண்டைபோட முடியாது. இயற்கைங்கறது கடவுள் கடவுளுக்கெதிரா முஷ்டி மடக்கினவன் ஜெயிச்சதுண்டா கிடையாது." என்று பல சரக்குக்கடை வைத்திருக்கின்ற சீனிவாசச் செட்டியார் உரத்துக் கூறினார்.

"என்ன சொல்றீங்க சீனிவாசன், சரியா சொல்லுங்க."

“விட்டுடலாம்ங்க. எதனா எழுதிகிட்டு போகட்டுமே. பழமுதிர்மேடு இதுவும் நல்லாதாங்க இருக்கு.”

“எப்படிய்யா நல்லாருக்குன்றே. எவ்வளவு உயரமான மலை. தினம் எங்க ஆத்தா வாசல்ல நின்னு அந்த மலையைப் பார்த்து கும்பிடும். அந்த திட்டுல தேவர்கள் இருக்காங்கன்னு சொல்லும். சின்ன வயசுலேர்ந்து எத்தனை கதை கேட்டிருக்கேன். குன்றம்னு சொல்லும் போது எவ்வுளவு சந்தோஷமா இருக்கும் அதைப் போய் மேடுன்னு சொல்லச் சொல்றியேய்யா வெக்கமா இல்லே.”

“அவன் தானே சொல்றான். நீ குன்றம்னு சொல்லேன்” வேறொருவர் சொன்னார்.

“அது எப்படி? உனக்கு தலைமுடி அடர்த்தியா கருகருன்னு இருக்கு ஆனா, உன்னை மொட்டைன்னு தான் கூப்பிடுவேன்னு நான் சொன்னா நீ ஒத்துக்குவியா?” காளியப்பன் கோபமாகக் கேட்க ஊர் கவலையோடு சிரித்தது.

“நான் கீழேயிருந்து ஆரம்பிக்கிறேன். சர்க்கரை, கோபாலு நீங்க ரெண்டுபேருமே சொல்லுங்க. உங்களை மாதிரி இளவட்டமான பசங்களை நம்பித்தான் நான் இதில இறங்கினேன். மலை மழையிலே நிச்சயம் கரைஞ்சு போயிருக்கும் என்ன பண்ணலாம்னு தயவு செஞ்சு சொல்லுங்க” வரதராஜ முதலியார் அவர்களை அருகே அழைத்துக் கேட்டார்.

“என்னங்க கட்டறதுன்னு முடிவுப்பண்ணிட்டோம். அப்புறம் கட்டிதானே ஆகணும். கட்டாம விட்டுட்டா அது தப்பில்லையா. பழமுதிர்குன்றம்ன்ற பேரை மாத்தறதுக்கு எனக்கு விருப்பமில்லைங்க. எங்கய்யா குன்றம்னாரு. நானும் குன்றம்னுதான் சொல்றேன் என் பிள்ளையும் அதை

பழமுதிர்குன்றம்னு தான் கூப்பிடணும். இன்னும் பல தலைமுறைங்க கூப்பிடணும். இன்னைக்கு பத்தடி நாம உசத்திக் கட்டினோம்னறதை நாலு தலை முறைக்கு அப்புறம் வர்றவங்க பேசினா நமக்கு அது பெருமை இல்லையா அதனால மலையை உசத்திக் கட்டுவோம்"

"எப்படிறா கட்டப்போறே இந்த மழையிலே. காலை ஊன்றி ஏறமுடியுமா. நீ ஏறிடுவே இளவட்டமான ஆளு பொம்பளைங்களால ஏற முடியுமா? வயசானவங்க ஏறுவாங்களா. ஏறி சேற்றுல கால் வழுக்கி தலைக்குப்பற விழுந்தா உயிர்பலி இல்லே ஆகும். இது தேவைதானா அப்படி யோசிக்கணும்டா" கருப்பண்ணா செட்டியார் பேசினார்.

"உல்லாசியாவே வாழ்ந்துட்டீங்க. யாரு எக்கேடு கெட்டா என்ன. நாம உண்டு நம்ம சாப்பாடு உண்டுன்னு இருக்கீங்க. ஒத்துமை இருக்கணும்றது உங்களுக்கு ஏன் புரியலை. நம் ஊர்ல நம் ஜனங்ககிட்ட ஒத்துமை இருக்கு. அந்த ஒத்துமையை குலைக்கிற மாதிரி மழை பெய்யற விஷயம் நடந்து போச்சு. அதையும் எதிர்த்து நாம ஒத்துமையா இருக்கறதுதான் நல்லதே தவிர மாட்டேன்னு சொல்றது நல்லதில்லே" வயசாளி ராமைய்யா பிள்ளை குரல்நடுங்கச் சொன்னார்.

ராமைய்யாபிள்ளை பேசியதும் ஊர் அமைதியாகியது. வீரைய்யனும் ஜோதியும் உள்ளே நுழைந்தார்கள். திண்ணைக்குக் கீழே உட்கார்ந்து கொண்டார்கள்.

"வா. வீரைய்யா" திண்ணை மேலிருந்த வரதராஜ முதலியார் வரவேற்றார். "வா, இந்தப்பக்கம் வந்து உட்காரு."

"இருக்கட்டுங்க நீங்க பேசினதையெல்லாம் வாசல்ல நின்னு கேட்டுக்கிட்டு தான் இருந்தேன் ஊர் ஒத்துமை

மட்டும் இல்லீங்க. வேற ஒரு நன்மை இருக்கு. மண்ணுக்காக மதகு திறந்தா மாதிரி ஏரியை நடுவுல வெட்டி விட்டுட்டோம் இப்ப மழைபெய்யும் போது மலையிலேர்ந்து வர்ற தண்ணி ஏரியிலே இறங்கும் அதனால இப்போ ரெட்டை ஏரி மாதிரி நடுவுல ஒருகால்வாயோட ஏரி பெரிசாயிட்டிருக்கும். இந்த ஏரி இப்படி பெருத்துப்போனால், நிலத்துல இருந்து நீர் ஊறினால் அதோட மழைத்தண்ணியும் சேர்ந்து கொண் டால் சுலபமா மூணுபோகம் நம்ம ஊருல பயிர் பண்ணலாம். சுத்து பத்துல எந்த ஊருலயுமே இரண்டாம் போகமே சரியா இல்லாதபோதும் நாம இரண்டாம் போகம் நல்லபடியா அறுக்கறோம். இந்த ஏரி வந்துடுச்சின்னா மூணுபோகம் அறுத்துடலாம். என்ன நான் சொல்றது." வீரைய்யன் தரை தட்டிப்பேசினான்.

கூட்டம் திகைத்து. அவன் பேச்சிலுள்ள உண்மையை கண்டுகொண்டது.

"சரியா புடிச்சான்பா, வீரைய்யா, நீ சொல்ற விஷயம் சரி. ஆனால் இப்ப பிரச்சினை வேற. இப்ப வெட்டுற இடத்திலே சேறு இருந்தால் யாரு வெட்டுவா" ராமைய்யா பிள்ளை கேட்க. அவரை ஜோதி இடைமறித்தான்.

"நான் சொல்றேன்யா. அம்மன் கோயிலுக்குப் பின்னாடி வைச்சிருக்கிற அந்த இடத்தில இந்த நேரம் மழைபுகுந்து அந்த மண்ணை இன்னமும் மெல்லிசா கிட்டிருக்கும் குழைவா மாத்தியிருக்கும். இந்த ஊர் மொத்தமும் மழை பாக்காம இந்த இடத்திற்குப் போய் பாறைகளை இடிச்சு ஒரு ஓரமா குவிச்சு வைச்சுட்டோம்னா மழை நின்னபிறகு மலைக்குமேல ஏறி இந்த பாறைகளை போட்டுடலாம். இன்னும் உத்துப்பார்த்ததிலே ஒரு அடி விட்டமுள்ள பாறைகள் தான் அதிகம்னு தெரிஞ்சுகிட்டேன் அந்த மாதிரி ஒரு அடி விட்டமுள்ள சின்ன சின்ன குண்டு

குண்டு பாறைகள் ஒண்ணுமேல ஒண்ணு அடுக்கறதுக்கு சுலபமா இருக்கும் எனக்கென்னவோ ஆத்தா நமக்காகத்தான் மழை கொண்டு வந்திருக்கான்னு படுது"

"தம்பி ஜோதி, பாறையை நீ தூக்குவடா. குழந்தைங்க தூக்குமா. வயசாளிங்க தூக்குவாங்களா. ஒரடி விட்டமுள்ள பாறையைத் தூக்கிகிட்டு எந்நூறு அடி மலை ஏறுனா செத்திருவாங்கடா." வரதராஜ முதலியார் பரிதாபமாகப் பேசினார்.

"அய்யா, வயசாளிங்களை, பெண், பிள்ளைகளை, குழந்தைகளை ஏத்தாதீங்க வாலிபமா இருக்கறவங்க மட்டுமே இந்த வேலையை செய்யட்டும்.

"அப்படி ஒண்ணும் கிடையாது." செண்பகத்தம்மா உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

"பொம்பளைங்க வேணாம்னு தயவுசெய்து சொல்லாத தம்பி. யாரெல்லாம் முடியுதோ, யார் மலை கட்டணும்னு ஆசைப்படறாங்களோ அத்தினி பேருக்கும் வாய்ப்பு கொடுங்க."

"அப்ப நாம மலை கட்டறோமா" வரதராஜ முதலியார் நேரடியாகக் கேள்வி கேட்டார்.

"நிச்சயம் கட்டறோங்க. ஊர் ஒத்துமை ஏரிப்பாசனம் அப்படின்னு பல்வேறு விஷயங்களை வெச்சிகிட்டு இந்த மலையை கட்டறோம். பழமுதிர்குன்றம்னு வெள்ளைக்காரன் கூப்பிடறானோ, இல்லையோ நாம அதைப்பத்தி அக்கறை படத் தேவையில்லை நம்ம ஊருக்கு அதான் பேரு."

"அவங்க சொல்றது சரி பழமர்நேரின்ற ஊரை வெள்ளைக்காரன் பலனேர்னு மாத்தினான். ஊர் என்ன கெட்டாப்போச்சு அந்தப் பேர் என்ன அழிஞ்சா போச்சு. அதை இன்னைக்கும் தமிழ்ல கூப்பிடுறபோது பழமர்

நேரின்னு தான் குப்பிடறாங்க. வெள்ளைக்காரன் பேரை மாத்திட்டா பேரும் அழிஞ்சிடாது. மலையும் அழிஞ்சுடாது. கிளம்புங்க போய் பாறை பார்ப்போம்.”

கூட்டம் மொத்தமும் குபீரென்று வெளியில் வந்து மலையை நோக்கி நகர்ந்தது. மறுபடியும் ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன.

“சாப்பிடறதுக்கு ஒண்ணுமில்லாம போறீங்களேப்பா?”

“அதெல்லாம் ஒண்ணும் வேணாங்க.” ஜோதி கடப் பாறையுடன் முன்னே நடந்தான் ஆனால் வரதராஜ முதலியார் திரும்பி செண்பகத்தம்மாளைப் பார்த்தார்.

“ஒவ்வொரு வீட்டுக்கும் பொம்பளைங்களை அனுப்பிச்சு எதனா இருக்கிற தானியத்தை வாங்கிட்டு வரச் சொல்றேன். கிடைக்கிற தானியத்தை வைச்சு ஏதாவது பண்ணி கொண்டாந்து தர்றேன்.” செண்பகத்தம்மாள் சொல்ல அவர் கைகூப்பினார்.

செண்பகத்தம்மாளும் இன்னு சிலபேரும் கூடை மீது முறம் போட்டு மூடிக்கொண்டு மழையில் இறங்கி வீடு வீடாகப் போனார்கள் தானியம் பிச்சை கேட்டார்கள்.

இயற்கையான உருண்டை உருண்டையாகப் பாறை கள் செய்து அதை ரகசியமாகப் புதைத்து வைத்தது போல் தான் அந்தக் கோவிலுக்குப் பின்னே பாறைகள் கிடந்தன. மண்ணை விலக்கி ஒவ்வொன்றாய் எடுக்க உருளைப் பாறைகள் ஏகமாய்க் கிடந்தன. மழையினால் மண் வேகமாக நெகிழ்ந்து கொடுத்தது. கடப்பாரை போட்டு நெம்பியதும் இரண்டு மூன்று பாறைகள் கிடைத்தன. பள்ளங்களிலிருந்து பாறையை மேலே எடுப்பதுதான் சற்று சிரமமாக இருந்தது. உறியை கீழே இறக்கி பாறையை அதில் வைக்கச் சொல்லி உறியை மேலே தூக்குகிற வித்தையை இளைஞர்கள்

கையாண்டார்கள் பாறைகளை ஒரு குவியாலாய் சேகரித்தார்கள். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

செண்பகத்தம்மாள் கேழ்வரகும் அரிசி நொய்யும் கலந்து கூழ் கொடுத்தனுப்பினாள். கீரை கடைந்து வைத்திருந்தாள். ஆட்டுக்கறித் துண்டங்களை நெருப்பில் வாட்டி அனுப்பியிருந்தாள்.

இரண்டு மரங்களுக்கு நடுவே தட்டுப்பந்தல் அமைத்து உணவுப்பொருட்களை அதற்குகீழே வைத்தார்கள். நாலைந்து பேராய் அங்குபோய் ஒண்டிக்கொண்டு சாப்பிட்டார்கள்.

மண்ணிலிருந்து எடுத்துவெளியே அடுக்கி வைத்த பாறைகளே ஏழடி உயரம் எட்டடி உயரம் இருந்தது. ஏற்கனவே நாலடி உயரத்திற்கு அடுக்கப்பட்ட பாறைகள் மீது இவற்றை கவனமாகப் பொருத்தி மண்ணை காரையாக்கி சாந்தாய் பூசினால் வெகுநிச்சமாய் மலை கனமாய் நின்று விடும் என்று தோன்றியது. எதனாலும் கரைக்க முடியாது என்று தெரிந்தது.

“இங்க பாறையிருக்கும்னு யாருக்குத் தோணிச்சு?” சர்க்கரை வியப்பாகக் குரல் கொடுத்தான்.

“நாலஞ்சு தலைமுறையா இங்க பாறையிருக்குன்னு சொல்லியருக்காங்க. இந்தப் பாறையை எடுத்து ஊரைச் சுத்தி சுவரு கட்டணும்னு கூட முயற்சி பண்ணியிருக்காங்க அப்போ முகலாயர் படையெடுப்பு நடந்த நேரம். ஊரைச்சுத்தி கோட்டை மாதிரி கட்டலாம்னு கொஞ்சம் கனமான பாறைகளை நோண்டியிருக்காங்க. ஆனா, அதுக்குள்ளே முஸ்லீம்ங்க வந்துட்டதால பாதியிலேயே நிறுத்திட்டாங்க. அதுக்கப்புறம் இந்தப்பாறை எதுக்கும் தேவைப்படலை. நாலஞ்சு தலைமுறைக்கு அப்புறம் இப்ப

தேவைப்பட்டிருக்கு. மலை சறுக்கி விடாம இருந்தா மெல்ல, மெல்ல அத்தினி பாறையும் ஏத்திடலாம்.

மாலை வெயிலடித்தது ஆர்தர் சிம்சன் வெளியே வந்தான் 'ஊர்மக்கள் எங்கே' என்று கேட்டார் அவர்கள் கோயிலில் குடியிருப்பதாகச் சொல்லப்பட மெல்லத்தன் உடைமைகளைச் சுருட்டிக்கொண்டு குதிரையில் ஏற்றிக் கொண்டு ஊர்விட்டுக் கிளம்பினான். கிளம்பும் முன் உயரமானியால் மலையை அளந்தான். மலை மூன்றடி உயரம் மட்டுமே வளர்ந்திருப்பதாய் அவன் உயரமானி சொல்லியது. சிரித்தான். உயரமானியை பெட்டியில் வைத்துப் பூட்டி குதிரையில் தொங்கவிட்டான். குதிரையை முன்னே போகச் சொல்லி அதன் பின்னே சேறு தெறிக்க நடந்து போனான் உடன் அவன் உதவியாளர்களும் போனார்கள்.

ஊர் எல்லையில் ஊர் அவனைச் சுற்றிக்கொண்டது.

"தேவசகாயம்....."

"என்னப்பா...ஏதோ பூச்சி காட்டுனீங்க... எல்லாம் சைலண்டா கோயிலுக்குள்ள புகுந்திட்டீங்க...ஆத்தாவைக் கட்டச் சொல்லப் போறீங்களா?" மெல்ல சிரித்தார்.

"தேவசகாயம்...எங்களைக் கேலி பண்றீங்களா இல்ல ஆத்தாவைக் கேலி பண்றீங்களா?"

"ஐய்யய்யோ...நான் ரெண்டுமே பண்ணலை..வேகமா ஆரம்பிச்சு சட்டுன்னு நிறுத்திட்டீங்களே..உங்களை உசுப் பேத்தலாமேங்கிற மாதிரிதான் பேசினேன். எனக்கு ஏன்ப்பா கேலியும் கிண்டலும்?" என்று அவர் ஒதுக்கமாய் போனார்.

"தேவசகாயம்...வாங்க.. ஆர்தர் சிம்சன்கிட்டே ஒரு விஷயம் சொல்லுங்க சேலம் பக்கம் போயிட்டு திரும்பிவர்ற போது நம்மூர் பக்கமா தயவு செய்து வரச் சொல்லுங்க. அது வரைக்கும் பழமுதிர்மேடுன்னு எழுத வேணாம்ன்னு

சொல்லுங்க இதோ பாருங்க....இங்க ஒரு ஏழடி அங்க ஒரு நாலடி பாறை வைச்சிருக்கோம். இது ரெண்டுத்தையும் மழை நின்னு, வெயில் காஞ்ச பிறகு நம்மூர் பசங்க மேல கொண்டு போய் அடுக்கி களிமண்ணோடு சாந்து கலந்து பூசி மலையை பண்ணிடப் போறாங்க. இந்த விஷயத்திலிருந்து நாங்க பின்வாங்கப் போறதேயில்லை. பத்தடின்னு கேட்டது பதினொரு அடியிலிருந்து பன்னிரெண்டு அடியாவது நாங்க மலையை ஏத்திக் காண்பிப்போம் அவசரப்பட்டு ஆர்தர் சிம்சன் மலையின் உயரத்தை குறைச்சு சொல்லவேணாம். குன்றம்ங்கிற பேரை மாத்த வேணாம்ன்னு இந்த ஊர் முழுவதும் சேர்ந்து கைகூப்பி கேட்டுக்கிறோம்ன்னு சொல்லுங்க."

ஊர் அவர் பேச்சுக்கு எழுந்து கைகூப்பியது. பாஷை புரியாத ஆர்தர் சிம்சன் திகைப்போடு கைகூப்புகிற ஊர் மக்களைப் பார்த்தான். என்ன என்ற தேவகாயத்தைக் கேட்டான். தேவசகாயம் விளக்கிச் சொல்ல யோசித்தான்.

"இப்படி செய்யப் போவதாக வரதராஜ முதலியாரைக் கடிதமெழுதி அடுத்த ஊருக்கு அனுப்பச் சொல்லுங்கள். நான் இதை மேலிடத்திற்குத் தெரிவித்து வரும்போது இநத் பக்கமாக வருவதற்கு அனுமதி கேட்கிறேன். அவர்கள் அனுமதி கொடுத்தால் வருகிறேன் இது நான் மட்டுமே செய்கிற வேலையல்ல. இவருடைய கடிதம்தான் இதைச் செய்ய வேண்டும். எனவே மதராஸிலுள்ள கவர்னருக்கு ஒரு மனு எழுதித் தரச் சொல்லுங்கள். கவர்னர் அனுமதித்தால் வெகுநிச்சயமாமய் நான் மறுபடியும் வருகிறேன். அவர்கள் முயற்சிக்கு என் பாராட்டுதல்களைச் சொல்லுங்கள். கடவுள் அவர்களுக்குத் துணையிருப்பார்." - ஆர்தர் சிம்சன் சொல்ல ஊர் மறுபடியும் நமஸ்கரித்தது.

ஆர்தர் சிம்சன் அடுத்த ஊருக்கு மெல்ல பயணப் பட்டான். ஊர் சிறிது நேரம் உட்கார்ந்து கதையடித்துவிட்டு

வீடு திரும்பியது. சில இளைஞர்கள் மட்டும் கவனமாய்க் காலூன்றி மலையேறினார்கள். மண் முற்றிலும் கரைந்து போய்விட்டது என்று கீழறங்கி வந்து சொன்னார்கள். மூன்றடிக்கும் குறைவாகத்தான் உயரம் இருக்கிறது. என்றார்கள். ஊர் அமைதியாய் உள்ளார்ந்த கோபத்தை ஏற்படுத்திக்கொண்டது.

“கட்டிடுவோம்....நிச்சயம் கட்டுவோம். ஆத்தா கூட இருப்பா உறுதியா கட்டுவோம்.” - ராமையாபிள்ளை அதை வார்த்தையாக எதிரொலித்தார்.

மறுநாள் வெயிலடித்தது. அதற்கு மறுநாளும் வெயிலடித்தது. ஊரிலுள்ள அனைவரும் மேலேறிப் போய்ப்பார்த்தார்கள். செண்பகத்தம்மாளும் கூட வந்தாள். இன்னும் சில பெண்களும் பின்தொடர்ந்தார்கள். என்ன நடந்திருக்கிறது என்பதை சுற்றி சுற்றி வந்து பார்த்தார்கள்.

வாய்க்கால் உடைந்து கரைந்து பெரும்பள்ளமாய் மண் தோண்டிய இடமும் வாய்க்கால் நோண்டிய இடமும், ஏரி இருந்த இடமும் ஒன்றாகிவிட்டன. ஏரி சற்று பெரிதாகியது. இப்போது இன்னும் தள்ளிக்கொண்டு போய் மண் வெட்ட வேண்டியிருந்தது. அதாவது இன்னும் ஐம்பது தப்படிகள் மலை நோக்கி நடக்க வேண்டியருந்தது. ஆனால் ஊர் மக்கள் கவலைப்படவில்லை.

“இந்த தடவை எதுனா பலிகொடுத்து ஆரம்பிக்க லாம்யா...தடுக்குன்னு ஆரம்பிக்காதங்கய்யா.’,

“என்ன பலி கொடுக்கிறது?”

“ஒரு ஆடாவது பலி கொடுத்திடுங்கய்யா...”

“அடேய்..” என்று கூச்சலுடன் சுப்பம்மாள் எழுந்திருந்தாள். ஜனங்கள் அவள் கூச்சல் கேட்டு அவள் பக்கம் போனார்கள்.

"ஆடு வெட்டுனா போதாதுடா....எனக்கு சுத்தி அரண்மனை போட்டுக் கொடுங்கடா...."பெரிய மதில்சுவர் போட்டுக்கொடுங்கடா...." என்று சுப்பம்மாள் கத்த அது ஆத்தாள் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

வரதராஜ முதலியாரும் ராமையா பிள்ளையும் விழுந்து வணங்கினார்கள்.

"அம்மா...நீ சொன்னது போலவே உனக்கு சுத்தி கோட்டைச் சுவர் மாதிரி செங்கல்ல சுவர் எழுப்பித் தர்றோம். தரைத்தளமும் போட்டுத் தர்றோம். எங்களுக்குத் துணையா இரு தாயே...." என்று சொன்னவுடன் ஆத்தா கையை வீசி, வீசி அவர்களை ஆசிர்வதித்தாள். மலை யேறினாள்.

ஆத்தாள் மலையேறிய பின் அவர்கள் மெல்ல மலையிலிருந்து கீழே இறங்கினார்கள். மறுநாள் மறுபடியும் மலை கட்டுவதற்கு கற்கள் செய்வதற்கு ஆரம்பித்தார்கள். உறிகளை செய்துகொண்டார்கள். அவைகளை சுற்றிக் கொள்ள துணிகளைக் கிழித்துக்கொண்டார்கள். புதிய கயிறு வாங்கினார்கள். மறுநாள் காலை மலையேறும் முன் மலை முன் நின்று ஒரு கோழியைத் திருகி நாலா பக்கமும் இரத்தம் வீசி பசிக்கலைன்னாலும் உனக்கு எதுனா கொடுத்துட்டுத் தானே போகணும்' என்று வணங்கிவிட்டுப் போனார்கள். கோழியை சுப்பம்மாளுக்குக் கொடுத்தனுப்பினார்கள்.

மலையேறுகிற போதே வண்டி கட்டி, பாறைகளை மலை அடிவாரத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆளுக்கு ஒரு பாறையைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள். ஏறுவது மிகக் கடினமாக இருந்தது. தோள் அறுந்தது. பாதியில் வைத்து விடலாமா என்று தோன்றியது. நின்று நின்று இளைப்பாறிப் போக வேண்டியிருந்தது. வாலிபர்கள் கூட இடதும் வலதும் அலைந்து அவஸ்தைப்பட்டார்கள். பெரியவர்கள். பத்து படி

ஏறினவுடன் மூச்சுவாங்கினார்கள். பத்து பத்து தப்படியாய்த் தான் ஏற முடிந்தது. பெண்களால் பாறைகளை ஏற்ற முடியவில்லை சுப்பம்மாள் மட்டுமே ஒரு சிறிய பாறையைத் தலையில் சுமந்து கொண்டு உயரப் போய் தொபீரென்று போட்டு "எளிதா ஆவணும்...எளிதா ஆவணும் ...நான் கேட்கறேன்...எளிதா ஆவணும்.." என்று வானம் பார்த்துக் கூவினாள். அவள் கூவிய பிறகு இளைஞர்களுக்கு புது தெம்பு வந்தது பாறைகள் லேசானதுபோல் பட்டது மெல்ல, மெல்ல பாறைகள் மேலே போயின.

பிற்பகல் வரையில் நூறு பாறைகள் மேலே போயிருந்தன. ஓரடி உயரம் அதிகமாயிருந்தது. மறுபடியும் அன்று பிற்பகல் பாறைகள் போகத் துவங்கின. இப்போது உறிகள் கட்டி, உறிகளில் ஆறேழு பாறைகள் போட்டு, அதை நாலைந்து பேர் தூக்கிப் போவது என்று முடிவாயிற்று அப்போது வேகமாப் போக முடிந்தது பல்லக்கு மாதிரி தொட்டில் கட்டி அதில் பாறைகள் அடுக்கி அதை பத்து பேர் சுமப்பது என்று முடிவாயிற்று அப்போது இன்னும் எளிதாக இருந்தது. பல்லக்குப் பெட்டிகளிலும் உறிகளிலும் பாறைகள் பயணம் செய்து மேலே போயின. அன்று மாலைக்குள் இருநூற்று நாற்பது பாறைகள் அடுக்கமுடிந்தது. மறுநாள் முந்நூறு பாறைகள் அடுக்கமுடிந்தது. அதற்கு மறுநாள் இன்னொரு முந்நூறு பாறைகள் அடுக்கமுடிந்தது.

காளிங்கராயன் மிக, மிகக் கவனமாய் பாறைகளை அடுக்கினான். அசைத்து அசைத்து வைத்தான் சிறு சிறு கற்களைப் பாறைகளுக்கு நடுவே அண்டக்கொடுத்தான். ஆப்பு அடிப்பது போல் பட்டைப் பலகைகளைப் பாறைகளுக்கு நடுவே கொடுத்து அசையாது நிற்க வைத்தான். சந்துகள் இருந்தால் அங்கே மண் கொட்டச் சொன்னான். அந்த மண்ணைக் குச்சியால் குத்தி உள்ளிறக்கச்

சொன்னான். சிறுவர்கள் பெண்கள் இந்த வேலைகளைச் செய்ய பாறைகள் அடுக்கப்பட்டன.

நான்காம் நாள் காலை பதினோரு மணிக்கு அடுக்கப் பட்ட பாறையின் உயரம் பதினொன்றேகால் அடி இருந்தது. அதற்குமேல் ஒரு பெரிய பாறையை இளைஞர்கள் சிரமப்பட்டுக் கொண்டு போய், தட்டுத் தடுமாறி கை கால்களெல்லாம் இரத்தம் வர தேய்த்துக் கொண்டு போய் சேர்த்தார்கள். அந்தப் பெரிய பாறையின் கனத்தால் கீழுள்ள பாறைகள் அழுந்தி இறுகிக்கொண்டன.

இப்போது மண்ணைக் கலந்து மண்ணோடு மருந்துப் பொருட்கள் கலந்து சுண்ணாம்பு கலந்து ஒரு வேகமான கலவை தயார் செய்யப்பட்டது. அந்தக் கலவையைப் புரட்டி, புரட்டி ஆறுவதற்கு முன் கொண்டு போய் பாறை இடுக்குகளில் கொட்டினார்கள். கூடைகளில் அள்ளி, கை மாற்றி உச்சியிலிருந்து வழியவிட்டார்கள். பாறைகளுக்கு இடுக்கிலெல்லாம் சிறு அகப்பைகளால் ஊற்றினார்கள். இடையே ஊற்றி. வெயில் சூளீரென்று காய, உச்சிப் பொழுதில் பனிரெண்டு அடி உயர்த்திற்கு ஒருகுன்றின் மீது குன்று போல குன்றுக்கு வைத்த மகுடம் போல ஒரு மலை அங்கே கட்டப்பட்டது இறங்கிப் பார்த்தார்கள். அழுதார்கள் மெல்லப் பாறைகளை முத்தமிட்டார்கள். விழுந்து வணங்கி னார்கள். ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண் டார்கள்.

“டேய்...போய் அந்த ஆர்தர் சிம்சனை கையோட கூட்டிக்கிட்டு வந்துடடா...அவன் என்னிக்கு சேலம் போய் என்னிக்கு திரும்பி வர்றது? வராத போயிட்டான்னா? நாங்க கட்டிட்டோம்னு போய் சொல்லிட்டு வரணும்டா....”

“நான் சொல்லிட்டு வரேன்”- சர்க்கரை குதித்தான்,

"குதிரை எடுத்துட்டுப்போடா..."

"எடுத்துட்டுப் போறேண்ணே.."

கீழே இறங்கினான்.

"ஆர்தர் சிம்சன் எங்கிருந்தாலும் வந்து போகச் சொல்லு" என்று ஊர்மக்கள் குரல் கொடுக்க அவன் சரியென்று சொன்னான். அவனுக்குத் துணையாக ஜோதியும் போவதாகச் சொல்ல, அவனையும் உற்சாகப் படுத்தி னார்கள். சர்க்கரை ஜோதியைப் பார்த்துக் கை நீட்டினான். ஜோதி சர்க்கரையின் கையைப் பற்றிக் கொள்ள இரண்டு பேரும் கீழிறங்கி ஓடினார்கள்.

"நீங்க சொன்னதுதான் சரி, ராமையா பிள்ளை நமக்குள்ள ஜாதி வித்தியாசம் இல்லை. தீண்டாமை இல்லை. இது பெரிய விஷயம். இங்கே பிரிச்சுப் போடறதுக்கு ஆளுங்க இல்லாததால, காரியத்தில் கருத்தா இருந்து ஒத்துமையா யிட்டோம். வீரையனும் அவங்க ஆட்களும் இல்லேன்னா நடக்குமா?"

"அதை விடுங்க. சுப்பம்மாள் சரியான நேரத்துல சரியான விஷயங்கள் சொல்லுதே...அதை எங்க போய் சொல்றது? அப்படி ஒரு தெய்வம் நம்மோட இருக்கிறது னாலதானே நாம நல்லபடியா இருக்க முடியாது. சுப்பம்மா எங்க நம்மவீட்டு வாசல்லயா இருக்கா. சேரியில இருக்கிற பொம்பளைதானே....ஆனா. எத்தனை தெளிவா நம்மளைக் கூட்டிக்கிட்டு போறா...சுப்பம்மாளுக்கு நாம புடவை துணி யாவது எடுத்துக் கொடுக்கணும்" என்று ராமையா பிள்ளை சொன்னார்.

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். எதுக்கு புடவை, துணிமணி? புடவை துணிமணி எடுத்தா ஊருல இருக்கிற அத்தனை பொம்பளைங்களுக்கும் எடுக்கணும். யாரு அரிசி

புடைக்கலை. யாரு கேழ்வரகுல கல் பொறுக்கலை. யாரு சமைக்கலை. செண்பகத்தம்மாளுக்கு அப்ப என்ன தருவீங்க? எனக்குன்னு புடவை எடுத்துக் கொடுக்காதீங்க. கொண்டு போய் ஆத்தா மேல போய் போடுங்க. ஆத்தா யாருக்கு சொல்றாளோ, அவளுக்குக் கொண்டுபோய் கொடுங்க....” என்று சுப்பம்மாள் சொன்னாள்.

எல்லோரும் கீழிறங்கினார்கள். இறங்கி ஒரு முறை மலையைப் பார்த்தார்கள் சுற்றி சுற்றி வந்து பல்வேறு கோணங்களில் மலையை அனுபவித்தார்கள். மண் நோண்டிய இடம் சேறாக இருந்தது.

“மழை பெய்ததே நல்லதுக்குத்தான்னு இப்ப தோணுது. நாம ஐயோ படுபாவி மழை பெய்யுதேன்னு சொன்னோம். ஆனா, மழை பெய்ததுல மண் இளகிபாறை கிடைச்சது. பாறை கிடைச்சதாலதான் மலை உசந்தது பாறையில்லாத வெறுமனே மண்ணு போட்டிருந்தோம்னா ஒரு வருஷம் நின்னிருக்கும் அதுக்கு அடுத்த வருஷம் சரிஞ்சிருக்கும் இனி இப்போதைக்கு இந்த மலை சரியாது எப்போதும் சரியாது.” - காளியப்பன் உறுதி சொன்னான்.

“அவ்வளவு அழுத்தமா உட்கார்ந்திடுச்சு அதுவும் உச்சியில் பெரிய பாறை வைச்சோம் பாருங்க... இது பெரிய கோவில் கட்டுனா மாதிரி. கீழேயெல்லாம் தட்டைக்கல் வைச்சிட்டு மேலே உருளைக் கல்வைக்கிற போது தட்டைக் கல் மொத்தமும் ஒண்ணோட ஒண்ணு புடிச்சிக் கிட்டா மாதிரி, மேல இருக்கிற கல் அழுத்தத்துல கீழே இருக்கிற கல்மொத்தமும் ஒண்ணோட ஒண்ணு ஒட்டிக் கிட்டுது. இனி என்ன பண்ணாலும் அசையாது. முருங்கைப் பிசினும் வஜ்ஜிரமுமா கலந்திருக்கோம்ல. அது இன்னும் இறுக்கமா ஒட்டிக்கும். வெயில் காய, வெயில் காய பறந்து எல்லா பக்கமும் ஒட்டிக்கும்” காளியப்பன் உறுதி சொன்னான்.

"ஒரு கொடி பறக்கவிட்டா நல்லாருக்காது?" கருப் பண்ணச் செட்டியார் சொல்ல. "நான் நெனைச்சேன்....நீ சொல்லிட்டியே..." என்று ராமையா பிள்ளை எதிரொலித் தார்.

காளியப்பன் ஜம்பரும், சுத்தியலுமாய் மலையேறி னான். உச்சிப் பாறையில் நின்று அடித்து ஓட்டை போட்டான். இரும்புக் கம்பி ஒன்றை நட்டான். வஜ்ஜிரக் கலவையை கம்பியின் சந்துகளில் ஊற்றிக் கெட்டிப் படுத்தினான். உச்சியில் கொடி கட்டினான். வெள்ளைக் கொடி படபடத்துப் பறந்ததை கீழிருந்தோர் கைதட்டிப் பாராட்டினார்கள். தங்களுடைய கொடி என்பது போல் அதை நினைத்துக் கொண்டார்கள். பரவசப்பட்டார்கள்.

ஆர்தர் சிம்சன் இரண்டு ஊர்கள் தள்ளிதான் நின்றிருந்தான். அவனுக்கு அங்கே வரைபடங்களில் பல சிக்கல்கள் இருந்தன. ஒரு ஏரியைக் காணோம் என்று சுற்றி சுற்றி தேடிக் கொண்டிருந்தான். சர்க்கரை போய் சொன்னதும் அதிசயப்பட்டான். தேவசகாயம் அவனைப் பார்த்து "இது அரை நாள் பிரயாணம் போகவும், வரவும்" என்று சொன்னார்.

"அதற்கென்ன....? ஆயிரம் பேர் சேர்ந்து மலை கட்டி யிருக்கிற போது அரைநாள் பிரயாணத்தால் என்ன வந்துவிடப் போகிறது? யார் கேட்கப் போகிறார்கள்? நான் போய் வந்துவிடுகிறேன்" ஆர்தர் சிம்சன் குதிரையேறினான். உயரமானியை மட்டும் எடுத்துக்கொண்டான். வேகமாகக் கிளம்பினான்.

சூரிய உதயத்தில் கிளம்பி எட்டரை மணிக்கு ஊருக்குள் நுழைந்தான். தலைநிமிர்ந்து பார்த்தான். உயரம் அதிகரித்திருப்பது வெறும் கண்களுக்கே தெரிந்தது. உயர மானியை வைக்க அவன் வந்துவிட்டது ஊருக்குத் தெரிந்து.

ஊர் வெளியேறி வந்து தபதபவென்று மலையடிவாரத்தை நோக்கி ஓடியது அவனைச் சுற்றிக் கொண்டது அவன் உயரமானியை வைத்து கோலை அளந்துகொண்டான். கோலை அளந்து பிறகு மெல்ல உயரமாணியை நிமிர்த்தினான். எழுநூற்று தொண்ணூறு, எண்ணூற்றிரண்டு என்று போய் நின்றது.

ஆர்தர் சிம்சன் சிலிர்ப்போடு திரும்பினான் வரதராஜ முதலியாரை நோக்கிக் கைநீட்டினான்.

வரதராஜ முதலியார் "என்ன?" ஆவலோடு தமிழில் கேட்டார்.

"எய்ட் ஹண்ட்ரட் அண்ட் டூ" என்று அவன் ஆங்கிலத்தில் பதில் சொன்னான்.

"என்ன சொல்றாரு?" என்று தேவசகாயத்தைக் கேட்டார்.

"802 அடி, இது பழமுதிர்க்குன்றம் தான் அப்படின்றாரு".

கூட்டம் பேயாய்க் கத்தியது. குதித்தது. ஆடியது. வரதராஜ முதலியார் நடனமாடினார். அவரவர் துணியை விரித்து மேலே வீசினார்கள். ஆர்தர் சிம்சனை இரண்டு பேர் கட்டிக்கொண்டு உயரத் தூக்கினார்கள். வரதராஜ முதலி யாரை இரண்டு பேர் தூக்கினார்கள். யாரோ சில பெண்கள் செண்பகத்தையும் தூக்கினார்கள். கூட்டம் குதித்து குதித்து ஆடியது.

"ஐயா...எழுதிக் கொடுங்கைய்யா...."

"அமைதி...எல்லோரும் கொஞ்சம் அமைதியா இருங்க..." தூக்கப்பட்ட வரதராஜ முதலியார் உதறிக் கொண்டு கீழே இறங்கினார்.

ஆர்தர் சிம்சனையும் கீழே இறக்கினார்கள்.

"ஐயா...எழுதிக் கொடுங்கய்யா..இது பழமுதிர்க்குன்றம் தான்னு எழுதிக்கொடுங்க."

பெட்டியிலிருந்து அரசாங்க காகிதம் எடுத்து அரசாங்க முத்திரை குத்தி தன்னுடைய அழகிய கையெழுத்தால் இன்ன தேதியில் இன்ன நேரத்தில் ஆர்தர் சிம்சனாகிய நான் இந்த ஊரை முழுவதுமாய் சர்வே செய்தேன். ஏரிகளும் குளங் களும் வீடுகளும் முன் எடுத்த சர்வேயை ஒட்டியே இருந்தது. மலையினுடைய உயரம் எழுநூற்று தொண்ணூறு என்றிருந்தது. அதைக் குன்றம் என்று அழைக்கக்கூடாது. மேடு என்று சொல்லவேண்டும் என்று நான் சொல்ல ஊரார் எதிர்த்தார்கள். குன்றமாக மாற்றிக் காட்டுகிறேன், பத்தடி உயரம் கட்டுகிறேன் என்று சவால் விட்டார்கள். பத்து நாட்கள் கழித்து என்னை மறுபடியும் அழைத்தார்கள். பன்னிரெண்டு அடி உயரம் பாறைகள் வைத்து மலையின் அளவை அதிகப்படுத்தியிருந்தார்கள் பாறைகளின் நடுவே வஜ்ஜிரம் பூசியிருந்தார்கள். அதன் உச்சியின் அளவாக இன்னொரு மலை கட்டப்பட்டிருக்கிறது. எனவே அந்த உயரமும் கணக்கில் எடுக்கப்பட்டு இது எண்ணூற்று இரண்டு அடி உயரம் என்று என்னால் அளக்கப்பட்டது. இந்த ஊருக்குப் பெயர் பழமுதிர்க்குன்றம் என்று உறுதி செய்யப் பட்டது. இது என் கையெழுத்து. ஆர்தர் சிம்சன் எழுதிக் கொடுத்தான்.

ஊர் மக்கள் அதை வாங்கி கையில் வைத்துக் கொண்டார்கள். "அடேய் சர்க்கரை கொண்டு போய் விட்டுட்டு வாடா...." என்று சொல்ல, ஆர்தர் சிம்சன் வேண்டாமென்று மறுத்தான் குதிரையேறி அவன் போக வேண்டிய இடம் நோக்கி தேவசகாயம் பின்தொடர நடந்தான்.

ஊரிலுள்ள எல்லார் கையிலும் அந்த காகிதச் சுருள் தரப்பட்டது. அதை குழந்தைகள் உட்பட கையில் வாங்கி

கண்ணில் ஒற்றிக்கொண்டு அடுத்தவருக்குக் கொடுத்தார்கள் கொண்டு போய் கோயிலில் அம்மன் பீடத்தில் வைத்தார்கள்.

"உன்னாலதான் தாயே...எல்லாம் உன்னால தான்... உன்னாலதான் நாங்க நல்லாயிருக்கோம்...நீதான் வழி காட்டி..." என்றார்கள்.

மறுபடியும் தொலைவில் இடிஇடித்தது "இந்த தடவை மழை பெய்ததுன்னு வைச்சுக்குங்க. ஏரி நிச்சயம் பெரிசா யிடும் வேற எங்கனா பாறை கிடைக்குதான்னு பார்த்துப் புட்டு அந்த பாறையை எடுத்துக்கிட்டு ஏரிக் கரையை நாம கெட்டிப்படுத்தணும் ஏரிக்கரையை கெட்டிப் படுத்திட் டோம்ன்னு வைச்சுக்குங்க வருஷம் முழுக்க தண்ணி சேர்த்து வைச்சக்கலாம்" என்று வீரையன் சொன்னான்.

எல்லோரும் அடுத்தபடியாய் ஏரியைக் கெட்டிப் படுத்துவது எப்படி என்று பேசத் துவங்கினார்கள்.

"அவ்வளவுதானா....முடிஞ்சு போச்சா இதுக்கப்புறம்." ஒண்ணும் நடக்காதா? ஏன் சுப்பம்மா...இதுக்கப்புறம் வேற வேலையில்லையா?" குழந்தைகள் சுப்பம்மாவைக் கேட்டன.

சுப்பம்மா "இதுக்கப்புறம் தாண்டா எல்லாம் நடக்கப் போவுது." என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

"என்ன நடக்கும்?"

"இந்த ஊரிலிருந்து உன்னை மாதிரி கெட்டிக்கார பசங்களெல்லாம் மதராஸுக்குப் போவாங்க. அங்க போய், பெரிய படிப்பு படிப்பாங்க. அந்த படிப்பு படிச்சுட்டு மறுபடியும் ஊருக்குவருவாங்க. நம்ம ஊருல இருக்கிற ஒத்துமையை வைச்சிக்கிட்டு, வெள்ளைக்காரனை வெளியே போ, நாங்களே ஆண்டுக்கறோம்ன்னு குரல் கொடுப்பாங்க."

"துப்பாக்கி சண்டை நடக்குமா?"

“இல்லை துப்பாக்கி இல்லாத சண்டை நடக்கும். நம்ம ஊரு சாதாரண ஊரா இருக்காது. இன்னும் பெரிய பெரிய ஆளுங்கெல்லாம் இங்க பிறக்கப் போறாங்க பிறந்த எல்லா ஆளுங்களும் இப்ப கட்டினோமே...இந்த மலை இதைப் பத்தி கதை, கதையா சொல்லப்போறாங்க. பேப்பர்ல எழுதப் போறாங்க ஒரு ஊரே கூடி ஒரு மலை கட்டிச்சு அப்படின்னு அரசாங்கத்துல எழுதி வைக்கப் போறாங்க.”

“இதெல்லாம் எப்ப நடக்கும்?”

“இன்னும் நாற்பது வருஷத்துல நடக்கும். இப்போ வெள்ளைக் கொடி பறக்குதுல்ல. அப்போ மூணு கலர்கொடி பறக்கும்.” என்று குழந்தைகளிடம் சொன்னாள். அவள் பேசுவது எந்தக் குழந்தைக்கும் புரியவில்லை.

பழமுதிர்க்குன்றம் என்று ஒரு கருங்கல் பலகையில் அரை அங்குலக் குழிவாகக் காளியப்பன் செதுக்கினான். பலகையை ஊர் நிமிர்த்தி மாலை போட்டது. அந்தக் குழியில் கறுப்பு மை தடவியது. பளீரென்று கறுப்பு எழுத்துக்களில் பழமுதிர்க்குன்றம் என்கிற பலகையைத் தொட்டு. தொட்டு சந்தோஷித்தது.

சுப்பம்மா சொன்னது போல அந்த ஊரிலிருந்து பல இளைஞர்கள் மதராஸ் பட்டினம் நோக்கி வந்து ஆங்கில அறிவு பெற்று ஊருக்குத் திரும்பிப் போய் சுதந்திரப் போராட்டம் என்கிற விஷயத்தைப் பற்றி கூடியிருந்து பேசி, முடிவெடுத்து ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்று தீர்மானித்து, மிகப் பெரிய போரில் இறங்கினார்கள். அன்றிலிருந்து இன்று வரை அந்த ஊர் மண் ஒற்றுமையாக இடைவிடாது பல வேலைகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறது.

முற்றும்

# இரண்டாவது கல்யாணம்

## 1

ஒரு நாளின் மிக சந்தோஷமான நேரம் இரவு நேரம்தான். தூங்கப் போவதற்கு சற்று முன்பு கலைந்து கிடக்கும் சமையலறை ஒழுங்குபடுத்தி, நீர் விட்டு அலம்பி, வாஷ்பேசினை நன்கு துடைத்து தரையை ஈர மாப்பால் சுத்தமாக்கி பளிச்சென்று மறுநாள் காலை நுழையும் போது நேர்த்தியாய் கண்ணில் படும்வரை ஒப்பனை செய்யும் நேரம்தான்.

ஒரு கெட்டிக்கார பெண்ணுக்கு சமையலறையை சுத்தமாக வைத்துக் கொள்ள நிச்சயம் தெரிந்திருக்கும். சமையலறையை சுத்தமாக வைத்திருந்தால் மறுநாள்காலை உள்ளே நுழையும்போது வேலை செய்கிற கடுகடுப்பு இருக்காது. வேலை செய்கிற வேதனை இல்லையெனில், தான்செய்கிற வேலை நன்கு அமையும். சமைக்கிற பண்டம் சுவையாக இருக்கும். சமைக்கிற பண்டம் சுவையாக இருந்தால்தான் சாப்பிடும் மனிதர்களுக்கு கூட இரண்டு பிடி சாப்பிடுகிறார்களே அந்த உணவுதான் உம்மையான

ஆரோக்கியம். நிஜமான சத்து. அந்த திருப்தியில் சாப்பிட்டவர்கள் சமைத்தவர்களை பசத்தோடு பார்ப்பார்கள், அன்போடு பேசுவார்கள், மிகப் பிரியமாக நடத்துவார்கள். மிகப் பிரியமாக நடத்தியதால் இன்னும் கவனமாகவேலை செய்யத் தூண்டிற்றென்றால் சமையலறை சுத்தம் இன்னும் அதிகமாகும்.

சமையலறையில் வாசனை ஊதுபத்தி கொளுத்தி வைத்து வர ஒரு நிரந்தர நறுமணம் இருக்கும்.

சமையலறையில் அன்னபூரணி படம் வைத்து, அதற்கு மாலை போட்டு வழிபடத் தோன்றும். சமையலறையில் பாத்திரங்களை வரிசையாய் அடுக்கி, யார் வந்தாலும் அட.... என்று வியந்து சந்தோஷமாய் பார்க்க வைக்கும். இந்த சூழ்நிலை இருப்பதால் ஒரு நொடி பிசகாது அடுப்பில் ஏற்றுவதும் இறக்குவதும் நடக்கும்.

எனவே, அரை வேக்காடாக எந்த சாமானும் எந்த சமையலும் இருக்காது. காந்தலாக எந்த பதார்த்தமும் போகாது. அப்படி போகாது மிகச்சரியான திட்டத்தில் உணவு இருக்க, சாப்பிடுவர்கள் கூட இரண்டு பிடி சாப்பிடுவார்கள் அந்த இரண்டு பிடிதான் ஆரோக்கியம். மிகுந்த சத்து அதுதான் குடும்பத்தின் ஆதாரம். இது ஒரு அழகான அன்பான சுழற்சி.

எனவே ஒரு நாளின் முடியும் தருவாயில், வேறு எந்தவேலையும் செய்யலாம். தொலைக்காட்சி பெட்டி முன்உட்கார்ந்து கொண்டு தலையில் அடித்துக் கொண்டு அழாமல், வாயைப் பொத்திக் கொண்டு விம்மாமல் சமையலறையை மிக நேர்த்தியாக வைக்கிறதை முக்கியமான விஷயமாய் நிர்மலா செய்து விடுவாள்.

மறுநாள், காலை சமையலறையில் கால்வைக்கும் போது, கால் பிசுபிசுவென்று ஒட்டக்கூடாது. ஒரு புளித்த துர்நாற்றம் வரக்கூடாது. சமையலறையில் நிச்சயமாய் ஒட்டடைகள் தொங்கக்கூடாது. பாத்திரங்கள் கைமாற்றி இருக்கக்கூடாது. கத்தியும், அரிவாள்மனையும், இடுக்கியும் கரண்டிகளும் ஒரு வரிசையில் அடுக்கப்பட்டிருக்க வேண்டும். கண்ணாடி டம்ளர்கள் ஒரு பக்கமாகவும், எவர்சில்வர் டம்ளர்கள் ஒரு பக்கமாகவும், அணிவகுத்து நிற்கு வேண்டும். அதே மாதிரி டப்பாக்களில் எல்லா தானியங்களும் வரிசையாக போட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும். அரிசி ட்ரம் நிறைந்திருக்க வேண்டும். வாஷ்பேசினில் வாசனை உருண்டைகள் போடப்பட்டிருக்க வேண்டும்.

சமையல் மேடைக்கு கீழே கேஸ் சிலிண்டர் வைக்கிற இடம் சுத்தமாய் இருக்க வேண்டும். ஏர் பிரஷ்னர் மாட்டப்பட்டிருக்க வேண்டும். வாரத்திற்கு ஒருமுறை அந்த இடத்தையும் குனிந்து ஒட்டடை அடித்து சுத்தம் செய்ய வேண்டும்.

சமையலறையில் பூச்சிகள் வரக்கூடாது. கரப்புகள் நடமாடக்கூடாது. பல்லி இருக்கக்கூடாது. இருந்தால், எப்பாடுபட்டாவது விரட்டி விட வேண்டும். எறும்புகள் வருவதற்குக் கூட அனுமதி இல்லை. எல்லாம் இறுக்கமாய் அழுத்தமாய் மூடப்பட்டிருக்க வேண்டும். எதுவும் சிதறி இருக்கக்கூடாது. எதுவும் தேவையற்று இருக்கக்கூடாது. தேவையில்லாத பண்டங்களை உடனுக்குடன் அப்புறப் படுத்தி விடவேண்டும்.

காய்கறியாக இருந்தால் மாட்டுக்குக் கொடுத்துவிட வேண்டும். சாப்பிட வேண்டாமென்று நினைத்து இனிப்புகள் தின்பண்டங்களாக இருந்தால், வேலைக்காரிக்கும் அவள்

குழந்தைகளுக்கும் சற்றும் தயங்காமல் வழங்கி விடவேண்டும். கெட்டுப் போகும் வரை காத்திருந்து விட்டுபிறகு மற்றவர் களுக்கு கொடுப்பது மிகப்பெரிய பாவம்.

ஒரு வீட்டில், பத்மவாசன் வரைந்த அன்னபூரணிபடம் சமையலறையில் மாட்டியிருப்பதைப் பார்த்து விட்டு, அதைக்கேட்டு வாங்கி ஒரு காப்பி எடுத்து சட்டம் போட்டு தன் வீட்டிலும் மாட்டி வைத்தாள். தினமும் அதற்கு பூ போட்டாள். எட்டு மணிக்கு சாப்பிட உட்கார்ந்து எட்டரை மணிக்குள் முடித்து, எட்டே முக்காலுக்குள் சமையலறையை மட மடவென்று சுத்தம் செய்து, ஒன்பது மணிக்கு ஒரு முறை நறுவிசாய் மேற்பார்வை பார்த்து, அன்னபூரணி படத்திற்கு ஊதுபத்தி ஏற்றி வைத்து விட்டு, நாளை சமையல் நன்றாக இருக்க வேண்டுமென்று இன்றே வேண்டிக் கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்து ஒரு முறை தொலைவிலிருந்து பார்த்து சந்தோஷப்பட்டு, ஹாலுக்கு வருவது ஒரு சுகமான விஷயம்.

அப்படி சமையலறையில் மேடை பெருக்கிக் கொண்டும், பாத்திரங்களை அடுக்கிக் கொண்டிருக்கும் பொழுதும் மனம் வேறு ஒரு குதூகலத்தில் ஈடுபடும்.

இரவு உடைகளைத் தளர்த்திக் கொண்டு, புருஷனுக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, அவன் என்ன பேசுவான், எது பற்றி பேசுவான், எப்படிப் பேசுவான் என்று மனம் கணக்குப் போடும்.

நேத்திக்கே காயப்போட்டோம். இன்னிக்கு சரின்னு சொல்லணும். தினம் ஆடினா நல்லாருக்காது. நாலு நாளைக்கு ஒரு தடவைதான் நல்லாருக்கும் என்று நேரடி யாகவும் மறைமுகமாகவும் என்ற நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லி, வேறுவிதமாகப் வேணாமே என்று கெஞ்சி அவனை தூங்க வைத்து விடுவாள்.

இரண்டு நாள் அப்படி தூங்கியவன் மூன்றாம்நாள் மிக வேகமாகவே இருப்பான். இன்று நான்கு நாட்கள் ஆகிவிட்டது. பிற்பகலிலேயே முரண்டு பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

ஏதோ ஒரு விவரம் கேட்டபோது 'எனக்குத் தெரியாது' என்று வேகமாகபதில் சொன்னான்.

'எதுக்கு கோவப்படுறீங்க' என்று கேட்டபோது. ஏதோ வெறுப்பா இருக்கு என்று பதில் சொன்னான்.

அவனுக்கு என்ன வெறுப்பென்று அவளுக்குத் தெரியும். அந்த வெறுப்பை எப்படி நீக்குவதென்றும் அவள் அறிவாள். இந்த இரவில் எப்படியும் அவளைத் தின்றுவிட வேண்டும் என்பதற்காகவே இந்த பகலிலேயே அவன் சண்டை ஆரம்பிக்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். மெல்ல அருகே போய் நின்று "என்ன ரொம்ப ஜாஸ்தி தான் வெறுப்பா" என்று கேட்டாள்.

அவன் தளரத் துவங்கியது அவன் உடம்பிலிருந்து தெரிந்தது. ஆனால் மறுபடியும் சட்டென்று கூர்மையாகி தன்னை இறுக்கிக் கொண்டான்.

"நிறைய வேலை இருக்கு. தயவு செய்து தொந்தரவு பண்ணாதே. போய்த் தொலை." என்று கத்தினான்.

அந்தக் கோபத்தில் பொய் இருந்தது.

"எனக்கு கூட நிறைய வேலை இருக்குங்க. வேலை செய்யவே முடியலை. உடம்புக்கு வேற கஷ்டமா இருக்கா. அதனால வீட்டுக்கு முன்னாடியே போய் படுத்து தூங்கிறப் போறேன்" என்று சொன்னதும் திடுக்கிட்டான்.

"என்ன உடம்புக்கு."

"ஒண்ணுமில்லே. ஏதோ அலுப்பாயிருக்கு."

"சும்மா இதே தினம் சொல்லின்னு சொல்லின்னு இரு. உனக்கு கொழுப்பாயிடுச்சு நாயே" என்று மறுபடியும் கத்தினான்.

"எனக்கு உடம்புக்கு அலுப்புனா உங்களுக்கு என்ன பண்ணுது. ஒரு மனுஷிக்கு உடம்புக்கு வரக்கூடாதா."

"நீ வேணுன்ட்டாலும் என்னை வஞ்சனை பண்றடீ. சும்மா கெஞ்சணும்னு நினைக்கிற. அப்படித்தானே" என்று அடிக்குரலில் உறுமலாய்க் கேட்டான்.

"எதுக்கு சொல்றீங்க. எனக்கு ஒண்ணும் புரியலியே" அவள் அப்பாவியாய்க் கேட்டாள்.

அவன் இப்பொழுது நிஜமாகவே கோபமானான். கடையை விட்டு எழுந்திருந்து வெளியே போனான். வாசலுக்குப் போய் ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

அவள் பிடிவாதம் பிடிக்கும்போது, அவளுக்குப் பிடிக்காத காரியம் செய்வதை அவன் மேற்கொள்வது வழக்கம். அவளுக்கு சிகரெட் பிடிப்பது பிடிக்காது.

"என்னை வெறுப்பேத்துற இல்லே. நான் உன்னை வெறுப்பேத்துறேன்" என்று நீளமான ஃபில்டர் சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு, நிதானமாய் புகை விட்டான். திரும்பி ஒருமுறை அவளைப் பார்த்தான். வேறு யாரோ வர அவர்களோடு பேசிக் கொண்டே கடை வாசலில் சிகரெட் பிடிக்கத் துவங்கினான்.

"ஏங்க இங்க நின்னு பிடிக்கிறீங்க. உள்ள உட்கார்ந்து ஃபேனுக்கு கீழே ஆனந்தமா பிடிக்க வேண்டியதுதானே."

"இல்லீங்க. கடைக்குள்ள பிடிக்கிறதில்ல. சில கஸ்டமர்ஸுக்கு பிடிக்கும். சில கஸ்டமர்ஸுக்கு பிடிக்காது.

கடையில பிடிக்க ஆரம்பிச்சிச்சோம்னாக்கா... அடிக்கடி பிடிக்கத் தோணும். இப்படி வெளியே வந்துதான் பிடிக்கணும்னாக்கா கொஞ்சம் குறையும்."

"ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட் பிடிப்பீங்க."

"ஜாஸ்தி இல்லீங்க. ரெண்டோ, மூணோ. சிலநாள் பிடிக்கக்கூட மாட்டேன்" என்று அவன் பதில் சொன்னான்.

"விட்டுருங்கய்யா, அந்த பழக்கத்தை நிறுத்திருங்க. ரெண்டு மூணு பிடிக்கிறதுன்னா சட்டுனு நிறுத்திரலாம். அந்த ரெண்டு மூணு சிகரெட் பாதிப்பையும் ஏற்படுத்திக்கு வானே" வந்தவர் ஆறுதாகச் சொன்னார்.

"நிறுத்தணும்னா எந்த செகண்டும் நிறுத்திடுவேன். ஆனை சில சமயம் மனசுக்குள்ள ஒரு குழப்பம், ஒரு வேதனை. என்னடா அடுத்தபடி செய்யறதுன்னு ஒரு தவிப்பு. ஏன் இப்படி எல்லாரும் ஏமாத்துறாங்களேன்னு ஒரு கோபம். அப்படி வரும்போது... ஒரு சிகரெட் பத்தவச்சா கொஞ்சம் ஆறுதலா இருக்கும்."

"ச்சு..ச்சு. வாஸ்த்தவம். எனக்கு ரொம்பப் புரியது நீங்க சொல்றது, அந்த மாதிரி நேரத்துக்கு சிகரெட்டு மாதிரி சந்தோஷமான விஷயம் வேற எதுவும் கிடையாது." வந்தவர் ஆமோதிக்க, அவன் திரும்பி வெற்றிப் புன்னகையோடு அவளைப் பார்த்தான்.

வாசலில் சைக்கிள் ரிக்ஷா, கிரீச்சிட்டது. குழந்தை திவ்யா பள்ளிக்கூட யூனிஃபாமில் துள்ளி குதித்துக் கீழே இறங்கினாள். ஒன்பது வயதிற்கு நல்ல வளர்த்தியாக இருந்தாள். இறங்கி நடந்து வந்து கதிரேசன் வயிற்றில் நச்சென்று முட்டினாள். அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள். நகர்ந்து கடைக்குள் வந்த கதிரேசன் வயிற்றில் நச்சென்று முட்டினாள். அவனை இறுக்கிக் கட்டிக்

கொண்டாள். நகர்ந்து கடைக்குள் வந்தாள். அம்மாவுக்கு எதிரே வந்து பையை முதுகிலிருந்து அவிழ்த்து தரையில் போட்டாள்.

" என்னா இருக்கு திண்றதுக்கு" என்ற பரபரத்தாள்.

"உனக்கு என்ன வேணும் சொல்லு, நான்தரேன்" நிர்மலா திவ்யாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

பேச்சுகள் எல்லாம் திவ்யாவை நோக்கி இருந்தாலும், செய்திகள் அவனுக்குப் போய்க் கொண்டிருந்தன.

"உனக்கு சாக்லெட் வேணுமா."

"ஹாய் குடு."

"சாக்லெட் வேணுன்னா வாசல்ல நின்னு சிகரெட் பிடிக்குதே அது. அதுக்கிட்டருந்து அந்த சிகரெட்ட பிடிங்கிரு. நா சாக்லெட் தரேன்."

"அய்யோ... அது கத்தும்" திவ்யா பதிலுக்கு சொன்னாள்.

"போய் சொல்லு, சிகரெட் பிடிச்சா உடம்புக்கு கெடுதல், உடனே நிறுத்தினா சாக்லெட் தர்றேன். இல்லே சாக்லெட்கிடையாதுன்று சொல்லு."

"அதுக்கும் சாக்லெட் வச்சிருக்கியா."

"உனக்கு மட்டும் குடுத்தா போதுமாடி. அது பாவம் இல்லே. அதுக்கும் சாக்லேட் இருக்கு. சாக்லெட்தருவேன்னு சொல்லு" என்று உரத்தக் குரலில் சொல்ல, அவன் திரும்பிப்பார்த்து மறுபடியும் புகைக்கத் துவங்கினான்.

"ஹலோ, குண்டப்பா" திவ்யா ஒடி வந்து அவன் காலைக் கட்டிக் கொண்டாள்.

"நீ சிகரெட் பிடிக்கிறதை நிறுத்தினியானா சாக்லெட் தருவாங்களாம்."

"உங்கம்மா சாக்லெட் யாருக்கு வேணும். எனக்கு சாக்லெட் வாங்க முடியாதா. ஊர்ல எங்க போனாலும் சாக்லெட் உங்கம்மா சாக்லெட்ட, உங்கமாக்கிட்டயே வச்சுக்கச் சொல்லு. எனக்கு தேவை இல்லைன்னு சொல்லு."

"என்னம்மா குண்டப்பா கத்துது."

திவ்யா பிடித்த பிடியை விடாமல் அம்மாவைப் பார்த்துக் கேட்டாள்.

"அது எங்க போய் சாக்லெட் வாங்கும். கமர்க்கட்டு, ஈமொச்ச மிட்டாயின்னு ஏதாவது வாங்கின்னு வந்து வயித்தால போவும். கழியும். நான் வச்சிருக்கிறது ஏ கிளாஸ் இம்போர்ட் சாக்லெட். வேணுமா வேணாமா."

"ஏ கிளாஸ் சாக்லெட். வேணுமா வேணாமா." என்று குழந்தை உட்பொருள் தெரியாமல் அவனை உலுக்கிக் கேட்டது.

அவன் கடைசி இழுப்பை முடித்து சிகரெட்டை கீழே போட்டு அணைத்தான்.

"ஹா...உள்ள வந்துருச்சம்மா, குண்டப்பா வந்துருச்சு" என்று திவ்யா கத்தினாள் "எனக்கு சாக்லெட் கொடு" என்று கை நீட்டினாள்.

அவளுக்கு ஒரு பட்டை காட்பரீஸ் சாக்லெட் நிர்மலா கொடுக்க, வாங்கிப் பிரித்து கொண்டு டி.வி.யில் சேனல்கள் நகர்த்தி படம் பார்க்க ஆரம்பித்தாள்.

"உனக்கு சாக்லெட் வேணாமா."

"சரிதான் போடி" கதிரேசன் மறுபடியும் உறுமினான்.

"சரிதான் போடின்னா."

"இன்னிக்கு நாங்க கம்மர்கட் சாப்பிட போறோம். சாக்லெட் வேணாம்."

"போயேன்... போயி சாப்பிடேன். எங்கயாவது தின்னுட்டு இங்க வராதே."

"இதே வாடையில நாலாவது கடையில ஒரு கம்மர்கட்ட இருக்கு. நாலு மாசமா கூப்பிடுது. நான்தான் அய்யய்ய அப்படின்னு ஓரமா ஒதுங்கியிருக்கேன். இன்னைக்கு நானா போய் அந்த கம்மர்கட்டுகிட்டே பேசப்போறேன்" என்று கால் ஆட்டிச் சொன்னான்

டெலிபோன் எடுத்தான். ஏதோ எண்களை அழுத்தினான். "ஹலோ நான்தாங்க பேசறேன். என்னா ரொம்ப பிஸியா இருக்கீங்களா" என்று கேட்டான்.

எதிர்முனையில் ஏதோ பதில் சொல்வது கேட்டது.

நிர்மலா சற்று அதிர்ச்சியானாள். என்ன செய்வது என்று உதடு கடித்து யோசனை செய்தாள்.

"ஃப்ரீயா இருந்தீங்கன்னா வந்து பேசலாமேன்னு பார்த்தேன். எனக்கொண்ணும் இங்க வேலை இல்லீங்க. ஓகோ... யாரும் இருக்காங்களா... சரிங்க. நான் அப்புறம் வர்றேன்" என்று சொல்லி போன் வைத்தான்.

"வேற யாரோ சாப்பிட்டிட்டிருக்காங்களாம். அவங்க சாப்பிட்ட பிறகு என்னை வரச் சொல்லுச்சு. நான் போய் சாப்பிட்டு வந்திருறேன். கம்மர்கட் நல்லாருக்கும். அது ஒரு மாதிரி டேஸ்ட். என்ன சொல்றே."

நிர்மலாவுக்கு முகம் சிவந்தது.

அது மாநகராட்சியால் வரிசையாக கட்டப்பட்ட இரண்டடுக்குக் கடைகள். கதிரேசன் அங்கு ட்ராவல்ஸ் நடத்தி வந்தான். அவனிடம் மூன்று அம்பாஸடர் கார்கள்

இருந்தன. ஒரு மாருதி வேன் இருந்தது. அது தவிர வெளி உலகத்தில் அவனுக்கு நல்ல தொடர்பு இருந்தது.

கதிரேசன் பேசுவதற்கு இனிமையானவன். எளிமை யானவன், திறமையானவன். மனிதர்களை எடை போடுவதில் வல்லவன். வேகமாய் வாடிக்கையாளர்களை இழுக்கின்ற திறமை உடையவன். வாக்கு தவறாமல் இருப்பதற்கு எல்லா முயற்சிகளையும் உண்மையாக செய்பவன். இதனால் ட்ராவல்ஸ் வியாபாரம் நன்கு செழித்தோங்கி வளர்ந்து. வீட்டு டெலிபோன் நம்பரும் கொடுத்து, இருபத்து நான்கு மணி நேரமும் சேவை செய்யப்படும் என்று அறிவித்திருந்தான். நிர்மலாவுக்கும் பதில் சொல்லக் கற்றுக் கொடுத்திருந்தான். அவன் இல்லாத போது பதில் சொல்லவும் கணக்கு வழக்குளை சரிபார்க்கவும் ஒரு வயதான மேனேஜரை நியமித்திருந்தான் எனவே, கேட்ட கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய ஒரு ட்ராவல்ஸாக உடனே உதவிக்கு வரும் ஒரு கம்பெனியாக அது சிறப்புற்றிருந்தது.

இரண்டு மாதம் முன்பு துக்கச் செய்தி வந்து ஒரு வாடிக்கையாளர் அவனை போன் செய்து எழுப்பியபோது, சற்றும் முகம் கோணாமல் வண்டி ஏற்பாடு செய்வதற்கு முயன்றான். அவனுடைய வண்டி இருந்தது. டிரைவர் அப்பொழுதுதான் மது அருந்தி படுத்திருந்தார். மது அருந்தியவரை அவர்களுடன் அனுப்ப அவனுக்கு இஷ்டமில்லை. வெவ்வேறு இடங்களில் போன் செய்து டிரைவர் இருக்கிறாரா என்று கேட்க, அரைமணி நேர விசாரிப்பில் எவரும் தென்படவில்லை.

அவர்களோ பரபரத்தார்கள். அழுது கொண்டிருந் தார்கள்.

ஒரு திடீர் சாவு என்பதாய் அவனுக்கு புரிந்து விட்டது. எனவே, சற்றும் தயங்காது ஒரு மாற்றுடை எடுத்துக்

கொண்டு, நிர்மலாவிடம் விடைபெற்றுக் கொண்டு, நடுநிசியில் வண்டி எடுத்து, வாடிக்கையாளர்களை ஏற்றிக் கொண்டு ஐந்தரை மணி நேரத்தில் திருச்சிராப்பள்ளியை அடைந்தான்.

மாடியிலிருந்து தவறி விழுந்து இறந்த பெண். தற்கொலை என்று போலீசார் சந்தேகப்பட்டார்கள். ஆஸ்பத்திரியில் பிரச்சினை செய்தார்கள்.

அந்த சாதாரண குடும்பம். அவர்களை சமாளிக்கத் தெரியாமல் அலைமோதியது.

வேட்டியை மடித்துக் கொண்டு கதிரேசன் களத்தில் இறங்கினான்.

சகல விஷயங்களும் திரட்டிக் கொண்டு சம்பந்தப் பட்ட போலீஸ் அதிகாரிகளையும் ஆஸ்பத்திரி அலுவலர் களையும் பார்த்தான். சிறிய தொகையை அன்பளிப்பாகக் கொடுத்தான். ஆறு மணி நேரத்தில் இறந்தவரைக் கொண்டு வீட்டில் போட்டான். அந்த வீட்டில் அழுகை சத்தம் அதிகமாயிற்று. சமாதானப்படுத்தினான். உடனடியாக தகனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவனே அந்த ஊர் ஆட்களை வைத்துக் கொண்டு செய்தான். மறுநாள் அவர்கள் ஊர் திரும்பும்போது துக்கத்தை முற்றிலும் மறந்து வழி முழுவதும் அவனையே பாரட்டிக் கொண்டு வந்தார்கள்.

வீட்டு வாசலில் நின்று நிர்மலாவை அழைத்து, மகா உத்தமமான புருஷன். இவன் மிக நன்றாக இருக்க வேண்டும். எங்கள் ஆபத்துக் காலத்தில் வீட்டில் ஒருவனாய் நின்று எங்கள் துக்கச் சுமையை தூக்கினவன். மிகவும் உன்னதமான வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று வயதானவர்கள் வாழ்த்தினார்கள். இளைஞர்கள் பாராட்டினார்கள். மத்திம

வயதுள்ளவர்கள் கை கூப்பி கண்ணில் ஜலம் வழிய நன்றி சொன்னார்கள்.

"தூங்கணும் நிர்மலா. உடம்பு சூடாய் போச்சு. தூக்கம் வருமான்னு தெரியல. கால் குடையுது. கண்ணு எரியுது. இதனாலயே தூக்கம் வாரதுன்னு நினைக்கிறேன்."

"அதெப்படி தூக்கம். வராது போயிடும் நீங்க குளிச்சுட்டு சாப்பிட்டு படுங்க."

அவன் குளித்து நல்ல உணவை ரசித்துச் சாப்பிட்டான் படுக்கைக்குப் போனான். நிர்மலாவும் தன்னை வாசனை யாக்கிக் கொண்டு வந்தாள்.

அவன் லுங்கியை மேலேற்றி முழுங்காலிலிருந்து அழுத்தி அழுத்தி பிடித்து விட்டாள். காலில் சொடக்கு எடுத்து விட்டாள். உள்ளங் கால்களை மசாஜ் செய்தாள். வண்டி ஓட்டிக் கொண்டு வந்ததால் முதுகில் ஏற்பட்ட வலியைப் போக்க, முதுகின் மீது ஏறி அமர்ந்து கொண்டு கழுத்து, புஜம், தோள்பட்டை, நடு முதுகு எல்லாம் விரல்களால் வழித்து விட்டாள்.

இரண்டு கால்களையும் மண்டி போட்டு முதுகில் உட்கார்ந்திருப்பவளை அவன் புரண்டு வாரி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

"சந்தோஷமா இருந்துட்டு அமைதியாக தூங்குங்க" என்று அவள் அவனை இறுக்கி அணைத்துக் கொள்ள, அவன் தானும் சந்தோஷமாக இருந்து அவளையும் சந்தோஷப்படுத்தி விட்டு அயர்ந்து தூங்கிப் போனான்.

பன்னிரெண்டு மணி நேரம் அடித்துப் போட்டது போல் தூங்கினான்.

நல்ல வாடிக்கையாளர்கள் தான் உயர்தரமான விளம்பரதாரர்கள், அந்த வாடிக்கையாளர் பல பேரிடம் சொல்ல, அவனுக்கு கூடுதலாய் பல வாடிக்கையாளர்கள் கிடைத்தார்கள்.

"பார்த்தீங்களா உங்க சின்ஸியாரிட்டிக்கு கிடைச்ச மதிப்பு இது" என்று நிர்மலா சொல்ல,

"இல்ல நிர்மலா...இது உன்னால கிடைச்ச பரிசு. நான் நடுராத்திரில கிளம்பிப் போறபோது என்னத்துக்கு போறீங்க அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, எனக்கு போறது பிடிச்சிருக்காது. போறபோது அவ்வளவு தெளிவாவும் இருந்திருக்காது.

போங்க, போங்க. அவங்கவீட்ல துக்கம். நாம ஏதாவது உதவி செய்யணும்னு நீ அனுப்பிச்சு வச்சியே. அது ஒரு முக்கியமான காரணம். வந்து உடம்பு பிடிச்சுவிட்டு, சரியா சாப்பாடு போட்டு, சந்தோஷப் படுத்தினியே. நல்லா தூங்க வச்சியே அது ரெண்டாவது காரணம்.

இப்படி மனசறிஞ்சு நடந்துகிட்டா வாழ்க்கையும் நல்லாருக்கும். வியாபாரமும் நல்லாருக்கும். சுற்றுச் சூழலும் நல்லாருக்கும்" என்று நிர்மலாவை அவன் பாராட்டினான்.

நிர்மலா சந்தோஷமாகி மறுபடியும் அவனை சந்தோஷப்படுத்தினாள்.

இன்றைக்கும் சந்தோஷப்படுத்த வேண்டிய நாள் என்பது அவளுக்கு சமையலறை சுத்தம் செய்யும் போதே தெரிந்து விட்டது. உள்ளே, கதிரேசன் குழந்தை திவ்யாவுக்கு நிதானமாய் கதை சொல்லிக் கொண்டிருந்தான்.

குழந்தை டி.வி. பார்க்க ஆரம்பித்தால் இரவு வெகுநேரம் வரை கண் விழித்துக் கொண்டிருப்பாள். அவளை மடக்கி, இதமாய் பேசி உனக்கு கதைகள்

சொல்கிறேன் என்று ஆரம்பித்தால் வெகு சீக்கிரம் வந்து கதிரேசனுக்கருகே ஒட்டிக் கொள்வாள்.

டி.வியில், எத்தனை கரணம் அடித்து படங்கள் காட்டினாலும் ஒரு தகப்பன் மகளுக்கு கதை சொல்வது போன்ற சுகம் எதிலும் வருவதில்லை. குறிப்பாய் கதிரேசன் மிக அழகாக கதை சொல்லப் பழகியிருந்தான். அக்கறையாக வெளிப்படுத்துவதற்கு இடைவிடாது முயற்சி செய்வான் சமையலறையில் கதிரேசன் குரல் கேட்டது.

“அர்ச்சுனனுக்கு ஹனுமான் யார்னு தெரியல அவர் ராமருக்கு பாலம் கட்ட உதவினவர். ராமரை தெய்வமா நெனக்கிறவர். கிருஷ்ணருடைய அவதாரந்தான் ராமருடைய அவதாரம்னு அவருக்குத்தெரியல. ஏன்னா ராமாயண காலம் வேற. மகாபாரத காலம் வேற.

ராமரெல்லாம் மேல போய், அனுமார் மட்டும் லங்கையில ஒரு ஓரமா, இங்க என்ன நடந்ததுன்னு யோசனை பண்ணிட்டிருந்த போது, அர்ச்சுனன் அவரைப் பார்த்து, ‘ஏ... வானரமே கையில வில்லு அம்பு கத்தியோட ஒரு போர் வீரன் வர, பயமில்லாமே உட்கார்ந்திருக்கியே. மெரண்டு போய் ஓட வேண்டாம்’ அப்படின்னு கேட்டதுக்கு அனுமார் சொன்னாரு ‘உன்னபார்த்தா பயமாதான் இருக்கு. ஆனாஓட முடியலியேன்னார்’

‘எதுக்கு இங்க உட்கார்ந்திருக்கே, அப்படின்னு அர்ச்சுனன் கேட்டான்’

‘இந்த இடத்துலதாம்பா ராமர் பாலம் கட்டினார். ராமர் பாலம் கட்டினதை யோசனை பண்ணி பார்த்திட்டிருக்கேன்.’

‘நீ இருக்கும்போது பாலம் கட்டினாரா’

ஆமாம்ப்பா. அப்ப நானும் சின்னச் சின்னதா பாலம்கட்டறதுக்கு உதவி பண்ணேம்ப்பா அப்படின்னார்.

'அப்படியா, பாறை கொண்டு வந்து போட்டியா'அப்படீன்னு அர்ச்சுனன் தானா சொன்னான்.

ஆமாம்ப்பா. அந்த மாதிரிதான்.'ஒரு பெரிய பாறை கொண்டாந்து போட்டேன். அப்படின்னார்.

"அவர் சொன்ன பாறை வேற. என்ன பாறை அது."

"சஞ்சீவி மலை" குழந்தை குதூகலமாய் கூவியது.

கதைகள் சொல்லிச் சொல்லி, புராணங்கள் சொல்லிச் சொல்லி, திவ்யாவை ஒரு நல்ல நிலைக்கு கதிரேசன் மாற்றியிருந்தான்.

அவர் சொல்றது அர்ச்சுனனுக்கு புரியல.

அப்படியா. இந்த இடத்துலதான் பாறையை போட்டு பாலம்கட்டினாரா. ஆமா... ராமர் கையில் வில்லு வச்சிருந்தாருல்ல.'

'ஆமாம்ப்பா அவரு கோதண்டபாணி' அப்படீன்னார்.

கோதண்டம்னா என்னா.

"வில்லு."

திவ்யா அவன் கோள்விக்கு உடனே பதில் சொன்னாள்,

"ஆமாம்ப்பா. அவர் கோதண்ட பாணி, அவர் கைல வில்லும் இருக்கும். நிறைய அம்பும் இருக்கும்."

"என்ன வானரமே கைல வில்லும் வச்சுக்கிட்டு, அம்பும் வச்சுகக்கிட்டு ராமர்னு பேரும் வச்சுக்கிட்டு தசரத சக்கரவர்த்தி புள்ளைன்னு சொல்லிக்கிட்டு மகத்தான

அவதாரம்னு பேசிக்கிட்டு ஒரு காரியம் பண்ணாம விட்டுட்டாரே” அப்படீன்னார் அர்ச்சுனன்.

ஆஞ்சநேயருக்கு லேசா கோபம். ஆனாலும், வெளி காட்டிக்கலே கோபம் இருந்தா வெளிய காட்டாதவங்கதான் பெரியமனுஷங்க.” இதை உரக்கச் சொன்னான்.

சமையலறையில் இருந்த அவள் காதில் இந்தவாக்கியம் விழுந்தது. அவள் வாய்விட்டு சிரித்தாள். அவள் சிரித்தது அவனுக்குக் கேட்டது.

‘ஐயா என்ன விட்டுட்டார்னு நினைக்கறீங்க.’

‘தேவையில்லாத குரங்குகளை கூட்டிட்டு வந்த, அதுங்க கையில் கால்ல விழுந்து எதுக்காக அதுங்கள வச்சு ஒரு பாலம் கட்டணும். கைல வில்லு வச்சுருக்கறவன் எது வேணா செய்யலாம்.’

‘அப்படியா நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியலையே.’

‘ராமர் பாறையால வானரங்களை வச்சுத்தானே பாலம் கட்டினார். நான் யார் தெரியுமா அர்ச்சுனன். தர்மருடைய தம்பி. பஞ்ச பாண்டவர்கள் நடுவில் இருப்பவன். கிருஷ்ணனுக்குத் தோழன். நான் பாலம் கட்டட்டுமா. இலங்கைக்கு’ அப்படின்னு ஒரு அம்பு எடுத்தான். பிரார்த்தனை பண்ணி னான். வில்லுல மாட்டினான். இழுத்து கடல்லவிட்டான்.

ஒரு அம்பு. நூறு அம்பாய் நூறு அம்பு ஆயிரம் அம்பாய், ஆயிரம் அம்பு லட்சம் அம்பாய், லட்சம் அம்பு கோடி அம்பாய் மாறி சர சர சர சரன்னு ஒண்ணோட ஒண்ணு பின்னிக்கிட்டு, அம்புனாலே ஒரு பாலம் கட்டினான்.

அப்படியே அனுமார் திகைச்சுப் போய்ட்டார். உட்கார்ந்திருந்த அனுமார் எழுந்து நின்று, அடடா, இவ்ளோ பெரிய வலிமையான்னார்...

அர்ச்சுனன் கர்வத்தோட அவரைப்பார்த்து சிரிச்சான்.

'ராமரால பண்ண முடியாததை இந்த அர்ச்சுனன் பண்ணுவேன்' அப்படின்னார்.

அனுமார் வாயப்பொத்தி சரின்னு தலைய ஆட்டினார். ஆனா, ஒரே ஒரு சந்தேகம்' அப்படின்னு அர்ச்சுனனைப் பார்த்து கேட்டார்.

'என்னப்பா.

ராமர் பாலம் கட்டினது இலங்கைக்கு படைகளோட போறதுக்காக'

ஆமா நானும் அதுக்குத்தான் கட்டியிருக்கேன்.'

'அய்யா, அம்புல கட்டியிருக்கீங்களே... யாரும் ஏறிப்போனா நடுவுல பொதக்கடீன்னு விழுந்துட்டோம் னாக்கா', அப்படின்னு அனுமார் கொஞ்சம் கேலியா கேட்டார்.

அர்ச்சுனனுக்கு கோபம் வந்துட்டுது. பல்லக் கடிச்சான்."

"யப்பா பல்லு கடிக்காதப்பா. எனக்கு பயமாயிருக்கு." திவ்யா அவனைப் பார்த்து எகிறி கட்டிக் கொண்டாள்.

"இல்லடி கண்ணு, நடிச்சுக் காமிச்சேன். அர்ச்சுனன் பல்லக் கடிச்சு போ, போயி நடந்து பாரு. இந்தப் பாலம் தாங்கும். அப்படின்னார்.

'நான் கொஞ்சம் கணம். நடந்தா தாங்குமான்னு தெரியலன்னார்.

'பச் அட நடப்பா' அப்படின்னு வானத்தைப் பார்த்து, அனுமாரைப் பார்த்து, சத்தம் போட்டான்.

அனுமார், கரையில் ஒரு கால் வச்சுகிட்டு இன்னொரு கால் கட்டை விரல் நுனியால அந்த பாலத்துல லேசா வச்சாரு.

பொளக்குனு மொத்தப் பாலமும் கலஞ்சு சீட்டுக் கட்டு மாதிரி கடல்ல மூழ்கிருச்சு. சிரிச்சாரு சிரிச்சாரு அனுமார் அப்படி சிரிச்சாரு.

ஆயிரம், லட்சம், கோடி குரங்குகள் தாண்டின ஒரு பாலம், இங்க கட்ட விரல் வச்ச உடனே தொங்கி போறபாலமான்னு கேட்டார். நான்தான் ராமரை விட கெட்டிக்காரன்னு வேற சொல்றியே, அப்படின்னு சொல்லிச் சொல்லி சிரிச்சார்.

ரொம்ப கோபம் வந்தருச்சு அர்ச்சுனனுக்கு.

'இந்த தடவை ஸ்ட்ராங்கா கட்றேன் பார்,' அப்படின்னு வில்லெடுத்து அம்பு தொடுத்த போது, நாரதர் அங்க வந்தார்.

'என்னப்பா மேலேர்ந்து பார்த்தா ஒரே மின்னலா அடிக்கிறது. என்னன்னு பார்த்தா அர்ச்சுனன்தான் ஏதோ அம்பு போட்டுண்டிருக்கார்ன்னு சொன்னாங்க, அதனால தான் வந்து பார்த்தேன். என்ன, யாரு மேல் கோபம்.'

'ஒரு கோபமும் இல்ல. இந்த குரங்கு என்னமோ ராமர் பாலங்கட்டினார்னு சொல்லிச்சு. நான் அந்த மாதிரி பாலம் அம்பாலயே கட்டறேன். ஏறிப் பாருன்னு சொன்னேன் ஆனா... பாலம் விழுந்துடிச்சு' ன்னார்.

அடடே, தெய்வ சங்கல்பம் இல்லாத எந்தக் காரியமும் சரியா வராதுப்பா. அவுங்ககூட பாறைல ராமா ராமான்னு

தான் எழுதுனாங்க. நீ அம்பு தொடுக்கையில, அம்பு பாலம் பண்றபோது கிருஷ்ணா, கிருஷ்ணான்னு சொல்லி செய்தீன்னாக்கா, அந்த பாலத்தை யார் உடைக்க முடியும் அப்படின்னார்.

ஆமா, ஆமா. நான் அதை மறந்துட்டேன்னு சொன்னான். கிருஷ்ணரை மனசுல தியானம் . பண்ணான். நேரா ஒரு அம்பு விட்டான். ஒவ்வொரு அம்புலையும் கிருஷ்ணருடைய பேர் இருக்கணும்னு நினைச்சான். அப்படியே இருந்தது. எல்லா அம்பும் ஒண்ணோட ஒண்ணு பின்னிப் பின்னி கோடிக் கணக்கா வந்த, அந்த அம்புப் பாலம் தயாராச்சு.

நாரதர் சொன்னார்,'அனுமாரே இப்ப போய் பாருங்க.'

'கட்ட விரல் வச்ச உடனே உடைஞ்சு போயிரும்னார் அனுமார்.

ப்ச் இல்லீங்க. நீங்க நடந்து பாருங்களேன்

போய் கால் வச்சு அழுத்துனாரு அனுமார். உடையல.

அட நம்ம கணத்தை தாங்குதே அப்படின்னார். ரெண்டு காலும் வச்சு நின்னார், அப்பவும் உடையல எகிறி குதிச்சார். உடையல, மொரட்டுத்தனமா ஆடினார். உடையல குட்டிக்கர்ணம் அடிச்சுப் பார்த்தார் உடையல. எகிறி எகிறி குதிச்சார் உடையல."

எல்லா விதமான நடிப்புகளோடும் அந்த கதையை கதிரேசன் திவ்யாவிற்குச் சொல்ல, குழந்தை குதூகலித்தாள். வாய் விட்டு சோழிகள் இறைத்து போல் சிரித்தாள்.

கதிரேசனின் கையை தன்னைச் சுற்றிப் போட்டுக் கொண்டு, மிக வாஞ்சையோடு அவனைப் பார்த்தபடி படுத்துக் கிடந்தாள்.

அப்போ நாரதர் சொன்னார் ரொம்ப கஷ்டப் படாதீங்க. எவ்வளோ பலம் காமிக்க முடியுமோ அவ்வளோ பலமும் காமிச்சுட்டீங்க. அந்தப் பாலம் உடையல. ஏன்னா அது வெறும் அம்புப் பாலமில்லே. அது அர்ச்சுனன் பாலம் இல்லே. அது மகாபரமாத்மாவான கடவுளுடைய ரூபமான, கிருஷ்ணருடைய பெயரைத் தாங்கியிருக்கிற பாலம். நீங்கள் எப்படி ராமருடைய பெயரை எழுதி, பாறைகளை கடல்லபோட்டு பாலம் கட்டினீங்களோ அதே போல அர்ச்சுனன் ஒவ்வொரு அம்புலையும் கிருஷ்ணன் பெயர் இருக்கணும்னு நினைச்சுண்டு போட்டிருக்கான். ஒவ்வாரு அம்புலையும் கிருஷ்ணனுடைய பெயர் இருக்கு. அதை நீங்க குதிச்சு உடைச்சிட முடியுமா' அப்படின்னார்.

அப்போ கிருஷ்ணர் ராமரை விட உசத்தியா அப்படின்னு அனுமார் கேட்டார்.

அய்யா, எல்லாம் தெரிஞ்ச நீங்களே இப்படி மதிமயக்கமா கேக்கறீங்களே, அதோ பாருங்க' அப்படின்னார்

அங்கே கிருஷ்ணர் வந்தார். அர்ச்சுனன் ஓடிப் போய், கிருஷ்ணான்னார்.

அங்கே கிருஷ்ணர் ராமரா மாறினார். ஆஞ்சநேயர் ஓடிப் போய். ராமான்னார்.

ரெண்டும் சேர்ந்து மகா விஷ்ணுவாக மாறிற்று ராமரும் அவரே, கிருஷ்ணரும் அவரே. கதை முடிந்தது கத்தரிக்காய் காய்த்தது."

குழந்தை அவனைக் கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தாள்.

சட்டென்று குழந்தையின் வாஞ்சையை தொலைவி லிருந்து பார்த்த நிர்மலாவிற்கு கண்ணில் ஜலம் தளும்பியது.

நீ தூங்கலே என்று சொல்ல, தூங்கப் போறேம்மா என்று தன் படுக்கைக்குத் தாவி படுத்துக் கொண்டது. அவன் போர்வையைப் போர்த்தி குழந்தையின் கன்னங்களில் முத்தம் கொடுத்து, கண்ணை வருடி, நெற்றியையும் தலை மயிரையும் லேசாக தடவிக் கொடுத்தான்.

குழந்தை உறக்கத்தில் ஆழ ஆரம்பித்தாள் திரும்பினான். அருகே நின்று கொண்டிருக்கிற நிர்மலாவை ஆவலோடு பார்த்தான்.

நிர்மலா அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"வேலை முடியலையா..." அவளைப் பார்த்து கேட்டான்.

"முடிஞ்சுடுக்சு, ஊதுவத்தி கொளுத்திட்டு வந்துடறேன்."

அவள் ஊதுவத்தி கொளுத்தினாள். அன்னபூரணிக்கு காட்டினாள். எதிரே உள்ள ஊதுபத்தி ஸ்டாண்டில் சொருகினாள். சுற்றும் முற்றும் பார்த்து சமையலறை சுத்தமாக இருப்பதை உறுதி செய்து கொண்டு, பாத்ரூமுக்குள் நுழைந்தாள். சோப்புக் கட்டி எடுத்து முகம் கழுவிக் கொண்டாள். நைட்டிக்கு மாறினாள். பவுடர் போட்டுக் கொண்டாள் பாடி ஸ்பிரே தெளித்துக் கொண்டாள். தலைப் பின்னலைப் பிரித்து நுனியில் சிறிய முடிச்சாய் போட்டுக் கொண்டாள். திரும்பி அவனைப் பாரத்து சிரித்தாள். அந்த சிரிப்பில் ஒரு வரவேற்பு இருந்தது.

பெண்கள் குதூகலமான நேரம், ஆண்களுக்காக தயாராகும் நேரம்தான். தூண்டிய இளமைக்காக, தன் கூடலுக்காக, தன்னை அனுபவிப்பதற்காக ஆவலோடு ஒரு ஆண் காத்துக்கிடக்கிறான் என்கிற பெருமை பெண்ணை பூரிப்படையச் செய்கிறது.

இந்த பூரிப்பு அவளுக்குள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அந்த நம்பிக்கை அவளுக்குள் இருக்கும் காதலை கிளறுகிறது. ஆணை முழுவதும் நேசிக்கின்ற ஒரு நல்ல நிலைமைக்கு அந்தப் பெண் விரைவில் போகிறாள்.

"ஏன்னா. இன்னிக்கு என்ன பண்றதா உத்தேசம்" அவள் அவனுக்கு நெருங்கி உட்கார்ந்து கொண்டு, முகத்தை அவன் முகத்துக்கு நேரே வைத்து கேட்டாள்.

மல்லாந்து படுத்துக் கொண்டிருக்கிறவன் வலக்கை நீட்டி அவளைத் தொட்டான். வருடினான்.

"நான் ஒண்ணும் பண்றாப்ல இல்ல. நீ எதுனா பண்ணு" என்று இரண்டு கைகளையும் தலைக்கு மேல் போட்டுக் கொண்டான்.

"ஏன் நீங்க வந்தா என்ன கௌரவக் கொறைச்சலா."

"இல்ல...சும்மா கை கால் அசைக்காத அப்படியே கிடக்கணும் போல் இருக்கு. என்னை யாராவது தூக்கி எடுத்து கொஞ்சினா, தாலாட்டுனா நல்லாருக்கும் போல இருக்கு."

"உடம்புக்கு ஏதாவது அலுப்பா."

"உடம்புல ஒரு அலுப்புமில்ல. மனசுல கொஞ்சம் தளர்ச்சி."

"ஏன்."அவள் ஆவலோடு கேட்டாள்.

"சும்மா சும்மா இதானே பண்ணிட்டிருக்கோம். இதுக்கு மேல ஒண்ணுமில்லியே. இது வேணாம்னாலும் மனசு கேக்கமாட்டேங்குது. அதே நேரம் செய்யறதுக்கும் இஷ்டமில்ல. ஒரு இரண்டுங்கெட்டான் நிலைமையில நான் இருக்கேன். புதுசா ஏதாவது அப்படின்னு ஆரம்பிச்சோம்னா

கொஞ்சம் மிருகத்தினமா அநாகரிகமா இருக்கு. பிரியமா பண்றதுக்கு இதுல ஒண்ணுமில்லேன்னு தோணுது."

"அடேங்கப்பா. இவ்வளோ சீக்கிரம் அலுத்திருச்சா."

"இல்லே அலுத்ததா சொன்னா பொய். ஒரு சின்ன தளர்ச்சி இருக்கு. உடம்புல இல்ல. நினைப்புல இருக்கு."

"என்மேல பிரியம் குறைஞ்சு போச்சா...'

"அது எப்படி குறையும். உம் மேல பிரியம் குறையறா மாதிரியா நீ வச்சுருக்கே. அப்படி இல்ல நிர்மலா. ஏன் மனசு இதுல திரும்பத் திரும்ப ஈடுபடுது. ஒரு சின்ன விஷயம் கண்டு பிடிச்சிருக்கேன்."

"என்ன அது."

"நீ இல்லாத போது ஒண்ண இழுத்து தொந்தரவு பண்ணி, ஹிம்சை பண்ணி, சண்டை போட்டு லேசா வலிக்கப் பண்ணி, கூடணும்னு ஆசையிருக்கு. உன்னை பார்த்தத பிறகு எதுக்கு, வெறுமனே பக்கத்துல படுக்க வச்சு தலைய தடவிட்டு துங்கிடலாம்னு தோணுது. அப்ப ஏன் அந்த மாதிரி யோசனை பண்றேன். இப்ப ஏன் சைலன்ட்டாகறேன் எனக்குப் புரியல. உன்னைப் பார்த்தா வேகம் கம்மியாகுது. உன்னைப் பார்க்காத போது திமிரும், ரௌத்ரமும், வெறியும் அதிகமாகுது."

"ஒரு வேளை நான் நேரா நல்லா இல்லியோ என்னமோ"

"சும்மா ஏதாவது உளராதே. நான் எவ்வளவு முக்கியமான ஒரு விஷயம் பேசிக்கிட்டிருக்கேன். அது என்னான்னு யோசனை பண்ணாத, வாய்க்கு வந்தத பேசுனா என்ன அர்த்தம்."

"என்ன தெரியுமா காரணம்."

"சொல்லு" அவன் சற்று நிமிர்ந்து தலையை படுக்கையின் மீது உயரமாக்கிக் கொண்டான்.

"நீங்க நல்லவங்களாயிட்டு வர்றீங்கன்னு அர்த்தம்."

"என்ன...திடீர்னு ஐஸ் வைக்கறே."

"ஆங், நான் உண்மை சொன்னா அதை நம்புறது கிடையாது. அப்புறம் சொல்லலியே சொல்லலியேன்னு கத்தறது."

"சரி சொல்லு கேட்கறேன்."

"நீங்க ரொம்ப சீக்கரமா மாறிக்கிட்டு வார்றீங்கன்னு அர்த்தம். உங்களால பொய்யா இருக்கமுடியலன்னு அர்த்தம் ஆளில்லாதபோது ஏற்படற வெறி, ஏன் நேரா வரலை அப்படின்னா, நேராப் பார்க்கிறபோது என்னைப் பத்தி சகலமும் நிறைவா தோணுது.

ஆளில்லாத போது உடம்பு மட்டும்தான் வருது. உடம்பு மட்டும் கண்ணுக்கு தெரியறபோது மனசுக்குள்ள கூத்தாட்டம் ஜாஸ்தி ஆகுது. ஆள் எதிர பார்த்தவுடனே, நான் நின்னது போனது, அழுதது, சிரிச்சது எல்லாம் ஞாபகம் வருது. பழைய கதை மொத்தமும் உள்ளுக்குள்ள வருது. என்னுடைய பழைய கதை உங்க மனசுல தோணிடுச்சுன்னா ஆத்திரம் வருமா வேகம் வருமா, வராதில்லே, அதனாலதான் என்னைப் பார்த்த உடனே சைலன்ட்டாயிடறீங்க. ஆனா, நீங்க நினைக்கிறதுக்கு நேர் மாறா நான் நினைக்கிறேன்."

"என்ன,எப்படி."

"நீங்க இல்லாத போது உங்களைப் பத்தி எந்த நினைப்புமே எனக்கு வர்றதில்லே. நீங்க வீட்டுக்குள்ள இருக்கீங்கன்னா உடனே இன்னைக்கு ராத்திரி இவன் என்னா பண்ணப் போறான். ஏது பண்ணப் போறான்

அப்படின்னு ஒரு அலையல் ஆரம்பிச்சுடும். அதுவும் ராத்திரி எட்டு மணி ஆனதுன்னா போதும். அடடா இவன் ஏதாவது பண்ணுவானே புதுசு பதுசா அப்படின்னு ஒரு திமிர் எழுந்திரும்.

நீங்க ஊர்ல இல்ல. போய்ட்டீங்கன்னு வச்சுக்குங்க. இதே எட்டு மணிக்கு கடகட கடன்னு முடிச்சுட்டு படுக்கைல விழுந்து, கொஞ்ச நேரம் தூங்குற வரைக்கும் டி.வி.பார்த்துட்டு, டி.வி. அணைச்சகையோட கண்ணு சொருகி விழுந்துரும் தூங்கிருவேன்.

நெல் முனை அளவு கூட ஆம்பளை வேணும்னோ, இருந்தா நல்லாருக்கும்னோ, நேத்து என்ன பண்ணே, முந்தா நேத்து என்ன பண்ணேன்னோ நான் யோசிக்கவே மாட்டேன். சுத்தமான்னா கொஞ்சங்கூட ஒரு புள்ளி கூட காம விகாரமே வராது. நல்லா தூங்கிருவேன். இது எனக்கு ஆச்சரியமான இருக்கு. இது ஏன்" அவள் அவனைக் கேட்டாள்.

"இது ஒரு மாதிரி கடமை உணர்வு. புருஷன் இருக்கான். புருஷன் இருக்கான்னு தெரிஞ்சதும் அவனுக்கு சோறு பொங்கிப் போடற மாதிரி, துணி துவைச்சுப் போடற மாதிரி இதையும் பண்ணியாகணும்கிற ஒரு கடமை உணர்வு நான் இல்லேன்றபோது எனக்கு எதுக்கு சோறு போடணும். நான் இல்லேன்றபோது என்னுடைய துணிய எதுக்கு துவைக்கணும்."

கதிரேசன் நிர்மலாவினுடைய அண்மை தாங்காமல் உடம்பு முறுக்கி சோம்பலை வெளியேற்றினான். நாடி நரம்புகளை சுறுசுறுப்பாக்க கை கால்களை இறுக வைத்து மறுபடியும் தளர விட்டான். அவளையே ஆவல் பொங்கவும் பார்த்தான். தோள் மீது கை வைத்தான். அவள் முகத்தை வருடினான். உடலைத் தழுவினான். கால்களை வருடிக்

கொடுத்தான். கழுத்தின் பின்புறம் மெல்ல அழுந்தப் பற்றி தளர விட்டான். எழுந்து நின்று அவளுக்கு அருகே மூச்சு முட்டுகிற தூரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

நிர்மலாவுக்கும் அந்த அண்மையால் மனம் கிளர்ந்தது. அவன் தலையைக் கோதி விட்டாள். கண்களில் முத்த மிட்டாள். மூக்கை மெல்ல கடித்தாள். அவன் நெஞ்சு ரோமத்தை வருடத்துவங்கினாள். சட்டென்றுநிர்மலாவுக்குள் ஒரு விளையாட்டு தோன்றியது. ஒரு சோதனை செய்து பார்த்தால் என்ன என்ற எண்ணம் வந்தது. இவன் எப்படி நடந்து கொள்வான் என்று பரீட்சித்து பார்க்கும் ஒரு புத்தி ஏற்பட்டது.

இப்போது இந்த நிலையில் என்னால் முடியாது முடியவில்லை என்று சொல்லி விட்டால் இவன் என்ன செய்வான். எவ்வளவு கோபப்படுவான். அல்லது கோபமே படமாட்டானா ஒரு முறை இவனுடைய புத்தியின் நீள அகலத்தை மறுபரிசீலனை செய்தால் என்ன என்று யோசித்தாள்.

சட்டென்று சோதனை செய்யலாமா என்று கணக்குப் போட்டாள். ஒரு வேளை காமம் தாங்காமல் வேகமாய் கடிந்து கொண்டால் கூச்சலிட்டால், முகம் தூக்கி வைத்துக் கொண்டால், ஒரு வார சண்டையாக மாறி விட்டால் என்ன செய்வது என்று லேசான பயம் இருந்தது. மறுபடி எப்படியாவது சமாதானம் செய்து கொள்ளலாம். மேலே விழுந்து, புரண்டு கெஞ்சி, கூத்தாடி மறுபடியும் அணைத்து சுகப்படுத்தி இவனை சரி செய்து விடலாம். எனவே இந்த சோதனையை ஒரு முறை செய்து பார்ப்போம் என்று தோன்றியது.

“ரொம்ப ஆசையா இருக்கா” அடிக் குரலில் கேட்டாள்.

"என்ன கேள்வி இது வந்து பக்கத்துல உட்கார்ந்து உரசிட்டு ஆசையா இருக்கான்னா எதுக்கு உரசறே."

"இல்ல கண்ணு, உன்னைப் பார்த்தா பாவமாயிருக்கு அதனால் தான்."

"என்ன திடீர்னு"அவன் பதிலுக்குக் கேட்டான்.

"இன்னிக்கு வேணாம்னு தோணுது."

"ஏன்."

"எனக்கு முடியல."

"எதனால."

"என்னமோ கை கால்லாம் ஒரு உளச்சலா இருக்கு. கொஞ்சம் வயிறு சங்கடப்படுத்துது. முழங்கால் முட்டியில ஒரு வலி இருக்கு. வாயுக் கோளாறுன்னு நினைக்கறேன். முழங்கால் மடிக்கவோ நீட்டவோ முடியல. மடிக்கிற போது ஒரு வலி நீட்டறபோது ஒரு வலி. அது தவிர வயித்துல ஒரு சங்கடம். வெறுமனே பக்கத்துல உட்கார்ந்து பேசிட்டு தூங்கலாமா."

அதுவரை இருந்த சந்தோஷமும, ஆர்வமும் சரசரவென்று வடிந்தன. அவன் அவளையே பார்த்தான். சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டான்.

"சரி, உடம்பு சரியில்லனா என்னா பண்றது. படுத்து தூங்கு."

"கொஞ்ச நேரம் பேசிட்டு தூங்கலாம்."

"வேணாம், பேசினா ஆசை ஜாஸ்தியாகும். உனக்கு வலியிருந்தா என்ன, அப்படின்னு ஒரு திமிரா நடக்கத் தோணும்."

"உங்க கூட கொஞ்ச நேரம் கண்ண மூடி படுத்திருந்தா, தூக்கம் தானா வந்துரும். இப்போது எனக்கு தூக்கம் வரலையே, கொஞ்ச நேரம் எதுனா பேசுங்களேன்."

"எனக்கு தூக்கம் வருது."

"அப்படியா இவ்வளோ ஆசையா இருந்துட்டுடக்குனு தூக்கம் வருதுங்கறீங்க."

"நீதான் முடியாதுண்றயே. அப்புறம் ஆசையை வளர்த்துக்கிட்டு என்ன பண்றது. நான் தூங்குறேன். அந்த வேலையாவது ஒழுங்கா செய்வோம்." அவன் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான்.

"கோபமாப்பா" அவள் அவனைத் தழுவிக் கொண்டு கேட்டாள்.

தன்னுடைய மார்பை அவன் புஜத்தில் புதிய வைத்து, அவன் முகத்தை வருடிக் கொடுத்தாள்.

"இல்லையே... தூங்கு. காலையாவது உடம்பு சரி யாகட்டும். நாளைக்காவது நடத்திக்குவோம்."

அவன் இந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டதாய் நினைத்துக் கொண்டு பேசினான்.

"இல்லே. உங்களப் பார்த்தா பாவமா இருக்கு. அதனால தான் கொஞ்ச நேரமாவது கொஞ்சிட்டு போறேன்."

"நீ ரெண்டுங் கெட்டானா பண்றே. கொஞ்ச நேரம் கொஞ்சிட்டின்னா, அப்புறம் நான் மிச்ச நேரம் சாவேனில்ல. அதனால சொல்றேன். பேசாத படுத்துத் தூங்கு."

"இப்படி...கட்டிட்டு தூங்கட்டுமா."

"வேணா, அதுகூட எனக்கு கஷ்டமாக இருக்கும்."

"எனக்கு வேணும்போல் தோணுதே."

"என்ன சொல்றே."

"உடம்பு சரியில்லையா, யாராவது கட்டிக்கிட்டா நல்லாருக்கும்னு தோணுது. நான் யாரையாவது கட்டிண்டு படுத்திருந்தா நல்லாயிருக்கும்னு தோணுது. அதனாலதான், இது தப்பா" என்று கொஞ்சினாள்.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

"சரி படுத்துக்க. நான் உன்னை கட்டிக்கிறேன்."

படுப்பதற்காக காத்திருந்தான். அவள் மெல்ல படுக்கையில் சரிந்தாள். அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள். கன்னங்களில் முத்தமிட்டாள். மெல்லியதாய் உதடு கவ்வினாள்.

"பேசணும்னு சொல்லிட்டு வேற என்னவோ எல்லாம் பண்றே."

"ஏன் இந்த மாதிரி மெல்லிசா விளையாடினா தப்பா."

"ஏய், ஆளை உசுப்பேத்தி விட்டுட்டு, அப்புறம் தூங்கு தூங்குன்னா எப்படி தூங்கறது."

"எல்லாந்தான் செய்யணும். எனக்கு பிரியமா நடந்துட்டு தூங்கறது உங்களால முடியாதா. செய்தா என்ன. நான் தூங்குற வரைக்கும் கொஞ்ச நேரம் கொஞ்சிட்டு இருக்கறது. அப்புறம் தூங்கறது. பெரிய கம்ப சூத்தரமா." அவள் ஒரு வழி சொல்லிக் கொடுத்தாள்.

அவன் மறுபடியும் அவளையே உற்றுப் பார்த்தான். 'என்னமோ விளையாடறே நீ' என்பது போல் அந்தப் பார்வை இருந்தது.

அவன் அவள் விருப்பப்படியே அவளைக் கொஞ்சினான். காது மடல்களைக் கடித்தான். புஜங்களில்

முகம் பதிய வைத்து இழைத்தான். உடம்பு முழுவதும் கைகள் படரவிட்டு அவளை வருடிக் கொடுத்தான்.

அவள் அந்த சுகம் தாங்காமல் முனகினாள். உடம்பை முறுக்கி தளர்த்தினாள். "வா வந்துரு" என்று அழைத்தாள்.

"வேணான்னு சொன்ன."

"இல்ல. பாவம் நீ வந்துரு" என்று சொன்னாள்.

"ஏய் நீ பொய்தானே சொல்றே" அவனுக்கு லேசாய் கோபம் வந்தது.

"இல்லப்பா உடம்புக்கு முடியல. அதனால சொல்றேன்."

"ஏய் உடம்புக்கு முடியலேன்றது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுமா. போன நிமிஷம் வயிறு வலிக்குது, கால் மடக்க முடியல நீட்ட முடியலன்னே. இப்ப கால மடக்கி, நீட்டி யிருக்கே. என்ன விளையாட்டு இது. என்னை வெறுப்பேத்தறியா நீ என்ன சொல்றான் பார்க்கலான்னு ட்ரை பண்றியா." அவன் அவளுடைய புத்தியின் கோணலை தெரிந்து கொண்டு கூச்சலிட்டான்.

ஆமாம் என்று ஒத்துக் கொண்டால், ஒரு வேளை அவள் விலகியும் போகக் கூடும். இந்த மாதிரி தந்திரமா யிருக்கிற நாயோட என்னால படுக்க முடியாது என்று உதறிவிடக் கூடும். எங்கிட்டேயே இப்படியெல்லாம் நடந்துக்கிறயே என்று கோபமடையக் கூடும் என்பதால், "இல்லப்பா நெஜமாவே உடம்பு சரியில்ல. ஆனா நீ தொட்ட உடனே, ஒரு மாதிரி எனக்கும் வேணும்னு தோணுது. நீ தொடுற ஆசையப் பார்த்தா உனக்கு கொடுத்துட்டுதான் தூங்கணும்னு தோணுது வலிச்சா பரவாயில்ல எல்லாம் மறந்து போயிடும் வா" அவள் பொய்யை விடாது மெய்யாக்கினாள்.

முழு வேகத்தில் இயங்க வேண்டும் முரட்டுத் தனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மனசுக்குள் திட்டமிட்டுக் கொண்டிருந்தவனுக்கு, அவளுடைய எச்சரிக்கை காரணமாக ஒரு நிதானம் வந்தது.

அந்த நிதானத்தின் விளைவாய் அவளுக்கு ஏற்ற வண்ணம் அவளுக்கு பிடித்த வண்ணம் அவள் தாங்கும் வண்ணம் விரும்பும் வண்ணம் நடந்து கொள்ளத் தோன்றியது.

அவள் முகத்தைப் பார்த்து அதற்கேற்றபடி தன்னுடைய நடவடிக்கைகளை அவன் மாற்றிக் கொண் டான். அவள் கண்மூடி அதை ரசித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு பொய் சொன்னதால் உண்டான லாபத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

இப்பொழுதேனும் சொல்லிவிடலாமா. எனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லை. நான் சும்மா விளையாட்டுக் காகச் சொன்னேன் என்று அவனிடம் தெரிவிக்கலாமா.

அவன் கோபித்துக் கொள்வான். சட்டென்று எல்லாவற்றையும் உதறிவிட்டு, போனாலும் போய் விடுவான்.

உன்ன மாதிரி ஒரு கேவலமான ஜென்மத்தை நான் பார்த்ததில்லைடி என்று ஆரம்பித்து அவளோடு நாலைந்து நாட்கள் பேசாது போனாலும் போய்விடுவான். இனிமேல் இந்த உண்மையைச் சொல்வதில் லாபமே இல்லை.

வலிய வலி இருப்பது போல, அவனுக்காக அதை பொறுத்துக் கொள்வது போல, முடியாது போயினும் அவனுக்காக ஒத்துழைப்பது போல, பேசின பொய்யை தொடர்ந்து நடத்தத்தான் வேண்டும். அது இரட்டிப்பு லாபத்தைத் தரும்.

இப்படி நிதானமாய் தனக்காக தன்னைப் பார்த்து அவன் நெருங்குவதும் பரமசுகமாய் இருக்கிறது. இல்லையெனில் அவனுடைய விருப்பத்துக்கு ஈடு கொடுத்து வெறுமே சில முரட்டுத்தனங்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இது அற்புதமாக இருக்கிறது. இது பொய்யற்று இல்லாமல் உண்மையாகவே இருந்திருந்தால் இன்னும் சுகமாக அனுபவித்திருக்க முடியும். அதனாலென்ன ஒரு பொய் நல்ல சுகத்தை தருகிறதென்றால் தொடர்ந்து பொய் சொல்லாமே என்று தீர்மானித்தாள். நடு நடுவே வலிப்பது போல் நடித்தாள். முழுங்கால்களைத் தடவிக்கொண்டாள்.

"போதும். நான் நகர்ந்துக்கறேன்" என்று சொல்ல,

"வேண்டாம். உன்னை பட்டினி போடறதுக்கு எனக்கு இஷ்டமே இல்ல. அப்புறம் எனக்கு தூக்கமே வராது. அய்யோ நீ சாப்பாடு இல்லாது தூங்கறியேன்னு மனசு அவஸ்தைப்பட ஆரம்பிச்சுடும். அதனால உன்பாட்டுக்கு உன்னுடைய வேலையை நீ தொடர்ந்து செய்" என்று அன்புக்கட்டளையிட்டாள். அவனை செய்வதற்குத் தூண்டினாள். ஆவேசப்படுத்தினாள். அவன் சந்தேகத்தில் தவித்தான்.

கால் வலின்னு ஒரு க்ஷணம் நடிக்கிறது, ஆனால் ஒத்துழைப்பதைப் பார்த்தால் உடம்பின் ஒரு பகுதியிலும் வலியில்லை என்பது போல்தான் தெரிகிறது, இவள் பொய் சொல்கிறாளோ. தன்னை எடை போட்டுப் பார்ப்பதற்காக நாடகமாடுகிறாளோ என்று யோசித்தான்.

இவள் செய்தாலும் செய்வாள். இவளுக்கு தன்னை கொஞ்சணும்னு ஆசை வந்துருச்சுன்னா, உடம்புக்கு முடியாதவ மாதிரி நடிக்கிறவள், இது ஒண்ணும் புதுசில்ல இப்போ நடிப்பு ஜாஸ்தியா இருக்கு. ஆனால் தொடர்ச்சியா இல்லை. தீடீர் திடீர்னு நடக்கிறது மறந்து போகுது. உடம்புல வலியிருந்தா இப்படி இணையா ஆட்டம் போட முடியுமா.

நாம சந்தேகப்படும்போது ஆஹா, வலிக்குதுன்னு பொய் சொல்றாளே தவிர உண்மையில் இவளுக்கு வலி இல்லன்னுதான் தோணுது. இருந்துட்டு போகட்டும் எதுக்கு பொய்சொல்றா. தனக்கு இதமா புருஷன் நடக்கணும்னு தானே. செய்திரலாம், அது ஒண்ணு பெரிய கஷ்டமில்லே. உனக்கு இதமா நடக்கணும்கிறதுதான் என்னுடைய லட்சியமும்கூட.

உனக்கு இதமா நான் நடக்கறாப் போல, எனக்கு இதமா நீ நடக்க கத்துக்கோ. அந்த புத்தி உனக்கு வந்திருச்சுன்னா நல்லாருக்கும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, மேலும் அவளை சந்தோஷப்படுத்துகிற விதமாய், அவளுக்கு தீனிபோடுகிற விதமாய் அவன் நடந்து கொள்ள, அவள் பரவசத்தில் கிறங்கினாள். வாய்விட்டு அனற்றத் துவங்கினாள். சந்தோஷத்தின் உச்சியில் நெகிழ்ந்து நெகிழ்ந்து அவனை இறுக்கிக் கொண்டாள். ரொம்ப தேங்ஸ்டா என்று உளறிக் கொட்டினாள்.

அவன் அவளையும் அமைதிப்படுத்தி, தன்னையும் அமைதிப்படுத்திதக் கொண்டான்.

அயர்ந்து. நகர்ந்து அவளுக்கு அருகே வெறுமே தழுவியபடி படுத்துக் கொண்டான். அவளுக்கு சந்தோஷம் தாங்கவில்லை அவனை இறுக்கிக் கொண்டு முத்தமழை பெய்தாள். இப்போதாவது சொல்லிவிடலாமா என்று நினைத்தாள்.

வேண்டாம் எல்லாம் கெட்டுப் போய்விடும். சகலமும் சண்டையாகிவிடும். இத்தனை சந்தோஷமும் கசப்பில் போய் முடிந்துவிடும். எனவே முழுங்கால் வலி, வயிறு கலங்குவது என்பதை இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்காவது பேசி, நடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தாள். அதற்கு ஞாபகப்படுத்திக் கொள்ளும் விதமா அந்த விஷயத்தை உரு போட்டுக் கொண்டாள்.

இது அப்பப்போ எடுத்துவிட வேண்டியபொய் என்று நினைவுபடுத்திக் கொண்டாள். அவள் தந்திரம் அவளுக்கே வேதனையாக இருந்தது. இவ்வளவு நல்லவரா ஒரு புருஷன் இருக்கான். இத்தனை உண்மையா ஒரு புருஷன் இருக்கான், ஆனா அவன்கிட்ட பொய் சொல்ல வேண்டியிருக்கு. அவன்கிட்ட உண்மையாக இல்லாமல், ஏதோ நாடகமாட வேண்டியிருக்கு. இது தேவைதானா என்று கேட்டுக் கொண்டபோது, சும்மாரு உண்மையைச் சொல்றேன்னு ஆரம்பிச்சு செருப்படி வாங்காதே. இதான் நல்லது. ஒரு பொய்னால உலகம் ஒண்ணும் கெட்டுப் போயிடாது. வேணா ரெண்டு மூணுநாள் கழிச்சு வேட்டையாடிக்கோ அப்படின்னு அவனுக்கு வரம் கொடுத்துரு, அவன் பின்னால் கணக்கு தீர்த்துக்கட்டும் என்னு தீர்மானித்தாள்.

ஆனால், மனசின் ஒரு ஓரம் உண்மை உறுத்தி, எகிறி எகிறி அவளை தொந்தரவு செய்து கொண்டிருந்தது. கூடலில் மட்டுமல்ல, இன்னும் பல்வேறு விஷயங்களில் இவனோடு பொய்க் குடித்தனம்தான் நடத்திக் கொண்டிருக்கிறாய். மிக உண்மையாக இருக்கிற ஒரு புருஷனிடம் மிக பொய்யாக, நடந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய அல்பத்தனத்தை அவ்வப்போது காட்டிக் கொண்டிருக்கிறாய். உன்னால் நூறு சதவீதம் உண்மையாய், நேர்மையாய் புருஷனிடம் நடக்க முடியவில்லை. புருஷனிடமே நேர்மையாய் நடக்க முடியாத உன்னால் வேறு யாரிடம் நேர்மையாய் நடக்க முடியும்.

பொய் சொல்வதே, எல்லோரிடமும் பொய்யாய் இருப்பதே உன்னுடைய வாழ்க்கையாகப் போய்விட்டது. அந்தப் பொய்யை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய தந்திரம் வேறு வந்தவிட்டது எல்லாவற்றையும் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

நூறு சதவீதம் உண்மையாய் யாரிடமும் நடந்து கொள்ள முடியவில்லை என்பது ஒரு வேதனைதான். முப்பது

வயதில் வாழ்க்கை பற்றி தெளிவாக ஒரு அபிப்ராயம் வந்த பிறகும், சத்தியமாக இருக்க முடியவில்லை என்பது வருத்தமான விஷயம்தான்.

தான் இந்தப் பொய்யைச் சொல்லாமல் சாதாரண மாகவே இருந்திருக்கலாம். ஆனால், புத்தி அடிக்கடி பொய்க்குத் தாவுகிறது. பொய் சொல்வதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஏமாற்றுவதில் ஒரு ஆனந்தம் இருக்கிறது. இது சின்ன வயதுப் பழக்கம். இதிலிருந்து விடுபடவே முடிய வில்லை.

வாழ்க்கை பலமுறை தண்டித்தும். தள்ளி மிதித்தும் இந்தப் பழக்கம் போகவில்லை. ஆனால்,கதிரேசன் வேறு யாரிடம் உண்மையாக இருக்கிறானோ இல்லையோ தன்னிடம் மிக மிக உண்மையாக இருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தன்னிடம் எது குறித்தும் அவன் பொய் சொன்னதாக அவளுக்கு ஞாபகம் இல்லை. அவன் பொய் சொல்ல விருப்பம் இல்லாதவனாவே இருந்திருக் கிறான்.

பல நேரங்களில் அவளை அனுபவிக்க ஆசைப் படுகிறபோது கூட. பொய் சொல்லாமல், நாடகம் ஆடாமல் நேரடியாய் அவளிடம் கேட்டியருக்கிறான். மறுத்த போதும், மறுக்காத போதும் ஒரே விதமாக இருந்திருக்கிறான். அந்த புத்தி தனக்கு வரவே இல்லை. ஏன் என்று யோசித்தாள். புரிபடவில்லை.

இப்படி எல்லா நேரமும் தன்னிடம் உண்மையாக இருப்பதற்கு அவனுடைய அடிப்படையான எந்த விஷயம் காரணம் என்று படுத்தபடியே யோசித்தாள்.

அவனுக்கு தன்னை சோதித்துகப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை. ஏன் அப்படி.

அவள் எப்படி இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளு கின்ற பக்குவம் அவனிடம் வந்துவிட்டது.

தனக்கு சந்தேகமிருப்பது மட்டுமில்லாமல் அந்த சந்தேகத்தின்பால் ஏற்பட்ட பயத்தின் காரணமாய் தொடர்ந்து புருஷனை சோதித்துக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

இந்த பயத்துக்கு என்ன காரணம். அவள் யோசித்தாள். மனம் அமைதியாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தது.

சொல்லு எதுக்கு பயம். எதுக்கு இவனைப் பார்த்து பயம் என்று யோசிக்க அவளுக்கு சட்டென்று ஒரு துக்கம் பரவியது.

முந்தைய அனுபவம் காரணம். முதல் புருஷன் காரணம். அவன் கொடுத்த கொலை நடுக்கம் காரணம். அந்த மோசமான அனுபவத்தால், மனம் பாழ்பட்டு நொய்மை யாகி அடிக்கடி இப்படியொரு கேவல புத்தியை கைக் கொள்ள ஆரம்பித்து விட்டது.

அவளும் இருபத்தோரு வயதில் அல்லது இருபத்து மூன்று வயதில் ஒரு அருமையான புருஷனோடு வாழ்ந் திருந்தால், அவளுக்கு இனிமையான ஒரு கணவன் வாய்த்திருந்தால், இந்த திருட்டு எண்ணங்கள் வந்திருக்காது.

மிகவும் உண்மையாய் நூறு சதவீதம் நேர்மையாய் அவளும் இருக்க முயற்சித்திருப்பாள். வெற்றி பெற்றிருப்பாள்.

பொய் சொல்லி, பொய் சொல்லி, பயந்து பயந்து, ஏமாற்றி, ஏமாற்றி வாழ்க்கையில் தொடர்ந்து பொய்யே வருகிறது. மாற முடியவில்லை

அவள் துக்கம் அதிகமாகியது. கண்களிலிருந்து நீர் வழிந்தது. திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் பொய்யை

மெய்யென்று நம்பியவன் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந் தான்.

அவளுக்கு உறக்கம் அறவே போயிற்று. மேலே படர்ந்திருந்த அவன் கையை எடுத்து நகர்த்திவிட்டு அவள் கீழிறங்கினாள். போய் முகம் துடைத்துக் கொண்டாள். தலையை வாரிக் கொண்டாள். மறுபடியும் லேசாய் பவுடர் போட்டுக் கொண்டாள். நகர்ந்து கதவு திறந்து பால்கனிக்குப் போனாள்.

தெரு உறங்கிக் கொண்டிருந்தது. அவள் உறங்கிக் கொண்டிருந்த தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தெருவில் கூட கனகசபாபதி பளீரென்று ஒரு முறை அறைந்திருக்கிறான். காய்கறிக்காரன் பயந்து போய் திகைத்து நின்றிருக்கிறான். அதே தெருவில் காய்கறி விற்காமல், வண்டியை தள்ளிக் கொண்டு போய் தெருமுனையில் நின்று கூவியிருக்கிறான்.

கனகசபாபதி அவளை அடித்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. ஆனால் அவன் சொன்ன காரணம்தான் அந்த தெரு முழுவதையும் வியக்க வைத்தது. முட்டாள் என்று அவனை கோபிக்க வைத்து. ஆனால் கனகசபாபதி மற்றவர் கோபத்தைப் பற்றி சிறிதளவும் அக்கறைப்படவில்லை

"என்னடி...காய்கறிக் கடைகாரன்கிட்ட கால் மணி நேரமா பேசிட்டிருக்கே. என்ன நான் ஒருத்தன் போறலையா உனக்கு" அவள் திகைத்து நிற்கும் போதே ஒரு அறை வாங்கினாள்.

மறுபடியும் அந்தக் காட்சி நிர்மலாவின் மனதில் திரைப்படமாய் ஓடியது.

# 2

பிளஸ்-டூ முடித்தவுட னேயே அவளுக்கு திருமணம் பேசத் துவங்கி விட்டார்கள். நாலைந்து பேர் பெண் பார்த்து விட்டுப் போனார்கள். வந்த நாலைந்து பேரையும் அவள் வீடுதான் வேண்டாம் என்று ஒதுக்கியது.

வந்தவர்கள் விருப்பத்தோடு திருமணம் செய்து கொள்ள முன் வந்தார்கள்.

இந்தப் பையன் கருப்பு. அந்தப் பையன் ரொம்ப நெட்டை. இவனுக்கு சம்பளம் போறல. இவன் மூஞ்சியைப் பார்த்தாலே நல்லா இல்லே. ஏன்தான் கூப்பிட்டோமோ என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். அவளும் அந்த விமர்சனங்களில் கலந்து கொண்டாள். அவளும் தனக்குப் பிடித்தது, பிடிக்கவில்லை என்பதை வேகமாக சொன்னாள்.

அக்கம் பக்கத்தில் இதுபற்றி கேட்டபோது. “நல்ல இடத்துல பொண்ணக் கொடுக்கணுங்க. காசு முன்னப்பின்ன ஆனாலும் பரவாயிலே. காசு பத்தின கவலை எனக்கு இல்லை” என்று அவள் அப்பா ஏகதாளமாகப் பேச, அப்பாவைவிட அதிகமான ஏகதாளத்துடன் அம்மா பேசினாள் “நூத்தம்பது சவரன் நகை போட்டு கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதுக்கு தயாரா இருக்கோம் பையன்

இருந்தா சொல்லுங்கோ. ஆனா, நல்ல பையனா இருக்கணும். எழுந்திருன்னா எழுந்திருக்கணும் உட்காருன்னா உட்காரணும். எங்க வீட்டுக் குழந்தையை உள்ளங்கையில் வச்சுத் தாங்கணும்" என்று அதிரடியாய் பேசினாள்.

இப்படி யாரேனும் கட்டளை போடுவார்களா. இப்படி யாரேனும் விதிகள் சொல்வார்களா. ஆனால் அவள் வீடு கொஞ்சமும் கூச்சமில்லாமல் பெண்ணைத் தாங்குகின்ற பையன் வேண்டு மென்று எல்லோரிடமும் பேசியது.

அப்படிப்பட்ட பையன் இருந்தாலும், தான் அப்படிப் பட்ட பையன் என்று ஒத்துக் கொள்வானா என்பது பற்றி யோசிக்காமல் இருந்தது.

இதற்குக் காரணம் கொழுப்பு, காசுக் கொழுப்பு. கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் கொழுப்பாக மாறாது. கஷ்டப்படாமல் வந்த பணம் தான் கொழுப்பாக மாறும்.

அரசாங்க உத்தியோகத்தில் லஞ்சம் வாங்குகின்ற ஒரு பிரம்மாதமான இடத்தில் தகப்பனார் வேலை செய்து வந்ததால், அந்த வீட்டில் காசு தாராளமாய் புழங்கியது. எந்த வீட்டிலும் இல்லாத அளவுக்கு அந்த வீட்டில் திமிரான பேச்சுக்களும் செய்கைகளும் நடந்தன.

"உங்க வீட்டுக்காரரை யாரோ ஒரு பெண்ணோட பார்த்தேன்."

"அப்படியா சரி" அம்மா சாதாரணமாகச் சொல்வாள்.

"அவர் கூட வேலை செய்றவளா இருக்கும் கொஞ்சம் செகப்பா குள்ளமா இருப்பாளே அந்தப் பொண்ணுதானே" என்று அம்மா கேட்டாள்.

"அப்படித்தான் இருந்திச்சு. ஆனா, கூட வேலை செய்யறவங்களா இல்லை. ஆம்படியான் பொண்டாட்டி மாதிரி நடந்துகிடாங்க."

"இருந்துட்டுப் போகட்டுமே. நமக்கென்ன, நம்மள வந்து பிடுங்காத இருந்தா சரி" என்று அம்மா அலுத்துக் கொண்டாள்.

புகார் சொன்னவர் முகம் வெளிறி திரும்பிப் போனார்.

"எவன் எவள்கூட சுத்துறாங்கன்னே அலையறானுங்க. இவங்களுக்கு சுத்தவும் முடியல. சுத்துறத பார்க்காத இருக்கவும் முடியல. உள்ளுக்குள்ள பேராசை. எல்லாரையும் அவுத்துப் போட்டு பார்க்கணும்னு. ஆனா இவன் பேச்சை சொந்த பொண்டாட்டியே கேட்கமாட்டாள். என்ன பண்றது" அவன் காது படவே அம்மா உள்ளுக்குள் வந்து பேசுவாள்.

லஞ்சமாக அறுபதாயிரம் வந்தால், அந்த வீட்டின் நடவடிக்கைகள் முன் பின்னாகத்தான் இருக்கும்.

அப்பா லஞ்சம் வாங்க ஆரம்பித்த முதல் நாள் இன்னமும் தெளிவாக ஞாபகம் இருக்கிறது. ராமநாதபுரத்தி லிருந்து மாற்றி சென்னைக்கு வந்த போது, எப்படி இந்த பதவி மாற்றம் - கிடைத்தது என்று பலரும் வியந்தார்கள். சென்னைக்குப் போய் இறங்கியதும் ரயில்வே ஸ்டேஷனில் ஆறு ஏழு பேர் காத்துக் கிடந்தார்கள். கைப் பெட்டியை வாங்கிக் கொண்டார்கள். வாப்பா என்று கொஞ்சினார்கள். வாங்கம்மா என்று அம்மாவை மரியாதை கைகூப்பி வரவேற்றார்கள்.

ஒரு மந்திரியைப் போல,பெரிய கட்சியின் தலைவரைப் போல மாலையிட்டு வரவேற்றார்கள். வையில் எலுமிச்சம் பழம் கொடுத்தார்கள். நிர்மலாவிற்கு முதலில் ஒன்றும்

புரியவில்லை. வீட்டுக்குப் போனதும் அம்மாவின் காதில் கிசுகிசுத்தாள்.

"என்ன...எதுக்காக இப்படிப் பண்றாங்க."

"இது ரொம்ப செல்வாக்கான இடம்டி. அப்பா அப்பவே சொன்னாரு. மெட்ராசுக்குப் போனா உன் நிலமையே மாறிப் போயிடும்னு சரி என்னா. இப்போ, அப்படின்னு நெனைச்சேன். இவ்ளோ மாறும்னு தோணல. அப்பாவுக்குக் கூட இது அதியசமாகத்தான் இருக்கும்னு நெனைக்கறேன். இதுவரைக்கும் ஒண்ணும் பேசல" என்று சொன்னாள்.

நந்தனத்துக்கு அருகே, தனித்தனி அரசாங்க பங்களாக்கள் இருக்கும் தோட்டத்தில் ஒரு பங்களாவில் தங்க வைக்கப்பட்டார். வரவேற்பறை, பெரிய ஹால், இரண்டு படுக்கை அறைகள், ஒரு படிப்பு அறை, ஒரு சமையல் அறை, பெரிய வராண்டா, துணி உலர்த்திக் கொள்ள தனி இடம் என்றெல்லாம் இருந்தது.

சோபாக்களும், மேசைகளும், கட்டில்களும், அலமாரிகளும், டீபாய்களும், நல்ல தேக்கு மரத்தில் செய்யப்பட்டவைகளாக வீடு முழுவதும் நிரம்பிக் கிடந்தன. அம்மாவும் பொண்ணும் பொங்கிவரும் ஆனந்தத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் துள்ளித் குதித்தார்கள்.

அம்மாவைக் காண்பதற்கு அதிகாரிகள் மனைவிகளோடு வந்தார்கள். அந்த மனைவிகள் வெறும் கையோடு வராமல், இனிப்புகளும், சிறிய பரிசுகளும் கொண்டு வந்தார்கள். ஒரு அம்மாள் முழங்கை உயர குத்துவிளக்கு கொண்டு வந்திருந்தாள். அதை வாங்கிக் கொள்ளும்படி சொன்னாள். அந்த அம்மாவுக்கு வயது முப்பத்தைந்துதான் இருக்கும். ஆனால், களையாக இருந்தாள். அப்பா அந்த

குத்துவிளக்கை வாங்க மறுத்துவிட்டார். திருப்பிக் கொடுத்து விட்டார்.

நான் ஒரு அரசாங்க அதிகாரி. இப்படியெல்லாம் கை நீட்டி சக அதிகாரிகளிடம் வாங்கினால் அது நன்றாக இருக்காது. இப்படி செய்தது எனக்குப் பிடிக்கவில்லை என்று உங்கள் கணவரிடம் சொல்லுங்கள் என்று மிக இதமாக சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்.

அந்த அம்மாள் வராண்டாவில் நின்று சிறிது நேரம் அழுதுவிட்டு போக அப்பா திரும்பவே இல்லை. அம்மாவுக்கும் நிர்மலாவுக்கும் இது புரியவே இல்லை.

என்ன விஷயம் என்று அம்மா கேட்க,"லஞ்ச ஊழலில் அவள் புருஷன் மாட்டிக் கொண்டு தவிக்கிறான் என்றும், அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது தன் கையில் இருக்கிறதென்றும், அதற்காக தன்னைக் குளிர்விக்கும் முகமாய் இப்படி செய்கிறார்கள்" என்றும் அப்பா சொன்னார். தான் மிகவும் கடுமையாகவும், நேர்மையாகவும் இருக்கப் போவதாக அறிவித்தார். ஆனால் அம்மாவுக்கும் நிர்மலாவுக்கும் அந்த பெண்மணியைப் பார்த்தால் பாவமாக இருந்தது. அம்மா மெல்ல தன் கருத்தை வெளியிட, இவள் அவனுடைய மனைவியா என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவன் மனைவியைப் பற்றி, வேறு விதமாகச் சொன்னார்கள். இவள் என்னடா என்றால் மினுக்கிக் கொண்டு வருகிறாளே என்று அப்பா சொன்னார்.

மறுபடியும் அம்மாவும், நிர்மலாவும் திகைத்தார்கள்.

மனைவி என்றுதானே வந்தாள். மனைவி என்றால் உண்மையான மனைவி அல்ல. சும்மா வைத்துக் கொண்டிருக்கிறான். இவளோடு தொடர்பு ஏற்பட்ட பிறகு தான் நிறைய தவறுகள் செய்ய ஆரம்பித்துவிட்டான். அவன்

மனைவியைப் புறக் கணித்து விட்டான். அவன் மனைவி இவனுடைய அட்டகாசம் தாங்காமல், அவனிடமிருந்து பிரிந்து தனியே தன் குழந்தைகளோடு தகப்பனார் வீட்டுக்குப் போய்விட்டாள் என்று சொல்ல, அம்மாவுக்கும், நிர்மலா வுக்கும் அந்த பெண்மணியின் மீது கோபம் வந்தது.

மறுநாள் அப்பா இல்லாத நேரத்தில் அந்தப் பெண்மணி வந்து, வாசல் கதவில் நின்று அழுதபோது அம்மாவுக்கு கோபம் வந்துவட்டது.

"இந்தா, நீ வேற எங்கயாவது. போய் அழு. இங்கெல்லாம் வராதே. ஒரு நல்ல குடும்பத்தை குலச்சிட்டவ எப்படி நல்லாருக்கமுடியும்" என்று கோபமாகக் கத்த அவள் தன்னுடைய கதையைக் கேட்குமாறு பணிவோடு வேண்டினாள். உள்ளே வந்து உட்கார அனுமதி கேட்டாள். அம்மா இரக்கப்பட்டு உள்ளே உட்கார அனுமதி கொடுத்து, காபியும் கொடுத்தாள்.

அவள்தான் முதல் மனைவி என்றும் வெளியே தெரியாமல் ரகசியமாய் காதலித்தார்கள் என்றும், வெவ்வேறு ஜாதிகள் என்றும், ரகசியமாய் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டார்கள் என்றும், அதை வெளியே சொல்லாமல் மறைத்து வைத்திருந்தார்கள் என்றும், வெளியே தெரிந்த போது அந்தக் கணவரை அடித்து இழுத்துக் கொண்டு போய் சொந்தத்தில் கல்யாணம் செய்துவிட்டார்கள் என்றும், எனவே தன்னுடைய கல்யாணம் முதல் கல்யாணமாக இருக்கிறது என்றும் தான் சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் அந்தப் பெண்ணுக்கு நிம்மதி போய்விடும் என்பதால் நிராதரவாய் அவள் போய்விடுவாள் என்பதால், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் சொன்னாள்.

தான் கையோடு கொண்டு வந்திருந்த திருமணப் பத்திரங்களைக் காட்டினாள். அவளுக்கு ஒருபையனும்

பெண் குழந்தையும் இருப்பதாகச் சொன்னாள். அவர் களுடைய படமும் காட்டினாள். குழந்தைகள் மிக அழகாக இருந்தார்கள் அவள் மேல் மறுபடியும் பரிதாபம் பற்றிக் கொண்டது.

"சரி என்ன தப்பு பண்ணாங்க. எனன செய்யணும்னு நெனைக்கறே" என்று ஒரு அதிகாரியைப் போல் அம்மா விசாரிக்க ஆரம்பித்தாள்.

அங்குதான் தீவினை பிடிக்க ஆரம்பித்தது. மிகப் பெரிய தொகை லஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அதற்கான சாட்சிகளும் தயார் செய்யப்பட்டு ஒரு முறை விசாரிக்கப்பட்டு. விசாரிக்கப்பட்டது எழுதப்பட்டிருக்கிறது. இரண்டாம் முறை விசாரிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. மூன்றாம் முறை விசாரிக்கப்பட்டு தீர்ப்பு சொல்லப்பட வேண்டும்.

இப்பொழுது விசாரித்தால் முன்பு சாட்சி சொன்னவர்கள் எல்லோருமே பல்ட்டி அடிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, முதல்முறை சரியாக விசாரிக்க வில்லை என்கிற தன் கணவருடைய புகாரை ஏற்றுக் கொண்டு, இரண்டாம் முறை இந்த சாட்சிகள் அனை வரையும் விசாரித்து, அவர்கள் நேர்மாறாய் சாட்சி சொல்ல, இந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட வேண்டும் என்பது அவளுடைய விருப்பம்.

"இது எங்க வீட்டுக்காரரால-முடியுமான்னு தெரியலையே."

"நிச்சயம் முடியும். அவர் ஒருத்தராலதான் முடியும், வேற யாராலையும் முடியாது அவருக்கு அந்த அதிகாரம் இருக்கு. அவர் செய்தா நாங்க உயிரோட இருப்போம். இல்ல, தீர்ப்பு எங்களுக்கு பாதகமாக இருந்தா, குடும்பத்தோட

தற்கொலை பண்ணிக்குவோம்" என்று சொல்லி வாய்விட்டு அலற,அம்மா அவளை சமாதானப்படுத்தினாள். இன்னொரு காபி போட்டுக் கொடுத்தாள்.

பதினோராம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நிர்மலாவுக்கு இந்த காட்சிகளெல்லாம் வினோதமாக இருந்தன. பேச்சுக்களெல்லாம் புதிதாக இருந்தன.

"சரி, என் கதை கிடக்கட்டும். மெட்ராசுக்கு வந்து எதுனா சுத்தி பார்த்தீங்களா. எங்கயாவது போனீங்களா" என்று கேட்டாள்.

"எங்க. வந்த உடனேயே அவருக்கு வேலை தொந்தரவு ஜாஸ்தியா போயிடுச்சு."

"நீங்க அவரை யெல்லாம் நம்பிட்டிருந் தீங்கன்னா நல்லாருக்காது. நான் கூட்டிட்டு போறேன். அவராண்ட ஒரு பர்மிஷன் மட்டும் வாங்கிக்குங்க." என்று சொல்ல, அப்பா சரியென்று அனுமதி கொடுக்க, அவள்தன் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வந்து, அம்மாவையும் நிர்மலாவையும் வாடைகைக் காரில் ஏற்றி. சென்னையின் பல இடங்களுக்கு அழைத்துப் போனாள்.

அவள் உடுத்துவதும், நிற்பதும், திரும்புவதும், சிரிப்பதும், அம்மாவுக்கு, நிர்மலாவுக்கும் ஆச்சரியமாக இருந்தன.

முகத்திற்கு என்ன தடவிக் கொள்ள வேண்டும். எப்படி புருவம் ஒழுங்குத்திக் கொள்ள வேண்டும். எப்படி உதட்டுக்கு சாயம் எழுத வேண்டும். எப்படி கண்களுக்கு மைதீட்ட வேண்டும், எந்த க்யூடெக்ஸ் நன்றாக இருக்கும் இரவு படுத்துக் கொள்ளும் போது தடவிக் கொள்ளுகின்ற க்ரீம் என்ன, பகலில் விடிந்த பிறகு முகமும் கழுவிய பிறகு என்ன

பூசிக் கொள்ள வேண்டும், ப்ளீச் எவ்விதம் என்பதெல்லாம் சொல்லிக் கொடுத்தாள்.

“தப்பான சைஸ் ப்ரா போட்டுட்டிருக்கியே. உத்துப் பாத்தா ஏடா கூடமா இருக்கறது தெரியுது. வா, உனக்கு சரியான சைஸ் வாங்கித் தரேன்” அவள் ஒரு கடைக்கு கூட்டிக் கொண்டு போய். சிறிய கண்ணாடி அறையில் நிர்மலாவை உட்கார வைத்து, முற்றிலும் உடைகளை களைந்து, பல்வேறு விதமான ப்ராக்களை மாட்டி, அழகு பார்த்து, சரியான ஒன்றை தேர்ந்தெடுத்து, அளவை குறித்துக் கொள்ளச் சொன்னாள்.

“இதுதான் சைஸ். அப்பப்ப பார்த்துக்கிட்டே இருக்கணும்” என்றெல்லாம் சொல்லிக்கொடுக்க, அவளுக்கு அந்த உதவி மிகப் பெரியதாக தோன்றியது.

“ஆன்ட்டி, ஆன்ட்டி” என்று பெண்மணியை நிர்மலா சுற்றி வந்தாள்.

“அடுத்த வாரம் கேஸ் வரப்போவுதுங்க. உங்கள் வீட்டுக்காரர்கிட்ட தயவு செய்து ஒரு வார்த்தை சொல்லுங்க” என்று அவள் தாழ்மையோடு கேட்டுக் கொள்ள அம்மாவும் மகளும் அப்பாவிடம் உரு ஏற்றினார்கள்.

“யார் வாங்கலை இவர் ஒருத்தர் மாட்டிக்கிட்டார், அதனால தெரியுது” என்று சொல்ல, “சரி, அவனை வந்து பேசச் சொல்லு. சும்மா பொம்பளைய அனுப்பிச்சு என்ன விளையாட்டு”என்று அப்பா சீறலாய் சொல்ல அவர்கள் உடனே போன் செய்து, இந்த தகவலை தெரிவித்தார்கள்.

அந்த மனிதன் வந்து அப்பாவின் காலில் விழுந்து கால்களை கெட்டியாகப் பற்றிக் கொண்டு ஓவென்று அழுதான்.

அப்பா மௌனமாக இருந்தார்.

எழுந்து உட்கார்ந்து குசுகுசுவென்று பேசினான்.

"இங்க நான் வர்றதும்,பேசறதும் நல்லாயிருக்காது அய்யா. இந்த இடத்துக்கு நான் வந்தா அக்கம் பக்கத்து இருக்கறவங்க பார்த்துட்டு, நம்ம அலுவலகத்துக்கு சொல்லிடுராங்க. நான் உடனே போயிடறதுதான் நல்லது. இன்னும் நீங்க தெளிவாக எங்கிட்டேயிருந்து கேக்கணும்னா, கொஞ்சம் என் இடத்துக்கு வந்துருங்க" என்று கேட்க, அப்பா சரியென்று உடுத்திக் கொண்டு கிளம்பினார்.

அவன் முன்னே ஆட்டோவில் போய்விட அப்பா காரில் ஏறி அவர்கள் வீட்டுக்குப் போய் வருவதாக சொன்னார்.

"அவனை மறு விசாரணைக்கு உத்தரவு போட்டிருக் கேன். சாட்சிகளை விலைக்கு வாங்கி, அவன் லஞ்சம் வாங்கலைங்கறதை சொல்லிட்டாங் கன்னா, எனக்கு தீர்ப்பு சொல்றது எளிதாயிடும். சாட்சி முதல்ல அப்படி சொன்னவங்க இப்ப ஏன் இப்படி சொல்றாங்கன்னு ஒரு கேள்வி வரும் அந்தக் கேள்வியும் கேட்பேன். அதுக்கும் அவங்க சரியான பதில் வச்சிருந்தாங்கன்னா, எல்லாம் சரியா முடிஞ்சுடும். என்னைத் தவிர இன்னொரு அதிகாரியும் இருக்கார். அவரையும் சரிகட்டணும். என்ன பண்ணப் போறான்னு தெரியலை" என்று கவலையோடு சொல்ல. நிர்மலாவும் அம்மாவும் கவலைப்பட்டார்கள்.

அந்தப் பெண்மணி வந்த நாளை மறுநாள் விசாரணை இருக்கிறது என்று சொல்லிவிட்டு அம்மாவை நமஸ்கரித்து விட்டு, அப்பாவையும் நமஸ்கரித்துவிட்டுப் போனாள்.

"நான் பார்த்துக்கறேன் போங்க, கவலைப்படாதீங்க மறுபடியும் இந்த தப்பு செய்யாதிருந்தா நல்லாயிருக்கும்"

என்று கம்பீரமாகச் சொல்ல, "இனி வாழ்நாள்ல ஒருத்தர் கிட்டேயும் கை நீட்ட மாட்டாருங்க" என்று அவள் சத்தியம் செய்தாள்.

"பாப்பாவுக்கு ஒண்ணும் நீங்க நல்ல நகையே செய்யலையே. ஒரு தடவை நான் தங்க மாளிகை கூட்டிட்டு போகட்டுமா. அங்க எனக்கு தெரிஞ்சவங்க இருக்காங்க. நல்ல நகைகள் நியாயமான விலையில நல்ல வேலைப்பாட்டோட கிடைக்கும்" என்று சொன்னாள்.

அப்பாவும் சரி என்று தலையசைத்தார்.

"எத்தினி பவுன் நகை வச்சுருக்கீங்கம்மா" என்று அம்மாவை கேட்க, "பதினாறு பதினேழு இருக்கும்னு நெனைக்கிறேன்."

"என்ன நெனைக்கிறீக. ஒரு பொண்ணு, கல்யாண வயசிருக்கு. பதினாறு பதினேழு பவுன் எப்படி போதும். குறைஞ்சபட்சம் முப்பது பவுனாவது வெச்சுருக்க வேணாமா உங்ககிட்ட நூறு பவுன் இருக்கும் நெனைச்சேன்"

"நூறா, எங்கிட்டயா அவ்வளவு எது வருமானம்" என்று அம்மா வாய் பிளக்க. "உங்க அய்யா நினைச்சா ஆயிரம் பவுன் வாங்கலாம்" என்று அவள் சொல்லி கண் சிமிட்டினாள்.

அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நூறு பவுனாவது வேண்டுமென்ற ஆசை அம்மாவைப் பற்றிக் கொண்டது.

"அய்யா உங்ககிட்ட தனியா நாலஞ்சு வார்த்தைகள் பேசணும்யா" என்று சொல்ல அவளும் அப்பாவும் படுக்கை அறைக்குப் போய் கதவு திறந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

நிர்மலா பார்த்துக் கொண்டிருக்கும் போது எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டு ரகசியமாய் அவள் ஏதோ சொல்ல, அப்பா சரி, சரி என்று கேட்டுக் கொண்டார். நடுவே பின்பக்கம் போவதற்காக வந்தார்.

"என்னங்க பேசுனீங்க ரெண்டு பேரும்" என்று அம்மா கவலையோடு கேட்க, சாட்சியங்களை எப்படி கலைக்கப் பண்ணியிருக்கு, எப்படி சொல்வாங்க அப்படின்னு விவரம் எங்கிட்ட சொல்றாங்க. யார் யார் என்ன சொல்வாங்கன்னு ஒரு விவரம் சொல்றாங்க. அதை நான் முன் கூட்டியே தெரிஞ்சுகிட்டாத்தான் அவங்களை விசாரிக்கறது சௌகரியமா இருக்குங்கிறதுனால, இவங்க வந்திருக்காங்க என்று சொன்னார்.

"இதை... அந்த அய்யா வந்து சொல்லக் கூடாதா."

"அந்த அய்யா இங்க அடிக்கடி வரக்கூடாதுடி. அதனாலதான் இவளை அனுப்பறாங்க."

"இவ மகா சாமார்த்தியமா இருக்கா."

"அந்த ஆளுக்கு ஒண்ணும் தெரியலை. இவதான், இவ கெட்டிக்காரத்தனத்துனாலதான் அந்தக் குடித்தனமே ஓடுது" என்று அப்பா புகழ்ந்தார்.

"நான் சாயந்தரமா வரச் சொல்லியிருக்கேன். நீயும் உம் பொண்ணும் அவங்களோட கார்ல தங்க மாளிகைக்கு போய் இறங்கிக்குங்க. அவங்க நல்ல நகைகள் வாங்கித் தருவாங்க. குழந்தைக்கு போட்டுப் பார்த்து எடுத்துட்டு வா."

"காசு."

"தங்க மாளிகைல எம் பேர் சொன்னா கொடுத்துரு வாங்க. அதுவும் இவங்க போறதுனால நாம மறுநாள் காசு

கொடுக்கலாம் ஒண்ணும் கவலை இல்லை என்று அப்பா சொன்னார்.

அன்று மாலை பதினொன்னரை பவுன் நகைகள் வாங்கினார்கள்.குறிப்பாய் ஒரு ஆறு சவரனுக்கு ஹாரம் வாங்கி அவள் கொடுக்க, கழுத்துக்கு மிக நிறைவாக அந்த நகை இருந்தது.

நிர்மலா தேவதை மாதிரி அந்த நகையில் இருந்தாள்

அந்தப் பெண்மணி அப்பாவிடம் காசு கொடுத்திருக்க வேண்டும். எப்படியெல்லாம் லஞ்சம் வாங்கினேன் என்று அப்பாவிடம் ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்க வேண்டும். லஞ்சம் வாங்கியதைப் பற்றி கூடுதலாகவும் சொல்லியிருக்கச் கூடும்.

அவர்கள் மிகமிக தந்திரசாலிகள். லஞ்சம் வாங்கி யதைப் பற்றி சொல்லச் சொல்ல, இப்போது அந்த இடத்தில் இருக்கின்ற அந்த அதிகாரிக்கு லஞ்சம் எப்படி வாங்குவது என்று தெரிந்து விடும். அப்படித் தெரிந்து விட்டால் வாங்குவதற்குண்டான மிகப் பெரிய பேராசை ஒன்று மனதில் கிளரும். நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் வாங்கவும் கூடும்.

மிக கெட்டிக்காரராக இருந்தால், மிக சத்திய சீலனாக இருந்தால்தான் அந்த பத்து சதவீதம் யோசித்து. வேண்டாம் என்று பறம் தள்ளியிருக்க முடியும். ஆனால் நிர்மலாவின் அப்பா எளிதில் மாட்டிக்கொண்டார்.

லஞ்சம் வாங்குவதில் மட்டும் அல்ல. அந்தப் பெண்மணியின் தொடர்பில், இழையலில், சிரிப்பில், பேச்சில், புகழ்ச்சியில் மயங்கி லஞ்ச விசாரணை என்கிற பெயரில் அவர்கள் வீட்டிற்குப் போய் உட்கார்ந்து அவர்களோடு பேச ஆரம்பித்தார்.

அவர் வந்து சிறிது நேரம் பேசியதும், சிற்றுண்டி எடுத்துக் கொண்டதும் புருஷன் சரி, வெற்றிலை பாக்கு வாங்கி வருகிறேன் என்ற வெளியே போய்விடுவாராம். வெளியே போன பிறகு கதவை மனைவி தாழிட்டு விடுவாளாம். உள்ளுக்குள்ளே முழுச் சாப்பாடே நடக்குமாம்.

அந்த வீட்டு வேலைக்காரி கிளம்பி இந்த வீட்டிற்கு வந்து அம்மாவிடம் ஆறு மாதம் பொறுத்துப் பேசினாள்.

ஆனால், அம்மாவுக்குப் பயம். அப்பாவை அதட்டிக் கேட்க பயம். கேள்வி எழுப்ப பயம். எனவே, 'சரி, இருந்துட்டு போகட்டும் என்ன செய்யறது என்று மௌனமாய் இருந்தாள்.

நம்மள நல்லா கவனிச்சுக்கிறாரு. உனக்கு நல்ல துணிமணி வாங்கித் தர்றாரு. நாலு பேருக்கு முன்னாடி கௌரவமா நடத்தறாரு. எங்கனையோ ஒரு ஆத்திரம். ஏதோ ஒரு பொம்பளை. அவகூட சங்காத்தம்னு இருக்கு. அவருக்கு இவள் ஏதோ செய்து, இவளுக்கு அவர் ஏதோ செய்யறார். இருந்துட்டு போகட்டும் என்று அம்மா பெருந்தன்மையாக விட்டு விட்டாள்.

அம்மா விட்டுவிட்டது அப்பாவுக்கு தெரிந்து போயிற்று. அப்பெண்மணியோடு உறவு அதிகமாயிற்று. அவளோடு உறவு அதிகமாக அதிகமாக லஞ்சம் வாங்குவதும் அதிகரித்தது.

உலகத்தில் லஞ்சம் கொடுப்பவரால் லஞ்சம் வாங்குபவருக்கு ஆபத்து என்பது மிகமிகக் குறைவு. லஞ்சம் கொடுத்துவிட்டு காரியம் ஆக வேண்டும் என்றுதான் நினைப்பார்களே தவிர, காட்டிக் கொடுப்பவர்கள் அதிகம் இருக்கமாட்டார்கள். ஆனால், லஞ்சம் வாங்குபவருக்கு அருகே இருக்கின்ற லஞ்சம் வாங்காத, ஆனால் லஞ்சம்

வாங்க வேண்டும் என்று பேராசை உள்ள ஆட்களால் ஆபத்து மிக அதிகம்.

லஞ்சம் வாங்கி, தண்டனையிலிருந்து அப்பாவினால் தப்பித்த அந்த ஆள் இந்த சூட்சுமத்தையும் சொல்லிக் கொடுக்க அப்பா தனது இயல்பான கெட்டிக்காரத்தனத்துடன் சுறுசுறுப்பாக செயல்பட்டார்.

தனக்கு மிக அருகே அப்பாவியான ஆட்களை மாற்றினார். அதிகம் எகிறி பேசுகிறவர்களை தொலை தூரத்திற்கு அனுப்பினார். தனக்கு சிறிய காசுகளுக்காக எதுவும் செய்ய தயாராக இருக்கின்ற நபர்களை தேர்ந்தெடுத்து, பேசி, அவர்களை சற்று தூரத்தில் வைத்துக் கொண்டார்.

சனியும், ஞாயிறும்தான் அப்பாவின் லஞ்ச நாட்கள். அன்றைக்கு அம்மாவை சுறுசுறுப்பாக இருக்கும்படியாகவும், அதிகம் காப்பிகள் தயாரிக்கும்படியாகவும் சொன்னார்.

மனைவியையும் மகளையும் ஒருநிமிட நேரம் வரவழைத்து அறிமுகப்படுத்துவார். தனக்கு திருமணவயதில் மகள் இருப்பதால் செலவு அதிகம் இருக்கிறது என்று மிகவும் பொறுப்பான ஒரு குடும்பத்தலைவன் போல் முகம் வைத்துக் கொள்வார்.

நிர்மலாவுக்கு அப்போது பதினேழுவயது. ப்ளஸ் ஒன் படித்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கையை உற்றுப் பார்க்க ஆரம்பித்தாள். ஆண்களைப் பற்றி அதிகம் தெரிந்து கொண்டாள். சினிமாவில் கதைகளில் வரும் சம்பவங்களை மறுபடியும் யோசித்து, 'ஏன் இப்படி செய்கிறார்கள், ஏன் இப்படி அழுகிறார்கள் என்று ஆராய அரம்பித்தாள் சில கெட்டிக்கார தோழிகளிடம் கேள்விகள் கேட்டு, அவர்கள் சொல்வதை குறித்துக் கொண்டாள்.

அவளுடைய தோழி ஒருத்தி கட்டுரைகள் படிக்க சொல்லிக் கொடுக்க பல கட்டுரைகள் படிப்பது அவளுக்கு எளிதாயிற்று. ஆரம்பத்தில் சிரமமாய் இருந்த அந்த விஷயம், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பலப்பட்ட போது, கதைகள் படிப்பதைவிட கட்டுரைகள் படிப்பதில் மனம் லயித்தது.

வீட்டில் காசு இறைபட்டது.

"அப்பா, பசங்கோட எக்ஸ்கர்ஷன் போய் வரட்டுமா."

"போய்ட்டு வாடி தங்கம். வேணும்னா அம்மாவையும் கூட்டிக்கிட்டு போ."

"அய்ய...அம்மாவையெல்லாம் கூட்டிக்கிட்டு போக முடியாது."

"அப்போ நீ இல்லாத அம்மா தனியாவா இருப்பா."

"வேற வழியில்லையே."

"அம்மாவை அவங்க தங்கச்சி வீட்டுக்கு அனுப்பிச்சுரு. நீ எக்ஸ்கர்ஷன் போய்ட்டு வா எப்ப போறே, எங்கே போறே, எததனை நாள் போகப் போறே."

"ஒரே நாள்தாம்ப்பா. காலைல போய்ட்டு சாயந்திரம் வந்திருவோம்."

"எத்தனை பேர் போறீங்க."

"என் கிளாஸ் பசங்க அத்தனை பேரும்ப்பா. நாற்பது பேர் போறோம்."

"இந்தா பத்தாயிரம் ரூபாய் வைச்சுக்கோ. யாரையும் சாப்பாடு கொண்டு வரச் சொல்லாதே. கையை வீசிட்டு சந்தோஷமா வரட்டும். பவுடர் டப்பா, மேக்கப் சாமானோட வரட்டும். மத்ததை எல்லாம் நீ பார்த்துக்க. ஒரு ஹோட்டல்ல

சொல்லி மத்தியான சாப்பாடு, நொறுக்குத் தீனி எல்லாம் ஏற்பாடு பண்ணிக்க."

"எந்த ஹோட்டல்லப்பா. எப்படி எடுத்துகிட்டு போறது."

ஒ உனக்கு அது வேற சொல்லித் தரணுமா. இரு, நான் சொல்றேன்."

அப்பா யோசித்தார். அலுவலகத்துக்கு போன் செய்து. ஒரு பையனை வரச் சொன்னார்.

அந்தப் பையன் தற்காலிக வேலைக்காரன். அலுவல கத்தில் குமாஸ்தாவாக வேலை செய்ய வந்தவன். ஆனால், குமாஸ்தா வேலையைத் தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்வதற்கு அப்பா அவனை ஏவிக் கொண்டிருந்தார்.

"இவரைப் போய் பார்த்துவா. அவரைப் போய் பார்த்தவா. அவன் போன் செய்ய மாட்டேன் என்கிறான், உடனே போன் செய்யச் சொல். இங்கே என் நடக்கிறது என்று தெரிந்து கொண்டு வா" என்று அவனிடம் பல்வேறு விஷயங்கள் ஏவினார். பணத்தை மட்டும் தானே நேரடியாக கவனித்துக் கொண்டார்.

வேலை அப்பாவினால் நிரந்தரமாகும் என்ற கனவில் இருந்த அந்தப் பையன், உழைப்பதற்கு அஞ்சாமல் ஓடிஓடி வேலை செய்தான்.

"முத்துசாமி" என்று அப்பா எங்கிருந்து குரல் கொடுத்தாலும் ஓடிப் போய் அவருக்கு எதிரே பணிவாக நிற்பான். அந்தப் பணிவுதான் அவனை அதிகம் வேலை. வாங்கத் தூண்டியது.

ஒருநாள் கூட ஒருவரிடம் கூட அவன் எதிர்ப்பாய் நடந்ததே இல்லை.

யார் கோபித்துக் கொண்டாலும் முகம் தூக்கியதில்லை. எத்தனை சீறினாலும் பயந்து பின்

வாங்கியதில்லை. மன்னிச்சுக்குங்க, மன்னிச்சுங்குங்க என்று சொல்லி அவன் வேகவேகமாய் அடுத்த வேலைக்கு நகர்ந்து கொள்வான். வசவு வார்த்தைகள் அவனை எதுவுமே செய்ததில்லை.

இதை அம்மாவும், பெண்ணும் பலமுறை பார்த்து வியந்திருக்கிறார்கள் அவனைக் கேட்டிருக்கிறார்கள்.

"அய்யா அப்படித்தான் செய்வாங்க. நாம மிரண்டுரணுமா. தப்பை திருத்திக்கணும்" என்று உடனடியாகச் சொன்னான்.

முத்துசாமியை வரவழைத்து அவனிடம் ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்தார்,

"நாற்பது பேருக்கு காலையில் இனிப்போடு டிபன், காபி மத்தியானம் இனிப்போடு சாப்பாடு பிற்பகல் திரும்பி வரும்போது இனிப்போடு ஒரு சிறிய நொறுக்குத் தீனி பொட்டலம், காபி நடுவே. தாகமாக இருக்கிறது என்றால், எல்லோருக்குமே குளிர்பானம்" என்று பட்டியலிட்டார்.

வேறு என்ன வசதிகள் செய்து தர வேண்டுமோ அத்தனையும் செய்து தர இந்தக் காசை உபயோகப்படுத்தச் சொன்னார்.

"எங்கையாவது தப்பு நடந்துச்சுன்னு தெரிஞ்சுது மவனே வெட்டிப் போட்டுருவேன்"என்று உரக்கக் கத்தினார்.

"மாட்டேன்யா. மறந்து போய் கூட தப்பா எதுவும் நடக்க மாட்டேன். உங்க மனசு கோணாதபடி நடந்துக்குக்குவேன் அய்யா."

அவன் உடனடியாக பதில் சொன்னான்.

மிக மிக அநியாயத்துக்கு பணிவாக இருப்பவர்களை நம்பக் கூடாது என்று அவருக்கும் தெரிய வில்லை. அவளுக்கும் தெரியவில்லை. அவள் அம்மாவுக்கும் தெரியவில்லை.

இயல்பான மனிதருக்கு பணிவு ரோஷம் இரண்டுமே கலந்திருக்கும்.

எல்லையில்லாத பணிவு என்கிறபோது அது நாடகம் என்று புரிந்து கொள்ள வெகு சிலராலேயே முடியும்.

பள்ளிக் கூடம் அவள் உபசரணையைச் சொன்ன போது திகைத்தது.

எங்கள் அப்பாவே தானா முன்வந்து இதைச் செய்தார் என்று சொன்னபோது, அவள் டீச்சர் ஒரு நன்றிக் கடிதம் எழுதி அப்பாவிடம் கொடுத்தார். மிக சந்தோஷமாக அவர் உபசரிப்பை ஏற்பதாக விபரம் தெரிவித்திருந்தாள்.

அப்பா அதில் மகிழ்ந்து போய் கூடவே ஒரு எடுபிடி ஆளையும் போட்டனுப்ப, அவன் கண கச்சிதமாய் காரியங்கள் செய்தான். அவர்கள் அதைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாதவாறு மிக அழகாக உணவு வகைகளை நிர்வகித்தான். அவர்களோடு பஸ் உள்ளே பயணப்பட்டால் அவர்கள் வெட்கப் படுவார்கள் என்பதால், அவனும் அந்த எடுபிடியும் சாமான்களோடு பஸ்ஸின் கூரையில் ஏறிக் கொண்டார்கள்.

உணவு வகைகளுக்கு இரவு முழுவதும் அலைந்ததால், அவன் கோணியைக் கீழே விரித்தும் தலைக்கு பிளாஸ்டிக்பை பண்டலை வைத்தும் ஆழ்ந்து தூங்கிப் போனான். மகாபலிபுரம் வந்ததும் இறங்கினான். எல்லோரையும் வட்டமாய் உட்கார வைத்து காலை உணவு பரிமாறினான்.

பெற்றோர்கள் இல்லாமல் பெரியோர்கள் இல்லாமல் தங்கள் வயதுக்கு இணையான ஒரு டீச்சரோடு சுற்றுலா வந்த அந்த மதர்த்த இளம் பெண்கள், அவன் முன்னும் பின்னும் ஓடுவதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்கள்.

அவனைக் கேலி செய்கிற சாக்கில் அவனைப் பற்றி பேசும் ஆவலை வளர்த்துக் கொள்ளும் சாக்கில் நிர்மலாவை கேலி செய்தார்கள்.

"யார்டி இது உன் ஆளா..."

"ஆமாண்டி. அவங்க அப்பா, அவ விளையாடறதுக்கு வாங்கிக் கொடுத்திருக்கார்." ஒருத்தி சொல்ல அடுத்தவள் தொடர்ந்தாள்.

"என்ன விளையாட்டுடி விளையாடுவே"

"என்ன விளையாட்டு கண்ணாமூச்சிதான்."

"கண்ணாமூச்சி ரேரே... காட்டு மூச்சி ரே..ரே.." என்று கோரசாகப் பாடினார்கள்.

"காட்டு மூச்சி ரே ரேன்னாஎன்னடி அர்த்தம்" ஒருத்தி திடீரென்று சந்தேகம் கேட்டாள்.

"எல்லாத்தையும் காட்டணும்னு அர்த்தம்." இன்னொருத்தி சொல்ல, குபீரென்று சிரித்தார்கள்.

"அதெல்லாம் கிடையாது. இவர் எங்க வீட்ல்வேலை செய்றவர். சும்மா ஓட்டாதீங்க" என்று அவள் சீறலாய் பதில் சொன்னாள்.

அந்த இளம் பெண்கள் விடவில்லை. அவர்களுக்கு பொழுது போக வேண்டும். காம விகாரமாய் ஏதாவது பேச வேண்டும்.

"நான் வந்து அவரை நீ கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னா சொன்னேன். இல்ல அவரோட காதல் பண்ணப் போறேன்னு சொன்னேனா. நான் சொன்னது விளையாட்டுக்கு அவரோட விளையாடுவியா, அப்படின்னு தான் கேட்டேன். நீ விளையாடலைன்னா விடு. நான் கொஞ்சம் விளையாடறேன்." என்று சொல்லி "முத்துசாமி, இங்க வாங்க" என்று கூப்பிட்டாள்.

“பாருங்க. இதுல ஒரு முடி இருக்கு. இதெல்லாம் பார்த்து செய்யக்கூடாதா.”

“சாரி மேடம். சாரி மேடம்” அவன் கேட்டுக் கொள்ள, “பரவாயில்லை போங்க” அவனை அவள் திருப்பி அனுப்பினாள். மற்றவர்களைகப் பார்த்து கண் சிமிட்டினாள்.

“முத்துசாமி இங்க வாங்க” மறுபடியும் அவன் ஓடிவந்தான்.

“அட்டை தட்டுதானே கொடுக்கறீங்க. அதை கழுவ முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும், ஒரு துணியால துடைச்சுக் கொடுத்தா நல்லாயிருக்கும்.”

“பாருங்க இந்த அட்டைத் தட்டின் ஓரமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு” இன்னொருத்தி சொல்ல, “சாரி மேடம். நான் துடைச்சுக் கொடுத்திடறேன் மேடம். துடைக்க முடியாட்டி தூக்கிப் போட்டுடறேன் மேடம்.”

“தட்ஸ் ரைட்.”

எல்லாப் பெண்களும் அவள் கூர்மையாய் பேசுவதைப் பார்த்து, அடக்க முடியாமல் சிரிப்பை அடக்கிக் கொண் டார்கள்.

“முத்துசாமி. இங்க வாங்க.”

“எஸ் மேடம்.”

“உங்க பேர் ரொம்ப பெரிசா இருக்கு. நீளமா இருக்கு நான் முத்து..ன்னு சுருக்கிக் கூப்பிடட்டுமா.”

“கூப்பிடுங்க மேடம். உங்க இஷ்டம்” என்று அவன் சொல்ல, “தேங்க்யூ” என்று அவள் மிக இதமாய் புன்னகை செய்தாள்.

அவன் போனபிறகு, “முத்து” என்று கூப்பிட்டாள்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

"இல்லே. இப்படி கூப்பிட்டா திரும்பிப் பார்க்கறீங்களான்னு டெஸ்ட்பண்ணேன்" என்று சொன்னாள். மறுபடியும் பெண்கள் கூட்டம் ஆரவாரமாய் சிரித்தது.

அவனும் சிரித்தான்.

"ஏய் பாவம்டீ. நல்லவரா இருக்காருடி" என்று ஒரு பெண் சொல்ல, " என்ன நல்லவர், மடையனா இருக்கான்னு சொல்லு" என்னு கேலி செய்தவள் பரிதாபப்பட்டவளை திருத்தினாள்.

"ச்சீ. உடனே எல்லாரையும் மக்குன்னு சொல்லிட முடியுமா."

"ஆமா, மக்குதான். இப்ப நான் அவனை மக்குன்னு ப்ரூஃப் பண்ணட்டுமா."

கேலி செய்தவள் சவால் விட்டாள்.

எல்லோரும் பஸ்ஸுக்கு வரும் பொழுது," முத்து, என் செருப்பைக் காணோம். பார்த்தீங்களா? எங்கே விட்டேன்னு தெரியலையே" என்று ஈன ஸ்வரத்தில் பேசினாள்.

"தெரியலீங்களா, சொல்லுங்க. எங்க விட்டீங்க. அய்யோ பஸ்ஸில விட்டுட்டீங்களா பாருங்க."

"பஸ்ஸில இல்லீங்க. நாம கடற்கரையில உட்கார்ந்து இருந்தோமில்ல. அங்கேதான் எங்கயோ விட்டுட்டேன். இங்கேயிருந்து பார்த்தா தெரியலையே. அய்யோ அவ்ளோ தூரம் என்னால நடக்க முடியாது. கால் வலிக்குது. வேண்டாம். செருப்பு இல்லாட்டி என்ன. அப்படியே வெறுங்காலோடயே வர்றேன்" என்று அவள் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

"இருங்க. நான் பார்த்துவிட்டு வர்றேன்" அவன் அவர்கள் உட்கார்ந்த இடம் நோக்கி ஓடினான்.

ஒரு நியூஸ் பேப்பருக்கு அடியில் அந்த செருப்பு இருந்தது. அந்த நியூஸ் பேப்பர் அடையாளமாக வைக்கப் பட்டது என்று அவனுக்குத் தெரியவில்லை. நியூஸ் பேப்பர் மறைத்திருந்தது என்று நினைத்தான்.

செருப்பை கையால் எடுத்துக் கொண்டான் தொலை தூரத்திலிருந்து மூச்சிறைக்க ஓடிவந்தான். அவள் காலுக் கெதிரே போட்டான்.

"போட்டுக்குங்க மேடம். கிடைச்சுடுச்சு நல்ல வேளையா" என்று சொன்னான்.

அவள் "ரொம்ப தேங்க்ஸ்" என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

"ஏய்... நிர்மலா, என்னடா நம்ம வீட்டு வேலைக் காரனை இவ இப்படி கலாட்டா பண்றாளேன்னு பார்க் காதே. இப்படியெல்லாம் இவங்களை பண்ணலாம்னு உங்களுக்கு சொல்லித் தர்றதுக்காகத்தான் இதெல்லாம் செய்தேனே தவிர, எனக்கும் அந்த ஆளுக்கும் ஒண்ணும் சம்மந்தம் இல்லை, நீயே விளையாடிக்க" என்று சொல்ல, மறுபடியும் அந்தக் கூட்டம் வாய் விட்டுச் சிரித்தது.

கிட்டத்தட்ட நூறு முறைகள் நூறு விதமாய் அவனை அலைக்கழித்தது.

அவனுக்கு அந்தப் பெண்களுடைய திமிர் புரிந்தது. இருப்பினும் வாய்திறக்காது மௌனமாக இருந்தான்.

வீடு திரும்பும் போது முத்துசாமியைப் பற்றி ஒரு பரிதாபம் நிர்மலாவுக்குக் கிளம்பியது. அப்பாவிடம் சொல்லி அவனுக்கு கூடுதலாக சம்பளம் கொடுக்கவோ அல்லது

கூடுதலாக உதவிகள் செய்யவோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

"எப்படிம்மா இருந்தது" என்று அப்பா கேட்க, "ரொம்ப நல்லா இருந்துதுப்பா. முத்துசாமி ரொம்ப ஹெல்ப் பண்ணாருப்பா."

"எல்ல இடங்களும் சுத்திப் பார்த்தீங்களா."

"நல்லா சுத்திப் பார்த்தோம்பா. எல்லா இடங்களும் முத்துசாமி கூட்டிட்டுப் போய் காண்பிச்சார்."

"டிபன் சாப்பாடெல்லாம் எப்படி இருந்தது."

"முத்துசாமி நல்லா பரிமாறினாருப்பா" அவள் திரும்பத் திரும்ப அவனை முன்னிறுத்திப் பேசினாள்.

"அப்பா, அவருக்கு கூட ஏதாவது கொடுப்பா. ரொம்ப ஹெல்ப் பண்ணினார். நாற்பத்தஞ்சு பேருக்கு ஒரே ஆளாநின்னு, பரிமாறி ஒரு கவலையும் இல்லாம பார்த்துக் கிட்டாருப்பா."

"சரி. கொடுத்திடலாம். கொடுக்கிறதுக்காகத் தானே அவனை இங்கே வச்சிருக்கோம்" என்று அவள் ஆதரவுக்கு அப்பா தலையாட்டினார். டக்கென்று வேறுவிதமாய் யோசித்தார்." ஒண்ணு புரிஞ்சுக்க நிர்மலா. அவன் வேலைக்கு வந்திருக்கான். ரொம்ப பரிதாபப்பட்டின்னா தலைக்கு மேல ஏறிடுவான். பரிதாபப்படாதே நிர்மலா. வேலைக்காரனை வேலைக்காரனாவே வெச்சுக்க" என்று சந்தேகத்தோடு அவளுக்கு உபதேசம் செய்தார்.

நிர்மலா புரிந்து விட்டது என்று தலையாட்டினாள் ஆனாலும் ஒரு நல்ல மனிதனை எப்படி வேலைக்காரனாக நடத்துவது என்று திண்டாடினாள்.

"எங்கஃபிரண்ட்ஸ் எல்லாம் உங்களுக்குப் பிடிச்சுதா" என்று கேட்டாள்.

"என்னங்க கேள்வி. உங்களை மாதிரியே இருக்காங்க உங்க ஃபிரண்ட்ஸ் எல்லாம்" என்று அவன் பொதுவாகச் சொன்னான்.

"என்ன மாதிரியேன்னா."

"எல்லாரும் ரொம்ப நல்லவங்களா இருக்காங்க."

"நான் எப்படி நல்லவள்னு சொல்றீங்க."

"அப்பாகிட்ட சொல்லியிருக்கீங்களே. அவர் ரொம்ப உதவி செய்தார், அவருக்கு நீங்க உதவி செய்யணும்னு அப்பா சொன்னார். என்னடா ஏகப்பட்ட உதவிகள் செய்திருக்கே போல இருக்கு அப்படின்னார். என்னால முடிஞ்சதை செய்தேங்கன்னேன். ஜக்கிரதையா செய். நிறைய செய்திராதே, அப்படின்னார். சரிங்கன்னு சொன்னேன்."

"என்ன அர்த்தம் அதுக்கு."

"தெரியலீங்களே. அப்பாவைத்தான் கேட்கணும்." அவன் வெகுளியாய் சிரித்தான்.

எதனாலேயோ அவனுடைய ஞாபகம் அடிக்கடி நிர்மலாவுக்கு வந்தது.

அவன் வேலைக்காரன் என்கிற எண்ணம் இருப்பினும், அவனை வேலைக்காரனாகத்தான் நடத்த வேண்டும் என்று தெரிந்திருப்பினும் உள்ளுக்குள்ளே மெல்லியதாய் ஒரு காதலை அவள் வளர்த்துக் கொண்டாள். அவன் தனக்கு கணவனாக வந்தால் இன்னும் ஒரு நல்ல வேலைக்காரனாக இருக்கமாட்டானா என்று யோசித்தாள். வெளியே சொல் லாது உள்ளுக்குள் கற்பனை செய்து கொண்டாள்.

அவனைத் தொடுவது போலவும், கட்டித் தழுவுவது போலவும், முத்தமிடுவது போலவும், இவள் கட்டளையிட அவன் அவளுக்காக கூடவது போலவும் கற்பனைகள் செய்து கொண்டாள்.

வாழ்க்கையில் இந்த வெற்று கற்பனைகள் தான் நம்மை திசை மாற்றுகின்றன. எதை நோக்கி நாம் போக வேண்டும் என்று தெரியாதவர்களுக்கு இந்த கற்பனைகள் சுகம்.

வாழ்க்கையினுடைய வெம்மையை அனுபவிக்க மறுக்கிறவர்களுக்கு இந்த கற்பனை ஒரு நிழற்குடை ஆனால் கற்பனையிலேயே. நிழற்குடையிலேயே எத்தனை நாள் ஒருவர் இருந்துவிட முடியும் வாழ்க்கை தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகும். அப்போது நிழலிலே இருந்ததனால் ஏற்படுகின்ற சுகம், சௌகரியம் காணாது போகும் வெம்மை கூடவே தகிக்கும்.

அப்பா, அம்மா பெயரில் வீடு வாங்கிப் போட்டார். அவர் பெயரில் நிலம் வாங்கிப் போட்டார்.

நூறு சவரன், நூற்றைம்பது சவரன். இருநூறு சவரன் என்று நகைகள் கூடிக் கொண்டே போயின.

நம்ம பொண்ணுக்கு ரெண்டு மாசத்துல கல்யாணம் நிச்சயம் பண்ணி இருக்கேங்க. ஒரு நல்ல ஹாரம் பண்ணனும்னு நினைக்கிறேன். கை கூடி வரமாட்டிங்குது என்று யாரிடமோ சொல்ல, மறுநாளே ஏழரை சவரனில் ஒரு ஹாரம் வந்தது.

அம்மாவுக்கு பிறந்தநாள் அன்று வைரத் தோடு வந்தது அப்பாவுக்கு பிறந்தநாள் அன்று ஆறு பட்டுப் புடவைகள் கொடுக்கப்பட்டன.

வெள்ளிக் குடம். வெள்ளி குத்துவிளக்கு. வெள்ளித் தட்டு, வெள்ளி சந்தனப் பேழா, வெள்ளிப் பூக்கூடை என்று விதம் விதமான வெள்ளிச் சாமான்கள் இறங்கின.

நல்லவேளை பதினோராம் வகுப்பில் தேர்வு என்பது முக்கியமான விஷயமாக இல்லை. ஏதோ அவள் எழுதினாள். ஏதோ பாஸ் செய்தாள். பனிரெண்டாவது வகுப்புக்கு பள்ளிக் கூடத்தில் விரட்டினார்கள். அந்த விரட்டலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவள் தவித்தாள். அவள் வீட்டில் வருவோர் போவோர் எண்ணிக்கை அதிகமாகி யிருந்தது. இடையறாது ஒலிக்கும் டெலிபோனுக்கு பதில் சொல்ல வேண்டியிருந்தது.

அவள் படிப்பில் சுமாராகத்தான் இருந்தாள். டீச்சர் கேட்டபோது, "முடியலை டீச்சர். வீட்டுல நிறைய வேலை இருக்கு" என்று சொன்னாள்.

"சரி, நீ படிச்சு ஆக வேண்டியது என்ன. உங்க அப்பா உன்னை டக்குன்னு கல்யாணம் பண்ணிக் கொடுத்துடு வாருன்னு நினைக்கறேன். உன் முகத்தை பார்த்தா அப்படித் தான் இருக்கு"

நன்றாக சாப்பிட்டு படுத்துத் தூங்கி சுகம் அனுபவித்த மதமதப்பில் அவள் இளம் பெண்ணாக இல்லாமல் முதிர்ந்த கன்னியாக இருந்தாள். பெரிதாய் வளர்ந்த மார்பகங்களும் அவைகளுக்கு மிக கச்சிதமாய் அமைந்த உள்ளாடைகளும் இடுப்பின் வளைவும், தோலின் சரிவும் கன்னத்தின் தெழுமையும் அவளை கல்யாணத்திற்கு காத்துக் கொண்டி ருக்கிற பெண்ணாகவே காட்டின.

ஆணின் ஆளுமைக்குத் தவித்துக் கொண்டிக்கிற உருவமாகவே மற்றவருக்கு வெளிப்படுத்தின. சிலரைக் கடந்து போகும்போது யாரோ சொல்வது காதில் விழுந்தது.

இந்த பாப்பா மட்டும் கிடைச்சா ராத்திரி முழுக்க விதம் விதமா துண்ணலாண்டா' என்று கடூரமான குரலில் பேசுவது காதில் விழுந்தது. அவள் திடுக்கிட்டுத் திரும்ப அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்,

போய் கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்துக் கொண்டாள். இரவு முழுவதும் தின்பதற்கேற்ற பண்டமாகவா இருக்கிறோம் என்று விதம் விதமான கோணங்களில் பார்த்துக் கொண்டாள். ஆம் என்றும் அவளுக்குப் புரிந்தது. ஆண்கள் பார்வையில் உள்ள பசி தெரிந்தது.

அவள் வகுப்பில் மிகச் சிறிய உருவமாக எட்டாங் கிளாஸ் படிக்கும் பெண் போல முகத்தில் அப்பாவித் தனமும், உடம்பில் வெறுமையுமாய் ஆறேழு பெண்கள் இருந்தார்கள். அவர்களோடு இவளை ஒப்பிட்டுப் பார்க்கிற போது, இவளின் ஆகிருதி மிக உயரம் என்பது சகலருக்கும் தெரிந்தது.

பதினொன்றாம் வகுப்பில் சுற்றியது போல பன்னிரெண்டில் சுற்றிவில்லை. சுற்றுவதற்கு முடியவில்லை இவளைச் சுற்றியிருந்த பெண்களும் மெல்ல இவளை ஒதுக்கிவிட்டு, படிப்பிலேயே மும்முரமாக ஈடுபட்டார்கள். இவள் வீட்டிற்குப் போய் படிக்கலாமா என்று எவளோ கேட்ட போது, வேண்டாம் அவள் இடத்தில் போனால் படிப்பு ஏறாது, பேச்சுதான் அதிகமாகும், அவள் வீட்டுப்பக்கம் தலை வைத்து படுக்காமல் இருப்பதே நல்லது, அவளை அருகே சேர்க்காமல் இருப்பதே நல்லது, அவளாக வந்தால் சேர்த்துக் கொள்ளலாம். இது விளையாட்டல்ல இது மிக முக்கியமான கட்டம். அவளுக்கு அவள் தகப்பனார் இருக்கிறார். நமக்கு யார் இருக்கிறார்கள். நம்மை நாம்தான் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டும். இந்த மார்க்குதான் நம் வாழ்க்கையை நிர்ணயிக்கும் என்று தெளிவாக ஒருத்தி பேச

நிர்மலாவை லேசாகப் புறக்கணித்து வந்தார்கள். வா வராவிட்டால் போ என்று சொல்லி எல்லா சிநேகிதிகளும் தங்களுடைய படிப்பில் முழு கவனம் செலுத்தினார்கள்.

அப்படியொரு கவனம் அவளால் செலுத்த முடியவில்லை. ஆனால் முழு முயற்சி அவள் செய்தாள் தேர்வு எழுதினாள். அவளுக்கு அவள் தேர்வு பற்றி சந்தேகம் இருந்தது.

"எப்படிம்மா பரீட்சை எழுதியிருக்கே" அப்பா கேட்டார்.

"சுமாராதாம்பா எழுதியிருக்கேன். எனக்குத் தெரிய லைப்பா பாஸ் பண்ணுவேணான்னு."

"அதெல்லாம் பாஸ் பண்ணிடுவே. நீ எப்படி படிக்கிறேன்னு பார்த்தேனே. பாஸெல்லாம் பண்ணிடுவே, நீ மார்க்கு குறைச்சலா வாங்கினாலும் கவலைப்படாதே. டொனேஷன் கொடுத்து, உன்னை எங்க சேரணும்னு ஆசைப்படறியோ அங்க நான் சேர்த்திருவேன். எது பத்தியும் கவலைப்படாதே" என்று சொல்ல அவள் அம்மா குறுக்கே விழுந்தாள்.

"எதுக்கு சேர்க்கறது இருக்கறது ஒரு பொண்ணு, அவளை மேலே மேலே ஏன் படிக்க வச்சுக்கிட்டிருக்கீங்க அவளைப் பார்த்தீங்களா எவ்வளோ உசரமா எவ்வளோ அகலமா இருக்கா. எல்லோரும் கேட்கறாங்க, எப்ப கல்யாணம், எப்ப கல்யாணம்னு. அவ ப்ளஸ் டூன்னா நம்ப மாட்டேன்றாங்க. நடுவுல ரெண்டு மூணு வருஷம் எதுலையாவது பெயிலாயிட்டாளான்னு கேட்கறாங்க."

"நீ என்ன சொல்றே."

"கல்யாணத்தைப் பண்ணி கொடுத்திருவோம்."

“ரொம்ப சின்னப் பொண்ணா இருக்கறாடி.”

“உங்களுக்கு தெரியலை. பொண்ணு பதினாறு வயசுக்கு அப்புறம் சின்னப் பொண்ணே இல்லை பெரிய பொண்ணுதான்.

சில பொண்ணுங்க தேசலா கிடக்கும். சில பொண்ணுங்க தபதப தபன்னு வளர்ந்துரும் நம்ம பொண்ணு வேகமா வளர்ற டைப் பதினெட்டு வயசு ஆகிப் போச்சு அவளுக்கு உங்க கைல காசு நடமாடுற நேரமா பார்த்து நல்ல ஆளா பார்த்து. கட்டிக் கொடுத்துருங்க.”

“வேணாண்டி, அவ படிக்கட்டும்.”

“படிச்சு என்ன பண்ணப் போறா. கல்யாணம் தானே அதுக்கு முதல்லயே பண்ணிடறது.”

அம்மா பிடிவாதமாகச் சொன்னாள்.

நிர்மலா அம்மாவைக் கட்டிக் கொண்டு கேட்டாள். “எதுக்கும்மா கல்யாணத்துக்கு அவசரப் படறே, நான் படிக்கறனே.”

“வேணாண்டி. உன்னைப் பார்த்தா எனக்கு பயமா இருக்கு.”

“ஏம்மா நான் நல்லவ இல்லையா”

“நீ நல்லவதான். சுத்தி பலபேர் உன்னை நெருக்கு வாங்களோன்னு ஒரு பயம் வருது.”

“ஏம்மா அப்படி நினைக்கிறே.”

“நீ அப்படி இருக்கியேடி.”

“உன்னைப் பார்க்கற அத்தனை பேரும் முழுங்கற மாதிரிதான் பார்க்கறாங்க. உங்கப்பா நல்லா இருக்க சொல்லவே, அவர் கையில நாலு காசு நடமாடற

சொல்லவே டப்புன்னு கல்யாணம் பண்ணிக் கொடுத்திடறது நல்லது இல்லையா."

"அப்பாவுக்கு ரிட்டயர்டு ஆகறதுக்கு இன்னும் பனிரெண்டு வருஷம் இருக்கே."

"நான் அதையெல்லாம் நம்பலை. நிறைய துட்டு லஞ்சமா வாங்கறார். எப்ப வேணா பிடிச்சு ஜெயில்ல போட்டுருவான். இருக்க சொல்லவே செய்திட்டனாக்க, எம்பாடு நிம்மதி இல்ல. அவர் எங்கனா ஜெயில்ல போய் உட்கார்ந்துக்க, நான் தெருவுல பிச்சைக்காரியா அலை யணுமா. வேணாம். அவர் வேலையை அவர் செய்தரட்டும் அவருடைய வேலையில் முக்கியமானது உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறது. அதனாலதான் நான் தொந்தரவு பண்றேன்" என்று சொல்ல.

"இவ்ளோ சீக்கிரம் கல்யாணம் பண்ணினா நல்லா யிருக்காதும்மா, இருபத்தோரு வயசு ஆகணும்."

"யார் சொன்னா. அது துட்டு இல்லாதவனுக்கு நமக்கெல்லாம் என்னடி."

"என் லைஃப் பாழயிடும் இல்ல."

"அதெல்லாம் பாழாகாதும்மா. பதினெட்டு வயசுதான் சரியான வயசு. அனுபவிக்கற வயசு இருபத்தஞ்சு வயசு பையன் கிடைச்சு, பதினெட்டு வயசுல உனக்கு கல்யாணம் ஆச்சுன்னா சந்தோஷமா இருக்கலாம். அதிலேயும் ஒண்ணு பெத்து இறக்கிட்டேன்னு வெச்சுக்கோ, இன்னும் ஆனந்தம் தான்."

"அதுக்கப்புறம்."

"ஆம்படியான் பொண்டாட்டி ஜாக்கிரதையா இருந்து கவர்மெண்ட் சொல்ற விஷயங்கள் எல்லாம் யூஸ் பண்ணி,

சந்தோஷமா இருக்கலாம், என் வாழ்க்கை அப்படித்தான் இருந்தது.

உங்க அப்பா சாதாரண கிளார்க். பத்தாவது மாசம் உன்னை பெத்து இறக்கிட்டேன், அடுத்த ஒரு பத்து மாசம் எங்க அம்மா வீட்டில இருந்து சீராடிட்டு வந்தேன். எப்படி இருந்தது தெரியுமா என் உடம்பு. எருமை மாதிரி இருந்தேன். உங்க அப்பாவுக்கு பரமானந்தம் அடுத்த பத்து வருஷமும் தினம் பேயாட்டம்தான் போயேன்."

"பேயாட்டம்னா அப்பா என்ன பண்ணுவார்" மகள் தாயைக் கேட்க, தாய் வெட்கப்பட்டாள். அவர்கள் குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள்.

நிர்மலாவிற்கு மேலே படிக்க வேண்டும் என்கிற எண்ணம் அறுந்து போயிற்று.

மும்பையிலிருந்து ஒரு அதிகாரி சென்னையிலுள்ள கிளைக்கு தணிக்கைக்காக அனுப்பப்பட, அந்த அதிகாரியை குளிர்விக்க வேண்டிய அவசியம் புரிந்து கொண்டார்.

'மனைவி இல்லாமல் ஒரு வாரம் சென்னையில் எப்படி இருக்கப் போகிறேன்" என்று அவர் திரும்பத் திரும்ப சொல்ல, நிர்மலாவின் அப்பா புரிந்து கொண்டார்.

முன்னம் லஞ்சம் வாங்க சொல்லிக் கொடுத்த அந்த பெண்மணியை அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார்.

"நம்ம லாட்ஜிக்கெல்லாம் போக முடியாதுப்பா. மாட்டிக்கிட்டா அவமானமா போயிரும்."

"எதுக்கு சார் அங்கெல்லாம் போறீங்க. நம்ம வீட்ல இருங்க சார்" என்று ஏற்பாடு செய்து கொடுத்தார்.

நிர்மலாவின் அறைக்கு அடுத்த அறையில்தான் அந்தப் பெண்மணியும், அந்த அதிகாரியும் இருந்தார்கள். ஒரு

நாற்காலி போட்டு, ஏறி, வெண்டிலேட்டர் கண்ணாடி வழியே பார்க்க, எதிர்ப்பக்க நிலைக் கண்ணாடியில் அவர்களுடைய ஆட்டம் தெரிந்தது. அவர்கள் வெளியே வந்த பசியாறியபோது, அவள் அறைக்குள் போய் அந்த நிலைக் கண்ணாடியை வாட்டமாக திருப்பி வைத்தாள்,

மறுபடியும் தன்னுடைய. அறைக்குள் புகுந்து கொண்டு படிப்பது போல் பாவனை செய்தாள் அவர்கள் அறைக்குள் வந்தவிட்டது தெரிந்ததும் ஸ்டூல் போட்டு ஏறி நின்று ஓரமாய் கவனித்தாள். இப்பொழுது,தெள்ளத் தெளிவாக சகலமும் தெரிந்தது.

ஐம்பது வயது ஆணின் கரைகாணாத காம வெறியைத் தான் அவள் முதன் முதலில் பார்க்க நேர்ந்தது. அது மனதில் பசுமையாய் படர்ந்தது. அவள் உடம்புத் தீயை அதிகம் எரிய வைத்தது. கண்கள் சிவந்தன. மூச்சு சூடாகியது. பற்கள் அடிக்கடி ஈசின. அவள் எங்கோ பார்ப்பது போல் உட்கார்ந்து கொண்டாள். திரும்பத்திரும்ப நடந்ததை நினைவு படுத்திக் கொண்டாள்.

ஒரு ஆணும் பெண்ணுமாய் இரண்டு உடல்களின் சங்கமிப்பையும், வக்கிரமான நடவடிக்கைகளையும் நினைவு படுத்திக் கொண்டாள்.

அவர் ஊருக்கு கிளம்புகின்ற நேரம் ஹாலில் உட்கார்ந்து கொண்டார். அப்பாவை எதிரே உட்கார சொன்னார்.

“எல்லாம் நல்லாதாங்க நடந்தது. ரொம்ப நல்லா கவனிச்சுக்கிட்டீங்க. நான் எதுக்கு வந்தேன்னு உங்களுக்கு தெரியுமா” என்று அவர் கேட்க, அப்பா கைகட்டி தெரியாது என்று சொன்னார்.

"உம்ம மேல கிட்டத்தட்ட இருபத்தி ஏழு கம்ப்ளெய்ண்ட் வந்திருக்கு. யாருகிட்ட யெல்லாம் நீர் லஞ்சம் வாங்கினீரோ அவனெல்லாம் உடனடியா ஒரு வெள்ளை பேப்பர் எடுத்து, மொட்டக் கடுதாசி மாதிரி இன்ன மாதிரி இன்ன தேதியில இந்த விஷயத்துக்கு இவ்வளவு வாங்கியிருக்கேன்னு எழுதிட்டான். டோட்டலா கணக்குப் போட்டா பல கோடிக்குப் போகுது. என்னன்னு பார்த்துட்டு வா, அப்படின்னு சொல்லித்தான் என்னை அனுப்பிச்சாங்க."

"அய்யா அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைங் கய்யா. நான் எவ்வளவு சுத்தமா இருக்க முடியுமோ அவ்வளவு சுத்தமாக இருக்கேன்."

"எனக்குத் தெரியும் நீ சுத்தமா, இல்லையான்னு, சுத்தமா இருக்கிறவன் ஏன் எனக்கு பொம்பளைய கூட்டிக் கொடுக்கிறே. மேலோட்டமா விசாரிச்சேன். ஒரு ஆறு கேஸ். இப்ப என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலை."

"அய்யா என்னைக் காப்பாத்துங்கய்யா."

அப்பா அவர் காலில் விழுந்தார்."

"எழுந்திருப்பா. எழுந்திரு உன்னை காட்டிக் கொடுக்கிறதா இருந்தா இப்படி உன் வீட்ல உட்கார்ந்து பேசுவேனா என்ன பண்ணினா தப்பிச்சுக்கலாம் அப்படின்னு பார்க்கணும் சரி எனக்கு என்ன செய்வே,"

"நீங்க என்ன கேட்கறீங்களோ செய்யறேன்ய்யா"

அந்த மனிதர் மிக கெட்டிக்காரர். அப்பா சம்பாதித்த அனைத்தையும் ஒரே வீச்சில் சுருட்டி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

"என்னென்ன சொத்து வச்சுருக்கேன்னு சொல்லு."

"அதிகம் ஒண்ணுமில்லய்யா. கொஞ்சம் நிலம் ரெண்டு வீடு அவ்வளவுதான்."

"சும்மா பொய் சொல்லாதே ஏகப்பட்டது வச்சிருக்கணும்."

"எனக்கும் செலவிருக்குங்கய்யா. முன்னப் பின்ன செலவு ஆயிடுதுங்களே."

"என்ன செலவு."

அப்பா தலை குனிந்து பேசினார். "வந்த பொம்பளைக்கு நானும் கொடுக்கணும்."

"நீயும் வச்சுட்டிருக்கியா அவளை" என்று அவர் கேட்க அப்பா பதில் பேசாதிருந்தார்.

"என் பையன் ஒருத்தன் பிலானியில படிச்சுட்டு வர்றான். அவனுக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டு, புரூனேக்கு அனுப்பலாம்ன்னு நெனைச்சிக்கிட் டிருக்கேன். அந்த ஊர்ல அவனுக்கு வேலை கிடைக்கிறதுக்கு வாய்ப்பு அதிகம் இருக்கு. போறபோது ஆம்படையான் பொண்டாட்டியா போய்ட்டா, அவனுக்கு நல்லதில்லே" என்று சொல்ல,

"ஆமாங்க. வயசிலேயே கல்யாணம் பண்ணி வச்சுறணும்."

"உம்ம பொண்ணை கொடுக்கறீரா" வந்தவர் டக்கென்று கேட்டார்.

அப்பா திகைத்துப் போனார்.

"நீங்களும் நானும் கிட்டத்தட்ட ஒரு ஜாதிதான். கொஞ்சம் தள்ளிப் போகுது. அதனால என்ன. உங்க பெண்ணை கொடுத்தீர்னாக்கா, என் பையனுக்கு சந்தோஷமா கட்டிக்கறேன். இதுதான் பையன் போட்டோ. எப்படி ராஜாமாதிரி இருக்கான் பாருங்க."

அவர் நைச்சியமாய் பேச ஆரம்பித்தார்.

"உங்க வீட்டு அம்மாவுக்கும் இந்த போட்டோவை காமியுங்க."

"உங்க பொண்ணைப் பார்த்த உடனேயே நான் நினைச்சேன். அட. நம் பிள்ளைக்கு நல்லா இருக்குமே அவன் சந்தோஷமா இருப்பானே அப்படின்னுதான் எனக்கு தோணிச்சு. உம்மால முடிஞ்ச அளவுக்கு கல்யாணம் நல்லபடியா பண்ணும். வேற எதுக்கு சம்பாதிக்கிறீரு, பொண்ணுக்காகத் தானே" என்று வந்தவர் சிரிக்க அப்பாவும் தலையாட்டினார்.

எப்படி இதிலிருந்து மீளுவது என்று வேகமாக யோசித்தார். ஆனால், மீள முடியாமல் வலை விரிக்கப் பட்டது.

"ஒண்ணுக்குள்ள ஒண்ணாயிட்டோம்னா, ஒரு பார்ட்னர் மாதிரி ஆயிடுவோம். நீர் சம்பாதிக்கிறதுல கொஞ்சம்போல கொடுத்தீங்கன்னா, என் செலவுக்கும் உதவும். அதே நேரத்தில், உமக்கு பாதுகாப்பாகவும் நான் இருப்பேன். இன்னும் அடுத்த பத்து வருஷத்துக்கு என்னை யாரும் அசைக்க முடியாது உம்மையும் யாரும் அசைக்க முடியாது. என்னா சொல்றீர்."

"யோசனை பண்ணி சொல்றேங்க."

"நீ சொல்றதை வச்சுக்கிட்டுதான் நான் டெல்லியில பேச ஆரம்பிக்கணும்."

அவர் கிட்டத்தட்ட மிரட்டலாய் பேச, அப்பா மிரண்டு போனார்.

"ஏன் மிரண்டு போறீங்க." அம்மா ஆசுவாசப் படுத்தினாள். "கல்யாணம் கட்டத்தானே சொல்றார். வேறு

எதுவும் தப்பா சொல்லலையே அந்தப் புள்ளை பார்க்கிற துக்கு நல்லாத்தானே இருக்கான்."

"அப்புறம் வர்றபோதெல்லாம் கையை கட்டி நிக்கணும்டி. சம்மந்தின்னு ஈக்வலா இல்லாத இவனுக்கு அடிமை மாதிரி இருக்கணும், இவன் சும்மா விட மாட்டாண்டி, விரட்டிக்கிட்டே இருப்பான். காசைக் கொடு காசைக் கொடுன்னு கேட்டுக்கிட்டே இருப்பான். இவனைப் பத்தி உனக்கு தெரியலைடி."

"அப்ப வேணாங்கறீங்களா."

"யோசனை பண்ணித்தான் செய்யணும். எப்படி தப்பிச்சுக்கிறதுன்னு பார்க்கணும்" அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தவரைப் பற்றி ஒரு பெரிய புகார் எழுதிப் போட்டார்.

தன் வாழ்க்கை தனக்குப் புரிந்து விட்டது என்று எவர் சொன்னாலும் அது சிரிப்பாகத்தான் போய் விடுகிறது. புரிந்தது போல் தோற்றமளிக்கும் வாழ்க்கை, பல நேரங்களில் சொன்னவரை சந்தி சிரிக்க வைத்து விடுகிறது.

வெற்றியின் மிதப்பில் சம்பாதித்ததின் திமிரில், ஏவல் ஆட்கள் எடுபிடிகள் இருக்கின்ற அசட்டு தைரியத்தில், அதிகாரம் கொடுத்த மமதையில், புரிந்தது போல், தோற்ற மளிக்கும் வாழ்க்கை சிறிய தோல்விகளுக்கும் புலம்பவைத்து விடுகிறது.

வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே வாழ்க்கை தரும் சாதாரண அடியைக் கூட வாங்க மறுத்து கதற ஆரம்பித்து விடுகிறார்கள். ஜெயித்தவர்களில் நிறையப் பேர் கோழை களாத்தான் இருக்கிறார்கள்.

நெல் முனையளவும் தோல்வி வராமலிருக்க வேண்டு மென்றுதான் பிரார்த்தனை செய்கிறார்கள். தோல்வியைத்

தாங்க முடியாமல் மொத்த வாழ்க்கையும் இருண்டு விடுமோ என்று கற்பனை செய்து கொண்டு பயப்படுகிறார்கள்.

ஆறு வருடங்கள் அதிகாரத்தில் திளைத்து, இடதும் வலதுமாய் அள்ளி அள்ளி சம்பாதித்து, பரிசுப் பொருள் களாய்ப் பல லட்சம் பெறுமானமுள்ளவை வாங்கி, ஓர் உச்சத்திற்குப் போன வேளை நிர்மலாவின் அப்பாவை கொடிய நேரம் சூழ்ந்து கொண்டது. அது, விசாரணை அதிகாரி உருவத்தில் அவர் எதிரே வந்து நின்றது.

எனக்கு பிள்ளை இருக்கிறான். உன் பெண்ணைக் கொடு என்று விளையாடத் துவங்கியது.

"கொடுக்கிறதுக்கா தயங்கறேன். தானா கேட்கிறபோது நல்லபடியா கல்யாணம் கட்டிக் கொடுத்திடலாமேன்னு சொல்றேன்.

போட்டோவுல பையன் நல்லா இருக்கான். நேர்ல ஒரு தடவை பார்த்துட்டு சம்மதம் சொல்லிருவோம்."

"யாரு என்னன்னு தெரியலடி."

"ஏங்க நம்ம வீட்ல இத்தனை நாள் சாப்பிட்டுட்டு போயிருந்திருக்கார். நல்லபடியாதான் பழகுறார். ஏன் அவரை உங்களை மாதிரி கெட்டவரா நினைக்கறீங்க."

மனைவியிடம் விசாரணை அதிகாரியின் லீலைகளைப் பற்றி விவரிக்க முடியாத நிர்மலாவின் அப்பா என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்.

"ஆம்பளைங்களைப் பத்தி என்ன ஏதுன்னு உனக்கு தெரியாது. சும்மா அனத்தாத இரு. எனக்கு இவன் பொண்ணு கேட்கறதே பிடிக்கலை"

"வேற யாரு வருவாங்க."

"நம்மகிட்ட காசு இருக்குடி. கைக்கு அடக்கமான மாப்பிள்ளை வருவான். அப்படி வந்தாதான் நமக்கும் சௌகரியம் குழந்தைக்கும் சௌகரியம்."

"நான் என்ன நினைச்சேன். இவரு சம்மந்தியா யிட்டார்னா எந்த நடவடிக்கையும் இல்லாது போகுமேன்னு நினைச்சேன்."

"அப்படி சொல்றதுக்கில்லை. அதுக்கப்புறம் இந்த ஆளு காட்டிக் கொடுக்கலாம். என்னை வம்புல மாட்டி விடலாம். அது தவிர இவன் வரதட்சணைன்னு அநியாயத்துக்கு கேட்பானேன்னு பயமாஇருக்கு. கல்யாணம் முடிஞ்சு இதைக் கொடு, அதைக் கொடுன்னு தொந்தரவு பண்ணுவா னோன்னு ஒரு கவலை இருக்கு."

"நீங்க எதுக்கு சம்பாதிக்கறீங்க, பொண்ணுக்குத் தானே."

"அப்புறம் கடைசி காலத்துல நாம ப்ளாட்பாரத்துல வயித்துல துணி போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதா."

"அப்புறம் சாப்ஜாடாவா வாங்கிடுவாங்க."

"வாங்கற ...ஜாதிடி இவன். உனக்கு இவனைப் பத்தி தெரியலை."

முப்பத்தாறு புகார்களில், ஏழு புகார் தவிர மற்றவை எல்லாம் தள்ளப்பட்டு விட்டன. ஏழு புகாரில், மூன்று புகார் முன்பு சொன்னவர் இப்பொழுது மாற்றிப் போகிறார். எனவே, அவை மூன்றும் தள்ளப்படுகின்றன.

நான்கு புகாரில், ஒன்று அவருக்கிடையே உள்ள காழ்ப்பு சம்பந்தமாக ஏற்பட்டது. முன்பு நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதாலேயே சம்பந்தப்பட்ட நபர்

காழ்ப்போடு பேசுகிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, அதுவும் தள்ளப்பட்டது.

மீதமிருக்கிற மூன்று புகார்களில் சாட்சியங்கள் வலுவாக இருக்கின்றன. தொடர்ந்து இவைகளை விசாரித்து, உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அறிக்கை எழுதி விசாரணை அதிகாரி தயாராக வைத்திருக்க, அவர் எதிரே நிர்மலாவின் அப்பா கைகட்டி நின்றார்.

"இதுக்கு மேல என்ன முடியும் சொல்லுங்க. வேற எவனா இருநந்தாலும் அந்த முப்பத்தாறையும் வறுத்துப் போட்டு, உங்களை ஒரு வழி ஆக்கிட்டிருப்பான்."

"நல்லா பப்ளிக்கா நாலு பேரு சாட்சி வச்சுக்கிட்டு, அதிலேயும் ஊர்ல இருக்கிற பெரிய மனுஷனை நல்ல மனுஷனை சாட்சி வச்சுக்கிட்டு ஆறு லட்ச ரூபா வாங்கி யிருக்கீங்க. கூட வந்த மனுஷனுக்கு பப்ளிக்ல நல்ல பேர். அவன் சொன்னா எடுபடுது. நீங்க விசாரணை சரியா நடத்தலைன்னா, நான் வாரப்பத்திரிகைக்கு போவேன். விவரமா எல்லாம் சொல்லுவேன் அப்படீன்னு மிரட்ட றான்."

"நிச்சயமா, நீதியா நேர்மையா விசாரணை நடத்து வேன்னு அவருக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன், சத்தியத்தை தூக்கி குப்பையில போடுறது எனக்கு ஒண்ணும் பெரிசு இல்லை."

நீங்க என்ன பண்ணப் போறீங்கன்றதை பொறுத்து தான் இந்த அறிக்கை. ரெண்டு மூணு நாள்ல நிச்சயதார்த்தம் வச்சுட்டீங்கன்னா. எனக்கு சந்தோஷமா இருக்கும். இப்போ அறிக்கை வேற மாதிரி தயார் பண்ணணும்."

"எப்படீங்க. சாட்சிங்க பலமா இருக்குதுன்னு சொல்றீங்களே."

"கூப்பிட்டு கவுத்து விட்டுடலாம். மூன்றாம் முறை விசாரித்ததில் சாட்சிகள் பல்ட்டி அடித்துவிட்டதாகத் தெரிகிறது. சாட்சிகள் உளறுவதால் மேற்கொண்டு விசாரணையைத் தொடர முடியவில்லைன்னு சொல்லலாம். அவங்க பல்ட்டி அடிக்காமல் உறுதியா நின்னாங்கன்னா ஆளை விட்டு மிரட்டலாம். அதுக்கு வேற வழியிருக்கு. அவங்க வீட்டுக்குப் போய் ஒய்ப்கிட்ட பேசி, இந்த சாட்சி யெல்லாம் சொல்ல வேண்டாம், நாங்க வீட்டுக்குள்ள புகுந்து எதுனா பண்ணிருவோம், கோபமாயிருவோம், உங்க பொண்ணை கூட்டிட்டு போயிருவோம், பையனைக் காணாது அடிச்சிருவோம், அப்படீன்னு சொன்னா அவனுக்கு நாம யாருன்னு புரியும்."

"அதை பண்ணிடுங்கய்யா."

"நீ என்ன பண்ணப் போறே சொல்லு" விசாரணை அதிகாரிபதிலுக்கு வேகமாய் கேட்டார். வேறு வழியில்லை. நிர்மலாவின் அப்பா சரி என்று தலையசைத்தார்.

"எப்ப நிச்சயதார்த்தம்."

"இன்னிக்கு சாயந்தரமே செய்துடலாம்."

"செய்" சொல்லிவிட்டு விசாரணை அதிகாரி சிரித்தார்.

பத்துப்பேரை அழைத்து வெற்றிலை பாக்கு தட்டு மாற்றி, ஹோட்டலுக்கு விருந்துக்குச் சொல்லி, நாற்பது பேருக்கு விருந்தளித்து, விசாரணை அதிகாரியின் மகன் கனக சபாபதிக்கும். நிர்மலாவுக்கும் திருமணம் நிச்சயமாகியது.

வெகுவிரைவில் திருமணம் நடத்த நல்ல முகூர்த்தம் பார்ப்பதாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. நிச்சயதார்த்தப் பரிசாக மணமகனுக்கு ஆறு பவுனில் தங்கச் சங்கிலியும், வைரமோதிரமும், மூணரை பவுனில் பிரேஸ்லெட்டும், மாப்பிள்ளையின் தந்தைக்கு ஒரு தங்க மோதிரமும்,

தாயாருக்கு நாலாயிரத்து ஐநூறு ரூபாயில் ஒரு பட்டுப் புடவையும் பரிசாகத் தரப்பட்டன.

அந்தப் பையன் அப்பாவுக்கு மிகுந்த மரியாதையோடு நடந்து கொள்கிறவனாய் தோற்றமளித்தான். அப்படி நடந்து கொண்டான்.

"மாப்பிள்ளை மனசு விட்டு பேசமாட்டேங் கிறாரே" என்று நிர்மலாவின் அப்பா குறைபட்டுக் கொண்டபோது, "நான் சொன்னாதான் பேசுவான். நான் சொல்லாம பேசு வானா" என்று சபை சிரித்தது.

நிர்மலாவின் அம்மா கோபமானாள்.

"ஒவ்வொண்ணும் அப்பா சொல்படிதான் நடந்துக்கு வாங்களா" என்று நடுவே புகுந்து கேட்டாள்.

"ஆமாம்மா நாம சொல்றபடிதான் நடந்துக்குவாங்க, நம்ம பிள்ளைங்க கூட நாம சொல்படி நடந்துக்கலேன்னா. வேறு யாரு சொல்படி நடந்துக்குவாங்க, சொல்லுங்க" என்று மிக நிதானமாக விசாரணை அதிகாரி சொல்ல, அங்க ஒரு இறுக்கம் நிலவியது.

"ஆரம்பத்துல எல்லாரும் இப்படித்தாம்மா இருப் பாங்க. போகப் போக அய்யோ இவன் பேச்சை நிறுத்தமாட்டானான்னு பேச ஆரம்பிச்சுடுவாங்க. ஒண்ணும் கவலைப்படாதீங்க. மாப்பிள்ளை பேசுவார்" கனக சபாபதியின் அப்பா சமாதானம் செய்து வைத்தார்.

"எங்கேங்க கல்யாணம்."

"அடையாறுல ஒரு இடம் பார்த்திருக்கோம்."

"அதெல்லாம் இல்லைங்க. பெரிய மனுஷாளுக்கு கல்யாணம் ஆகிற இடத்துலதான் நமக்கும் கல்யாணம் ஆகணும்" விசாரணை அதிகாரி ஒரு மஹால் சொன்னார். நாள் வாடகையே ஒரு லட்சத்திற்கும் மேல் இருந்தது,

"வந்து உட்கார்ந்து தங்கிட்டுப் போறதுக்கு ஏங்க இவ்ளோ பெரிய காசு".

"அதாங்க மரியாதை. எங்க கல்யாணம் நடந்துன்னா இந்த மஹால் பேர் சொல்லுவோம். மஹால் பேர் சொன்னாக்கா நாலு பேருக்கு நம்ம பத்தி மதிப்பா இருக்காதா."

"ரொம்ப அதிகமா செய்ய வேணாங்களே, என்ன ஏதுன்னு கேள்வி வந்துரும்."

"அதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படுறீங்க. விசாரணை அதிகாரி நான்தானே பதில் சொல்லப் போறேன். எங்க வீட்டு கல்யாணம்னுதானே சொல்லப் போறன்" என்று உரத்துப் பேச வேறு வழியில்லாமல் நிர்மலாவின் அப்பா அந்த மஹாலை ஏற்பாடு செய்து விட்டுவந்தார்.

நகைகள் பார்க்க வந்தார்கள். "நூற்றி நாற்பது பவுன் போடுறதா இருந்தாதான் நல்லாயிருக்கும். அதுக்கு குறையாதீங்க. கூடுதலா இருந்தா சந்தோஷம்" என்று விசாரணை அதிகாரியின் மனைவி சொல்ல வீடு திகைத்தது.

அநேகமாய் ஒரு குண்டுமணி கூட இல்லாமல் வாரிக்கொண்டு போகின்ற ஒரு வேகம் இருப்பதை உணர்ந்தது.

"நூறுதாங்க முடியும்" என்று அவர் சொல்ல நூற்றிப் பத்து என்று வந்து கடைசியில் நூற்று இருபது பவுன் போடுகிறேன் என்று முடிவாயிற்று.

அவர்கள் தொணதொணப்புத் தாங்காமல் வேகமாக நிர்மலாவின் அம்மா அதற்கு ஒத்துக் கொண்டாள். பிறகு கவலைப்பட்டாள்.

"இதுக்கப்புறம் சீரே கேட்கமாட்டாங்களா."

"அப்படி ஒண்ணும் சொல்லலியே, கேட்டாலும் கேட்பாங்க" என்று நிர்மலாவின் அப்பா சொல்ல அவளுக்கு முகம் வெளிறிப் போயிற்று.

"அதுக்குத்தாண்டி சொன்னேன், தப்பாப் போறோம் தப்பாப் போறோம், தப்பாப்போறோம்னு. இந்த ஆள் வேண்டாம், அவசரப்படாதேன்னேன், நீ அவசரப்பட்டு, இப்போமூஞ்சியை பேயறைஞ்ச மாதிரி வச்சுக்கறே" என்று உரக்கக் கத்தினார்.

கல்யாண சந்தோஷம் துளி கூட இல்லாமல் வீட்டுக்குள் மிகப் பெரிய கலவரம் நுழைந்தது போல ஒரு பிரமை வீட்டில் வந்து இறங்கியது.

கோட்டு சூட்டுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் என்று கேட்கப்பட்டது. வைரத்தோடு நாங்கள் செய்து கொள் கிறோம் என்று சொல்லி அதற்கொரு ஐம்பதாயிரம் ரூபாய் கேட்கப்பட்டது.

மறுபடியும் தனக்கு அந்தரங்கமான ஆளை வைத்து விசாரணை அதிகாரியைப் பற்றி ஒரு புகார் எழுதி நிர்மலாவின் அப்பா டெல்லிக்கு அனுப்பினார்.

சி.பி.ஐ. வாங்கி வைத்துக் கொண்டது. இரண்டு பேரை சென்னைக்கு அனுப்பி, அவர்களை கண்காணிக்கச் சொன்னது கல்யாண ஏற்பாடுகளை பார்த்துவிட்டு கணக்கெடுத்து டெல்லிக்கு குறிப்பு அனுப்பியது.

பதினாறாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு அதிகாரி, ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபாய் வாடகை வாங்குகின்ற மஹாலை ஏற்பாடு செய்திருக்கிறார் என்பது முதல் குற்றமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நூற்றி இருபது சவரன் போடுகிறார்கள். நூற்றிஇருபது சவரன் நகையையும், பாலிஷ் பண்ண கொடுத்தார்கள். அதற்கு ரசீது ஏழாயிரத்து நானூறு ரூபாய் ஆயிற்று என்று குறிப்பெடுத்துக் கொள்ளப் பட்டது

ரசீதினுடைய ஜெராக்ஸ் காப்பி டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புடவைக் கடை பில்லும், நான்கு கேமராக்கள் கொண்ட வீடியோ கம்பெனி பில்லும், அரண்மனைபோல் மஹாலை அலங்கரித்த இன்ட்டீரியர் டெக்கரேட்டிங் பில்லும் டெல்லிக்கு அனுப்பபட்டன. கல்யாணம் நடந்து முடியட்டும் பிறகு பார்த்துக் கொள்வோம். டெல்லி தந்தி அனுப்பியது. இன்னும் இரண்டு அதிகாரிகள் வந்து இறங்கினார்கள். கல்யாணத்தில் கலந்து கொண்டார்கள்.

மிக எளிதாக இந்த இரண்டு நாட்களுக்கு பத்து லட்சம் ரூபாய் செலவாகி இருக்கும். இரண்டு நாட்களுக்கு பத்து லட்சம் ரூபாய் செலவு என்றால், மற்ற செலவுகள் என்ன என்று கணக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து அந்த அதிகாரி வெகு நிச்சயமாய் லஞ்சம் வாங்கினாலொழிய இதை செய்திருக்க முடியாது. விசாரணைக்கு வந்த அதிகாரியும் இதில் கூட்டாக சேர்ந்து கொண்டு, அந்த கூட்டினுடைய நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு, இந்த கல்யாண சம்பந்தம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே, விசாரணை அதிகாரியையும் நாம் விசாரிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று டெல்லிக்கு அறிக்கை அனுப்பியது.

கல்யாணம் முடிந்த நான்காம் நாள் நிர்மலா புருஷன் கனகசபாபதியுடன் தேன் நிலவுக்கு போக சி.பி.ஐ அதிகாரிகள் ஒரே நேரத்தில் விசாரணை அதிகாரி வீட்டிலும், நிர்மலாவின் அப்பா வீட்டிலும் நுழைந்தார்கள். ரசீதுகளை கைப்பற்றினார்கள்.

# 3

"என்னடா தேன் நிலவுக்கு கொடைக்கானல் ஊட்டின்னு குளுகுளுன்னு போகாது இந்த புகைகக்குற மும்பைக்கு வந்துட்டே" நண்பர்கள் வியந்தார்கள்.

அதற்கு கனகசபாபதி சொன்ன பதில் நிர்மலாவின் வயிற்றைக் கலக்கியது.

"இதாம்ப்பா சௌகரியம். நாம புகுந்து புறப்பட்ட இடத்திலதான் தேன் நிலவு இருக்கணும். அம்போன்னு இருக்கிற ஊட்டியில் போய் உட்கார்ந்துகிட்ட நான் என்ன பண்ணுவேன். இன்னொரு பார்ட்டி பட்டுன்னு பிடிக்கலாம் இல்லையா."

நண்பர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"என்னடா பேசமாட்டேன்றீங்க. இது புதுசரக்கு. எடுத்தவுடனே படியும்னு சொல்ல முடியாது. ஏதாவது லொள்ளு பண்ணும். அப்போ இது பின்னாடியே சுத்திக் கிட்டிருக்க முடியுமா. போய் படுத்துத் தூங்குடீன்னு சொல்லிட்டு, நாம வேற எங்கேயாவது போய் வேற ஏதாவது செய்ய வேண்டியதுதான்" என்று சொல்ல புருஷனையே கோபத்தோடு நிர்மலா பார்த்தாள்.

சட்டென்று கனகசபாபதி திரும்பினான். "முறைக்கற வேலையெல்லாம், வச்சுக்கிட்டே, மூஞ்சி பேந்துரும். ஒழுங்கு மரியாதையா வா" என்று அடிக்குரலில் உறுமினான்.

அவன் உறுமியது அவன் நண்பர்களுக்கும் கேட்டது.

திருமணமான மறுநாளே அவன் முகம் மாறி யிருப்பதும், அவன் தந்தை, தாயின் போக்கு வேறுமாதிரி இருப்பதும் அவளுக்குப் புரிந்தது. மெல்ல அம்மாவிடம் சொல்ல.

"அதெல்லாம் ஒண்ணுமிருக்காது. ஆரம்பத்தில் மிரட்சியாக எல்லா விஷயங்களும் கண்ணுக்குத் தென்படும். பிறகு சரியாகாப் போய்விடும்" என்று சமாதானம் சொன்னாள். சமாதானம் சொல்லி விட்டு அவளும் கவலைப் பட்டாள்.

காதல் என்பது அறவே இல்லை. காமம் முரட்டுத் தனமாக இருக்கிறது. "இருங்க வலிக்கிறது" என்று சொன்னாலும் "உனக்கு வலிக்கிறது" என்று சொன்னாலும் "உனக்கு வலித்தால் எனக்கென்ன" என்று அவன் மிருகம் போல் நடந்து கொண்டான்.

திருமணமான பதினைந்தாவது நாள் திருமணத்தின் வரவு செலவுக் கணக்கு அத்தனையும் சி.பி.ஐ. கையில் எடுத்துக் கொண்டது. அப்பாவின் வீட்டுக் கதவு தட்டியதும் உள்ளுக்குள் நுழைந்தது. அங்கேயும் சோதனையிட்டது. என்ன செலவு, எப்படி செலவு, எங்கே இருந்து வந்தது. மூன்று லட்சம் ரூபாய் மஹாலுக்கு கொடுத்திருக்கிறாயே, எங்கிருந்து சம்பாதித்தாய், யார் கொடுத்த காசு என்று பல்வேறு விதமாய் கேள்விகள் கேட்டு, சம்பாதித்தது அத்தனையும் லஞ்சம் பணம் என்று தன் விசாரணையை எழுத்து மூலமாக

கொடுக்க மூன்றாவது நாளில் அப்பாவுக்கு வேலை போயிற்று.

நீங்கள் என்ன விசாரித்தீர்கள். என்ன கண்டு பிடித்தீர்கள் என்று கனகசபாபதியின் அப்பாவை சி.பி.ஐ விசாரிக்க, அவர் இதுதான் விசாரித்தேன் என்று ஒரு அறிக்கையைக் கொடுத்தார். அரசாங்கத்திற்கு நாளை சமர்ப்பிக்க இருப்பதாகச் சொன்னார்.

அவர் நிர்மலாவின் அப்பாவிடம் காட்டிய அறிக்கை வேறு. அரசாங்கத்திற்கு கொடுப்பதாக இருந்த அறிக்கை வேறு என்று தெரிந்து போயிற்று.

"அவர் தன்னை பரம்பரை பணக்காரர் என்று சொல்லிக் கொண்டார். என்ன, பரம்பரை, எப்படி பணம் வந்தது என்று நான் விசாரிக்கவில்லை. பணம் வருகிறது என்று சந்தோஷமாக நான் ஏற்றுக் கொண்டேனே தவிர அவருடைய வரவு செலவு கணக்கை நான் கேட்கவில்லை. மற்றபடி அலுவலகத்தில் அவரை விசாரித்தபோது அவர் பல இடங்களில் லஞ்சம் வாங்கியிருப்பது தெரிந்தது.

திருமணம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டதால் ஒரு பெண்ணின் வாழ்க்கையை நான் நாசமாக்க வேண்டாம் என்று திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தேன்" என்று பத்தொன்பது குற்றங்களை உண்மை என்று அவர் கண்டுபிடித்ததாக சொல்லியிருந்த அறிக்கையைக் கொடுத்தார்.

அப்பாவின் மீதிருந்த விலங்கு இன்னும் இறுகியது.

"உனக்கு என்னென்னவோ ஏற்பாடுகள் பண்ணி னேனடா. அத்தனையும் விட்டுட்டு இப்பப் போய் பெரிய யோக்கியன் மாதிரி பேசறியேடா" என்று அப்பா கத்த,

"நீங்க என்ன பேசறீங்கன்னே, எனக்கு புரியலையே நீங்க என்ன ஏற்பாடு பண்ணுனீங்க, நான் என்ன அனுபவிச்சேன்" என்று முகம் நிமிர்த்திக் கேட்க, அப்பாவால் அதிகம் பேசமுடியவில்லை. என்ன பேசினாலும் எடுபடாது என்று தெரிந்து விட்டது.

"சம்பந்திங்கற முறையிலாவது என்னை காப்பாற்றக் கூடாதா" என்ற அப்பா அழ,

"இனிமேல் முடியாது. எப்ப கத்திட்டியோ அப்போ வேற எந்த வழியும் இல்லை. நீ வேற நான் வேறன்னு ஆயிப்போச்சுப் ஒதுங்கிக்கறதுதான் உனக்கு மரியாதை. இல்லேன்னா என்னையும் உள்ள பிடிச்சுப் போட்டுருவான். என்னை உள்ள பிடிச்சுப் போட்டுட்டா என் பிள்ளைக்குக் கோபம் வந்திரும். என் பையனுக்கு கோபம் வந்தா உன் பொண்ணு கதி என்ன ஆகும்னு தெரியாது" என்று பயமுறுத்த, அப்பா இன்னும் பின்னடைந்து போனார்.

அம்மா ஒடிந்து போனாள். மயக்கமாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். இருதயம் சரிவரஇயங்கவில்லை என்று அவளுக்கு சொல்லப்பட்டது.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் துணையாக இருந்து விட்டு வருகிறேன் என்று நிர்மலா சொன்ன போது "நீ அந்த வீட்டு வாசற்படி ஏறக்கூடாது. அது திருட்டு கும்பல். அங்கே இருந்தால் எனக்கும் கெட்ட பேர்" என்று கனகபாபதியின் தந்தை மறுத்து விட்டார்.

"போய்த்தான் ஆவேன். எங்க அம்மாவுக்கு ஆஸ்பத்திரியில் யாராவது செய்ய வேண்டாமா" என்று உரக்க அவள் பேசியபோது கனகசபாபதி விரைந்து வந்து பளீரென்று அவள் கன்னத்தில் அறைந்தான்.

திருமணமான ஒன்பதாம் நாள் நிர்மலா புருஷனிடம் அடி வாங்கினாள். அதற்குப் பிறகு தினசரி. அவன் எதற்காகவாவது அடித்துக் கொண்டுதானிருந்தான்.

"மும்பையில லேடீஸ் பார்த்தியா எப்படி இருக்காங்க, ம்.. என்ன கலர் பார்த்தியா. நீயும்தான் தீஞ்சு போன தோசை மாதிரி இருக்கியே. அங்க பார் கோதுமை உடைச்சா மாதிரி இருக்கிறா. நான் கூப்பிட்டா வந்துருவா தெரியுமா உனக்கு நான் கூப்பிட்டுமா, பார்க்கறியா" என்று சொல்லி, ஏதோ ஒரு பெயர் சொல்லி கூப்பிட்டதும், அவள் போய் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அவனை தொட்டுத் தொட்டுப் பேசினாள், சிரித்தாள்.

மிகப் பெரிய ஸ்தீரீலோலன் என்று அவளுக்கு பின்னால் தெரிய வந்தது. பெண்களுக்கு அவன் வாரி இறைத்த காசு கொஞ்ச நஞ்சமல்ல. அவனுக்கும் அவன் அப்பாவிற்கும் பெரிய தகராறு ஏற்படுகிற வரையில் பெண்கள் விஷயம் அந்த வீட்டில் அடிக்கடி நடக்குமென்று கேள்விப் பட்டாள். தலையில் அடித்துக் கொண்டாள். மிக மிக தப்பான ஓர் இடத்திற்கு வந்து விட்டோம். தவறான ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டோம் என்று தனிமையில் அழுதாள்.

என்ன செய்வது என்று தெரியவில்லை. இவன் திருந்துபவனா, திருந்தக்கூடிய ஜாதியா என்று புரியவில்லை.

மாமனாரும் ஆதரவாக இல்லை. மாமியார் இவர்களிடம் அவஸ்தைப்பட்டு அவஸ்தைப்பட்டு. இவர்கள் என்ன சொன்னாலும் அதற்கு தலையாட்டுகிற கல்லுளி மங்கியாக மாறிவிட்டாள். வீட்டில் ஆணாதிக்கம் கொடி கட்டிப் பறந்தது.

பீகாரி கிராமத்து பெண்ணொருத்தியை வேலைக்காரி சாக்கு வைத்து, அந்த வேலைக்காரியை அறைக்குள் அழைத்துக் கொண்டு போய் கதவு சாத்தி மாமனார் கட்டிக்கொள்ள மாமியார் எந்த சலனமுமில்லாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஏன் இப்படி இருக்கிறீர்கள்” என்று கேட்டதற்கு, “என்ன செய்ய முடியும். செய்து என்ன சாதிக்கப் போகிறேன். நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன, மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி.”

“என்னையும் அப்படி இருக்கச் சொல்கிறீர்களா” என்று அவள் கேட்டபோது, “எனக்குத் தெரியாது. உன்னைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை” என்று அவள் எடுத்தெறிந்து பேசினாள்.

“ஏன் இப்படிப் போசுகிறீர்கள்” என்று அவள் அழ,

“என்னைப் பற்றி அழுவதற்கே எனக்குப் பிடிக்க வில்லை. அழுது அழுது வெறுப்பாகிவிட்டது. இனி என்ன ஆனாலும் அழுவதில்லை என்று நான் தீர்மானம் செய்து விட்டேன். என்ன நடந்தாலும் கண்டு கொள்வதில்லை என்று அமைதியாகி விட்டேன்.

இது சந்தோஷமான இடமாக இருக்கிறது. அவர்களும் என்னை மரியாதையாக நடத்துகிறார்கள். முடிந்தால் என் வழியைப் பின்பற்று. அல்லது ஏதேனும் செய்து எப்படியேனும் வாழ். உன்னைப் பற்றி எனக்கு நெல் முனையளவும் அக்கறை இல்லை” என்று சொல்லிவிட்டாள்.

பீகாரி வேலைக்காரியை வேலை வாங்க முடிய வில்லை. மாறாய், அவளுக்காக இவள் சப்பாத்தி இடவேண்டியிருந்தது.

அப்பா மீது வழக்கு நடந்து, சிறை தண்டனை அனுபவிக்கப்பட்டு, பதினைந்து நாள் சிறையிலிருந்து, மறுபடியும் ஜாமீனில் வெளியே வந்து, ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்து, அம்மாவின் கடைசி நகை வரை அவர் விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் என்று கடிதம் வந்தது.

அப்பா உதவி செய்யப் போவதில்லை. அம்மாவால் முடியாது. மாமனாரும் மாமியாரும். அயோக்கியார்கள். புருஷன் ரௌடி. நண்பர்கள் என்று யாரும் இல்லை.

இருபது வயது கூட முடியாத ஒரு இளம் பருவம் தினசரி புருஷனுக்கு இரையாவதைத் தவிர வேறு எந்த முக்கிய வேலையும் இல்லை என்பது போல் நடத்தப் பட்டசோகம் அவளை வாட்டி வதைத்தது.

‘எப்படிப்பட்ட துன்பம் நடந்தாலும் சரி, ராமநாமம் சொல்லுங்கள், துன்பத்திலிருந்து நிச்சயம் விடுதலை பெறுவீர்கள். இது என் அனுபவம். நான் அனுபவிக்காத துக்கம் இல்லை’ என்று டி. வி. யில் ஒரு பெண் சாமியார் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

அதையே பார்த்துக் கொண்டிருந்த போது உள்ளுக்குள் ஏதோ ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

பெரிய பெரிய கண்களை உடைய ராமன், உன் ஆபத்து நேரத்தில் நீ அழைக்க நிச்சயம் உனக்கு உதவ ஓடி வருவார். நிச்சயம் வருவார் ஆனால், வந்தது ராமன் என்பதை நீ எங்ஙனம் புரிந்து கொள்வாய் என்று பாட்டுப் பாடினாள்.

அந்தப் பாட்டு மனதுக்குள் மிகப் பெரிய மாற்றத்தை நிர்மலாவுக்கு ஏற்படுத்தியது. கண்களை மூடிக்கொண்டு ராமநாமம் சொன்னாள். வா வா என்று கூப்பிட்டாள்,

அன்று ஏதோ ஒரு சாதாரண விஷயத்திற்காக அடிபட்டாள், எட்டி உதைக்கப் பட்டாள். சுருண்டு ஹாலிலேயே சோறு தின்னாமல் படுத்துக் கொண்டிருந்தாள். எழுந்து உட்கார்ந்து மறுபடியும் ராமநாமம் சொன்னாள்.

நீ வரமாட்டாயா. நீ வருமளவுக்கு நான் துக்கப்பட வில்லையா, அல்லது எனக்கு எந்த யோக்கியதையும் இல்லையா என்று கதறி அழத் துவங்கினாள்.

நடு நிசியில் முகத்தைப் பொத்திக் கொண்டு அவள் அழ, மறுபடியும் காதுக்குள் ரீங்காரம் கேட்டது. உள்ளுக்குள் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவள் அழுகையை நிறுத்திவிட்டு ராமநாமம் சொல்லத் துவங்கினாள்.

மறுநாள் காலை அவனைத் தேடி போலீஸ் வந்தது.

டெல்லியில் உள்ள ஹோட்டல் அடுப்பில் ஒரு அழகிய பெண்ணை யாரோ தூக்கிப் போட்டு கொன்றுவிட்டார் களாம். உருத் தெரியாமல் சிதைத்து விட்டார்களாம். கடும் நாற்றம் எழ, அக்கம் பக்கத்தார் புகார் சொல்ல, போலீசார் வந்திறங்கி, சோதனை செய்து, எங்கு நாற்றம் வருகிறது என்று கண்டுபிடித்து, சிம்னியை அடித்துத் திறந்து பார்த்திருக் கிறார்கள்.

மிக கோரமான நிலையில் ஒரு பெண் பிணம் இருக்க அது என்ன என்று விசாரித்து. யார் மூலமோ தகவல் கசிய, அவர்கள் இன்னார் என்று முடிவு செய்து, அந்த இன்னாருடன் யார் யார் இருந்தது என்று மேற்கொண்டு விசாரித்து அதில் இவனும் இருக்கிறான் என்று தெரிந்தது. அவனை அள்ளிக் கொண்டு போனார்கள்.

அவன் முறைக்கும் போது லத்தியால் பளிச்சென்று முகத்தில் அடித்தார்கள். அவன் உதடு கிழிந்து ரத்தம் வந்தது.

அவன் திரும்பிப் பார்த்தான். "ஏதாவது பண்ணுடீ" என்று கத்தினான்.

அவள் பேசாமல் இருந்தாள்.

அவனை வாரி ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு போனார்கள்.

அவன் அப்பா வக்கீலுக்கு ஓடினார். பேப்பரில், ரேடியோவில், டி.வி.யில் அந்த கோர சம்பவம் வெளியா யிற்று. மாதர் சங்கங்கள் வரிந்து கொண்டு, இப்படிப்பட்ட ஒரு கொலையை ஒருவன் செய்வானென்றால் அவனை சும்மா விடக் கூடாது என்று உரக்கக் கத்தின.

அவள் விபச்சாரி என்றும், பலபேர் அவளை ஏமாற்றி இருக்கிறார்கள் என்றும், ஏமாற்றம் தாங்காமல் அவள் சிலருடன் சண்டை போட்டாள் என்றும், வாய்க்கு வந்தபடி கண்டமேனிக்கு திட்டினாள் என்றும், அப்படி திட்டிய பெயர்களில் இவன் பெயரும் இருக்கிறதென்றும், கனகசபாபதியை நோக்கி கைநீட்டி குற்றம் சாட்டினாள் என்றும் கனகசபாபதி கையிலிருந்து மதுபாட்டிலை தூக்கி அவள் மீது அடிக்க அவள் மீது பட்டு வெளியே போய் சிதறியது என்றும் அடிக்க வந்த கனகசபாபதியை பலபேர் பிடித்துக் கொண்டார்கள் என்றும் அவள் பயந்துபோய் சமையலறைக்குள் ஓடினாள் என்றும் சொல்லப்பட்டது.

அவன் ஜாமீனில் வீடு வந்தான்.

அவளுடைய நகைகள் மொத்தமும் அவன் வாரிக் கொண்டான். கணக்குப் போட்டான். எப்படியாவது ஜெயித்து விடுவேன். இந்தக் காசு போதும் என்று கொக்கரித் தான். மிகப்பெரிய வக்கீலை மிகப் பெரிய தொகை கொடுத்து, தனக்கு சாதகமாக வாதாட அமர்த்திக் கொண்டான். அவரால் அவனுக்கு ஜாமீன் கிடைத்தது,

அவன் நேரடியாக இதில் சம்பந்தப்படவில்லை என்று கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டது. அவன் அவளை கோபித்துக் கொண்டானே தவிர கொலை செய்யும் முயற்சியில் இறங்கவே இல்லை என்பதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். அப்படியானால் கொலை செய்தது யார் என்பதை மிக வேகமாக விசாரிக்க வேண்டுமென்று போலீக்கு உத்தர விட்டார்.

போலீஸ் தொந்தரவு செய்ய ஆரம்பித்தது.

போலீசுக்கு இவன் வாரி வழங்க ஆரம்பித்தான்.

எல்லா நகைகளும் விற்பதற்கு எடுத்துப் போனான், கழுத்தில் ஒரு தாலிக் கொடியைத் தவிர இரண்டு வளை யல்கள் தவிர, ஒரு பவளக்கல் மோதிரம் தவிர வேறு எந்த நகையும் அவளுக்குத் தேவையில்லை என்று அவன் தீர்மானம் செய்தான்.

நிர்மலா ஆச்சரியப்படத் தகுந்த ஒரு காரியம் நடந்தது.

"இவனுக்கெல்லாம் இப்படித்தான் முடிவு வரும்" என்று அம்மா பிள்ளையைப் பற்றி சொன்னாள்.

"இப்படிச் சொல்கிறீர்களே" என்று அவள் கேட்ட போது, "அவன் ஜெயிலுக்கு போனாதாண்டி நிம்மதியா இருக்க முடியும். இவன் அப்பனையும் சேர்த்து ஜெயில்ல போட்டா நானும் நிம்மதியா இருப்பேன்" என்று சொன்னாள்.

திடீரென்று மாமியார் அவனுக்கு எதிராகப் பேசியது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளும் தந்திரமாக நடக்க ஆரம்பித்தாள். மாமியாருக்கு பார்த்துப் பார்த்து சமைத்துப் போட்டாள். அவளுக்கு வேலை செய்ய ஒட்டாமல் அவளுடைய வேலைகளைத் தான் எடுத்து செய்தாள். மாமியார் எங்கோ அசைவதாகத் தெரிந்தது.

"எதுனா காசு வச்சிருக்கியாடி."

"ஏம்மா கேட்கறீங்க."

"எப்படியாவது எங்கேயாவது திருடியாவது காசு வச்சுக்க" என்று மாமியார் உபதேசித்தாள்.

"இவன் ஜெயிலுக்குப் போவது நிச்சயமாகி விட்டது. ஆகவே நீ தனியே வாழ்வதற்கு சிறிதளவாவது காசு வேண்டும். ஒரு லட்சம் ரூபாயாவது காசு எங்கிருந்தாவது எடுத்து வைத்துக்கொள்" என்று சொல்ல,

புருஷன் எல்லா நகைகளையும் வாரிக் கொண்டு போய் விட்டான். வெறும் டாலர் மட்டுமே ஒன்று பெட்டிக் கடியில் கிடந்தது. அது நாலாயிரம் ரூபாய் கூட பெறுமானம் இல்லாத டாலர். அதற்கு மேல் காசு வேண்டுமென்றால் என்ன செய்வது அவள் யோசித்தபோது,

பிகாரி பெண்ணுக்கு அவள் மாமனார் எங்கிருந்தோ காசு கொடுப்பது தெரிந்தது. மூன்று நாளைக்கு ஆயிரம் ரூபாய் என்று அவர் ஏதோ கணக்குப் போட்டுச் சொல்ல, அவர் எங்கிருந்து காசு எடுக்கிறார் என்று கவனித்துக் கொண்டாள்.

அவர் வெளியே போனபோது அவள் தேடத் தொடங்கினாள்.

ஒரு மர பீரோவின் கடைசியில் ஒரு அலுமினிய பெட்டி இருந்தது. அந்த அலுமினியப் பெட்டி பூட்டு போடப்பட்டிருந்தது. கம்பி விட்டு அந்தப் பூட்டை நெரித்து. அலுமினியப் பெட்டியைத் திறந்தாள்.

உள்ளே, ஐநூறும் நூறுமாக கத்தை கத்தையாய் காசு இருந்தது. இரண்டு கல் வைத்த மோதிரமும், ஒரு சாதாரண மோதிரமும் இருந்தது. பெட்டியை அப்படியே எடுத்துக்

கொண்டாள். கொண்டு வந்து ஒரு பாவாடையில் முடிச்சாகக்கட்டினாள். சமையலைறையில் ஒரு டப்பாவை காலி செய்து அதில் மூட்டையை வைத்து அதன் மீது கரியைப் பரப்பினாள். அந்தப் பெட்டியை பீகாரி வேலைக்காரி தன் சாமான்கள் வைத்திருக்கும் இடத்தில் வைத்துவிட்டாள்.

மூன்று நாள் கழித்து பூகம்பம் வெடித்தது. எங்கே எங்கே என்று அவர் கோபத்தோடு அலைய, எது, எதுவென்று அவள் கேட்க அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

அவர் பீகாரி வேலைக்காரியை பிடித்துக் கொண்டார், அவளை அடிக்கத் துவங்கினார் அவள் ஓடிப்போய் அவளுடைய ஆட்களை கூட்டி வர வீட்டு வாசலில் பெரிய ரகளை நடந்தது.

மதராஸிகள் அதிகம் வசிக்கும் அந்தப் பகுதியில் பலபேர் வந்து என்ன என்று விவரம் கேட்க, அவர் சீறி விழுந்தார். மறுபடியும் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார். “நம்ம ஊர் மானத்தை வாங்குறதுக்குன்னே இங்க வந்திருக்கீங்களா” ஒரு பையன் சொல்ல, அவர் அவனை பாய்ந்து பிடித்தார்.

என்னடா சொன்னே என்று கை ஓங்கினார். அவன் அவருடைய மணிக்கட்டை இறுக்கப் பற்றினான் திருப்பினான். அவர் வலியில் அலறினார்.

“இந்த கை ஓங்குகிற வேலை எல்லாம் வேற இடத்துல வச்சுக்கோ. எங்கிட்ட நடக்காது” என்று சொல்ல, அவருடைய பிள்ளை அப்பாவைக் காப்பாற்ற ஓடிவந்தான்.

அவனையும் இடது கையால் மணிக்கட்டை பிடித்துக் கொண்டான். அவன் அப்பனையும். பிள்ளையும் மாடு பிடித்துக்கொண்டு போவது போல தெரு முழுவதும்

அழைத்துக் கொண்டு போய் மறுபடி கொண்டு வந்து வீட்டு வாசலில் தள்ளினான்.

"உங்களாலதான் அடிக்கமுடியுமா, உங்களுக்குத்தான் உரம் உண்டா. ஒவ்வொரு எலும்பையும் உடைய வச்சுருவேன், ஜாக்கிரதை" என்று பயமுறுத்தினான்.

அவளுக்கு அவனைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

வெறுமே கையை முறுக்கி அழுத்தி இப்படி அலற வைக்க முடியுமா, எப்படி செய்கிறான் இவன் என்று அவனை ஆவலோடு பார்த்தாள்.

அவனும் ஒரு க்ஷணம் அவளை உற்றுப் பார்த்தது அவளுக்குப் புரிந்து. அவள் வெட்டப்பட்டு பின்னடைந்தாள். அவன் யாரென்று யாரை விசாரிப்பது என்று தெரியாமல் தயங்கினாள்.

அன்று மாலையே யாரோ ஒரு ஆளை கூட்டிக் கொண்டு வந்து அந்த இடம் முழுவதும் பவுடர் தூவி கைரேகைகள் பார்க்க, வந்தவன் அங்கு கைரேகைகள் அதிகம் இருப்பது உங்களுடைய மருமகள்தான் என்று சொல்லிவிட, அவர் பாய்ந்து அவள் தலைமுடியைப் பிடித்துக் கொண்டார்.

புருஷன் ஓடிவந்து விலக்க அவர் லட்சத்தி நாற்பத்தேழயிரம் ரூபாய் காணோம் என்று சொன்னார்.

"எனக்குத் தெரியாம அவ்ளோ காசு ஏன் வச்சுட்டிருக்கே, எதுக்காக வச்சுட்டிருக்கே" என்று பிள்ளை அப்பாவோடு சண்டை போட்டான். பிறகு இவள் கழுத்தை பிடித்துக் கொண்டான்.

"எங்கடி, எங்க வச்சுருக்கே காசு ஏன் எடுத்தே" என்று சரமாரியாக அடித்தான். அவள் அடிதாங்காமல் அலறினாள். அவள் அலறுவது தெருமுழுவதும் கேட்டது.

"எத்தனை அடித்தாலும் அவள் தான் எடுத்ததாக சொல்லவே இல்லை. "அங்கு இருப்பவற்றை சுத்தம் செய்தேனே தவிர வேறு எதுவும் செய்யவில்லை" என்று சத்தியமே செய்தாள்.

அப்படி பொய் சத்தியம் செய்ய அவளால் எளிதில் முடிந்தது. அவளுடைய வேதனைகள் அப்படி செய்ய வைத்தன. இவர்களுக்கு எதிராக இயங்குவது, இவர்களை இன்னும் சிக்கலில் மாட்டி விடுவது என்று அவள் தீர்மானித்தாள். அவளுக்கு வலியே தெரியவில்லை. எப்படி இவர்களை வாழ்க்கையிலிருந்து துரத்துவது என்று யோசிக்கத் துவங்கிவிட்டாள்.

அந்தப் பையன் அவள் முன்னே அடிக்கடி தோன்றினான்.

அவனிடம் இந்த மாதிரி வித்தைகள் ஏதேனும் கற்றுக் கொள்ளலாமா என்று யோசித்தாள்.

அவன் எங்கிருக்கிறான் என்று எதிர்ப்பக்கம் உள்ளவர் களை விசாரித்தாள்.

அவர்கள் இடம் காட்டினார்கள்.

எந்தக் காரணம் கொண்டும் மூன்றாம் முறை வாய்தா இல்லை. கேஸை இழுத்தடிக்க பார்க்கிறீர்களா, அடுத்த முறை வரவில்லையென்றால் நான் மிகக் கடுமையாக இருப்பேன், நாளை மறுநாள் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்று ஹைகோர்ட் கூறியது.

இந்த கொலைக் கேஸை மறைக்க அரசியல் சக்திகள் முயலுகின்றன என்ற பேச்சு வர, பத்திரிகைகளில் அது பற்றி மிகவும் பேசப்பட்டது

கனகசபாபதியின் புகைப்படம் போட்டு, இவனும் ஒரு திருடன் என்பது போல் எழுதியிருந்தார்கள். இவனும் பெண்களை ஹிம்சிக்கிறவன் என்று எழுதியிருந்தார்கள். இவனுடைய மனைவியை இவன் சொல்லொன்ன கொடுமைக்கு ஆளாக்கியிருக்கிறான் என்ற ஒரு வரியும் இருந்தது.

மறுநாள் காலை போலீஸ்காரர்கள் வந்து அவன் கோர்ட்டுக்கு வராவிட்டால் விபரீதமாகும் என்று எச்சரித்து விட்டுப் போனார்கள்.

அவன் பத்துமணிக்கு கோர்ட்டுக்குப் போனான்.

அந்தப் பையன் வீட்டுக்குள் நுழைந்தான்." என்னைப் பற்றி விசாரித்தீர்களாமே எதற்கு" என்று வந்து கை கூப்பினான்.

அவன் பெயர் கதிரேசன் என்று தெரிய வந்தது. அவள் தன் பெயரைச் சொன்னாள். எதற்குத் தேடினீர்கள் என்று மறுபடியும் அவன் விசாரித்த போது, தட்டுத்தடுமாறி தயங்கித் தயங்கி தன்னுடைய நிலையைச் சொன்னாள். தான் துன்புறத்தப்படுவதைச் சொன்னாள். தன் வீடு ஏமாற்றப் படுவதைச் சொன்னாள். தன் வீடு என்னவிதமெல்லாம் ஆடியது என்பதைச் சொன்னாள்.

அவன் மிகப் பொறுமையாகவும் அமைதியாகவும் கேட்டுக் கொண்டிருந்தான்.

நிறைய ஆண்களுக்கு பேசுவதைக் கேட்கும் பொறுமை இருப்பதில்லை மேற்கொண்டு, மேற்கொண்டு என்று வேகமாக பேசுவதையே அவர்கள் விரும்புவார்கள். ஆனால்

நீ எந்தவிதமாகப் பேசினாலும், திரும்பத் திரும்ப சொன்னதையே சொன்னாலும், பொறுமையாக கேட்டுக் கொண்டிருப்பேன் என்று அமைதியாக கை கட்டி உட்கார்ந்திருக்கும் ஆண்கள் மிகக் குறைவு. கதிரேசன் அந்த வகையைச் சார்ந்தவனாக இருந்தான்.

"மன்னிச்சுக்குங்க. நான் சொன்னதையே மறுபடி சொல்லிட்டிருக்கேன்."

"பரவாயில்லே. நீங்க சொல்லி முடிக்கிற வரைக்கும் நான் எதுவும் கேட்கிறதா இல்லை. மனசு தாங்காம நான் கேட்பேன்கிற நினைப்பில்தானே... கூப்பிடறீங்க. நான் எதுக்கு அதைத் தடுக்கணும். உங்க மனசுக்கு சந்தோஷமா இருந்தா இன்னும் கொஞ்சம் நேரம் கூட நான் கேட்கத் தயாரா யிருக்கேன்."

அவன் காட்டிய நட்பு, அவளை நெகிழ வைத்தது.

"சரி. உங்களைப் பத்தி சொல்லிட்டீங்க. எதுக்கு கூப்பிட்டீங்கன்னு சொல்லலியே."

'என்னால அடி தாங்க முடியலீங்க. அதுலயிருந்து தப்பித்துக் கொள்ள."

"நீங்க என்ன கேட்கறீங்கன்னு எனக்குப் புரியல, என்னை உங்க பாடிகாடா நிக்கணும்னு நினைக்கறீங்களா. அது செய்ய முடியாது. புருஷன் மனைவிக்குள்ள வேறுயாரும் நுழைய முடியாது. ஆனால், உங்களை அடிக்க வரும் போது. நீங்க எப்படி தடுக்கணும்கிறதை பத்து நிமிஷத்துல சொல்லிக் கொடுத்துருவேன்."

அவன் தற்காப்புக்கான முறைகளை நிதானமாகவும் திறம்படவும் சொல்லிக் கொடுத்தான்.

"இதுக்கு உடம்புல வலு வேணும்னு அவசியம் இல்லே. மனசுல தைரியம் இருந்தாப் போதும்."

"மனசில தைரியம் எப்போ வரும்."

"உன்னை கடைசி வரைக்கும் எதிர்ப்பேன், அப்ப டின்னு தீர்மானம் பண்ணிட்டீங்கன்னா உங்களுக்கு தைரியம் வந்திரும். எதிர்க்கிறதா வேண்டாமா அப்படின்னு குழப்பத்துல இருந்தால்தான் இந்த தைரியம் வராது போகும். உங்களுக்கு புருஷன் வேணுமா வேண்டாமான்னு முடிவு பண்ணிட்டு, அதற்கப்புறம் இதை செயல்படுத்துங்க" என்று சொன்னான்.

"எனக்கு புருஷன் வேண்டாம்."

"டக்குனு பேசாதீங்க. உங்க குழந்தைக்கு அப்பா வேணும். அப்படின்னு இன்னொரு வார்த்தை வரும் அப்போ உங்க பதில் வேறையா இருக்கும்" என்று சொன்னான்.

"எனக்கு புருஷன் இவன்தான்னு மறுபடியும் சொன்னாலும் நான் தாங்கிக்க தயார். ஆனால், நான் ரொம்ப வேகமா இருக்கிறது என் பொண்ணுக்கு இவன் அப்பாவாக இருக்கவே கூடாது. அவள் அவஸ்தையே படக்கூடாது. இதுதான் என்னுடைய முக்கியமான விஷயம்."

"அப்படியானால் செய்துடலாம் எவ்வளோ வேகமா நீங்க தாங்க முடியுமோ அவ்வளோ வேகமா செய்திரலாம். இந்த இரண்டு விரலையும் அடிக்கடி விரைப்பா வெச்சுக்க பழகிக்குங்க. அரிசியில மெல்ல மெல்ல விரலைக் குத்தி வலு ஏத்திக்குங்க. ஆரம்பத்தில வலிக்கும். ரெண்டு மூணு நாள்ள சரியாப் போயிடும்" என்று சொல்லிக் கொடுத்தான்.

அப்பாவும் பிள்ளையும் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் என்று அலைந்தார்கள் வக்கீல் வீட்டு வாசலில் தவம் கிடந்தார்கள்.

"இருக்கிற சி.பி.ஐ வழக்கையே என்ன பண்றது என்று முழித்துக் கொண்டிருக்கிற போது இப்படி அயோக்கியத் தனமா இன்னொண்ணுல மாட்டியிருக்கியேடா" என்று அப்பா சொல்ல, அப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே சண்டை வந்தது.

இவர்களை மிக மோசமான ஆட்கள் என்று சி.பி.ஐ. போலீசிடம் சொல்ல போலீஸ் மிக வேகமாய் இந்தக் கேசை எடுத்துக் கொண்டு தீவிரமாய்விசாரணை செய்தது பத்திரிக்கைகள் அதிகம் பேசியதால் இந்த கொலைக் கேசில் ஆர்வம் ஏற்பட்டது. ரகசியமாக துப்புகள் கிடைத்தன. மொட்டைக் கடிதாசிகள் வந்தன. வேறு எங்கெல்லாம் இந்தப்பையன் ஆட்டம் போட்டிருக்கிறான். யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பட்டியல் தரப்பட்டது.

அந்தப் பட்டியலை எடுத்துக்கொண்டு போலீஸ் நாலாபக்கமும் விசாரித்து, பட்டியலில் பாதி பேரை வளைத்து அவர்களையும் அவனுக்கு எதிராக சாட்சி சொல்ல வைத்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டது என்று போலீ ஸுக்கு தெள்ளத்தெளிவாகத் தெரிந்த போது, அவனைக் கைது செய்து உள்ளே வைக்க வாரண்ட் வாங்கியது. அவன் போலீஸ் மூலம் விவரம் தெரிந்து தொண்டு, காணாமல் போனான். தலைமறைவானான்.

போலீஸ் அவன் அப்பாவை கைது செய்து உள்ளே வைத்து. அப்பா மார்பு வலிககிறது என்று அரசங்க பொது மருத்துவமனையில் சேர்ந்தார். அவருக்கு அங்கு சரியானபடி உதவி செய்ய ஆளில்லாமல் அவஸ்த்தைப் பட்டார் நான்

எப்படி இருந்தவன் தெரியுமா என்று அங்கும் பிதற்றிக் கொண்டார்.

தலைமறைவானவர்களைத் தேடி போலீஸ் இந்தியா முழுவதும் வலை விரித்தது. அவன் சென்னக்குப் போயிருப் பான் என நினைத்து அங்கு ஓடியது. ஆனால் அவன் கெட்டிக்காரன். போலீஸ் எங்கு நகரும் என்று அறிந்து அவன் காஷ்மீர் பக்கம் போனான். கையிலிருந்து காசில் தீவிர வாதிகளிடம் ஒரு ரிவால்வர் வாங்கினான், புல்லட் பெட்டிகள் வாங்கினான். அநியாய விலைக்கு வாங்கிய அந்த கருவியை எடுத்துக் கொண்டு மறுபடியும் மும்பைக்கே திரும்பினான்.

இரவில் மொட்டைத் தலையுடனும் பகலில் தாடியை ஒட்டிக் கொண்டும் அலைந்தான். தினம் ஒரு ஹோட்டல் நாடினான் கையிருப்பு வேகமாகச் கரைந்தது. யாரையோ வழிப்பறி செய்து, அந்தக் காசை வைத்துக் கொண்டு மறுபடியும் காலம் ஓட்டினான். வழிப்பறி செய்த ஆட்கள் குழப்பமாய் தகவல்கள் கொடுக்க, போலீஸ் கைரேகை பரிசோதனை செய்தது எதேச்சையாய் இவன் கைரேகை என்பதை கண்டுபிடித்தது.

இவன் மும்பையில்தான் இருக்கிறானா... என்று ஆச்சரியப்பட்டது. இன்னும் அவனைப் பிடிக்க ஆட்கள் அனுப்பியது. அவன் உத்திரப் பிரதேசம் மாநிலம் போனான். அங்கு ஒரு கூட்டுறவு பேங்க்கை பட்டப் பகலில் கொள்ளை யடித்தான். டெல்லி போகிறேன் என்று டெலிபோனில் யாரிடமோ சொல்லி விட்டு தெற்கு நோக்கின் பயணப் பட்டான். அங்கிருந்து டெல்லி கிளம்பி டெல்லியிலிருந்து விமானம் பிடித்து, மும்பைக்கு வந்து, ஒரு பழைய மோட்டார் சைக்கிள் வாங்கி, பலமுறை அவள் வீட்டை சுற்றி வந்தான். திடீரென்று வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளே உட்கார்ந்து டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த மனைவியை மிரட்டி, கதவைத் தாழ்ப்பாள் போடச் சொன்னான். உடனே படுக்கைக்கு வரும்படி மிரட்டினான். அவள் மறுக்க அடித்தான் அவள் எதிர்க்க இன்னும் மோசமாய் அடித்தான் அவள் அடி தாங்கமல் பணிந்தாள்.

அருகே குழந்தை உட்கார்ந்து கொண்டிருந்தது. அவன் எந்த லஜ்ஜையும் இல்லாமல் அவளை மனதாலும் உடலாலும் துன்புறுத்தினான் குழந்தையும் பார்த்துக் கொண்டிருந்தது. அவள் வேதனைப்பட்டாள்.

"என்ன... ஓடிட்டான்னு நினைச்சியா. ஒழிஞ்சிட்டான்னு நினைச்சியா. என்னை யாரும் ஒழிக்க முடியாதுடி. ரெண்டுல ஒண்ணு பார்த்திடுறேன். இந்த கவர்மெண்ட் என்னை கண்டே பிடிக்க முடியாதபடி வேற விதமா வருவேன். நீ பெட்டிபடுக்கையோட கிளம்பத்தயாரா இரு. வேற இடத்துக்கு வேற தேசத்துக்கு நாம குடி போறோம்" என்று அவளை மிரட்டிவிட்டு, வேறு உடைகளை எடுத்துக் கொண்டு, அங்கிருந்து வெளியேறினான்.

அவள் கதிரேசனுக்குப் போன் செய்தாள். கதிரேசன் வந்ததும் அவனுக்கு நடந்ததை தெரிவித்தாள். அந்தக்குழந்தை மிரண்டு அழத் தொடங்கியது. கதிரேசன் மெல்ல அந்தக் குழந்தையை அணைத்துக் கொண்டான்.

கணவன் மனைவி விவகாரத்தில் எவ்வளவு தூரம் தலையிடுவது என்று தெரியவில்லை. எவ்வளவுதான் மனைவியை ஒரு கணவன் துன்புறுத்தினாலும் எத்தனை அவள் கதறி அழுதாலும் அவர்களுக்குள் உள்ள பிணக்கு ஒரு இரவில் தீர்ந்து போகும்.

ரகசியமாய் அந்தரங்கமாய் அவளிடம் கணவன் மன்னப்புக் கேட்டாலும் இனி கோபித்துக் கொள்ள

மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்தாலும், மனைவி என்பவள் முற்றிலுமாய் யார் யாரிடமெல்லாம் தன் கணவனைப் பற்றி புகார் சொன்னாலும் அத்தனை பேரையும் சந்திக்கவே மறுத்து விடுவாள். பேசவே பயப் படுவாள்.

இது சமாதானம் பேசுகிறவருக்கு மிக சங்கடத்தைக் கொடுக்கும். கொஞ்சம் அதிகப்படியாய் கணவரை எச்சரிக்கப் போய் விட்டால், மிரட்டத் துவங்கி விட்டால் இன்னும் அதிகமான முக இறுக்கத்தைக் கொடுத்து விடும். எனவே, மிகுந்த கவனத்தோடு கணவன்-மனைவி சண்டைக்குள் நுழைவது நல்லது என்று கதிரேசன் தீர்மானித்தான். இருப்பினும் தனக்கு இந்த விஷயம் தெரியும் என்று நிர்மலாவின் கணவனிடம் சொல்வதற்குத் திட்ட மிட்டான்.

நிர்மலாவின் கணவனை எங்கு தேடுவது என்று தெரியவில்லை. வேறு யாரை இதற்கு உதவிக்கு வைத்துக் கொள்ள முடியும் என்றும் புரியவில்லை.

போலீசாரால் தேடப்படுகின்ற ஒரு ஆளை தான் தேடுகிறபோது தானும் வம்பில் மாட்டிக் கொள்ள வாய்ப் பிருக்கிறது. இரண்டாவது ஆளை கூட்டில் சேர்த்துக் கொள்கிறபோது அந்துக் கூட்டாளி ஏதேனும் குழப்பம் செய்துவிட வாய்ப்பிருக்கிறது. எனவே, நிர்மலா விடமும் சொல்லாமல் இவனைத் தனியே கண்காணிக்க வேண்டும் என்று தீர்மானித்து, நிர்மலாவின் வீட்டிற்குப் போகும் வழியில், வேறு விதமாய் உடுத்தி ஒரு வட இந்தியன் போல் உட்கார்ந்து கொண்டான்.

முதல் நாளும் மறுநாளும் வெறுமனே கழிந்தன. எதற்காக நிர்மலாவிடம் இவ்வளவு ஈடுபாடு கொள்கிறோம்

என்கிற துக்கமும் அவஸ்தையும்தான் அதிகம்தான் அதிகம் ஏற்பட்டன.

எனக்குத் தெரியாதம்மா. உன்பாடு. உன் புருஷன்பாடு என்று கைகழுவி விடலாமா என்று தோன்றியது.

ஆனால் வெகு நேரம் மௌனமாய் இருந்து விட்டு கதிரேசன் அணைத்துக் கொண்டதும் அழுத குழந்தை ஞாபகம் வர, இந்தக் குழந்தைக்காகவாவது ஏதாவது செய்யலாம் என்கிற எண்ணம் வந்தது.

பத்து வயதில் லக்னோவிற்கு வந்து இருபது வயதில் மும்பைக்கு மாறி முப்பது வயதில் செக்யூரிட்டி கம்பெனி வைத்துக் கொண்டிருக்கிறது ஒரு பெங்காலி தோழனுக்கு உதவி செய்து கொண்டிருப்பதும் அவன் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருப்பதும் தவிர வேறு எதுவும் புதிதாக நிகழ்ந்து விடவில்லை.

ஆனால், நிர்மலாவைப் பார்த்தால் அந்தக் குழந்தையின் ஸ்பரிஸத்தை உணர்ந்தால் வேறு ஏதோ புதிதாகநிகழ்ந்து விடும் என்று தோன்றுகிறது. பெங்காலித் தோழன் தன் சொந்த சகோதரியை திருமணம் செய்து கொடுக்க முன்வந்தபோது, அவன் கைகூப்பி மறுத்து விட்டான்.

நமக்குள்ளே அற்புதமான நட்பு இருக்கிறது. எதற்காக அதை முறித்துக் கொள்ள வேண்டும். நீயும் நானும் உறவானால் வந்த பெண்ணால் உனக்கும் எனக்கும் மெல்லிய அளவு ஏதேனும் மனஸ்தாபம் வரக்கூடும். அது தொழிலில் பெரிதாய் பிரதிபலிக்கும். நீயும் நானும் இருக்கின்ற இந்த செக்யூரிட்டி தொழில் மிக கவனமாய் ஈடுபட வேண்டிய தொழில். நாம் இருண்டு பேரும் எந்த பிளவுமின்றி இருந்தால்தான் இதை திறம்பட நடத்த முடியும். இது ஒருவரால் நடத்த முடியாத விஷயம்.

நானூற்று ஐம்பது ஆட்களை கட்டி மேய்ப்பது என்பது எளிதல்ல. நாம் அனுப்புகின்ற செக்யூரிட்டிகள் திருடர்களாக மாறாமலிருக்க, நாமே கண்காணிக்க வேண்டியிருக்கிறது. எனவே, உறவாக நம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உனக்கு நானும், எனக்கு ஏற்படும் பிரச்சினைக்கு நீயும் உணர்ந்து உண்மையாய் ஒருவரை ஒருவர் ஈடுபடுத்திக் கொண்டால் போதும். அதுநம் உறவை, நட்பை பலப்படுத்தும் என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டான்.

அவனுடைய பேச்சு பெங்காலித் தோழனுக்குப் பிடித்திருந்தது.

கதிரேசனுக்கு அந்தக் கம்பெனியில் எந்த பதவியும் இல்லை, எந்த அதிகாரமும் இல்லை. ஆனால், அவன்தான் அங்கு சகலமும் இயக்கிக் கொண்டிருந்தான்.

பெங்காலித் தோழன் வருவதைக் கண்டு பயப்படாத செக்யூரிட்டிகள், இவன் வருவதைக் கண்டால் நடுங்குவார்கள். இரவுகம்பெனி வாசலில் பாய் போட்டுத் தூங்குகிறாயாமே ஒரு பாட்டில் மது அனுப்பட்டுமா, கால் பிடித்து விட பெண் அனுப்பட்டுமா என்று சாதாரணமாக கேட்க, அவன், இல்லை படுக்கவில்லை என்று சொல்வான். சத்தியம் கூட செய்து கண் கலங்குவான். அந்த நேரம் கதிரேசன் விட்டு விட்டு, மறுபடியும் அவன் பாய் போட்டு படுத்துத் தூங்குகிறபோது அருகே போய் தட்டி எழுப்புவான். எழுந்ததும் கன்னத்தில் அறைவான். மிக மோசமாக அவனை நடத்துவான்.

இனி எந்த செக்யூரிட்டியிலும் நீ வேலை செய்ய முடியாது. கிராமத்திற்குப் போய் சாணி பொறுக்கத் தான் லாயக்கு போ, போய் விடு என்று விரட்டி அனுப்புவதை மற்ற செக்யூரிட்டி ஆட்கள் பார்க்கிறபோது, ஒழுங்காக

இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பான். வார்த்தையாலும் செய்கையாலும் கடமை தவறியவரை மிக வேகமாக தண்டிப்பது கதிரேசனுக்கு வழக்கம்.

அதே நேரம் ஒரு ஐரோப்பியர் வீட்டில் ஒரு திருடன் உள்ளே நுழைய முற்பட செக்யூரிட்டி விழித்துக் கொண்டு போலீஸுக்கு போன் செய்து, இவனுடைய டெலி போனுக்கும் தகவல் சொல்ல, போலீஸ் வருவதற்கு முன்பு கதிரேசன் வந்து விட்டான்.

“போலீஸ் லேட்டாதான் வரும். நீ சத்தம் போட்டு அவனை விரட்டு, அவன் வெளியே வருவான். அதற்கப்புறம் நான் பார்த்துக்கறேன்” என்று சொல்ல,

“அவன் யாரது என்ன” என்று ஹிந்தியில் கத்தி அவனை விரட்ட அவன் கையில் தப்பாக்கி இருப்பது தெரிந்து ஒளிந்து கொள்ள இரண்டு முறை துப்பாகி சூடு நடந்தது. பூந்தொட்டியும் கண்ணாடிகளும் உடைந்தன. வீட்டுக்குச் சொந்தக்காரரான ஐரோப்பியன் எழுந்து, விளக்குப் போட தோட்டத்து விளக்குகள் பளீரென்று எரிய, மாடி ஏறியவன் கீழே குதித்து வெளியே ஓடினான். வெளியே ஓடியவன் தெருவில் இறங்கி மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்ப, அவனைத் தன்னுடைய காரில் கதிரேசன் பின் தொடர்ந்தான்.

ஒரு இடம் தாண்டியதும் மிக வேகமாகப் போய் கொஞ்சமும் கூச்சமில்லாமல் பளிச்சென்று இடது பக்கம் வலித்து அவனை இடித்து சாய்த்தான்.

ஏ...ய்...ஏய் என்று அவன் கத்த மடக்கி பிடித்ததில் பயங்கரமாக அடிபட்டிருந்தது. அடித்ததில் அலறல் இன்னும் அதிகமாயிற்று.

யார் சொல்லு... சொல்லு... என்று விரல்களை நசுக்கியதில் கணுக்கால்களை அழுத்தியதில் உண்மை வெளிவந்தது. இது வெளிநாட்டு சமாச்சாரம், அந்நிய தேசத்து உளவாளி. தூக்கி சுவற்றில் நான்கு முறை எறிந்து, அவன் முதுகெலும்புகளை நகர வைத்து விட்டு, அவனைக் குப்பையாகத் தூக்கி போலீஸ் ஸ்டேஷன் வாசலில் போட்டு விட்டு வந்து விட்டான்.

அன்று மாலை அந்த செக்யூரிட்டிக்கு மூவாயிரம் ரூபாய் பெங்காலித் தோழன் பரிசாகக் கொடுக்க, பத்தாயிரம் ரூபாய் அந்த ஆங்கிலேயர் பரிசாகக் கொடுக்க அவனுக்கு தன்னுடைய செலவாக தங்கமுலாம் பூசிய பதக்கம் ஒன்று மாட்டினான்.

செக்யூரிட்டிக்கு காசை விட அந்தப் பதக்கம் பெரிய சந்தோஷமாகப் போயிற்று.

கதிரேசன் புகழ் மும்பையிலுள்ள பங்களா செக்யூரிட்டிகளுக்கு நடுவே வெகு வேகமாக வளர்ந்தது.

அவனுடைய கம்பெனி அல்லாத செக்யூரிட்டிகளும் அவனுக்கு வணக்கம் சொன்னார்கள். அவனை மரியாதையாக நடத்தினார்கள்.

"இந்த வீட்டை எப்படிப் பாதுகாக்கலாம் என்று எனக்கு சொல்ல முடியுமா" என்று ஆலோசனை கேட்டார்கள்.

இலவசமாக கதிரேசனும் ஆலோசனை வழங்கினான்.

மும்பை முழுவதும் நண்பர்கள் இருந்தார்களே தவிர எப்பொழுது வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானாலும் உதவ ஆட்கள் இருந்தார்களே தவிர அவன் நேசிப்பதற்கென்று ஆட்கள் இல்லை. குடித்தனம் இல்லை. குடித்தனம் வைத்துக் கொள்ள பயமாக இருந்தது.

ஒரு பெண்ணோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது இந்த வேலைக்கு உகந்தது இல்லை என்று தோன்றியது தன்னை மிரட்டுவதற்கு தன்னுடைய வீட்டை ஒருவர் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். தன்னுடைய குழந்தையையோ மனைவியையோ அடித்துத் துன்புறுத்தி தன்னை வழிக்குக் கொண்டு வரலாம். எனவே, இந்தத் தொழிலில் இருப்பவர் குடும்பம் இல்லாமல் இருப்பது நல்லது என்று பெங்காலித் தோழனிடம் சொல்ல.

அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"அப்படியானால் உலகத்தில் எந்த ஒற்றனும் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் ஒரு ஒற்றனால் நிம்மதியாக வாழ முடியாது. அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும்." என்று சொன்னான்.

"நம் தொழிலில் இருக்கின்ற வன்முறை, நம் தொழிலில் இருக்க வேண்டிய பரபரப்பு, நம் தொழிலில் இருக்க வேண்டிய வேகம் இதற்கெல்லம் ஒரு வடிகால் தேவைப் படுகிறது. ஒரு அமைதியான, ஆறுதலான, மிருதுவான இடம் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட இடம் மனைவியாக அமைந்து விட்டால் நீ பிழைத்தாய். இல்லையெனில் பிரச்சினைகள் உனக்கு அதிகமாகும். உன்னால் பரபரப்பி லிருந்து மீளவே முடியாத தன்மை உன்னை வெகு சீக்கிரம் வயசாளியாக்கி விடும். மன நோயில் தள்ளி விடும். உண்மை இதுதான்" என்று பயமுறுத்தினான்.

கதிரேசன் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஆனால் சில சமயம் அவனுக்கு ஏதோ ஒரு மிருது வான விஷயம் தேவைப்பட்டது. அது மனைவியாக இருப்பதை விட மகளாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று

தோன்றியது. மூன்று குழந்தைகளுக்கு தகப்பனாக இருப்பது ஒரு நிறைவு என்ற எண்ணம் வந்தது. தன் முரட்டுத் தனத்திற்கு முற்றிலும் எதிராய், குழந்.தைகளோடு உட்கார்ந் திருப்பது, அவர்கள் கேலி செய்யவும் அடிக்கவும் வாங்கிக் கொண்டிருப்பது மிகுந்த சந்துஷ்டியைக் கொடுக்கும் என்று தோன்றியது மற்றபடிக்கு பெண் சுகம் அவனுக்கு எளிதில் கிடைத்தது.

அவன் கையிலிருக்கும் காசுக்கு ஆசைப்பட்டு பல பெண்கள் அவனிடம் பிரியமாய் இருப்பதாய் நாடக மாடினார்கள். அவர்கள் பல பேரிடம் பிரியமாய் இருக்கும் பெண்கள்.

லேசான குடிவெறியில் உடம்பு கிளரும் போது அவர்களை நோக்கி அவன் போய் விட்டு வந்து விடுவது வழக்கம். ஆனால் சமீபமாய் அதையும் செய்ய முடியவில்லை.

தொலைவே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் சட்டென்று கதிரேசன் கூர்மையானான். வந்தவன் வாசலில் நின்று இரண்டு பக்கமும் பார்த்து விட்டு ஒரு திருடனைப் போல் வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளே பாத்திரங்கள் வீசப்படும் ஓசை கேட்டது.

கதவுக்கருகே அவன் போய் நிற்க அவன் மனைவியை படுக்கைக்கு வரும்படி சொல்லுகின்ற வார்த்தைகள் கேட்டன.

அவள் குழந்தையை காரணம் காட்ட இரண்டு மூன்று அடிகள் விழுவதும் கேட்டது.

கதிரேசன் அந்த அடுக்கு மாடியின் பின்புறம் போனான். மூன்றாவது மாடி மேல் தளத்திற்குப் போய் அங்கிருந்து பைப் பிடித்து முதல் மாடிக்கு இறங்கி பேரபட் வாலில் நின்று பார்க்கும் பொழுது படுக்கை அறை தெரிந்தது.

இடுப்புப் பாவாடையோடு அவள் போராடுவதும் அவன் அதை இழுப்பதும் அருகே குழந்தை சுவரோடு நின்று கத்திக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

சட்டென்று எல்லா கூச்சல்களும் அடங்கின

மறுபடியும் எட்டிப்பார்த்தான். குழந்தை கட்டிலைப் பார்த்தபடியே விசித்துக் கொண்டிருந்து. கட்டிலைப் பார்க்க கதிரேசனுக்கு விருப்பமில்லை. பைப்பை பிடித்து கீழே இறங்கினான்.

யார் நீ என்று அடுக்கு மாடியின் செக்யூரிட்டி கேட்க தன் அடையாள அட்டையைக் காட்டினான்.

செக்யூரிட்டி வணக்கம் சொன்னான்.

அவன், மறுபடியும் எதிரே போய் உட்கார்ந்து கொண்டான். என்ன செய்வது என்று தெரியவில்லை. ஏன் இப்படி கொடுமைப்படுத்துகிறான் என்று புரியவில்லை. இவனை எப்படி எச்சரிப்பது என்று கதிரேசன் யோசிக்கத் துவங்கினான்.

மோட்டார் சைக்கிள் கிளம்பியது. பின்னால் தன்னுடைய மாருதி காரில் கதிரேசனும் கிளம்பினான்.

மோட்டார் சைக்கிள் ஒரு பஞ்சாபி தாபாவுக்குள் நுழைந்தது. அவன் தாபாவுக்குள் நுழைந்து பிராந்தியும், உணவுக்கும் ஆர்டர் செய்து மேஜையில் தட்டிக் கொண்டிருக்க அவன் எதிரே போய் கதிரேசன் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன வேணும்" நிர்மலாவின் புருஷன் கனக சபாபதி கேட்க.

"நீதான் வேணும்" என்று நிதானமாய் தமிழில் கதிரேசன் பதில் சொன்னான்.

"யார் நீ என்ன...." என்று அவன் எழுந்திருக்க முயற்சி செய்ய.

கதிரேசன் அவன் தோளை அழுத்தினான்.

"உன்னைப் பற்றி விசாரித்தேன். ஏகப்பட்ட கேஸ் இருக்கு. போலீஸ் சுத்திச் சுத்தி தேடுகிறது. மும்பையில் அங்கங்கே போலீஸ்காரனுக்கு வாய்க்கரிசி போட்டு சுத்திக் கொண்டிருக்கே. பெரிய தாதா பாதுகாப்பில் இருக்கே. ஆனால் நீ என்ன பண்ணாலும் அதுபற்றி அக்கறை இல்லை. உன் பொண்டாட்டி குழந்தைகளை தொந்தரவு பண்றதை விட்டுரு."

"ஏன் இதைச் சொல்ல நீ யாரு."

"அது வேற விஷயம். விட்டுட்டா அது நல்லது. தொடர்ந்து அங்க போய் தொந்தரவு பண்ணீன்னா. அந்தக் குழந்தையை அழ விட்டீன்னா மூஞ்சி மொகரையெல்லாம் பேத்துருவேன். நீ யார் கீழே வேலை செய்தாலும் அக்கறை இல்லை. உன் தலைக்கு மேல எப்பேற்பட்ட தாதா இருந்தாலும் எனக்கு பயமில்லை. எனக்கு கோபம் வந்தா விரல் விரலா உடைப்பேன். ஜாக்கிரதை. இதுதான் கடைசி தடவை" என்று சொல்ல, அவனுக்கு சுடச்சுட சப்பாத்திகளும் சாகுவும் வந்தது.

எழுந்து போன கதிரேசனை, அவன் கையிலிருந்த சாப்பாட்டுத் தட்டை கொண்டு மண்டையில் ஓங்கி அடித்தான்.

கதிரேசன் உடம்பு முழுவதும் சாகுத் தெறித்தது.

கதிரேசன் பளிச்சென்று ஓடி தொலை தூரத்தில் நிற்க வைத்த காருக்குள் பாய்ந்து ஏறி காரை வேகமாகக் கிளப்பி திருப்பி, ஒன்வேயில் நகர்ந்து போய் மெயின் ரோட்டில் கலந்து விட்டான்.

அங்கு நின்று கனகசபாபதி வாய் விட்டு கொக்கரித்தான். மறுபடியும் சப்பாத்தி ஆர்டர் செய்தான். துடைப்பவனுக்கு நூறு ரூபாய் கொடுத்தான்.

கதிரேசன் மிக அமைதியாய் தன் நண்பனோடு பேச ஆரம்பித்தான்.

"மாருதி காரை பார்த்திருப்பாங்கன்னு நினைக்கிறேன். வித்துரு. வேற கார் வாங்கு."

"இதுல நீ தலையிட வேண்டாம். ஆனா, எனக்கு பாதுகாப்பா ரெண்டு ஆளுங்க வேணும். எங்கிருந்தாவது யாருடைய செல்போனையாவது திருடிட்டு வந்து அதில் பேசி மறுபடியும் அந்த செல்போனை கொடுத்திரலாம். அதை வேற விதமா காம்பன்சேட் பண்ணிரலாம். எனக்கு வேணும்கிறது ஒரு செல்போன். உடனே ஏற்பாடு ப ண்ணு. இன்றைக்கு சாயந்திரத்துக்குள்ளே அவனுக்கு பாடம் சொல்லியாகணும். அவள் வீட்டுக்கு அவன் போகாது பண்ணியாகணும்"

அவன் கழுத்து வீங்கியிருந்தது. பீங்கான் தட்டு பட்டு ஒரு கீறல் இருந்தது. அதற்கு பெங்காலித் தோழன் மருந்து போட்டு பிளாஸ்டர் ஒட்டினான்.

"இதில் ஈடுபட வேண்டியது அவசியமா."

"ஆமா. அந்த பெண் குழந்தைக்காக நான் ஈடுபடப் போகிறேன். என்னுடைய பகுதி மக்கள் என்பது மட்டும் அல்ல. இந்த நாய் மிகப் பெரிய அயோக்கியன். வேறு விஷயங்களில் மாட்டிக் கொண்டிருப்பவன். இவனால் பல பேருக்கு தொந்தரவு வரப் போகிறது. இவனை ஏதோ ஒரு இடத்தில் காலை உடைத்துப் போடுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது."

அன்று இரவுக்குள் அவனைப் பற்றி பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பல போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அவனுக்கு உளவு சொல்லப்பட்டன.

அன்று காலை கனகசபாபதியிடமிருந்து பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய ஒரு போலீஸ்காரன் அவன் எங்கே படுத்துத் தூங்குவான் என்பதை எளிதாக காட்டிக் கொடுத்தான்.

இன்னொரு ஆயிரம ரூபாய் தர, இன்னொரு துப்பும் கொடுத்தான். ஓல்டுமாங் ரம் பார்த்தால் அவனால் ஆசையை அடக்கிக் கொள்ளவே முடியாது. நிச்சயம் ஒரு பாட்டில் குடித்து விடுவான் என்று சொன்னான்.

கதிரேசன் ஓல்டுமங் ரம்மோடு அந்த போலீஸ்காரர் சொன்ன இடத்திற்குப் போய் அவனைத் தேட, அந்த வீடு பூட்டியிருந்தது. வேறு சாவி போட்டுத் திறந்து உள்ளே போக, மிகவும் குப்பையாக இருந்தது. படுக்கையில் பெண்கள் வந்து விட்டுப் போன, அறிகுறிகள் தெரிந்தன. ஒரு மர பீரோவில் கீழ் பகுதியில் கட்டுக் கட்டாய் பணம் இருந்தது. படுக்கைக்குக் கீழே நகைகள் இருந்தன. பரணையில் மூன்று ரிவால்வர்களும் தோட்டா டப்பாக்களும் கிடந்தன.

ஓல்டுமாங் ரம்மை மேஜை மீது வைத்து விட்டு சமையலறையில் உள்ள மேடை மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். கண்மூடி அமர்ந்து கொண்டான். வாசல் கதவை பூட்டும்படி செல்போனில் கூட வந்து செக்யூரிட்டிக்கு உத்தரவிட்டான்.

வாசற் கதவு பழையபடி பூட்டப்பட்டது. அடுத்த இரண்டே முக்கால் மணியில் அசைக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்டது. அவன் உள்ளுக்குள் கம்பீரமாய் நுழைந்தான். கூட இரண்டு பெண்கள் வந்தார்கள்.

சமையலறை இடுக்கு வழியே பார்க்கும் போது வெவ்வேறு இடங்களிலிருந்து பிடித்து வந்த பெண்கள் என்று தெரிந்தது. அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந் தார்கள்.

நான் தொழில் செய்யும் போது, நீ ஏன் வருகிறாய். நீ தொழில் செய்யும் போது நான் வருவேனா. என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்க, இவன் நடுவே இடை இடையே ஏதோ பேசி சண்டையை அதிகமாக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் சண்டைக்கு வாய் விட்டு சிரித்துக் கொண்டிருந் தான்

காசு பத்திரமாக இருக்கிறதா என்றும் நகைகள் பத்திரமாக இருக்கிறதா என்றும் பார்த்துக் கொண்டான்.

அந்த பெண்களுக்கு நடுவே சண்டை அதிகமாயிற்று. அவர்களில் ஒருத்தி பட்டென்று இன்னொருத்தியை அடிக்க மற்றவள் அவளைப் பாய்ந்து பிடித்து ஒதுக்கினாள். தரையில் தள்ளினாள். அவர்கள் சண்டை போட்டார்கள். அவன் போய் விலக்கினான். இரண்டு பேரையும் ஆபாசமாகத் தொட்டான். இரண்டு பேர் கையிலும் ஐந்தாயிரம் ரூபாய் கட்டு வைத்தான்.

அவர்கள் நோட்டுக் கட்டை பார்த்ததும் அமைதி யானார்கள். வெவ்வேறு மூலைக்கு போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

செல்போனில் வாசற்கதவை மறுபடியும் பூட்டுப் போடும்படி செக்யூரிட்டிக்குச் சொல்ல, வாசற்கதவு பூட்டு போடப்பட்டது.

வாசற் பக்கம் ஏதோ சத்தம் கேட்கிறதே என்று கனகசபாபதி கூர்ந்து கவனித்தான். சத்தம் அடங்கியதும் சமாதானமானான்.

தட்டுகள் எடுக்க சமையலறைக்கு வந்தான். கதிரேசன் உட்கார்ந்திருப்பதை பார்த்ததும் பயத்தில் வெளிறினான். திடுக்கிட்டான். 'ஏய்' என்று கத்தினான். அந்தப் பெண்கள் பயந்து போய் எழுந்து கொண்டார்கள்.

"நீ போலீஸா, நீ போலீஸா, இந்த ஆள் வழியில் ஒரு பொம்பளைய குத்திட்டு வந்திட்டான். இவனை விடாதே. அரஸ்ட் பண்ணு" கூட வந்த அந்தப் பெண் உரத்துக் கத்தினாள்.

"இவன் கொலைகாரன். மூணு தடவை அந்தம்மாவை குத்தினான். என் கண்ணால பார்த்தேன். அந்த அம்மா கைகூப்பி அழுதிச்சு. ஆனாலும் விடலை. தலைமுடியை பிடிச்சு மல்லாத்தி நெஞ்சிலேயே குத்தினான். இவனை விடாதே. இவனை அரஸ்ட் பண்ணு" என்று கத்த. அவன் பாய்ந்து அந்தப் பெண்ணை அடித்தான்.

கதிரேசன் வேகமாக முன்னேறி அவன் தலை முடியைப்பிடித்து இழுத்து, தரையில் தள்ளினான். அவன் கணுக்காலில் ஏறி நின்று கொண்டான். இடுப்பு பெல்ட்டை கழற்றி முகத்திலடித்தான். அவன் அறை வாசல் பக்கம் நடமாட்டம் கேட்டது. யாரோ கதவு தட்டுவது கேட்டது. இந்தப் பெண்கள் ஓடிப் போய் கதவு திறக்க முயற்சி செய்ய வெளியே பூட்டியிருப்பது புரிந்து இவர்களும் சுத்தத் துவங்கினார்கள்.

கதிரேசன் எது குறித்தும் கவலைப்படவில்லை.

"இனிமேல் வீட்டுப் பக்கம் போனா, உன் பொண்ணை, பொண்டாட்டியைத் தொட்டா கொலை பண்ணிடுவேன் ராஸ்கல்" என்று சொல்லி முகத்தில் வேகமாய் மிதித்தான். உதடு கிழிந்து கீழ் பற்கள் இரண்டு உதிர்ந்தன. அவன் தள்ளாடி எழுந்திருக்க, மறுபடியும் எட்டி உதைத்தான்.

வேகமாய் உடம்பு எகிறி மேஜை மீது பட்டு சுருண்டு விழுந்தான். விழுந்தவன் குப்புற கிடக்க, முதுகில் மறுபடியும் பெல்ட் அடி மூன்று விழுந்தது.

"அடிச்சா வலிக்கும்னு தெரியாதா. இதை விட மோசமா அடிப்பேன். இதுதான் கடைசி. விட்டுட்டு ஓடிப்போ. கண் காணாது ஓடிப்போ. மறுபடியும் அந்த தெருவுக்குள்ள நீ நுழைஞ்சே....நடக்கிறதே....வேற"

அவன் ஏதோ சொல்ல முயற்சித்து அடக்கிக் கொண்டான்.

மறுபடியும் செல்போனை இயக்க வெளிக்கதவு திறக்கப்பட்டது. அவன் இறங்கி வெளியே போனான்.

கூட வந்த ஒருவனை அந்த இடத்தை கண்காணிக்க சொல்லி விட்டு, காரில் ஏறி நகர்ந்தான். சகலரும் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, யாரும் தடுக்கவில்லை.

மும்பை அப்பேற்பட்ட இடம். யாருக்கு எது நடந்தாலும் ஏன் என்று கேட்க மாட்டார்கள். கேட்க நாதியற்ற கூட்டம்தான் மும்பையில் அதிகம் இருந்தது.

நேரே போய் நண்பனிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, வீட்டுக்குப் போய் குளித்து உடை மாற்றி உணவருந்தி மறுபடியும் அவள் இருக்கும் தெருவுக்குப் போய், பீடா கடைக்கு அருகே உட்கார்ந்து கொள்ள, செல்போன் ஒலித்தது.

அவனைத் தேடி ஜீப்பிலும் கார்களிலும் ஆட்கள் வந்து இறங்கியிருக்கிறார்களாம். இரண்டு பெண்களும் ஓடி விட்டார்களாம். அவன் வீட்டுக்குள் யாரையும் நுழையவிட வில்லையாம். மறுபடியும் கதவு பூட்டிக் கொண்டு வந்தவர்களோடு ஜீப்பிலேறி ஆஸ்பத்திரிக்கு போயிருக்கிறா னாம். மும்பையில் மிக நவீனமான ஆஸ்பத்திரியில் அவனை

சேர்த்திருக்கிறார்களாம். கணுக்காலில் பெரிய கட்டு போட்டிருக்கிறார்களாம். அவனை அடையாளம் தெரிந்து சொல்லியிருக்கிறார்களாம்.

ஆபீஸிற்கு வருவதற்கு வாய்ப்புகள் உண்டு என்று சொல்ல, அவன் உடனடியாக ஆபீஸிற்குப் போனான். பெங்காலி நண்பனிடம் விஷயத்தைச் சொன்னான்.

கவலைப்படாதே, இதற்கெல்லாம் எப்போதுமே நான் தயாராக இருக்கிறேன். வந்தவர்கள் பேச ஆரம்பிப்பார்கள். பேசும்போது விஷயம் சொல்லி விடுகிறேன்.

அவன் சொல்லி முடித்த மூன்றாவது நிமிடம் வாசலில் ஜீப் சத்தம் கேட்டது.

பெங்காலி நண்பன் இறங்கி தெருவில் ஓடினான. வந்தவர்களைப் பார்த்து கை கூப்பினான்.

"என்ன தகராறு செய்கிறீர்கள். ஏன் எங்கள் ஆளைப் போட்டு அடிக்கிறீர்கள்"

"முற்றிலும் சொந்த விஷயம் அவன் மனைவியை அடிப்பதால், அவன் மனைவியின் உத்தரவிற்கேற்ப அவனை மிரட்டி வைத்தோம்"

"குடும்ப விஷயத்தில் ஏன் தலையிடுகிறீர்கள்."

"குடும்ப விஷயமல்ல. தொழில். தனிப்பட்டோருக்கு பாதுகாப்புக் கொடுப்பது எங்கள் வேலை. கணவன், மனைவிக்கு நடுவே சண்டை ஏற்பட்டால், மனைவிக்கு பாதுகாப்பு கொடுப்பது எங்களுடைய தொழிலில் ஒன்று.

மனைவியை துன்புறுத்தினல் போலீஸுக்கு போவ தற்கு முன்பு எங்களிடம் வருவார்கள். போலீஸுக்கு போனால், நியூஸ் பேப்பருக்கு போய் விடும். பேப்பருக்கு போகக்கூடாது என்பதற்காக எங்களிடம் வருவார்கள். நாங்கள் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

உங்க ஆள் மனைவியை துன்புறுத்துகிறான். மகளை அடிக்கிறான். மகள் முன்பு மனைவியைப் புணருகிறான். இது சரியாக இல்லை என்பதை மட்டும் சொல்லி வையுங்கள். இந்த இடத்திற்கு அவர் வரவில்லை என்றால் வேறு எந்த தொந்தரவும் அவருக்கு இருக்காது. மற்றபடி உங்கள் தொழிலுக்குள் நுழையவோ அதை தடுத்து நிறுத்தவோ நாங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. அந்த விதமான ஈடுபாடும் எங்களுக்கு இல்லை. நீங்கள் யார் என்றும் எங்களுக்குத் தெரியும்” என்று வேகமாக சொல்லி முடிக்க,

அவர்கள் முகவாயைச் சொரிந்து கொண்டார்கள். அங்கிருந்து செல்போனில் யாரிடமோ பேசினார்கள்.

செல்போன் பெங்காலி நண்பருக்கு தரப்பட்டது.

“யாரது கதிரேசன். அவனை என்னை வந்து பார்க்கச் சொல்” என்று ஒரு உத்தரவு செல்போனில் சொல்லப்பட்டு, அணைக்கப்பட்டது.

எங்கே வந்து பார்க்க வேண்டும் என்று பெங்காலி நண்பன் கேட்க,

“இங்கே நிற்கச் சொல். நாங்கள் கூட்டிப் போகிறோம்” என்று சொன்னான்.

கதிரேசன் கீழே இறங்கி வந்தான். அவனை ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். போகும் போது விதவிதமாக விசாரித்தார்கள். எல்லாவற்றுக்கும் பதில் சொன்னான்.

“உங்கள் நாட்டுப் பெண், உங்கள் மொழிப் பெண் என்பதனால் தான் இதில் இறங்கினாயா.”

“ஆமாம். அது தவிர அந்த குழந்தையை எனக்குப் பிடித்திருந்தது. அந்தக் குழந்தை அழுவது எனக்குப் பிடிக்கவில்லை என்பது என் சொந்தக் காரணம்” என்று சொல்ல, அவர்கள் மும்பையின் எல்லையில் ஒரு பெரிய

தோட்ட பங்களாவுக்குள் நுழைந்தார்கள். உள்ளிருந்து மேனேஜர் போல் கோட்டும் சூட்டுமாய் ஒரு ஆள் வந்தான்.

யார் அந்த கூட்டத்தின் மையமோ அவர் தொலைவிலிருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவனுக்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. அந்த மேனேஜர் அவனிடம் குறுக்கு விசாரணை ஆரம்பித்தார்.

"அந்த அறைக்குள் என்னென்ன பார்த்தாய்" என்று கேட்டார்.

"நிறைய நோட்டுக் கட்டுகள் இருந்தன. ரிவால்வர்கள் இருந்தன. தங்க நகைகள் இருந்தன. இவை மட்டுமே என் கண்ணில் பட்டன. இதற்கு மேல் மும்முரமாகத் தேட நான் முயற்சி செய்யவில்லை.

"ஏன்"

"என் வேலை அவன் சொத்து என்ன என்பதல்ல. அவனை அடித்து முடக்க வேண்டும் என்பது மட்டுமே."

"அவன் சமையலறையில் ஏதேனும் சரக்கு வைத்திருந் தானா."

"இல்லை. சரக்குகள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும்."

"சொல்லுங்கள்."

"எங்களிடமிருந்து பதினாறு கிலோ சரக்கு அனுப்ப வேண்டிய ஒரு விஷயத்தை அவன் மேற்கொண்டான். ஆனால், பதினைந்து கிலோதான் போயிருக்கிறது. ஒரு கிலோ தவற விட்டிருக்கிறான். கேட்டால் இல்லையென்று சத்தியம் செய்கிறான். வேறு யாரோ எடுத்திருக்கக் கூடும் என்று சொல்லுகிறான். இன்னொருவன் மேல் பழியைப் போடுகிறவனை நாங்கள் நம்புவதில்லை. அந்த சரக்கு வேறு

எங்கேயோ இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. அது விலை மதிப்பு மிக்கது. அது வேண்டுமென்று எங்களுடைய தலைவர் விரும்புகிறார். நீ உதவி செய்ய முடியுமா."

"இதற்குத்தான் அழைத்தீர்களா."

"ஆம். இதற்குத்தான் அழைத்தோம்."

"உங்கள் தலைவரைப் பார்க்க முடியுமா."

"அது அவசியமில்லை."

"அப்பொழுது நான் உதவி செய்வதும் சந்தேகம்."

"ஏன்."

"என்னிடம் உதவி கேட்பவர் யார் என்று தெரியாமல் ஒருத்தருக்கு உதவி செய்வதில் எனக்கு இஷ்டமில்லை. உங்கள் பேச்சை நம்ப நான் தயாராக இல்லை. நேரடியாக பேசுவது எனக்கு நல்லது."

"உனக்கு என்ன நல்லது."

"ஒரு வேளை நான் ஏதேனும் வம்பில் மாட்டிக் கொண்டால் என்னை அவர்தான் மீட்க முடியுமே தவிர, உன்னைப் போன்ற ஆட்கள் மீட்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அவருடைய வாக்கு எனக்கு வேண்டும். இந்த விஷயத்தை நான் கண்டுபிடித்து உங்களுக்கு கொடுக்கும் பொழுது நான் இதைக் கடத்தினேன் என்று என் பெயர் வந்துவிடக்கூடாது."

"ஜாக்கிரதையாகப் பேசுகிறாயே."

"ஆமாம். மிக மிக ஜாக்கிரதையாகப் பேசுகிறேன். நீங்கள் ஒரு கிலோ அரை கிலோ என்று பேசும் போதே அது என்ன என்று தெரிந்து விட்டது. நமது தேசத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கிற விஷயம் என்று எனக்குப் புரிந்து விட்டது."

"இது நமது தேசத்து விஷயமல்ல. கொழும்பிலிருந்து வெளிநாட்டிற்குப் போக வேண்டிய விஷயம். நாம் நடுவே தரகராகத்தான் இருக்கிறோம்."

"எப்படி வேண்டுமானாலும் இருங்கள். இது மனித குலத்தை நாசமாக்கக்கூடிய விஷயம். இதை செய்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆனால், மிகப் பெரிய எதிரியை ஒழிக்க நான் இதைச் செய்ய விரும்புகிறேன். இதற்கு நான் உங்கள் தலைவரைப் பார்க்க வேண்டும்."

அவர் உள்ளே போனார். அடுத்த முப்பதாவது வினாடியில் திரும்பி வந்தார். அவனை அழைத்தார். மாடிப்படி ஏறினார். இரண்டு அறைகள் தாண்டினார். அந்த வீட்டின் பின்பக்கம் பெரிய வெட்ட வெளியில் கயிற்றுக் கட்டில் போட்டு அதன் மீது மெத்தை போட்டு, திண்டுகள் போட்டு இருக்க, அதில் அறுபது வயது ம்திக்கத்தக்க கிழவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

வெளியூர் கிங்சைஸ் சிகரெட்டுகள் அவருக்கு எதிரே பாக்கெட் பாக்கெட்டுகளாக இருந்தன. அதிலிருந்து ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு அவனையே பார்த்தார். சிரித்தார்.

"அவனுக்குப் பிறகு அந்தப் பொம்பளையை நீ வச்சுக்குவியா" என்று கேட்டார்.

ஒரு தலைவனாக இருக்கிறவன். எவ்வளவு தெளி வாகவும் திறமையாகவும் இருக்க வேண்டுமென்று கதிரேசனுக்குப் புரிந்தது.

அவன் திகைத்தான். பிறகு சிரித்தான். "ஆமாம் அய்யா" என்று சொன்னான்.

"அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவளா அந்தப் பெண்,"

"இல்லை. அது தெரியவில்லை. ஆனால், இதுவரை தனியாக இருந்த எனக்கு எனனவோ ஒரு மனமாறுதல் ஏற்படட்டு, அந்த தாயையும் சேயையும் அள்ளிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது."

"நான் அழகான பெண்ணாக பார்த்து உனக்கு திருமணம் செய்து வைக்கட்டுமா. என்னோடு இருந்து விடுகிறாயா."

மறுபடியும் கதிரேசன் சிரித்தான்.

"உங்களோடு இருக்கும் போது ஏன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஒன்பது கல்யாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அது வாழ்க்கையாக இருக்காது. வேறு விஷயமாக இருக்கும். உங்களோடு இருக்கிற போது பரபரப்பு அதிகம் கூடும். நான் பரபரப்பு குறைவாக இருக்கவே விரும்புகிறேன். இதுவரை இருந்த பரபரப்பு போதுமென்று நினைக்கிறேன்.

இவ்வளவு திறமையானவனாக இருந்து கொண்டு, ஏன் ஒதுங்கி வாழ நினைக்கிறாய். சரி இந்த அண்டர் கிரவுண்ட் உலகத்தில், ஒரே ஒரு விதிதான் உண்டு. நீங்கள் குடிப்பவ ராகவோ பிக்பாக்கெட்டாகவோ, கண்ணம் வைத்து காசு திருடுபவராகவோ இருக்கலாம். உங்களுக்கு மரியாதை ஒரு போதும் குறையாது. ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களென்றால், உடனடியாய் இங்கே சிரச்சேதம் தவிர வேறு எந்த தண்டனையும் வழங்கப்படுவதில்லை. நம்பிக்கைத் துரோகம் செய்பவனை எவரும் அருகே அண்ட விடுவதில்லை."

"சரி ஐயா. நான் விடை பெறுகிறேன். சரக்கோடு சந்திக்கிறேன்."

இவனுக்கு இது ஏன் புரியவில்லை. இந்த கனகசபாபதி ஏன் இதை முக்கியமாக எடுத்துக் கொள்ளவில்லை. பதினாறு கிலோவில் ஒரு கிலோ தனக்கு என்று ஒதுக்கிக் கொள்வது மிகக் கேவலம். உச்சாணிக் கொம்பிலிருக்கும் நம்பிக்கைத் துரோகம்.

காசு மதிப்பு இங்கே போய், இவனை கடுகளவும் நம்பக்கூடாது. இவன் காட்டிக் கொடுப்பவன் என்றெல்லாம் பெயர் வந்துவிடும். காட்டிக் கொடுப்பவனை எவரும் எந்தக் காலத்திலும் மன்னிப்பதே இல்லை.

இவனிடம் பேசலாமா. இதைப் ப்ற்றி விளக்கிச் சொல்லலாமா. நான் உன்னை மிகப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறேன் என்பதை விளக்கி இனிமேலாவது உன் மனைவியிடமும் குழந்தைகளிடமும் பிரியமாக இரு. எங்கேயாவது தெற்கே போய்விடு என்று சொல்லலாமா. இன்னுமொரு வாய்ப்பு கனகசபாபதிக்கு கொடுத்துப் பார்க்கலாமா. கதிரேசன் யோசித்தான்.

ஒரு செக்யூரிட்டிக்கு நல்லவர்களுடைய நகர்தலும் கெட்டவர்களுடைய நகர்தலும் நிச்சயமாகத் தெரிந்தாக வேண்டும். அந்த பெங்காலி நண்பன், கதிரேசனுடைய புத்திக்கூர்மையை ஞாபக சக்தியை மனதில் கொண்டே அவனோடு சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

செக்யூரிட்டியாக இருப்பவர், அண்டர்வேர்ல்டு மனிதர்கள் யார், அவர்கள் எங்கே ந்கர்ந்து கொண்டிருக் கிறார்கள், எங்கே குடியிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். வெறும் வாயிற்காப்பவன் பணியாக மட்டுமே அல்லாமல் உலகத்தினுடைய நடவடிக்கைகளை மும்பையைப் போன்ற முக்கியமான நகரங்களில் உள்ள செக்யூரிட்டிகள் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

காவலர்களுக்கு உண்டான ஒரு குணமும் புலனாய்வுத் துறைக்கு உண்டான ஒரு புத்தியும், அவர்களிடம் இருந்தாலொழிய கொடி கட்டிப் பறக்க முடியாது. அப்படி திறமையாக இருப்பால, சம்பளம் பல மடங்கு வாய் விட்டு கேட்கப்படும். கேட்கப்படாமலேயே கொடுக்கப்படும்.

பெங்காலி நண்பனிடம் போய் தன் மனதில் தோன்றியவற்றை கதிரரேசன் சொல்ல, பெங்காலி நண்பன் லேசாய் பதட்டமடைந்தான்.

“நீ தேவையில்லாமல் ஒரு திருமணமான பெண் மீது ஆசை வைத்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. இத்தனை நாள் இல்லாமல் இப்போது எதற்காக இந்த இரக்கம். ஏன் அவர்களை முக்கியமாக நினைக்கிறாய். உலகத்தில் பல பெண்கள் புருஷனிடம் அடி வாங்குகிறார்கள். சித்திரவதை படுகிறார்கள். எல்லோரையும் நீ காப்பாற்ற முடியுமா. லட்சோப லட்சம் பேரில் இந்தப் பெண்ணும் ஒருத்தி என்று மௌனமாக இருப்பதுதான் நல்லது.

இதில் நீ தலையிட அண்டல் வேர்ல்டு சமாச்சாரம் என்று போலீஸோ அல்லது வேறு யாரோ நினைத்து விடலாம். அவனை விட்டு விலகி இருப்பது நல்லது என்று தோன்றுகிறது என்று பயம் காட்டினான்.

“சேர்ந்து விடுகிறாயா என்று கேட்கிறார்கள்.”

“ஆமாம். கேட்பார்கள். உன்னைப் பற்றி மெல்ல மெல்ல பலபேர் வந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு விதமாகப் பேசி, உன்னைத் தொழிலுக்கு இழுக் கிறார்கள். உன்னை போலீஸ் தரப்பிலும் பேசுகிறார்கள். நீ முக்கியமான ஆளாக மாறிக் கொண்டிருக்கிறாய். இதுவே எனக்கு கவலையாக இருக்கிறது.”

"நண்பனே, நான் உன்னிடம் புத்திமதிகள் கேட்க வில்லை. சில சமயம் எனக்கு பாதுகாப்பு தேவைப்படும் என்பதற்காக கேட்கிறேன்."

"செய்ய வேண்டியது என் கடமை. பல நேரங்களில் பல விஷயங்களில் என்னை நீ பாதுகாத்திருக்கிறாய். உனக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது, கேள்வி கேட்காமல் உதவுவதுதான் என்னுடைய வேலை. ஆனாலும் புத்தி சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறது.

அந்தப் பெண்ணையும், அந்தக் குழந்தையையும் நீ எதனால் முக்கியமாக நினைக்கிறாய் என்று தெரியவில்லை. மறுபடியும் ஒரு வார்த்தை சொல். நான் அவர்களை முக்கியமாக நினைக்கிறேன். எனக்கு வேண்டுமென்று கருதுகிறேன் என்று ஒரு வ்ார்த்தை சொல். பிறகு உன்னை கேள்வியே கேட்க மாட்டேன். தயவு செய்து இதை தெரிவித்து விடு" பெங்காலி நண்பன் கேட்டு விட்டு அமைதியானான்.

கதிரேசனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. தன்னைத்தானே அந்தக் கேள்வியை கேட்டுக் கொண்ட போது அவனுக்கு பதில் வரவில்லை. எதனால் நிர்மலா முக்கியம். எதனால் அந்தக் குழந்தை முக்கியம். ஏன் இவர்களிடம் இவ்வளவு ஈடுபாடு கொள்கிறேன். நான் யார், அவர்கள் யார், யாரோ ஒரு கணவன் மனைவி, யாரோ ஒரு குடித்தனம். எதற்காக நான் அங்கு மாட்டிக் கொண்டு அவஸ்தைப் படுகிறேன். இத்தனைக்கும் என் மீது மிகுந்த காதல் உள்ளதாக நிர்மலா என்னிடம் தெரிவிக்கவில்லை. நீங்கள் இல்லாமல் இறந்து போய் விடுவேன் என்று அந்தக் குழந்தை கதறவில்லை. ஆனாலும் ஏதோ ஓர் ஈர்ப்பு இருக்கிறது. எதனால் என்று புரியவில்லை.

"அவர்கள் எனக்கு வேண்டுமென்றுதான் தோன்று கிறது. என்னால் அவர்களைப் பற்றி சிந்திக்காமல் ஒரு நாளும்

ஒரு பொழுதும் இருக்க முடியவில்லை. ஆயினும் அவர்களை நான் என் பக்கம் இழுப்பதற்கு முயற்சி செய்யப் போவதில்லை. அவனைத் திருத்தி அவர்களை சந்தோஷமாக்கவே நான் விரும்புகிறேன்."

"சந்தோஷமாக்கி விட்டு எனன செய்வாய்.'

"எங்கேனுடம் தனிமையில் அமர்ந்து கொண்டு அழுவேன் என்று நினைக்கிறேன்."

"கதிரேசா. உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா." பெங்காலி நண்பன் கோபமாகக் கேட்டான். கிட்டத்தட்ட ஒரு சி.பி.ஐ. ஆளுக்கு இணையாக நிற்கின்ற செக்யூரிட்டி ஆள் நீ. நீ இப்படி ஒரு இடத்தில் கேவலமாகவும், கோணலாகவும் நொய்மையாகவும் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீ இதை மறுபரிசீலனை செய்யக்கூடாதா."

"எனக்கே ஆச்சரியமா இருக்கிறது. இத்தனை நாள் எவர் மீதும் வராத ஈர்ப்பு, என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்ன பெண்கள் மீதெல்லாம் வராத ஈர்ப்பு, இவள் மீது ஏன் வந்திருக்கிறது என்று தெரியவில்லை. இது விட்டகுறை தொட்டகுறை என்று நினைக்கிறேன்."

"சரி முடிந்து விட்டது. இனி நான் உன் பக்கம். மேற்கொண்டு எந்தக் கேள்வியும் கேட்கப் போவதில்லை. அவர்களை உன் சொத்தாக நானும் பாவித்து, உனக்கு உண்டானதைச் செய்கிறேன். நீ சொன்னது போல அவனுக்கு ஒரு கடைசி முறை வாய்ப்பு கொடுத்துப் பார். ஆனால் ஒன்று சொல்கிறேன். அது திருந்துகிற நாய் இல்லை. திருத்த முயற்சிப்பவர்களை கடித்துக் குதறுகிற நாய். அவனிடம் நீ அடிபடாது வந்தால் அதுவே பெரிய விஷயம்."

"அவன் என்னிடம் வலிவு காண்பித்தால் ஒரே வீச்சில் அடித்துக் கொன்று போடுவேன்." கதிரேசன் இந்தியில் கத்தத் துவங்கினான்.

"அதுவும் ஆபத்து. தேவையில்லாதது. ஒரு கொலைக் குற்றத்தில் நீ மாட்டிக் கொள்வதிலும் எனக்கு விருப்ப மில்லை."

"இல்லை. நான் மாட்டிக் கொள்ள மாட்டேன். ஏனெனில் எனக்கு உயிர் வாழவும், ஒரு குடும்பத்தோடு இணையவும் மிகப் பெரிய ஆசை இருக்கிறது. என் ஆசைகளை நான் நிறைவேற்ற தயங்குவதே இல்லை. ஆசைகள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் அதன் மீது எனக்கு பிடிப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது."

கதிரேசன் தன் பெங்காலி நண்பனிடம் சொல்ல அவன் எழுந்து தழுவிக் கொண்டான்.

"நான் இருக்கிறேன் கவலைப்படாதே. ஆனால் இது தாதா விஷயம். போதை பவுடர் விஷயம். எனவே மிக மிக கவனமாக செயல்படு. அந்த ஒரு கிலோ பவுடரை தாதாவுக்கு தேடிக் கொடுக்கப் போகிறாயா."

"ஆமாம். அதுதான் முதல் வேலை. அவன் எங்கு வைத்திருக்கிறான் என்பதை கண்டு பிடிப்பதுதான் என்னுடைய முக்கியமான வேலை." கதிரேசன் சொல்லி விட்டு வெளியேறினான்.

அவனை அறியாமல் அவனைக் க்ண்காணிக்க இரண்டு ஆட்கள் அவன் பெங்காலி நண்பனால் போடப் பட்டனர். அவன் இரண்டு ஆட்களோடு சுற்றுகிறான் என்று தாதாவுக்கு தெரியவர, தாதாவும் நான்கு ஆட்களை கதிரேசன் பின்பு அனுப்பினான்.

ஒரு பெரிய பட்டாளம் தன்னைக் கண்காணித்துக் கொண்டு அலைகிறது என்று கனகசபாபதிக்குத் தெரிய வில்லை. ஆனாலும் எது வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும் என்ற பதட்டத்தோடு அவன்

மும்பையில் அலைந்து கொண்டிருந்தான். அடிக்கடி இடம் மாறிக் கொண்டிருந்தான்.

இன்னும் மூன்று நாட்களில் அந்த தாதாவின் எதிரி சரக்கு வாங்கிக் கொள்ள வருவதாகச் சொல்லியிருந்தான். அவன் நினைத்ததை விட மிகப் பெரிய தொகை தருவேன் என்ற சொல்லியிருந்தான். அது மட்டுமில்லாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவனுக்கு வசதிகள் செய்து கொடுப்பதாகவும் வாக்குறுதி தந்திருந்தான். இன்னும் மூன்று இரவு மூன்று பகல்கள் கடந்து விட்டால் ஏதேனும் ஒரு விடிவுகாலம் பிறக்கும். இந்த ஒளிந்துறையும் வ்ாழ்விற்கு ஒரு முடிவு வரும் என்று கனகசபாபதி நம்பினான்.

மும்பையில் உள்ள விபச்சாரிகளின் வீடுகளில் காசு கொடுத்து தங்கினான். அவர்கள் மிக கவனமானவர்கள். எதன் பொருட்டும் எவர் பொருட்டும் போலீஸில் மாட்டிக் கொள்ள விருப்பம் இல்லாதவர்கள். எனவே, வந்து தங்குகிறவர்களை உடனடியாக அப்புறப்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். அதற்காக பல வழிமுறைகளை அவர்கள் வைத்திருந்தார்கள்.

அவன் எங்கு தங்குகிறான் என்பதை கண்டுபிடிக்க கதிரேசனுக்கு அதிக நேரம் ஆகவில்லை. அவன் போய் தங்குகிற இடங்களை தெரிந்து கொண்டு, அடுத்தபடி என்ன செய்வது என்று யோசிக்கத் துவங்கினான்.

செக்யூரிட்டிகள் யோசிக்காமல் வெறுமே காவல்காரர் களாய் இருப்பதில் லாபமில்லை. சென்னை போன்ற நகரங்களில் தடி வைத்துக் கொண்டு வாசலில் உள்ள மடக்குச் சேரில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கு போதுமானதாய் இருக்கலாம். ஆனால், மும்பையில், அவர்கள் கிட்டத்தட்ட ஒரு பேலீஸ் அதிகாரியைப் போல நடந்து கொள்ள வேண்டும். அவன் எங்கே வைத்திருப்பான்

என்று திரும்பத் திரும்ப யோசித்துப் ப்ார்த்த போது சட்டென்று அவனுக்குள் ஒரு பொறி தட்டியது.

விபச்சாரி வீட்டில் பயமின்றி தங்குகிறவன் வேறொரு இடத்தில்தான் ச்ரக்கு வைத்திருப்பான். அந்த இடம் அவனுடைய வீடாகத்தான் இருக்கும். அவன் வீட்டை சந்தேகப்பட மாட்டார்கள் என்று தீர்மானம் செய்து, அவளோடு பெரிய சண்டை போட்டு அவளுக்கும் இவனுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொல்லி அதே சமயம் அந்த சரக்கை அவளறியாமல் எங்கேனும் ஒளித்து வைத்திருக்கலாம்.

இப்போது அந்த இடத்திற்குப் போய் என்னவென்று பார்ப்பது. என்னவென்று தேடுவது. அவளுக்கு எப்படிச் சொல்வது. பெங்காலி நண்பனிடம் தன் சந்தேகத்தை சொன்னான். அங்கு போகப் போவதாக அறிவித்தான்.

குழந்தைக்கு பொம்மைகளும் தின்பண்டங்களும் பிஸ்கெட்டுகளும் வாங்கிக் கொண்டான். அவளுக்கு க்யூடெக்ஸ்கள் பிடிக்குமென்று நினைத்து, மூன்று விதமான க்யூடெக்ஸ்கள் வாங்கிக் கொண்டான்.

கதவு தட்டினான். குழந்தை கதவு திறக்காமல் இடுக்கு வழியே பார்த்து விட்டு, அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு போயிற்று.

அவள் வேகமாக வந்து கதவு திறந்தாள். வரவேற்றாள்.

"அப்பாகிட்டயிருந்து லெட்டர் வந்தது. கேஸ் அவங்க பக்கம் ஜெயிக்கும்படியா இருக்காம். இவர் மீதும் இவர் அப்பா மீதும் நிறைய புகார்கள். நிறைய பக்கத்திலிருந்து வர, இவரை வீணா மாட்ட வச்சுட்டாங்கங்கிற மாதிரி கோர்ட்ல வாதாடினாங்களாம். ஜட்ஜ் ரொம்ப பரிவோடு கேட்டுக் கொண்டாராம்.

இத்தனை நாள் தண்டனை அனுபவிச்சதே போதும் என்று நினைக்கிறேன். நான் தீர்ப்பு அப்புறம் சொல் றேன்னாராம். இன்னிக்கு இல்ல நாளைக்கு தீர்ப்பாயிடும்னு சொல்றாங்களாம்.

நல்லபடியா தீர்ப்பாகி அப்பாவுக்கு விடுதலை கிடைச் சிட்டா நான் குழந்தையோட மெட்ராஸ் போயிடுவேன்."

அவனுக்குள்ளே டக்கென்று ஒரு குமிழி எழுந்து அடங்கியது. வந்த விஷயத்தை மறந்து விட்டு திரும்பி விடலாமா என்று ஒரு க்ஷணம் தோன்றியது.

"மெட்ராஸ் போய் என்ன பண்ணுவீங்க."

"எங்கேயாவது ஒரு டீச்சர் உத்தியோகம். இல்ல ஆயா உத்தியோகம் பார்த்து என் வாழ்க்கையை நான் கவனிச்சுக்கு வேன். எப்பாடுபட்டாவது இவளைப் பெரியாளா கொண்டு வருவேன். என்ன திடீர்னு இந்தப் பக்கம்" என்று புன்னகை செய்தாள்.

அவன் யோசித்தான். தலை நிமிர்ந்தான்.

"ஒரு மோசமான பொருள் அவன் இங்கே மறைத்து வைத்திருக்கணும். அது பல லட்சம் ரூபாய் மதிப்புடையது. அது இங்கு இருக்கிற ஒரு தாதாவுடையது. தெரியாத்தனமா காசுக்கு ஆசைப்பட்டு அதுல கையை வச்சுட்டான். அவன் தாதாவினுடைய எதிர் பார்ட்டிகிட்ட போய் சேர்ந்துட் டான். இது எல்லாமே சரியா வராத ஒரு விஷயம்.

அந்த பொட்டலம் எங்கே இருக்குமென்று முதல்ல தேடணும். இருந்தா உடனே அப்புறப்படுத்திடணும்."

"அது இங்கதான் இருக்குன்னு நினைக்கிறேன். ஆனா, அது என்னன்னு பார்க்கலை."

"எங்கு இருக்கு."

"ஒரு டேப் ரெக்கார்டரில் வச்சு பிளாஸ்டிக் போட்டி மூடியிருக்குன்னு நினைக்கிறேன்."

"இந்த டேப் ரெக்கார்டர் வேலை செய்யாது வச்சுக்க. அப்டின்னான். டேப் ரிக்கார்டரை விட இது கனமா இருந்தது. உள்ள ஏதோ வச்சுருக்காங்க. தங்கமா இருக்கும்னு நினைச்சேன்."

"எடுங்க, பார்க்கலாம்" அவன் கேட்க அவள் எடுத்துக் கொடுத்தாள்.

எந்தப் பக்கமும் எந்த ஸ்க்ரூவும் கழட்ட முடியாதபடி அதில் கூழ் போல ஒரு திரவம் ஊற்றப்பட்டு அடைக்கப் பட்டிருந்தது.

சப்தம் அதிகரிக்கின்ற இடத்தைக் கழற்றி மெல்லிய கம்பியை உள்ளே விட்டு, அழுத்திப் பார்க்க, கம்பி பல இடங்களில் தடைப்பட்டு, எங்கோ போய் குத்தி இறக்கியது. வாசனை மூக்கைத் தாக்கியது. சுவைத்துப் பார்க்க கண்ணுக்குள் வெறியேறியது. "நல்ல வேளை கண்டு பிடிச்சுட்டேன். இது உங்ககிட்ட இருக்கிறது தெரிஞ்சுதுன்னா, எந்தக் கேள்வியும் இல்லாம கொண்டு போய் உள்ள வச்சுடுவாங்க. என்ன கதறினாலும் விடமாட்டாங்க. உங்களை மட்டுமில்லை, குழந்தையையும் சேர்த்து வைச்சுடுவாங்க. இதுதான் பெரிய கொடுமை. வேற எதுக்கும் மன்னிப்புக் கிடைக்கும். இந்த ஒரு சரக்கு கையில் இருந்தா யாரும் மரியாதையே கொடுக்க மாட்டாங்க. நல்லவேளை நல்லவேளை" அவன் திரும்பத் திரும்ப புலம்பிக் கொண்டிருந்தான்.

மறுபடியும் அமைதியாக உட்கார்ந்து யோசித்தான். டேப் ரெக்கார்டரை கையில் எடுத்துக் கொண்டான். சட்டென்று வெளியே போய் காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்தான். வெளியே வந்து நின்றவளிடம், "நான் எடுத்துக் கொண்டு போய் விட்டேன் என்று சொல். வந்து சோதனை போட்டேன் என்று சொல். நீ கொடுத்ததாக சொல்ல

வேண்டாம். இங்கு யாரும் வரமாட்டார்கள். நான் உரியவரிடம் சேர்த்து விட்டு மறுபடியும் வருகிறேன்." என்று சொன்னான். வேகமாக காரை கிளப்பினான். அவனை நாலு பேர் வழி மறித்தார்கள். தாதாவிடம் போக வேண்டும் என்று சொன்னார்கள். அங்குதான் போய்க் கொண்டிருக்கிறேன் என்று சொன்னான்.

"எங்கள் வண்டியில் வா" என்று வற்புறுத்தினார்கள். அவன் வண்டியில ஏறிக்கொணடு கதவை சாத்திக் கொண்டு தாதாவிடம் பேசினான். தாதாவை வரச் சொன்னான். தாதாவும் அவனும் ஒரு முக்கியமான இடத்தில் வைத்து சந்திக்க, டேப் ரிக்கார்டரைக் கொடுத்தான். அந்த இடத்திலேயே டேப்ரிக்கார்டர் கல்லால் உடைக்கப்பட்டு பார்சல் பிரிக்கப்பட்டது.

சரக்கு என்று தெரிந்ததும் அள்ளிக் கொண்டு வினாடி நேரத்தில் அவர்கள் தலைமறைவானார்கள். தாதா எங்கிருந்தோ போன் செய்தான். "மிக்க நன்றி. உனக்கு என்ன வேண்டும்." என்று கேட்டான்.

"அந்தப் பெண்ணுக்கும் அவள் குழந்தைக்கும் பாதுகாப்பு வேண்டும்" என்று சொன்னான்.

எதிர் முனையில் அமைதியானார்கள். "இங்கு பாதுகாப்பு கொடுப்பது கடினம். மிகப் பெரிய வேலை. அவர்களை வேறெங்கேனும் போகச் சொல். உண்டான காசு கொடுக்கிறேன்" என்று சொல்லி தொலைபேசியை அணைத்தான்.

அதற்கு மேல் அவனிடம் எதுவும் எதிர்பார்க்க முடியாது என்று கதிரேசனுக்குத் தெரிந்து போயிற்று. எனவே பாதுகாப்பு கொடுப்பது என்பது அவன் தலையில் வந்து விழுந்தது.

மறுபடியும் அந்த வீட்டிற்குப் போய் நிற்க.

அவர்களிடம் இந்த இடத்தை விட்டு காலி செய்து வேறு இடம் போய் விடலாமா என்று கேட்டான்.

அவர்கள் விழித்தார்கள். குழந்தையை அணைத்துக் கொண்டு, சென்னை பக்கம் போகலாமா என்று கேட்க,

"எனக்கு தமிழ் தெரியாதே... அங்கெல்லாம் தமிழ்தானே பேசுவார்கள். எனக்கு தமிழ் சுமாராகத்தான் வரும்" என்று குழந்தை ஹிந்தியில் கொஞ்சியது.

"சென்னைக்கு எங்களை அனுப்பி விட்டு, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்." அவள் கூர்மையாக அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"உங்களோடு தங்கி விடலாம் என்று நினைக்கிறேன்" என்று வேகமாய் கதிரேசன் பதில் சொன்னான்.

அவள் தலை குனிந்து கொண்டாள்.

"இரண்டாம் முறையாக நான் ஏமாற வேண்டுமா" என்று நிமிர்ந்து கேட்டாள்.

"வேண்டாம். ஏமாற்றுவதற்காக நான் எதுவும் செய்ய வில்லை."

"அவருடைய தொழிலை விட உங்கள் தொழில் மிகவும் மோசமானதாகத் தெரிகிறது. நீங்களும் நாலாவிதமான ரகசியத் தொடர்புகள் உடையவர்கள் என்று தோன்றுகிறது."

"இல்லை. நான் ரகசியத் தொடர்புகள் உள்ளவன் அல்ல. தவறான வேலை செய்பவனும் இல்லை. இருந்தாலும் இந்த வேலையை எல்லாம் விட்டு விட்டு தெற்கே வந்துவிடத் தயாராக இருக்கிறேன்."

"எதற்கு. என் கூட வாழ்வதற்கா."

அவன் சட்டென்று பதில் சொல்லத் தயங்கினான்.

"ஆமாம்" என்றான்.

"நான் எச்சில் பண்டம். மிக வேகமாக வந்து மிக மோசமாக காயம் பட்டவள். இரவெல்லாம் தனித்து உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருப்பவள். என்னை ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள்."

"நான் உங்களை விட மோசமாக வாழ்ந்தவன். உங்களை விடமோசமாகக் கிடந்தவன் என் சிறு வயது வேதனைகளைச் சொன்னால் நான் எத்தனையோ மேல் என்று சொல்வீர்கள். ஒரு வேளை நீங்களும் நானும் ஒன்றாக இருப்பதுதான் நல்லதோ என்று தோன்றுகிறது."

அவள் சிரித்தாள்.

"எனக்கு இதெல்லாம் தெரியவில்லை. சற்று குண்டாக இருக்கிறேன். படுக்கையில் வளமாக இருப்பாள் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அல்லது சிறிது நாள் ஏதேனும் பேசி உபயோகப்படுத்தி விட்டு, நகரத் தீர்மானிக்கலாம். எது செய்தாலும் உண்மையாக இருந்தால் எனக்கு சந்தோஷமாக இருக்கும்" அவள் அமைதியான முகத்தோடு அவனிடம் பேசினாள்.

"நீங்கள் இத்தனைக் கடுமையாகப் பேசுவதால், நானும் உங்களிடம் சிலதை சொல்ல வேண்டியிருக்கிறது.

என்னை மும்பையின் தாதா என்றே என்றே வைத்துக் கொள்ளுங்கள். சந்தோஷப்படுத்துகின்ற பெண்களை எனக்கும் தெரியும். ஆனால், நான் கேட்பது அதுவல்ல. இந்தக் குழந்தையோடு, உங்களோடு இருக்க வேண்டுமென்ற ஒரு இனம் புரியாத ஆசை எனக்கு வந்திருக்கிறது.

இதற்குக் கராணம் நான் பலமுறை என்னைக் கேட்டும் புரியவில்லை. என் அம்மாவின் ஞாபகம் உங்களைப் பார்த்த போது வருகிறது. என் அம்மாவோடு என் அப்பா சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன்.

அது நடக்கவில்லை. அதுபற்றி நான் விவரிக்கவும் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் அவ்விதமே புருஷனோடு சிரமப்படுகிறீர்கள் என்கிறபோது உங்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்று எனக்கு தோன்றியது. அது, என் அம்மாவை சந்தோஷப் படுத்துவது போல என்று எனக்கு தோன்றுகிறது.

இதுதான் மிக மிக ஆழமான என் நெஞ்சினடியில் புதைந்து கிடக்கின்ற விஷயம். உங்களை பார்க்கிற போது, சிறிது கூட காமமே இல்லாமல் பார்க்கிறேன் என்று பொய் சொல்ல விரும்பவில்லை. ஆனால் காமம் மட்டுமே என் எண்ணம் அல்ல.

உங்கள் அமைதியான முகமும் பெரிய கண்களும் சிரிப்பும், பேச்சும், பாட்டும் கூப்பிட்டவுடன் ஓடி வருவதும் என்னை நெகிழ வைத்து விட்டன.

உங்களிடம் ஒரு பிரேமை இருக்கிறது. மனம் கனிந்து புருஷனோடு கொண்டாடி வாழ வேண்டுமென்ற மிகப் பெரிய ஆசை இருக்கிறது. அது இப்பொழுது காணாமல் போனதால், முகத்தில் கருப்பு படிந்திருக்கிறது.

நான் அதைத்தான் உங்களிடமிருந்து அகற்ற நினைக்கிறேன். உங்களுடைய பிரேமை எனக்கு வேண்டு மென்று ஆசைப்படுகிறேன்.

உங்களுக்கு விருப்பம் உண்டாயின் நாம் தெற்கே போகலாம். அல்லது நீங்கள் மட்டுமே தெற்கே போவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.”

அம்மாவும் கதிரேசனும் பேசிக் கொண்டிருப்பதை கதிரேசனிடம் அமர்ந்தபடி அந்தக் குழந்தை உற்று உற்று பார்த்தது.

“கதிரேசன் வர்றேன்றாரம்மா. நாம அவரை கூட்டிடு போனா என்ன. எனக்கு மும்பை பிடிக்கலேம்மா. மெட்ராஸ்

போயிடலாமே. அங்க போய் நாம மூணு பேரும் ஒரே வீட்ல இருக்கலாமே. எனக்கு கதிரேசனை பிடிச்சிருக்குமா. உனக்கு பிடிக்கலையா". குழந்தை ஆவலோடு கேட்டாள்.

நிர்மலா பதில் சொல்லவில்லை.

"குழந்தை கேட்கிறதே பதில் சொல்லலாமில்லையா" கதிரேசன் தனக்கு வேண்டிய பதிலை நிர்மலாவிடமிருந்து எதிர்பார்த்தான்.

"எனக்கு பிடிச்சிருக்கா பிடிக்கலையாங்கிற தில்லே விஷயம். நடக்குமா நடக்காதா. மறுபடியும் சரியா வருமா வராத-ா. திருப்பியும் எகிறி இன்னொரு குப்பைத் தொட்டியில் விழ நான் தயாராக இல்லை. அதுக்கு வெறுமனே கிடக்கலாம்னுதான் தோணுது. அத்தனை பயம். அத்தனை கலவரம் உடம்புல இருக்கு. இத்தனை பயமும் கலவரமும் வச்சுக்கிட்டு நான் ய்ாரை சந்தோஷப்படுத்துற துன்னு தெரியலை."

"என்ன பயம்."

"தெற்கே போனாலும் மறுபடியும் இவன் வந்து நம் வீட்டு வாசல்ல நின்னு என்னடீன்னு கேட்பான். கொலை நடுங்கும். மனசு செத்துப் போகும். எல்லாம் பிடுங்கிக்கிட்டு போகப் போவுது அப்பிடீன்னு ஒரு அலறல் வரும். அந்த ஒரு வினாடிக்காக, அந்த ஒரு வினாடி நேர நெருப்பு மிதியலுக் காக நான் எதுவும் செய்ய விரும்பவில்லை. மறுபடியும் அவமானம் என்றால், என் மனம் தாங்காது. மும்பையில் பட்ட அவமானம் போதும். மெட்ராஸ்லே, கோயம் புத்தூர்லே, பெங்களூர்லேன்னு ஒவ்வொரு இடமா மாத்தி, ஒவ்வொரு இடமா அவமானப்பட்டு, அலைய வேண்டாம். எனக்கு புருஷனே தேவையில்லை அவ்வளவுதான் தோணுது."

"அந்த ஆள் வரமாட்டான். நீங்க கவலைப் படாதீங்க."

அவனையெல்லாம் யாரும் சாகடிக்க முடியாது. ரத்தபிஜியன் மாதிரி மறுபடி மறுபடி வந்துகிட்டேதான் இருப்பான். மத்தவங்களுக்கு தொந்தரவு கொடுக்கிறதுக் காகவே பொறந்திருக்கிற ஜென்மம் அது."

"சரி நான் வர்றேன்" திடமாய் கதிரேசன் எழுந்தான். இப்பொழுது வேலை இவர்களை பாதுகாப்பது மட்டும் அல்ல. அவன் இவர்களைத் தேடி வராமல் செய்வதும்.

என்ன செய்வது என்று எதிர்ப்பக்கம் போய் நின்று யோசித்தான்.

தெரு முனையில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. திடுக்கிட்டான். அவன் வந்து இறங்குவதைப் ப்பார்த்தான். அவசரமாய் பெங்காலி நண்பனுக்கு போன் செய்தான். என்ன நடக்கிறது என்று தெரிவித்தான். நேரே அவனிடம் போனான்.

உன்னை தாதா கூப்பிடுகிறார் என்றான்.

அவனுக்கு கதிரேசனை பார்த்தவுடன் கலவரமாகி விட்டது.

"என்ன மறுபடி வந்து தொந்தரவு பண்றே. உன்னால சும்மா இருக்க முடியாதா" என்று கேட்டான்.

"எங்கனா நகர்ந்து போனீன்னா, கை வேறு கால் வேறா போயிடும். பேசாம மோட்டடர் சைக்கிள் எடுத்துக் கொண்டு முன்னால போ. எங்க போகணும்னு நான் வழி சொல்றேன்.

நீ எங்கேயும் தப்பிச்சு போக முடியாது. வீணா எங்கேயும் போய் அடிபடாதே. வந்திரு. உன்னை சுற்றி ஏழு எட்டு பேர் இருக்கோம். எங்க நகர்ந்தாலும் அடிச்சு பலி போட்டுருவோம்" என்று பொய் சொன்னான்.

கனகசபாபதிக்கு உடம்பு நடுங்கியது. நாலா பக்கமும் பார்த்தான். மோட்டார் சைக்கிளை உதைத்து ஏறினான்.

வாசலுக்கு வந்து நிர்மலாவும் அவள் பெண்ணும் பார்த்தார்கள். நிர்மலாவின் மகள் கை தூக்கி தன் தந்தைக்கு தன்னையும் அறியாமல் டாட்டா காட்டினாள்.

பதிலுக்கு டாட்டா காட்ட கனகசபாபதிக்கு தோன்றவில்லை. எந்த உணர்ச்சியுமில்லாமல் வண்டியை கிளப்பிக் கொண்டு முன்னே போனான்.

பின்னே மாருதிக் காரில் கதிரேசன் தொடர்ந்தான்.

சிறிது தூரம் போன பிறகு, முன்னே போனவனுக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டும். திரும்பித் திரும்பி மாருதிக் காரை பார்த்தான். மெல்ல வண்டியின் வேகத்தை குறைத்தான்.

"எங்க போகணும் இப்போ."

"போடா" அவனை கதிரேசன் ஒற்றை வார்த்தையில் கட்டளையிட்டான். அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக் கிறார்கள் என்று தாதாவுக்கு போன் செய்தான். பெங்காலி நண்பனுக்கு போன் செய்தான்.

தன்னை யாரும் பின் தொடரவில்லை என்று கனகசபாபதிக்கு தெரிந்து விட்டது. அவன் வண்டியின் வேகத்தை அதிகரித்தான்.

மும்பையை விட்டு தாண்டி, பெரிய ட்ரங்க் ரோட்டில் மோட்டார் பைக்கை செலுத்தினான்.

கதிரேசனும் பின் தொடர்ந்தான். கதிரேசனைத் தாண்டி இரண்டு அம்பாஸடர் கார்கள் வேகமாக போயின.

வண்டியின் கண்ணாடி கீழிறங்கி, மறுபடியும் மேலேறியது. உள்ளே உட்கார்ந்திருந்தவர் முகம் தெரிந்தது.

"நீ இதில் கலந்து கொள்ளாதே. விலகி நில். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

அவனுக்கு போன் வந்தது. அம்பாஸடர் கார்கள் மோட்டார் சைக்கிளை வேகத்தில் மடக்கின. அவன் கொத்தாய் பிடிக்கப்பட்டான். அருகே உள்ள பஞ்சாபி தாபாவிற்கு கொண்டு போகப்பட்டான்.

பெஞ்சில் உட்கார வைத்து, கயிற்றால் அவன் கால்களையும் கைகளையும் கட்டினார்கள். சரமாரியாய் அடித்தார்கள்.

அங்கு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் பயந்து எகிற எல்லோரையும் அமைதியாய் உட்கார்ந்து சாப்பிடும்படி கட்டளையிட்டார்கள்.

மறுபடியும் அடித்தார்கள்.

வண்டியை தொலைவில் நிறுத்தி விட்டு, அவர்கள் செய்வதை அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், அந்த தாதாவின் ஆட்களைத் தாண்டி வேறு யாரும் எதற்கும் ஊடுருவக் கூடும். ஒருவேளை போலீஸ் இதில் வந்து கலக்கக்கூடும் என்ற பயம் கதிரேசனுக்கு இருந்தது.

பாதைகளின் இரு பக்கமும் வண்டிகளின் நடமாட்டத்தை கவனித்துக் கொண்டே வந்தான். ஒரு மினி பஸ் தாண்டிப் போயிற்று. சற்று போய் நின்றது. பிறகு மறுபடியும் முன்னேறிப் போனது. அந்த மினி பஸ்ஸின் நிற்றல் சரியாக இல்லை. மறுபடியும் சிறிது நேரம் கழித்து அந்த மினி பஸ், வலப் புறத்திலிருந்து வந்தது. வேகமாக தாபாவுக்கு அருகே நின்றது. உள்ளிருந்து இருபது பேர் இறங்கினார்கள். கட்டிப் போட்டிருந்தவனின் கயிற்றை தவிழ்த்தார்கள். சுற்றி நின்றவர்களை அடித்துத் துரத்தி னார்கள். இரண்டு மூன்று துப்பாக்கி சப்தங்கள் கேட்டன.

யார் யாரைச் சுடுகிறார்கள் என்று அந்த தொலைவிலிருந்து தெரியவில்லை.

தாபாவில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். ஒரு அம்பாஸடர் அடித்து நொறுக்கப்பட்டது. அவன் உதறி எதிர்ப்பக்கம் கடந்து தபதபவென்று வெட்ட வெளிக்கு ஓடினான். சற்று தூரம் போனான். அடுத்த சாலையை அடைந்து வேறு வண்டி பிடித்து போய் விடலாமென்று நினைத்தான். அவன் போவதைப் பார்த்து விட்டு கதிரேசனும் வண்டி எடுத்துக் கொண்டு அதே சாலையில் சற்று தூரம் போய் அடுத்த சாலையைச் சேர்ந்து, அங்கிருந்து அவன் எந்த மேட்டில் படியேறுவானோ அங்கே காத்திருந்தான்.

அவன் மூச்சிரைப்போடு மேடு ஏறி வருவது தெரிந்தது. அவனை யாரும் துரத்திக் கொண்டு வரவில்லை. திரும்பிப் பார்த்தான். மெல்ல ஒரு மரத்தடியில் சாய்ந்து நின்று கொண்டான். எதிர் வரும் வண்டிகளுக்கு கை காட்டினான்.

மாருதிக் காரை மெல்ல செலுத்திக் கொண்டு அவனுக்கருகே கதிரேசன் வந்தான். கண்ணாடியை இறக்கி னான். என்ன வேண்டுமென்று கேட்டான்.

கதிரேசனைப் பார்த்தவுடன் அவன் மேலும் மிரண் டான். வேறு பக்கம் போவதற்கு முயற்சி செய்தான். சட்டென்று ஒரு மரத்தின் பின்னே நின்று கொண்டான். பேண்ட் ஜிப்பை அவிழ்த்து பெல்ட்டை தளர்த்தி உள்ளே வைத்திருந்த நிக்கரிலிருந்து ரிவால்வரை எடுத்து, லோட் செய்து கொண்டான். மறுபடியும் கதிரேசன் கார் வருமா என்று காத்திருந்தான்.

கதிரேசனுக்கு அவன் என்ன செய்தான் என்பது புரியவில்லை. மறுபடியும் காரை அருகே கொண்டு போக, பளிச்சென்று ஒரு குண்டு கண்ணாடியைத் துளைத்தது.

கதிரேசன் மின்னல் வேகத்தில் காரை கியர் மாற்றி செலுத்தி முன்னே கொண்டு போக, பின் கண்ணாடியும் துளைக்கப்பட்டது.

கதிரேசன் வண்டியை பாதையிலிருந்து இறக்கி, புதர்களுக்குள் செலுத்தி மறைந்து கொண்டான். இறங்கி தள்ளிப் போய் நின்று கொண்டான். எந்த ஆயுதமும் இல்லாமல் வந்தது தவறு என்று நினைத்துக் கொண்டான். எப்படி இவனை சமாளிப்பது என்று யோசித்தான்.

இரண்டு பக்கமும் பார்த்து மறுபடியும் துப்பாக்கியை நீட்டி ஏதோ காரை நிறுத்த முயற்சி செய்ய, அந்தக் கார் இவனை உரசி விட்டு போயிற்று. ஒரு லாரியை நிறுத்த முயற்சி செய்ய, அந்த லாரிக்காரன் கதவை பளிச்சென்று கனகசபாபதி முகத்தில் அடித்து உதறிவிட்டு, வண்டியை கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

ஓடி வந்த களைப்போ அல்லது கலவரமோ இவனால் குறி பார்த்து சுட முடியவில்லை. அவன் சுடவும் முயற்சி செய்யவில்லை. ஓடி வந்து எங்கே கார் இறங்கியதோ அந்த இடத்தில் தேட ஆரம்பித்தான்.

கதிரேசன் புதருக்கு மறைவில் இருக்க வேண்டுமென்று நிதானமாக துப்பாக்கியை பிடித்தபடி உள்ளே நுழைந்தான்.

உள்ளே நுழைகின்ற ஆளை கதிரேசன் எகிறி, தாவி தரையோடு அழுத்த, துப்பாக்கி மூன்றாம் முறை வெடித்தது.

முப்பது வினாடிகளில் கதிரேசன் அவனிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்கினான். அடிக்கட்டையால் முகத்தில் அடித்தான். நெஞ்சில் வைத்து கொன்றுவிடுவேன் என்று

அடிக் குரலில் அதட்டினான். அவனை எழுந்திருக்கச் சொன்னான்.

எழுந்திருந்தவன் கீழே இருந்த மண்ணை வாரி பளிசென்று கதிரேசன் முகத்தில் வீச, கதிரேசன் முகம் முழுவதும் கண் முழுவதும் மண் வ்ந்து அப்பிக் கொண்டது. வேறு வழியில்லாமல் கதிரேசன் மண் வ்ந்த திசை நோக்கி குறி பார்த்து இரண்டு முறை சுட, ஒரு அலறல் சத்தம் கேட்டது. கதிரேசன் உட்கார்ந்து கொண்டான்.

கண்ணிலிருந்த மண்ணை துடைத்து துடைத்து எடுத்தான். கண் திறக்க மறுபடியும் எரிந்தது. மெல்ல நகர்ந்து காருக்குப் போனான். கதவைத் திறந்து, கண்ணாடி பாட்டிலிலிருந்த தண்ணீரை எடுத்தான். முகத்தில் அடித்துக் கொண்டான். அழுந்தத் துடைத்தான். கண்ணிலிருந்த மண்ணை எடுத்தான். கண் கரித்தது. இருப்பினும் ஈரத் துணி வைத்து, மறுபடி மறுபடி கழுவ, கண் சிறிது திறக்க முடிந்தது.

இடது கண்ணால் என்ன நடந்தது என்று பார்க்க ரத்த வெள்ளத்தில் கனகசபாபதி கிடப்பது தெரிந்தது.

கதிரேசன் வண்டியை எடுத்தான். மேடேறினான். மும்பையை நோக்கி வேகமாய் ஒட்டி மற்ற வாகனங்களோடு கலந்து மறைந்து போனான்.

அந்தக் கொலை. கேட்பாரே இல்லாது போயிற்று. மும்பையில் பல கொலைகள் கேட்பாரே இல்லாது போயிருக்கின்றன. பல விஷயங்கள் அடையாளம் தெரி யாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவனுடைய மரணம், போலீஸாலும் தாதாக்களாலும் அதே விதமாய் எந்த பிரச்சினையுமின்றி அமுக்கப்பட்டது.

"இதை கிளறினோம்னு வச்சுக்கோ. பல பேர் மாட்டுவோம். பல கேள்விகள் வரும். பேப்பர்ல போட்டு

காச்சி எடுத்துடுவானுங்க. விட்டுரு. இவன் செத்துப் போனது யாருக்கும் நஷ்டமில்லே. மும்பையில் ஆட்டம் போட்டு கிட்டிருந்த ஒரு ஆள் குறைஞ்சு போனான். அவ்வளவுதான விடு" என்று போலீஸிலேயே அமுக்கி விட்டார்கள்.

அவனைப் பற்றி, சந்து முனைகளில் பீடா கடைகளில் எப்படி செத்தான் என்று விவாதித்தார்கள்.

அந்த ஒரு கிலோ மட்டும் அவன் எடுத்துக் கொண்டு டெல்லியில் போய் விற்றிருந்தால் மறுபடியும் மும்பையில் மிகப் பெரிய தாதாவாக தலைவனாக வந்திருப்பான். கிட்டத்தட்ட பல லட்சங்கள் சம்பாதித்து சென்னையில் செட்டிலாகயிருந்தவனின் விதி மோசமாக இருந்தது. அவன் எதிரிகள் வலுவாக இருந்தார்கள். அதனால் செத்துப் போனான் என்று சொன்னார்கள்.

ஒரு பொழுதும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதே. அப்ப செய்தால் இதோ ஒரு கதை சொல்கிறேன் கேள் என்று கனகசபாபதியின் கதையைச் சொன்னார்கள்.

அவன் பைத்தியம் போல் அலைந்ததை, இடம் மாற்றி இடம் மாற்றித் தங்கியதை எவரைக் கண்டும் பயந்ததை கடைசியில் எங்கோ சுடப்பட்டு புதர் நடுவில் மூன்று நாள் அழுகிக் கிடந்ததை கோரமாய் விவரித்தார்கள்.

அவன் தங்கியிருந்த இடத்தை மறுபடியும் கதிரேசன் போய் சோதனை போட்டபோது, இன்னும் கொஞ்சம் காசும் நகைகளும் கிடைத்தன.

எங்கு கொள்ளையடித்ததோ எந்த வங்கியில் திருடியதோ தெரியவில்லை. அதனை மூட்டையாக கட்டிக் கொண்டு நிர்மலாவின் முன்னே வைத்தான்.

"அய்யோ. இது வேணாம். இதையெல்லாம் கொண்டு போய்..." என்று அவள் சொல்ல, சட்டென்று கையை

உயர்த்தினான். "இதையெல்லாம் கொண்டு போய் ஏதாவது உண்டியல்ல போட்டுரு. யாருக்காவது கொடுத்திருன்னு தயவு செய்து சொல்லாதே. உனக்கொரு பொண்ணு இருக்கு. அவளுக்கு காசு வேணும். உன்னுடைய புருஷன் அவனுடைய மகளுக்கு கொடுத்த காசு. இது நல்ல காசா கெட்ட காசாங்கிறது அவனுடைய விஷயம். இதை உபயோகப்படுத்தறதால உனக்கோ உன் பொண்ணுக்கோ எந்தக் கெடுதலும் வராது. மிஞ்சி மிஞ்சிப் போனா பதினோரு லட்ச ரூபாய். இதை வேண்டாம்னு சொல்லிவிடாதே. இது உனக்குத் தேவை. நீ பட்ட அவஸ்தைக்கு இது பரிசு" என்று சொன்னான்.

பெங்காலி நண்பனிடம் போய் செக்யூரிட்டி விஷயத்தி லிருந்த விடை பெறுவதாக அறித்தான். சென்னைக்கு போய் விடப் போவதாகச் சொன்னான். ட்ராவல்ஸ் நடத்த வேண்டுமென்று ஆசை இருப்பதாய் விவரித்தான். இம்மாதிரி மும்பையில் பல்வேறு திமிரான விஷயங்களில் ஈடுபட்டவர்கள் கடைசி காலத்தில் ட்ராவல்ஸ்தான் வைக்கிறார்கள் என்பதை அவன் புரிந்து கொண்டிருந்தான்.

ட்ராவல்ஸ் என்பது பல்வேறு தரப்பட்ட மனிதர்க ளோடு பழகுவது. நல்லவர்களோடும் கெட்டவர்களோடும் தைரியமாய் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்பந்தம் உடையது. வண்டியோடு காணாமல் போகிறவர்களைத் தேடி கண்டுபிடிக்க வேண்டிய அவஸ்தை உடைய விஷயம் அது.

மிக பலம் இல்லாதவர்கள் ட்ராவல்ஸ் நடத்த முடியாது. மிக பலம் உள்ளவன் இனி சண்டை வேண்டாம் என்கிறபோது ட்ராவல்ஸ் நடத்தத் தான் முயற்சி செய்வான். அதில்தான் நல்ல காசும் நிரம்ப மரியாதையும் சௌகரியமும் இருக்கின்றன.

பெங்காலி நண்பன் இரண்டு லட்ச ரூபாய் காசு கொடுக்க, அதை மிகுந்த நன்றியோடு வாங்கிக் கொண்டான். பிற்பாடு ஏதேனும் ஒரு சமயம் கடன் கேட்டால் கொடுக்க வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக் கொண்டான்.

பெங்காலி நண்பன் எழுந்து தழுவி, "மறுபடியும் கடன் என்று சொல்லாதே. நான் காசு தருகிறேன். அதை எவ்விதமேனும் அடைப்பதற்கு முயற்சி செய்" என்று உற்சாக மூட்டினான்.

"திருமணம் எங்கு செய்து கொள்ளப் போகிறாய்."

"வீட்டிலேயே ஒரு வெங்கடாஜலபதி படத்திற்கெதிரே, அந்த குழந்தைக்கெதிரே தாலி கட்டப் போகிறேன். அதோடு முடிந்து விட்டது. மற்றபடி வேறு எவர் காலிலும் விழுந்து வணங்க எனக்கு இஷ்டமில்லை. மறைமுகமாய் எவரும் கேலி செய்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் முகம் சுருக்கினால் எனக்கு 'கோபம் வந்து விடக்கூடும். எனவே, கல்யாணம் என்கிற சடங்கை நான் முற்றிலுமாய் புறக்கணித்துவிட்டு, எங்கள் வீட்டு விஷயமாய் நாங்களே செய்து கொள்கிற நோன்பாய் அதை மாற்றிக் கொள்ளப் போகிறோம். கல்யாணம் முடிந்து விட்டது என்று உனக்கு செய்தி சொல்கிறேன். நீ மனசுக்குள் ஒரு நிமிடம் என்னை நினைத்து இறைவனிடம் வேண்டினால் போதும்" என்று சொல்ல அவ்விதமே செய்வதாய் பெங்காலி நண்பன் விடை கொடுத்து அனுப்பினான்.

சென்னை தொடர்பான செக்யூரிட்டி விஷயங்கள் இருந்தால் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

மும்பையில் டெம்போ ட்ராவலர்கள் அப்போது பிரசித்தமாக இருந்தன. அந்த டெம்போ ட்ராவலர்

வாங்கினால் சென்னையில் உபயோகமாகும் என்று தெரிந்தது.

ஒரு சினிமா அதிபரின் டெம்போ ட்ராவலர் அதிகம் ஓடாமல் நல்ல நிலையில் இருந்தது. கிட்டத்தட்ட பெரிய விலை சொன்ன அதை, போய் பார்த்து பேரம் பேசி படிய தைத்து, உடனடியாக காசை அவர் முன்னால் வைத்து, என்னால் இவ்வளவுதான் தர முடியும் என்று சொல்லி, அவர் இளகின பிறகு இன்னும் கொஞ்சம் கூட கொடுத்து, வண்டியைத் தன் பெயருக்கு மாற்றி எழுதி, வாங்கி வந்தான்.

வீட்டில் உள்ள நல்ல சாமான்களை அழகாக அடுக்கி எடுத்துக் கொண்டு மற்றபடி பீரோ தட்டுமுட்டு சாமான் களைக் கடையிலே விற்று விட்டு, தெரிந்தவர்களுக்கு கொடுத்து விட்டு, அவளோடு டெம்போ ட்ராவலரில் ஏறி சென்னையை நோக்கிப் பயணமானான்.

அவன் மும்பை எல்லையை தாண்டுகிற போது, ஒரு கார் வழி மறித்தது.

தாதா செல்போனில் பேசுவதாகச் சொல்ல, செல் போனை வாங்கி காதில் வைத்துக் கொண்டான்.

"என்ன, யாருக்கு பயந்து ஓடறே. என்னோட சேரச் சொன்னேன். ஏன் சேர மாட்டேங்கிறே."

"இல்லே. இந்த மும்பையே வேண்டாமென்று நினைத்து நான் கொஞ்சம் அமைதியாக இருக்கிறதுக்காக மெட்ராஸ் போகிறேன்."

"நீதான் அவள் புருஷனைக் கொன்னேன்னு அவளுக்குத் தெரியுமா."

"இல்லே. தெரியாது."

"தெரிஞ்சா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கு வாளா."

"தெரியலே. மாட்டேன்னு சொன்னாலும் சொல்ல லாம்."

"சரி. அது இப்போ விஷயமில்லே. எனக்கு உதவி செய்துட்டு, எதுவும் கேட்காம போறியே அது ரொம்பப் பெரிய துணிச்சலா எனக்குப் பட்டது. சின்னதா பல்லு குத்த குச்சி கொடுத்துட்டு, ரெண்டாயிரம் ரூபாய் காசு கொடுங்க அப்படின்னு கேட்டவங்களையெல்லாம் நான் பார்த்திருக் கிறேன். ஒரு கிலோ சுலபமா பிடுங்கி என் கையில கொடுத்துட்டு, சம்பந்தமே இல்லாதவன் மாதிரி நடந்துக் கிட்டது சந்தோஷமா இருக்கு. உன்னை மாதிரி ஆளுங்க எனக்கு இல்லியேன்னு ஒவ்வொரு நாள் ராத்திரி தூங்கும்போதும் நினைக்கிறேன்.

எப்பவாவது வேலை வேணும்னு நினைச்சா எங்கிட்டத்தான் வரணும். வருவியா."

"அப்படி ஒரு நிலைமை என்கு ஏற்படாதுன்னு நினைக்கிறேன். நான் வரமாட்டேன்னு நினைக்கிறேன். நான் போய்ட்டு வர்றேன்" என்று செல்போன் கொடுக்க, மறுபடியும் செல்போன் ஒலித்தது.

"மெட்ராஸ்க்கு பெங்களூர் வழியாதானே போறே."

"ஆமாம்."

"பெங்களூர் மெட்ராஸ் ரோட்ல நுழைஞ்ச பிறகு, உன் பின்னால அம்பாஸடர் கார் வரும். கார் நம்பர் 4444. பெங்களூர் ரெயில்வே ஸ்டேஷன் தாண்டி, உனக்கு பரிசு கொடுக்கிறதுக்கு ஆசைப்படறேன். இப்பவும் அதுபத்தி கேட்காம போன் கொடுத்தியே. அதுவும் எனக்குப் பிடிச்சிருக்கு. மறுபடி சொல்றேன், ஏதாவது வேலை வேணுமின்னா எங்கிட்ட வா."

அவன் சரியென்று சொன்னான். வண்டி ஏறினான். பெங்களூர் தாண்டி சென்னை ரோட்டில் நுழையும் போது,

அங்கே ஒரு அம்பாஸடர் கார் அவனை பின் தொடர்ந்து வந்து நின்றது.

"என்ன" என்று கேட்டபோது, அவனிடம் ச்சாவி தரப்பட்டது.

"எனக்குப் புரியலியே."

"இந்தக் காரை உங்களுக்கு கொடுக்கச் சொன்னாங்க."

"யார்" என்றபோது மும்பையிலுள்ள தாதாவின் பெயரைச் சொன்னார்கள்.

அவன் சிறிது நேரம் கண்மூடி நின்றான்.

"நான் எப்படி எடுத்துக் கொண்டு போறது. டெம்போ ட்ராவலர் எடுத்துட்டுப் போறேனே."

"இல்லை. நீங்க எங்கே கேட்கறீங்களோ அங்கே கொண்டு வந்து கொடுக்கும்படியா எனக்குக் கட்டளை."

"அப்படியானால் பின்னாடியே வா."

டெம்போ ட்ராவலரும் அம்பாஸடர் காருமாய் அவன் சென்னைக்குள்ளே நுழைந்தான்.

அவன் ட்ராவல்ஸ நடத்துவதைப் பற்றி பெங்காலி நண்பன் தாதவிடம் சொல்லியிருக்க வேண்டும். தாதா அதற்காக இந்தப் பரிசு கொடுத்திருக்க வேண்டும்.

அவன் சென்னைக்குள் நுழைந்ததும் பெங்காலி நண்பனுக்கு போன் போட்டு தாதாவுக்கு நன்றியை சொல்லுமாறு சொன்னான். போன் துண்டித்தான்.

ஹோட்டலின் தங்கியபடி வீடு தேடினான். மூன்றாம் நாள் வீடு கிடைத்தது. ஆறுமாத வாடகை அட்வான்ஸ் என்று சொன்னபோது, இல்லை ஒரு வருட வாடகையை அட்வான்ஸாக வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முதல் தேதியும் உங்களுக்கு வாடகை வந்து விடும். அவைகளை

இப்பொழுதே கொடுத்து விடுகிறேன் என்று பன்னிரெண்டு காசோலைகள் கொடுத்தான்.

கையிலிருந்த பெட்டிகளைக் கொண்டு போய் வீட்டில் வைத்து, புதிய கட்டில், புதிய சோபா, புதிய நிலைக் கண்ணாடி, புதிய சமையல் பாத்திரங்கள் என்று பல்வேறு புதிய விஷயங்களோடும் மனைவியோடும் குழந்தையோடும் உள்ளுக்குள் குடித்தனம் போனான்.

குழந்தை குதித்தாள்.

இரண்டு அறைகளும், ஒரு பெரிய ஹாலும் கிச்சனும் இருக்கிற, அழகான வராண்டா இருக்கிற இரண்டாம் மாடி கட்டிடம் அது. திருப்பதி வெங்கடாசலபதி படம் மாட்டி, அதற்கு மாலை போட்டு, பிறகு குண்டும் குழலும், பவழமும் ஒரு திருமாங்கல்யமும் கோர்த்த மங்கள நாணை அவள் கழுத்தில் அணிவித்தான். அவளோடு போய் புதிய நகைகள் வாங்கினான். குழந்தைக்கு காது ஸ்பேடும் வீட்டிற்கு நல்ல கம்ப்யூட்டரும் வாங்கி வைத்தான். அம்மாவும் பெண்ணும் கம்ப்யூட்டரில் மாற்றி மாற்றி பல்வேறு விஷயங்களை சோதனை செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நகரம் முழுவதும் சுற்றி, எங்கு இருந்தால் ஒரு ட்ராவல்ஸ் சரியாக இருக்கும் என்பதைப் பார்த்து, நகரத்தின் மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கு கார் ஷெட் போட்டிருந்த இடத்தை வாடகைக்கு எடுத்து, அதில் மூன்று நான்கு கார்கள் நிறுத்தும்படிச் செய்து, அந்த கார் ஷெட்டை இடித்து வேறு விதமாக மாற்றி, கட்டிடம் கட்டி நிர்மல் ட்ராவல்ஸ் என்ற பெயரில் கம்பெனி துவங்கி, அவன் பேச்சு சாமர்த்தியத்தில் அவனுடைய அனுபவ சாமர்த்தியத்தில் வெகு எளிதாய் நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். வியாபாரம் சூடு பிடிக்கத் துவங்கியது.

தங்களிடமிருந்த இரண்டு வண்டிகளைத் தவிர மற்ற வண்டிகளை வெளியே வாடகைக்கு எடுத்து, வசதி உள்ளவர் களை வண்டிகள் வாங்கச் சொல்லி அந்த வண்டியை தான் பராமரித்து, அவர்களுக்கு சரியான தேதியில் காசு கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஒன்றாம் தேதி காலை எட்டு மணிக்கு அல்லது ஒன்பது மணிக்கு அந்த வண்டியின் வாடகைப் பணம் உரிய நபர்களுக்கு வந்து சேர அவர்கள் சந்தோஷமாயினர்.

இன்னொரு வண்டி வாங்கலாமா என்று அவனிடமே யோசனை கேட்டார்கள். இன்னொரு வண்டி வாங்கிக் கொடுக்க இவனே தரகு வேலை செய்தான். அதிலும் சம்பாதித்தான்.

காலை ஏழரை மணிக்கு கம்பெனிக்குப் போய் இரவு எட்டு வரையில் இருந்து சில சமயம் இரவு நேரம் கண் விழித்துக் காத்திருந்து, ஒரு வேளை கம்பெனியில் இல்லாவிட்டாலும் வீட்டுக்குத் தொடர்பு கொள்ளச் சொல்லி, செல்லுக்கு தொடர்பு கொள்ளச் சொல்லி, நாலாவிதமான தொடர்பு சாதனங்கள் வைத்திருக்க, அவனை எதற்கும் அணுக, பல பேருக்கு தெரிந்திருந்தது. உடனடியாய் தீர்வுகள் செய்ய அவனுக்கும் தெரிந்திருந்தது.

ட்ராவல்ஸ் என்பது இருபத்து நாலு மணிநேர வேலை. இருபத்து நாலு மணி நேரமும் தொடர்பு கொள்ளும்படி அவன் இருந்து விட்டால் போதும். அது வீடாக இருந்தாலும் கம்பெனியாக இருந்தாலும் கவலை இல்லை. அவன் வீட்டிலிருந்தபடியே உத்தரவுகள் கொடுக்க, வண்டிகள் பல்வேறு திக்குகளில் நகர்ந்தன.

மனைவியை அணைத்தபடியே போனில் பேச, அவனுக்கு நண்பர்கள் அதிகமானார்கள். குழந்தையோடு

கொஞ்சியபடியே கதைகள் சொல்லி வண்டியை எடுத்துக் கொண்டு, மற்ற ட்ராவல்ஸ்களிடம் போய் வர, அவர்கள் நட்பு மேலும் உறுதிபட்டது. அவன் நம்பிக்கையான வனானான்.

“இனி ஒண்ணும் எனக்கு குழந்தை பெத்துக்கணும்னு இல்லை. எனக்கு இந்த பொண்ணு போதும். நீ போதும்.

திருமணம் என்ற ஒரு விஷயத்தை பதினைந்து வருஷத்துக்கு மேல் கொண்டாடக்கூடாது. அதுவரைக்கும் நீ என்னோடு ஆட்டம் போட்டால் போதும். அதுக்குப் பிறகு இந்தப் பொண்ணு, இவள் வாழ்க்கை அப்படின்னு நாம நகர்ந்தா போதும்.

ஐம்பது வயதுக்குப் பிறகு சம்பாதித்தது போதும்னு எல்லாத்தையும் இழுத்து மூடிட்டு, வேறொரு ட்ராவல்ஸ் கம்பெனியில் மேனேஜரா காலை பத்திலிருந்து மாலை ஐந்து வரைக்கும் வேலை செய்யற ஆளா உட்கார்ந்திருவேன். இன்னொரு ஐந்து வருஷம் பொறுத்து, அதையும் விட்டுட்டு, வெறுமே பல்லு குத்திக்கிட்டு கோயில் பக்கம் போய் ஜபம் செய்து, அறுபத்தஞ்சு, எழுபது வயசுல என் கதையை முடிச்சுக்குவேன். இதுக்கு மேல உயிரோட இருக்கிறது இந்த ஊர்ல கஷ்டம்.

நமக்கு பெரிய பொறுப்புக்கள் இல்லை. இந்தப் பொண்ணுதான். இந்தப் பெண் கல்யாணத்துக்கு எவ்வளவு நகை வாங்க முடியுமோ, அதை வருஷா வருஷம் வாங்க ஆரம்பிச்சிருவோம்.

நூறு பவுன் போடுவோமா. அவளுக்கு ஒன்பது வயசு. இன்னொரு பத்து வருஷத்துல நூறு பவுன் சேர்க்க ணும்னா வருஷத்துக்கு பத்து பவுன் வாங்கிரு. டக்கு டக்குனு முதல் தேதியே வாங்கிரு.

கல்யாணத்துக்கு இப்பமே எங்கனா காசு போட்டு வை. எல்.ஐ.சி.லே, பேங்க்ல மல்டிபிள் ஆகிற மாதிரி காசு போட்டு வை" என்று சொல்ல, அவள் அதை வேகமாகக் கடை பிடித்தாள். புருஷனோடு சந்தோஷமாக இருந்தாள். குழந்தையும் அவர்கள் இருவரையும் பார்த்து பல விஷயங்கள் புரிந்து கொண்டு, விலகியிருந்த நேரத்தில் விலகி நின்றது. இழைய வேண்டிய நேரத்தில் இழைந்து நின்றது. வாழ்க்கை அவனுக்கு சந்தோஷமாகப் போயிற்று. ஆனால், அவள் உள்ளுக்குள் ஏதோ இழந்தது போலவும், ஏதோ நிறைவு இல்லாதது போலவும் தவித்தாள்.

மும்பையில் அதிரடியான விஷயங்களிலெல்லாம் ஈடுபட்டு விட்டு இப்பொழுது அவன் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இங்கு செக்யூரிட்டி கம்பெனி ஆரம்பிக்கணும்னு தோணலையா."

"வேண்டாம். செக்யூரிட்டியெல்லாம் ஆரம்பிச்சா திருட்டு, அடிதடி, ரகளை, அந்த இடத்துக்கு நான் இறங்கினேன்னா மெட்ராஸ் தாங்காது. என் கோபம் ஜாஸ்தியாகிக்கிட்டே போகும்.எப்பவாவது அது வீட்ல வந்து விழுந்துரும். வீட்ல என் கோபம் வந்து விழுந்தா நீ தாங்க மாட்டே. மறுபடியும் பழைய வாழ்க்கைத்தானான்னு நீ பயப்பட ஆரம்பிச்சுருவே.

உனக்காகத்தான் நான் செக்யூரிட்டி வேலையை மெட்ராஸ்ல ஆரம்பிக்காம இருக்கேன். எனக்கு ட்ராவல்ஸ் போதும். இதுலயே சில சமயம் கோபம் ஊட்டிறானுங்க. மறுபடி நான் கத்தக்கூடாது. உன் முன்னாடியோ குழந்தை முன்னாடியோ நான் கோபமே படக்கூடாது. அப்படி திரும்பத் திரும்பகத்துகிறதா இருந்தா நான் இதயும் விட்டுட்டு வேற ஏதாவது வேலைக்குப் போயிருவேன்.

“இப்படி எங்களுக்காக எங்களுக்கான்னு செய்யறதுக்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது.”

“எனக்காக நீங்க செய்வீங்கன்னா உங்களுக்காக செய்யறேன். எனக்காக வந்து இழைவீங்கன்னா உங்களை கொஞ்சறேன். பதிலுக்கு என்னை பாராட்டுவீங்கன்னா செய்யறேன்.

திவ்யா, கொஞ்சம் கூட இதில் குறை வைக்காமல் என்னைக் கொண்டாடிட்டிருக்கா. நான் வர்றதுக்கு அரை மணி நேரம் ஆச்சுன்னாலும் போன் பண்றா. தனக்கு ஒரு சின்ன சந்தேகமாயிருந்தாலும் போன் பண்றா. ஒரு சின்ன தோல்வியாயிருந்தாலும் என்னோட பகிர்ந்துக்கிறா. இப்படி என்கிட்ட வந்து அந்தக் குழந்தை இழையறது எனக்கு சந்தோஷமாயிருக்கு. நான் பெத்தாக்கூட இத்தனை ஆசை வருமா எனக்குனு தெரியலை.

உண்மையா உன்னை நான் நேசிக்கிறதுக்கு காரணம் திவ்யா. அதுக்கு ஒன்பது வயசுதான் ஆகுது. ஆனா, இப்பவே அவளுக்கொரு நல்ல மாப்பிள்ளை தேடணும், அப்படின்னு ஆசை வந்திருச்சு.

இந்தப் பையன் சரியா இருப்பானா. இந்தப் பையன் சரியா இருப்பானான்னு பனிரெண்டு வயசுப் பசங்களோட நான் உட்கார்ந்து பேசிட்டிருக்கேன். அது தெரியுமா உனக்கு” இரவு அவன் அவளை அணைத்துக் கொண்டு பேச அவள் திடுக்கிட்டாள்.

இது என்ன புத்தி. இது என்ன அன்பு. இது என்ன ஆசை. இவனுக்கு ஈடாய் நான் இல்லையோ. இவனை இவன் சகலமும் உதறி விட்டு தன்னையே முக்கியமாய் நினைத்து இங்கு வந்தது போல, தான் இவனிடம் இருக்க முடிய வில்லையே என்று பயந்தாள். அப்படி இருப்பதற்கு என்ன

செய்ய வேண்டும் என்று யோசித்தாள். முயற்சித்தாள். ஆனால் முழுவதுமாய் முடியவில்லை.

அவனுக்குத் தெரியாமல் நாலு லட்சம் ரூபாய் காசு வேறொரு வங்கியில் போட்டிருந்தாள். அவனுக்குத் தெரியாமல் பதினாறு சவரன் நகைகள் வேறொரு இடத்தில் பதுக்கி வைத்திருந்தாள்.

அப்பா விடுதலையாகி வந்ததும் அவர் யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த நகைகளை இவர்களுக்குக் கொடுக்க, அந்த நகைகளையும் ரொக்கத்தையும் தனியே வேறொரு வங்கியில் போட்டிருந்தாள்.

நீ சந்தோஷமா இருக்கேன்றது போதும். நான் வந்து நின்று ஏதாவது பேசி வாழ்க்கையை குழப்ப விரும்பவில்லை. நான் பண்ணின பாவத்திற்கு நீதான் அனுபவிச்சே. நல்லவேளை எவனோ வந்து காப்பாத்திட்டான். என் புத்தி நாய் புத்தி. திரும்பவும் ஏதாவது எடக்கு மடக்கு பண்ணி, ஏடாகூடம் பண்ணி எகிறிப் பேசி, வம்பு பண்ணும். நான் உன் கண்ணுலபடாத போயிடறேன். ஞாயிற்றுக்கிழமை போன் பண்றேன். நல்லாருக்கியா நல்லாருக்கேன் அவ்வளவு தான். அத்தோடு போதும் என்று சொல்லி திண்டுக்கல் பக்கம் நகர்ந்து விட்டார். பசுமையான மலைகளும் வயல்களும் சூழ்ந்த அந்த இடத்தில் மருந்துக்கடை திறந்து இரண்டு ஆட்களைப் போட்டு மௌனமாய் வாழ்ந்திருந்தார்.

சென்னையில் சில தெருக்களை பார்க்கும் போது திடீரென்று தான் அலைந்ததும் திரிந்ததும் பள்ளித் தோழி களோடு ஆடியதும் பாடியதும் ஞாபகத்திற்கு வரும்.

படுக்கைக்கு கீழே கத்தை கத்தையாய் நோட்டுக்கள் பரப்பி அதன் மேல் இன்னொரு படுக்கை போட்டு புரண்ட காலம் ஞாபகம் வரும்.

இப்படி வேறு யாரோ வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்கிறபோது, எப்படி நம்மால் அந்த வாழ்க்கையை தொடர்ந்து நடத்த முடியாது போயிற்று என்ற எண்ணம் வரும். இவை எல்லாம் வர தூக்கம் கெட்டுப் போகும். நடுநிசியில் எழுந்து வந்து வராண்டாவில் நின்றபடி யோசித்துப் பார்க்க, எங்கோ மனம் வலிக்கும்.

இவனைப் போல் இவனிடம் முழுமையாக தன்னை கொடுக்க முடியவில்லையே. முற்றிலும் உண்மையாக இருக்க முடியவில்லையே. இடையறாது இவனிடம் நாடகமாடிக் கொண்டிருக்கிறோமே என்று வேதனை வரும். நாடகத்தை நிறுத்தி விடலாமா என்று யோசனை வரும். ஆனால், இரண்டு வருடம் கழித்து இவனுடனும் பிணக்கு வந்தால் எங்கே போவது, இப்பொழுதாவது உடம்பு முதல் என்று இருக்கிறது. பிறகு, இதுவும் இல்லாத காலத்தில் எங்கே போய் யாரிடம் போய் அண்ட முடியும். எனவே, கடைசி வரை உண்மையைச் சொல்லாது, தான் சேமித்து வைத்திருப்பதைப் பற்றி பேசாது, எப்போதும் இவனைப்பற்றிய சந்தேகத்தோடு இருப்பது நல்லது என்று ஒருமுறை தோன்றும்.

சீ, இதை விட கேவலமான பிறவி உண்டா. நீ யாரோடு உண்மையாக இருந்திருக்கிறாய். உண்மையாக இல்லாத தனால்தானே இப்படி செருப்படி விழுந்து கொண்டிருக்கிறது என்று இன்னொரு பேச்சு மனதில் எழும். இரண்டுக்கும் நடுவே மாட்டிக் கொண்டு, அவள் திண்டாடுவாள்.

எப்படி இருப்பது. நூறு சதவீதம் உண்மையாய் புருஷனிடம் இருக்க முடியுமா. இருப்பது நல்லதா என்று யோசிப்பாள். யாரேனும் இருக்கிறார்களா என்று வானத்தைப் பார்த்து கேள்வி கேட்பாள்.

இப்படி இரண்டாம் புருஷனைப் பற்றி முந்தைய வாழ்க்கையைப் பற்றி முதல் புருஷனைப் பற்றி கவலைப் பட்டுக் கொண்டிருந்த போது, மெல்ல விடிந்தது.

அவள் வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள். அவன் வேலைக்கு கிளம்பிப் போனான். குழந்தை பள்ளிக்கு புத்தகப் பையோடு விடைபெற்றுப் போனாள். மறுபடியும் அழைப்பு மணி கூப்பிட கதவு திறந்தாள்.

பத்திரிகைகளை வாடகைக்கு கொடுக்கும் லைப்ரரி பையன் நின்றிருந்தான். டி.வி.க்கு அடுத்தபடி பொழுது போக்கு நிர்மலாவுக்கு புத்தகங்கள்தான்.

வட இந்திய ஆங்கில பத்திரிக்கைகள், ஃபேஷன் பற்றிய குறிப்புகளும் புடவை பற்றிய விளம்பரங்களும், வீட்டு சாமான்கள் பற்றிய சம்பாஷனைகளும் வரும். எனவே, அவைகளை படிப்பதற்கு அவள் ஆவல் மிக்கவளாய் இருந்தாள். நல்ல பொருட்கள் எங்கு கிடைக்குமென்று அவைகள் சொல்ல, அவைகளை வாங்கி வீட்டில் வைப்பது அவளுக்கு ஒரு பொழுது போக்காக இருந்தது.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு புத்தகத்தைப் பிரிக்க, மும்பையின் தாதாக்கள் பற்றி ஒரு வட இந்திய பத்திரிகையில் விபரம் போட்டிருந்தது. படிக்க ஆரம்பித்தாள்.

கனகசபாபதியின் கொலை என்று போடப் பட்டிருந்தது. மூன்று வருடம் முன்பு நடந்த கனகசபாபதியின் கொலையை போலீஸே வெகு எளிதில் அழித்து விட்டது என்று சொல்லி, அவன் எங்கு இறந்தான். எப்படி இறந்தான். யாரால் இறந்தான் என்று விளக்கியிருந்தது.

பெங்காலி செக்யூரிட்டி கார்டால் கொலை செய்யப்பட்டான் என்று கதிரேசன் பெயல் சொல்லாது அவனுடைய மாருதி கார் வர்ணமும் எண்ணும் தரப்பட்டு, அதை போலீஸார் தெரிந்திருந்தும் நழுவ விட்டதை விளக்கியிருந்தது.

சட்டப்படி எல்லா கொலைக்கும் மரண தண்டனை விதிக்கப் படுவதில்லை. எல்லா கொலையும் நீதிமன்றம் ஏறுவதில்லை. எல்லா வன்முறைகளும் போலீஸில் பதிவாவ தில்லை. அவர்களுக்குள் நடைபெறும் வன்முறைகளை அவர்களே தீர்த்துக் கொள்கிறார்கள். அதுபற்றி போலீஸில் தகவல் சொல்லவும் ஆளில்லை.

மிகவும் யோசித்து, சாலையில் போய்க் கொண்டிருந்த லாரி மோதி மரணம் என்று கனகசாபதியை முடித்து விட்டார்கள். ஆனால், உண்மையில் கனகசபாபதி அப்படி இறக்கவில்லை என்று சொல்லப்பட்டிருந்தது. அதற்கு காரணமாக இருந்த தாதாவை விமர்சித்திருந்தது.

அவள் திடுக்கிட்டாள். மும்பைக்கு போன் செய்தாள். பெங்காலி செக்யூரிட்டி போன் எடுக்க, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அவன் உற்சாகத்துடன் பேசினான். நன்றாக இருக்கிறீர்களா என்று விசாரித்தான்.

நான் இன்ன பத்திரிகையில் இன்ன விஷயம் படித்தேன். நீங்கள் படித்து விட்டு எனக்கு தயவு செய்து போன் செய்யுங்கள் என்று போனை துண்டித்தாள். அவனிடமிருந்து போன் வரும் என்று காத்திருந்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் போன் வந்தது.

"விஷயம் படித்து விட்டேன். உங்கள் கேள்வி என்ன" என்று அந்த பெங்காலி நண்பன் கேட்டான்.

"அதில் இருந்ததெல்லாம் உண்மையா."

"ஆம் என்றால் என்ன செய்யப் போகிறீர்கள். இல்லை என்றால் என்ன சொல்லப் போகிறீர்கள். அது முடிந்த கதை. தேவையில்லாமல் அந்த தாதாவின் எதிர்க்கட்சியினர் தூண்டிவிட, இந்த பத்திரிகை அதை கட்டுரையாக்கி யிருக்கிறது. அநேகமாக கட்டுரை எழுதியவன் சில மணி

நேரத்திற்குள் உதைப்பட போகிறான். இதற்கெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் கதிரேசனுடம் குடித்தனம் நடத்துங்கள்.”

“இல்லை. என் கணவர் எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியவில்லையே. இது வருத்தமாக இருக்கிறது. அவரை சுட்டுக் கொன்றது இவர்தான் என்பதை எனக்கு ஏன் யாரும் சொல்லவில்லை. ஏன் கதிரேசனும் சொல்ல வில்லை. என்னிடம் ஏன் இவர் மறைத்தார் என்று அவள் அவனிடம் புலம்பினாள்.

அவன் பதில் சொல்லாது போன் துண்டித்தான்.

தான் மட்டுமே மனதில் மறைத்துக் கொண்டு, சந்தேகப்பட்டுக் கொண்டு, வாழ்க்கை நடத்தவில்லை. தன்னுடைய புருஷனும் தனக்குத் தெரியாமல் பல விஷயங்களை மறைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்து கிறான். தன்னோடு இருக்கிறான். ஆகவே, தான் செய்வது தவறா என்று கேள்விக்கே இடமில்லை. அதே தவறை தன் புருஷனும் செய்கிறான் என்று ஒரு கண நேர குதூகலம் நிர்மலாவை துள்ள வைத்தது. பிறகு, மறுபடியும் மௌனமானாள்.

இவர் ஏன் பெரிய சத்தியவந்தன் போல் நடந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் தன்னிடம் ஒப்படைத்து விட்டதாய் ஏன் பேச வேண்டும். தான் அப்படி பேசுவதுண்டா. இல்லையே. உன்னைத் தவிர வேறு எவரும் கிடையாது. உன் குழந்தையைத் தவிர வேறு யாரும் முக்கியமில்லை என்றெல்லாம் வசனங்கள் சொல்லிவிட்டு, இப்பொழுது மிகப் பெரிய பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்ற புத்தி எப்படி வந்தது.

துப்பாக்கியை எடுத்து குறி பார்த்து நெஞ்சுக்கு நேர் வைத்து இயக்கி இருக்கிறாயே. இருதயத்தில் ஒன்றும் தொண்டைக் குழியில் ஒன்றுமாய் சுட்டிருக்கிறாயே. இதை என்னிடம் சொல்லவேயில்லையே. இது நியாயம்தானா. நான் வேண்டும் என்பதற்காகதான் என் புருஷனைக் கொன்றாயா. என் மகளோடு கொஞ்சிப் பேசவா அவனைக் கொன்றாய். இல்லை. குண்டாய், வாட்ட சாட்டமாய் ஒரு பெண்ணைப் படுக்கையில் சாய்க்க வேண்டும். நாள் தவறாமல் அவளோடு சந்தோஷமடைய வேண்டும். இரவும் பகலுமாய் கூப்பிட்ட நேரத்தில் அவளோடு கட்டிப் புரள வேண்டும். இதற்காகத்தானே இந்த வேஷங்களெல்லாம். இதற்காகத்தானே இந்த நல்லவன் நாடகமெல்லாம்.

அவள் யோசித்து யோசித்து கொதித்தாள். அவனுக்கு போன் செய்து உடனே வர வேண்டும் என்றாள்.

அவன் இப்போதைக்கு முடியாது. இன்னும் மூன்று மணி நேரம் கழித்து வருகிறேன். இரண்டு வண்டி பிரேக் டவுன் என்று சொன்னான். அவள் போனை வைத்து விட்டாள். ஆனால், அரை மணி நேரத்தில் அவன் வந்தான்

"வழக்கமாக இப்படி கூப்பிட மாட்டாயே. இப்பொழுது கூப்பிடுகிறாயே ஏன் என்ன சமாச்சாரம். பசிக்கிறது சோறு போடு" என்று சொன்னான்.

"சமைக்கவில்லை" என்று அவள் பதில் சொல்ல, அவன் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"என்ன ஆயிற்று. திடீரென்று ஏன் இப்படி முகம் மாறிக் கடிக்கிறாய். என்ன விஷயம்" என்று சொல்ல, அவள் பத்திரிகையை நீட்டினாள். அவன் நிதானமாகப் படித்தான் "என்ன இப்போது.".

"யார் கொன்றது."

"தெரியாது."

"நீ கொல்லவில்லையா".

"இல்லை."

"ஏன் பொய் பேசுகிறாய். நீதான் கொன்றாய் என்று உன்னுடைய நண்பன் சொல்லி விட்டான். நான் உறுதிப் படுத்திக் கொள்ளாமல் உன்னைக் கூப்பிடவில்லை. இப்பவும் இந்த நேரமும் உன்னால் பொய் சொல்ல முடிகிறது. என்றால், உன் மனதிற்குள் வேறு ஏதோ எண்ணம் இருக்கிறது. நீயும் நானும் குடித்தனம் செய்வது பற்றி எனக்கு சந்தேகம் வந்து விட்டது. உன்னைப் பற்றி அச்சம் வந்து விட்டது. என் புருஷனிடம் எப்படி பயந்தேனோ அதே போல் நான் உன்னிடமும் பயப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒரு விஷயம் என்னைத் தடுத்து உன்னோடு ஒட்ட முடியாமல் பண்ணி விட்டது. அது என்ன என்று தெரியவில்லை. இப்போது சொல்கிறேன்.

உன் மீது எனக்கு சந்தேகம். பலத்த சந்தேகம். வெறும் படுக்கைக்கு மட்டுமே என்னை உபயோகப்படுத்துவதற்கு நீ திருமணம் செய்து கொண்டிருக்கிறாய் என்று சந்தேகம். இந்த விஷயம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்" என்று அவள் கத்தினாள்.

"மறுபடியும் சொல்கிறேன். ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வது காமத்திற்காக என்றால் நீ ஒரு நல்ல தேர்வு அல்ல. உன்னிலும் மிக ரம்மியமான பெண்கள் மும்பையில் எனக்கு கிடைத்திருப்பார்கள். நான் உன் மகளிடம் நெகிழ்ந்து போய், நீ பட்ட வேதனையில் கரைந்து போய் உனக்கு உதவி செய்தேன். நான் நீ வேண்டும் என்பதற்காக உன் புருஷனை கொலை செய்யவில்லை. உன் புருஷனை கொலை செய்யாவிட்டால், அவன் என்னை கொன்றிருப்பான். நான் சுட்டது தற்காப்புக்காக."

"என்னிடம் ஏன் சொல்லவில்லை".

"சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உனக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது. இது உனக்குத் தெரிவதை விட உன் மகளுக்குத் தெரியாமல் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். உன் மகளுக்குத் தெரிந்தால், ஒருவேளை அல்லது ஒருநாள் என் தகப்பனை நீ சுட்டுக் கொன்று விட்டாயே, எனக்குத் தகப்பனில்லாமல் செய்து விட்டாயே என்று கதறுவாளே, என்று பயந்தேன். எனவே அவளுக்கு நீ சொல்லிவிடக்கூடாது. 'ஏதேனும் ஒரு பலஹீனமான நேரத்தில் அவளுக்கு இந்த விஷயம் உன் மூலம் தெரிந்து விடக்கூடாது என்ற பயத்தில் உன்னிடமும் மறைத்தேன். மற்றபடி உன்னிடம் மறைக்க வேண்டுமென்று ஆசை எனக்கில்லை.

சுட்டதும் நான் பயந்து போனேன். ஆனால் உனக்கு மிகப் பெரிய நன்மைகள் செய்திருக்கிறேன் என்று சுட்ட நேரத்தில் நான் சந்தோஷமும் அடைந்தேன்.

ஏதேதோ பயத்தில் முன்பு வாழ்ந்த அவலத்தை மறுபடியும் நினைத்துக் கொண்டு, இந்த வாழ்க்கையையும் அவலமாக்கிக் கொள்கிறாய். உன்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. பதட்டப்பட்டு பதட்டப்பட்டு பதட்டப் படுவது பழக்கமாகி விட்டது. குறுக்கே யோசித்து குறுக்கே யோசித்து அப்படி யோசிப்பதே உனக்கு வழக்கமாகி விட்டது. சந்தேகப்பட்டு எல்லோரையும் சந்தேகிப்பதே உன் இயல்பாகி விட்டது. இந்த சந்தேகம் உனக்குத் தொந்தரவு தரும். நமக்குள் பிளவு தரும். இந்தப் பிளவு உன் குழந்தையைத் தான் பாதிக்கும்.

இந்த கணத்தில் தயவு செய்து சலகத்தையும் உதறி விடு. அவனை மறந்து விடு. முற்றிலுமாய் எல்லாவற்றையும் உதறி விட்டு எனக்கு சோறு போடு" என்று அவன் உட்கார்ந்தான்.

"எனக்கென்னவோ என் புருஷன் திருந்தி என்னிடம் வந்திருப்பான் என்று தோன்றுகிறது. அவனைக் கொலை செய்யாமலிருந்தால், மூன்று நான்கு வருடத்தில் ஏகப்பட்ட வேதனைகள் பட்டு, நல்லவனாய் ஒரு நல்ல நண்பனாய், ஒரு நல்ல தகப்பனாய், அவன் எங்கேனும் வந்திருக்கக்கூடும். அவசரப்பட்டு அவனை சுட்டுக் கொன்று விட்டாய் என்று நான் நினைக்கிறேன்" என்று அவள் கடுகடுத்தாள்.

வாசலில் நிழலாடியது.

இருவரும் திரும்பி பார்த்தார்கள்.

திவ்யா நின்று கொண்டிருந்தாள். அருகே வந்தாள்.

"அப்பாவை யார் கொண்ணாங்கம்மா" என்று கேட்டாள்.

நிர்மலா பேசாமலிருந்தாள்.

"சொல்லேம்மா. அப்பாவை யார் கொன்னது" என்று மறுபடியும் கேட்டாள்.

"அவரைப் போய் கேள், அவர் சொல்வார்" என்று கதிரேசனை நிர்மலா கை காண்பித்தாள்.

திவ்யா அவன் அருகே வந்து நின்றாள்.

கதிரேசன் தோளில் கை வைத்தாள். கன்னத்தில் முத்தமிட்டாள். விலகி நின்றாள்.

"சொல்லுங்க, எங்கப்பாவை யார் கொன்றது."

"நான்தான் கொன்றேன் திவ்யா."

"எப்படிக் கொண்ணீங்க."

"என் மூஞ்சிலே மண்ணைத் தூக்கிப் போட்டார். என் கண்ணுல மண் விழுந்துடிச்சு. நான் தடுமாறிய போது என்னை அவர் அடிச்சுக் கொல்லணும்னு நினைச்சார். ஆனா, கண்ணுல மண் விழுந்தவுடனே, நான் பயந்து போய் கையிலே இருக்கிற ரிவால்வரால ரெண்டு தடவை எதிர்ப்

பக்கம் சுட்டேன். சுட்டதில் ரெண்டு குண்டும் அவர் மேலே பாய்ஞ்சு அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்துட்டார். ஐந்து நிமிஷம் பொறுத்து, கார் கதவைத் திறந்து என்னுடைய முகத்தை கழுவிட்டு பார்க்கிற போது அவர் செத்துப் போய் கிடந்தார்.

நான்தான் சுட்டிருக்கணும். என் குண்டுதான் அவர் மேல் பட்டிருக்கணும். நான் கண்ணு திறந்துகிட்டு சுடலை. கண்ண மூடிட்டுதான் சுட்டேன். அதுல உன் அப்பா செத்துப் போயிட்டார்.

நான் அன்னிக்கு சுடலேன்னா என்னை கொன்னுட்டிருப்பார். வேற வழியில்லாம நான் உங்கப்பாவைக் கொன்னேன்."

"இதை எனக்கு தாத்தா சொல்லிட்டார்".

"யார்."

"எங்க தாத்தா."

"அவருக்கு எப்படித் தெரியும்."

"எங்க அப்பாவோட அப்பா சொன்னாராம்."

"அவருக்கு எப்படி தெரியும்."

"எங்க அப்பாவோட அப்பா லெட்டர் போட்டாராம். மும்பையில் இருக்கிற பெரிய மனுஷங்க எல்லாம் வந்தாங்களாம். அவங்கதான் அப்பா எப்படி செத்தாருன்னு சொன்னாங்களாம்."

அம்மாவோட அப்பாவுக்குச் சொல்ல அம்மாவோட அப்பா, போன வருஷமே என்கிட்ட சொல்லிட்டாங்க. பாட்டி அத்தனையும் கேட்டுட்டு, இதுக்காக கதிரேசனை தூக்கி எறிஞ்சு பேசிடாதே, பிடிக்கலேன்னு சொல்லிடாதே.

கதிரேசன் மட்டும் அதை செய்யலேன்னா உங்கம்மா குப்பையா போயிருப்பா. இன்னிக்கு நல்லா இருக்கிறதுக்கு

காரணம் கதிரேசன் பண்ணின அந்த கொலைதான். வேணும்னு சுட்டுட்டு எனக்குத் தெரியாதே அப்படின்னு போகாது. இந்த க்ஷணம் வரைக்கும் சந்தோஷமா உங்கம்மாவையும் உன்னையும் வச்சுட்டிருக்கார். இது பெரிய கொடுப்பினை. எல்லா சோதனைக்கு அப்புறமும் ஒரு விடிவுகாலம் நமக்கு கதிரேசனால வந்ததுன்னு சொன்னாங்க.

எங்கம்மாவை எங்கப்பா அடிக்கிறது எனக்கு இன்னும் ஞாபகமா இருக்கு. ஆனா, ஒருநாள் கூட நீங்க அம்மாவோட சண்டை போட்டதில்லே. நீங்களும் அம்மாவும் எப்பவும் சிரிச்சு பேசிக்கிட்டுதான் இருக்கீங்க. அம்மாவும் நீங்களும் எப்பவும் ஒருத்தரோடு ஒருத்தர் அன்போடு பார்த்துக்கிட்டு தான் இருக்கீங்க.

அப்பா இருந்திருந்தா, இந்த வீடு ரொம்ப மோசமா இருந்திருக்கும். எங்க வாழ்க்கை இன்னும் மோசமா இருந்திருக்கும்.

கொலை பண்றது ரைட்டா தப்பான்னு கேட்டா தப்புதான். ஆனால், கெட்டவங்களை கொல்றது ஒண்ணும் தப்பில்லே. எங்கப்பா கெட்டவர். எங்கம்மாவைப் பத்தி கவலைப்படாதீங்க. எப்பவுமே நான் உங்க பக்கம் இருக்கேன். நீங்க எனக்கு அப்பாவா இருங்க கதிரேசன்" என்று அவள் கைகளைக் கோர்த்துக் கொண்டாள்.

கதிரேசன் அந்த ஒன்பது வயதுக் குழந்தையை மெல்ல தழுவிக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான். மடியில் வைத்து இறுக்கிக் கொண்டான்.

"இது போதும் திவ்யா. உங்க அம்மா கேட்டவுடனே பகீர்னு ஒரு பயம் வந்தது. அய்யய்யோ மறுபடியும் ஒரு பூதம் கிளம்புதேன்னு.

இப்போ உங்கம்மா, இதோடு போதும் விலகிக்கிறேன் அப்படின்னு சொன்னாக் கூட நான் விலகிப் போயிருவேன்.

நீ என் பக்கம் இருக்கே, என்னை புரிஞ்சுக்கிட்டிருக்கேன்ற ஒரு சந்தோஷம் எனக்குப் போதும்.

உங்கம்மாட்ட சொல்லு. ஒருவேளை அவள் வேற எங்கேயாவது போகணும்னா அல்லது நான் இந்த வீட்டை விட்டு போகனும்னு நினைச்சா. உடனடியா பண்ணிடலாம். என்ன செய்யணும்னு உங்கம்மாகிட்ட கேட்டு சொல்லு" என்று கதிரேசன் சொன்னான். எழுந்து வெளியே போனான்.

"ஒரு நிமிஷம்" நிர்மலா எழுந்தாள். "என்னால் இந்த குழப்பத்திலிருந்து வெளியே வர முடியவில்லை. அதே சமயம் வர வேண்டும் என்றும் தோன்றுகிறது. உங்களை விடுவதற்கு மனதில்லை. ஒரு பக்கம் ஒட்டிக் கொண்டு வாழ வேண்டு மென்று தோன்றினாலும் இன்னொரு பக்கம் ஒருமுறை ஏமாந்தது மிகப் பெரிய வலியை, வேதனையை, கோபத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மறுபடியும் யார் ஏமாற்றினாலும் ஏமாற்றாது போனாலும், ஏமாற்றி விட்டாயே, என்று முதல் தடவை உண்டான கோபத்தை இரண்டாம் ஆளிடம் காட்ட வேண்டுமென்று ஆத்திரம் வருகிறது.

நான் முட்டாள். உள்ளுக்குள் ஒரு மூர்க்கம் திசை தெரியாமல் அலைகிறது. என்னால் அதை எப்படி கட்டுப் படுத்திக் கொள்வது என்று தெரியவில்லை.

இந்தக் குழந்தை முதல் தகப்பனை முற்றிலும் மறந்து விட்டு, உங்களை தகப்பனாய் ஏற்றுக் கொண்டு விட்டாள். என்னால் முதல் கணவனை முற்றிலும் மறந்து விட்டு உங்களை முழுவதுமாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பழகின ஞாபகம் என்னை வதைக்கிறது. சித்ரவதை செய்கிறது. திடீர் திடீரென்று கலவரத்தை கொடுக்கிறது. பிசாசு வசப்பட்டவள் போல் அவ்வப்போது நான் பயந்தும், கோபத்திலும் அலறுகிறேன். எல்லோரையும் சந்தேகிக்கிறேன். என் முட்டாள் தனத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும்.

மெல்ல மெல்ல நீங்களும் திவ்யாவும் என்னை மாற்ற வேண்டும். என்னுடைய தழும்புகள் மிக ஆழமானவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்” என்று அவள் சொன்னாள்.

அவன் அருகே போய் அவள் தோளில் கை வைத்தான். தலையைத் தடவினான். அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். குழந்தை அருகே போய் நின்றது.

“நாங்க இருக்கிறோம்மா. ஏன் கவலைப்படறே” என்று சொன்னது.

அவள் உடம்பு ஆடுவது தெரிந்தது. அவள் மெல்ல தரையில் உட்கார்ந்தாள். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள். கதிரேசனும் திவ்யாவும் அவளை அணைத்துக் கொண்டார்கள்.

“ஹை ஜம்ப். லாங் ஜம்ப் இரண்டும் மூணு தடவை வாய்ப்புத் தருவா. முதல் தடவை ஜம்ப் பண்றது உன்னுடைய பலத்தை நிரூபிக்க, இரண்டாம் தடவை ஜம்ப் பண்றது அந்த பலத்தை விட அதிகமான பலம் உனக்குள்ள இருக்கிறதை நீயே கண்டுபிடிச்சு வெளியே கொண்டு வர, மூணாம் தடவை இதுதான் வாழ்க்கையில் கடைசி சான்ஸ். ஏதாவது பண்ணி ஜம்ப் பண்ணியாகணும் அப்படின்னு ஒரு உத்வேகமாய் போராடுவது.

உனக்கு இரண்டாவது சான்ஸ் கிடைச்சுருச்சு. மூணாவதா ஒண்ணு இருக்கும். அது என்ன தெரியுமா இந்த இரண்டாம் கல்யாணம் முடிஞ்சு. தனியா இருக்கப் போற பார் அதுதான் மூணாம் கல்யாணம். தனிமையை கல்யாணம் பண்ணிக்கப் போற பார் அதுதான் முக்கியமான கல்யாணம். வாழ்க்கையில் எல்லாருக்குமே மூணு ஸ்டேஜ் இருக்கு. மூணு விதமான பிரிவுலதான் வாழ்க்கை அடங்கி இருக்கு. அதனால் இப்படி பேசிட்டமே அப்படி பேசிட்ட மேன்னும் பயப்படாது சர்வசாதாரணமா இரு. உன்னையும்

என்னையும் விட இந்த குழந்தை தெளிவா இருக்கா. அவளால் இன்னும் நல்லபடியா யோசிக்க முடியும்.

இரண்டாம் கல்யாணம் நல்லபடியா தாண்டினாதான் மூணாம் கல்யாணம் சந்தோஷமா இருக்க முடியும். மூணாம் கல்யாணம் சந்தோஷமா இருந்தாத்தான் மரணம் அமைதியா இருக்கும். அதனால இந்த கல்யாணத்தை முழு பலத்தோட திறமையோட தாண்டறதுக்கு ட்ரை பண்ணு. பயப்படாதே வெளியே போய் சாப்பிடலாம் வா"

அவர்கள் மூவரும் வீட்டை பூட்டிக் கொண்டு இறங்கினார்கள். உள்ளே டெலிபோன் மணி அடிக்கத் துவங்கியது. சற்று நேரம் நின்று கதவை திறக்கலாமா என்று பார்த்தார்கள். பூட்டில் கை வைத்தவுடன் டெலிபோன் மணி நின்றுவிட்டது. அவர்கள் மறுபடியும் இறங்கி, காரில் ஏறி வெளியே போனார்கள்.

அந்த பெங்காலி நண்பன், மறுபடியும் போன் செய்தான். மீண்டும் மணி அடித்துக் கொண்டிருந்தது.

போலீஸ்காரங்க அந்த பத்திரிகையை ரெய்ட் பண்ணிட்டாங்க. தப்புத் தப்பா தகவல் கொடுத்ததா அந்த கட்டுரை எழுதினவன் மேல் கேஸ் போட்டிருக்காங்க என்று சொல்லலாமென்று பார்த்தால் முடியவில்லையே.

நிர்மலா புலம்பலாய் பேசியதற்கு இந்த செய்தி மிகுந்த சமாதானம் கொடுக்கும் என்று நினைத்தான்.

மூவருக்கும் நடுவே மறைக்கப்பட்டிருந்த ஒரு விஷயம் வெளிவந்ததும், மூவரும் பேசி தெளிவானதும், இதில் மூன்றாவது நபர் தேவையே இல்லை என்பதும் பெங்காலி நண்பனுக்கு தெரிய வாய்ப்பில்லை.

**முற்றும்.**





மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா

# பாலகுமாரன்

# பழமுதிர்க் குன்றம்



விசா பப்ளிகேஷன்ஸ்